தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

இயக்க வெளியீடு

தொகுதி - 29 எண் - 3

ஜூன் - 1992

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 263—307 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 308—534 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள் குறித்து. | 535 |
| **3. ஒழுங்குப் பிரச்சினை—** | |
| பணியாளர் தேர்வாணைக் குழுமம் பற்றி அவையில் எழுப்ப அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது குறித்து. | 536—549 |
| **4. ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு ''எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.'' என்று பத்திரிகைகளில் செய்தி வெளி வந்துள்ளது பற்றி பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு குறித்து.** | 549—553 |
| **5. கவன ஈர்ப்பு—** | |
| நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் அடைப்பான்கள் பொருத்தும் பணி குறித்து. | 553—554 |
| **6. அறிக்கை அளித்தல்—** | |
| மதிப்பீட்டுக் குழு .. | 555 |
| **7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. | 555 |
| **8. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்—** | |
| (அ) உழவர்களுக்கான கடன் நிவாரணம் பற்றி ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை. | 556—557 |


டி2 53-279—1

(ஆ) சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு வார விடுமுறை அளிப்பது குறித்து சமூக நலத் துறை அமைச்சரின் அறிக்கை. 557—558

9. அறிவிப்பு—

முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992-93— மொழிதல் (ஆ. செ.). 558

10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992-93— பொது விவாதம்.— 559—654

| | |
|---|---|
| டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. | 559—561 |
| * திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் .. | 564—584 |
| * திரு. கு. லாரன்ஸ் .. | 584—588, 590 |
| திரு. வே. தம்புசாமி .. | 591—605 |
| * திரு. என். ஜி. வேணுகோபால் .. | 605—608 |
| டாக்டர். தே. குமாரதாஸ் .. | 609—619 |
| திரு. எஸ். எம். கிருஷ்ணன் .. | 619—623 |
| * திருமதி. கவிநிலவு தர்மராஜ் .. | 624—629 |
| திரு. ஜி. பழனிசாமி . | 630—654 |

11. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 655—656

164948

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**புரட்டாசி 8, ஆங்கிரச, திருவள்ளுவர் ஆண்டு-2023**

**1992 செப்டம்பர் 23, புதன்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை''.

நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் பாதுகாத்து வருவோர்க்கு தன்னுயிரைப் பற்றிக் கவலைப்பட்டு அஞ்சும் தீவினை இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள், வினா எண் 41, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

41—

**ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஊர்தி வழங்கல்**

* 2068—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஊர்தி (Jeep) கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் 1,075 காவல் நிலையங்கள் உள்ளன. இவற்றில் இந்த ஆட்சி வருவதற்கு முன் 30 காவல் நிலையங்களுக்கு மட்டுமே ஊர்திகள் வழங்கப்பட்டிருந்தன. எங்கள்

[1992 செப்டம்பர் 23

ஆட்சி வந்தபின் இதுவரை மொத்தம் 223 ஊர்திகள் வழங்கப் பட்டுள்ளன. இவற்றில் 1991-92 ஆம் ஆண்டில் 166 காவல் நிலையங்களுக்கு ஜீப்புகளும், கடலோரப் பாதுகாப்புப் பணி மற்றும் இன்றியமையாத பாதுகாப்புப் பணிகளுக்காக, அந்தப் பகுதிகளில் உள்ள காவல் துறை அலுவலர்களுக்கு 57 ஜீப்புகளுமாக, ஆக மொத்தம் 223 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 879 காவல் நிலையங்களுக்கு ஊர்திகள் வழங்கும் திட்டம், நிதி நிலையைப் பொறுத்து, படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை ஆகிய பண்புகள் கொண்ட ஆற்றல்மிக்க முதலமைச்சராக தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிசெய்து வருகி றார்கள். ஒவ்வொரு துறையிலும் உள்ள குறைகளையும், அத்தியாவசியத் தேவைகளையும் உணர்ந்து தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஓராண்டுக் காலத்திற்குள் எந்த ஒரு முதலமைச்சரும் செய்யாத அளவுக்கு 1991-92 ஆம் ஆண்டு 223 ஊர்திகளை காவல் துறைக்குக் கொடுத்திருப்பது தமிழக காவல்துறை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டிய சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி). நகரங்களைக் காட்டிலும் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருக்கும் கிராமப்புறங்களில் கோஷ்டிக் கலவரம் நடைபெறும் காலங்களில் உயிர்சேதம், பொருட்சேதம் மற்றும் பொதுச் சொத்து சேதம் ஆகியவற்றைத் தவிர்க்க வாகன வசதியையும் செய்து கொடுப்போமானால் காலதாமதம் இன்றி கலவரப் பகுதிகளுக்கு உரிய நேரத்தில் போய்ச் சேர்ந்து பாதுகாக்கமுடியும்.

''காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

என்று கூறும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க, காலத்தில் உதவி செய்வதற்கு எஞ்சிய காவல் நிலையங்களுக்கும் ஊர்திகள் கொடுக்க தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கனவே நான் சொன்னபடி தற்போது மொத்தம் 1,075 காவல் நிலையங்கள் உள்ளன. 12—6—1986-ல் வெளியிடப்பட்ட அரசாணைப்படி தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் ஜீப் வழங்கப்படலாம் என்றும், இத் திட்டத்தினைப் படிப்படியாக செயல்படுத்தலாம் என்றும் அரசு முடிவு செய்தது. அதன்படி 1986-87 ஆம் ஆண்டில் அதாவது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.



1992 செப்டம்பர் 23]

அவர்கள் ஆட்சிக் காலத்தில் 30 ஜீப்புகள் வழங்கப்பட்டன.
அதன்பின் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றபின்தான் ஒவ்
வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஜீப் விரைவில் வழங்கப்படும்
என்று அறிவித்து, அதனைத் தொடர்ந்து தற்போது ஜீப்புகள்
இல்லாத 905 காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக ஜீப்புகள்
வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. காவல்
துறையை, 80.45 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்துவதற்
குரிய செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன.
அத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு
ஜீப் வழங்க 15.51 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கேட்கப்
பட்டது. ஆனால் மத்திய அரசு 10 கோடி ரூபாய் மானியமாக
வழங்கியுள்ளது. இந்த 10 கோடி ரூபாய் மானியத்தில் 1.71
கோடி ரூபாய் செலவில் 100 டெம்போ ட்ராக்ஸ் ஜீப்புகள் வாங்க
அரசு ஆணைகள் பிறப்பித்தது. மேலும் 1991-92 ஆம் ஆண்டில்
மத்திய அரசு 1.31 கோடி ரூபாய் மானியமாக வழங்கியுள்ளது.
இதனுடன் மாநில அரசு இணை மானியமாக 1.31 கோடி ரூபாய்
வழங்கியது. ஆக, 2.62 கோடி ரூபாய் செலவில் 123 ஜீப்புகள்
மற்றும் காவல் வானொலி நிலையத்திற்குத் தேவையான சாத
னங்கள் வாங்க தமிழக அரசு ஆணையிட்டது. ஆக மொத்தம்
223 ஜீப்புகள் வாங்கப்பட்டன. மத்திய அரசின் நிதி உதவியோடு
ஜீப்புகள் வழங்கப்படாத காவல் நிலையங்களுக்குப் படிப்படி
யாக ஜீப் வாங்கி வழங்குவதற்கு அரசு எல்லா நடவடிக்கை
களையும் எடுத்து வருகிறது. ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும்
ஒரு காவல் ஊர்தி கொடுக்கும் திட்டம் நிதிநிலையைப் பொறுத்துப்
படிப்படியாகத் தீவிரமாக நிறைவேற்றப்படும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் எங்கும் புதுமை, எதிலும் புரட்சியைக் காண்கிறோம். அந்த வகையில் புதிதாக காவல் துறைக்கு வழங்கப்படுகின்ற ஜீப்புகள் ஜேம்ஸ் பாண்ட் படத்தில் வருவதுபோல மிக அழகாக வருகின்றது. அதில் வருகின்ற காவல் துறையினருக்கு புதிய மிடுக்கு ஏற்பட் டிருக்கிறது. இந்தக் காவல் துறைக்கு வழங்கப்பட்ட ஜீப்புகள் அனைத்தும் டெம்போ டிராக்ஸ் வகையைச் சார்ந்ததாக இருக் கின்றன. இந்த ஜீப்புகளுக்கு ஏதேனும் பிரத்தியேக அம்சம் உண்டா? அப்படி இருந்தால், இந்த அவை மாண்புமிகு இதய தெய்வம் மூலம் அதனை அறிய முடியுமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறைக்கு டெம்போ டிராக்ஸ் ஜீப்புகள் வாங்கப்பட்டதற்குக் காரணங்கள் வருமாறு:

ஒரு மாருதி ஜிப்சி ஜீப்பின் விலை 2,21,294.53 ரூபாய் ஆகும். ஒரு மகேந்திரா அன்ட் மகேந்திரா ஜீப்பின் விலை 2,08,274.20 ரூபாய் ஆகும். ஆனால் ஒரு டெம்போ டிராக்ஸ் ஜீப்பின் விலை 1,71,783.95 ரூபாய் மட்டுமே. எனவே, அரசிடம் இருக்கின்ற நிதியை வைத்துக்கொண்டு அதிக அளவில் டெம்போ டிராக்ஸ் ஜீப் வாங்க முடியும். அதிகப்படியாக காவல் நிலையங்களுக்கு வழங்க முடியும்.

அடுத்து, மற்ற ஜீப்புகளை விட டெம்போ டிராக்ஸ் ஜீப் விசாலமானது, பெரியது. It is more Spacious. ஏறத்தாழ 10 நபர்கள் ஒரு டெம்போ டிராக்சில் பயணம் செய்ய முடியும். பிற மாடல் ஜீப்புகளில் 6 நபர்கள்தான் பயணம் செய்ய முடியும். சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு டெம்போ டிராக்ஸ் ஜீப்பில் 10 பிளஸ் 1, டிரைவரையும் சேர்த்து 11 பேர் பயணம் செய்யலாம். மற்ற ஜீப்புகளில் 6 பிளஸ் 1 என்று டிரைவரையும் சேர்த்து 7 பேர்தான் பயணம் செய்ய முடியும். அடுத்து, மாருதி ஜிப்சி ஜீப்பை விட டெம்போ டிராக்ஸ் ஜீப் ஒவ்வொரு வகையிலும் சிறந்தது எனக் கருதப்படுகிறது. சென்னை போன்ற பெரிய மாநகர்களில் மாருதி ஜிப்சி ஜீப்புகள் பயன் உள்ளதாக இருக்கலாம். ஆனால் கிராமப்புறங்களில், கரடு முரடான பகுதிகளில் பயணம் செய்ய டெம்போ டிராக்ஸ் ஜீப்தான் உகந்தது என்று அனுபவம் நிரூபித்துள்ளது. அதன் செயல் திறன், அதாவது பெர்பார்மன்ஸ் மற்ற ஜீப்புகளைவிட நம்பகரமானதாகவும், அதாவது ரிலையபிளாகவும் இருக்கிறது. இன்னொரு காரணம் டெம்போ டிராக்ஸ் ஜீப் சிக்கனமானது. மாருதி ஜிப்சி ஜீப்புகள் பெட்ரோலில் ஓடுவதாகும். ஆனால் டெம்போ டிராக்ஸ் ஜீப் டீசலில் ஓடுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே, டெம்போ டிராக்ஸ் ஜீப் மற்ற ஜீப்புகளைவிட சிக்கனமானது, விசாலமானது. மேலும் அதன் செயல்திறன் நம்பகரமானதாகவும் இருக்கிறது. மற்ற ஊர்திகளைவிட டெம்போ டிராக்ஸ் ஜீப்பின் விலை குறைவாக உள்ளது. அதே சமயத்தில் மற்ற ஊர்திகளை விட அதிகப்படியான நபர்கள் இதில் பயணம் செய்ய முடிகிறது. மேற்கூறிய காரணங்களைக் கருத்தில் கொண்டு தான் தமிழக அரசு 22—2—1992 அன்று காவல்துறை பயன்படுத்துவதற்காக டெம்போ டிராக்ஸ் ஜீப்புகளை வாங்க முடிவு எடுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ளடங்கிய பரமக்குடி தாலுகா காவல் நிலையம், சித்திரக்குடி காவல் நிலையம்,



பார்த்திபனூர் காவல் நிலையம் மற்றும் நயினார்குடி காவல் நிலையங்களுக்கு ஊர்திகள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிடுவார்களா, எந்த ஆண்டு வழங்குவார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டில் மேலும் 50 ஜீப்புகள் வாங்கலாமென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 50 ஜீப்புகளில் ஒன்றிரண்டையாவது இவர் கூறிய காவல் நிலையங்களுக்கு வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீப்புகளினுடைய விவரத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். கிராமப் புறங்களுக்கு மிகப் பெரிய அளவில் ஸ்யூட்டபிள் செலக்ஷன் அந்த ஜீப்புகள். மிகப் பெரிய அளவில் கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற நடவடிக்கையில் அது மிகவும் பயன்படுகிறது. இதற்கு முன்னாலே காவல் நிலையங்களிலே ஜீப்புகள் இல்லாத காரணத்தால், தனி நபரிடத்தில் டாக்சி எடுத்து வா என்று சொல்லுகிறபோது அங்கே லஞ்சம் வருகிறது. அப்படிப்பட்ட நிலைக்கு ஆளாக்காமல், மிகச் சிறப்பாக இது செயல்படுகிறது. இதைவிட மகிழ்ச்சி, என்னுடைய தொகுதி கடலோரப் பகுதி, பேராவூரணி, அதிராமபட்டினம், சேதுபாவாசத்திரம் ஆகிய 3 ஊர்களுக்குமே ஜீப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த ஜீப்புகள் காவல் நிலையங்களிலே இருக்கின்ற அளவுக்கு வழிவகை செய்ய வேண்டும். அதை இன்ஸ்பெக்டர் எடுத்துக்கொண்டு செல்வதால், திடீரென்று ஏற்படும் விபத்து போன்ற காரியங்களுக்கு எஸ்.ஐ. அல்லது மற்றவர்கள் அவசரமாகச் செல்ல முடியவில்லை. ஆகவே அதை இன்ஸ்பெக்டர் எடுத்துச் செல்லாமல், காவல் நிலைத்திலேயே வைக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காவல் நிலையத்தில் இருக்கின்ற ஜீப்பைப் பயன்படுத்துவதற்கு முதல் உரிமை, முன்னுரிமை இன்ஸ்பெக்டருக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஜீப் காவல் நிலையத்திலேயே இருக்க வேண்டுமென்று சொன்னால், அது எப்படி ரோந்துகளுக்குச் செல்ல முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) எனவே குறிப்

பிட்ட நேரத்தில் காவல் நிலையத்தில் அந்த ஊர்தி இருக்கவில்லை என்று சொன்னால் ஏதாவது முக்கிய பணி காரணமாகத்தான் இன்ஸ்பெக்டர் எடுத்துச் சென்றிருப்பார் என்று கருதுகிறேன். எங்களைப் பொறுத்த வரையில் காவல் துறையில் உள்ள அதிகாரிகள் சொந்தப் பணிகளுக்காக இந்த ஊர்திகளைப் பயன்படுத்த மாட்டார்கள் என்று திடமாக நம்புகிறோம். எனவே அவசரப் பணிகளுக்காகத்தான் இந்த ஊர்திகளைப் பயன்படுத்துவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய பொற்கால ஆட்சியில் நம்முடைய புனிதத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் இப்படி ஜீப்புகளை வழங்கியதன் மூலம் காவல் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட போக்குவரத்துக் கழகங்களில் ஜீப்புகளிலும், அனைத்து வாகனங்களிலும் வைத்திருக்கின்ற ஒயர்லஸ் கருவிகள் போல காவல் துறைக்குக் கொடுக்கப்படும் எல்லா ஜீப்புகளிலும் ஒயர்லஸ் கருவிகள் பொருத்தப்படுமா என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதைச் சுட்டிக்காட்டுவதற்கு முன்பாகவே எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று எனக்கும் ஆசைதான். ஆனால் நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல நிதி நெருக்கடியின் காரணமாக இத்தகைய சாதனங்களைப் படிப்படியாகத்தான் வாங்க முடியும். ஆனால் எல்லா காவல் நிலையங்களுக்கும் ஊர்திகள் கொடுப்பதோடு, அத்தனை ஊர்திகளிலும் ஒயர்லஸ் கருவிகளைப் பொருத்த வேண்டுமென்று அரசு திட்டமிட்டிருக்கிறது. நிதி நிலைமையைப் பொறுத்து, படிப்படியாக இது செயற்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வரவர்கள் இன்றைக்கு இந்த ஜீப்புகளை எல்லாம் காவல் நிலையங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கூடங்குளமும், உவரியும் கடற்கரைப் பகுதிகளாக இருக்கிற காரணத்தால் மிகவும் டென்ஷனாக இருக்கிற இடங்கள். அடிக்கடி அங்கே போராட்டங்கள் நடந்து, காவல் துறை





அதிகாரிகளை மக்கள் அடிக்கும் அவலம் ஏற்படுகிற காரணத்தால், அந்த இரண்டு ஸ்டேஷன்களுக்கும் ஜீப்புகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்படிக் கேட்டால் அவரவர் தொகுதிகளுக்கு வேண்டுமென்று கேட்கும் நிலைமை தான் இருக்கும். ஏற்கெனவே டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் வழங்கி இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வாங்கப்பட்ட 223 ஜீப்புகளில் கடலோரப் பகுதியில் உள்ள காவல் நிலையங்களுக்குத்தான் முன்னுரிமை கொடுத்திருக்கிறோம். அப்படியும் கடலோரப் பகுதிகளில் இப்படி ஏதாவது காவல் நிலையங்கள் விடுபட்டிருந்தாலும், நான் ஏற்கெனவே சொன்னது போல 1992–93-ஆம் ஆண்டில் மேலும் 50 ஜீப்புகள் வாங்க உத்தேசித்துள்ளோம். அவற்றிலிருந்து நீங்கள் கூறும் காவல் நிலையங்களுக்கும் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண். 42, திருமதி வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

42—

## AROMATICS PROJECT AT MANALI

* 3261- -Thirumathi V. G. Manimegalai :

Will the Hon. Chief Minister be pleased to state :

(c) Whether the Aromatics project at Manali near Madras has been cleared by the Central Government; and

(b) the details thereof?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னைக்கு அருகிலுள்ள மணலியில் 'AROMATICS' தொழிற்சாலை அமைக்கும் திட்டம், மைய அரசுக்குச் சொந்தமான சென்னை சுத்திகரிப்பு ஆலையும், சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனமும் இணைந்து கூட்டுத்துறையில் நிறு

வப்பட உள்ளதாகும். 566 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி உட்பட, இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் 2,000 கோடி ரூபாய் ஆகும்.

கொள்கை அளவில் மட்டுமே மத்திய அரசு ஒப்புதல் அளித்திருந்த நிலையில், தமிழக அரசின் சார்பில் 3—7—1991 மற்றும் 9—9—1991 ஆகிய தேதிகளில் பாரதப் பிரதமரிடமும் மத்திய பெட்ரோலிய அமைச்சரிடமும் நான் வற்புறுத்தியதைத் தொடர்ந்து, 28—5—1992 அன்று மத்திய அரசு தனது இறுதி ஒப்புதலை வழங்கியது. அதற்கான நிலங்களைக் கையகப் படுத்திக் கொடுக்க வேண்டிய கடமை தமிழக அரசுடையதாகும். எனவே 1,655.92 ஏக்கர் அளவு நிலங்களை, நிலம் கையகப் படுத்துவதற்கான சட்டத்தின் அவசர விதிகளைப் பயன்படுத்தி நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவே அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முற்பகல் 9-45.

திருமதி வி. ஜி. பணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கும் எங்களின் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் புரட்சிகரமான பல திட்டங்களை வகுத்திருந்தாலும் அதற்கு ஒரு செயல் வடிவம் கொடுக்க வேண்டுமென்று உன்னதமான நோக்கத்தோடு, பாரதப் பிரதமர் அவர்களிடம், அவர்கள் அடிக்கடி பேசி எங்கள் தமிழ்நாட்டிற்கு தொழிற்சாலைகள் வேண்டுமென்று கேட்டு அதற்கான உருவகத்தையும் கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு எனதுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலை எப்போது தொடங்கப் பட்டு எப்போது அதன் பணிகள் முடியும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை அரோமாடிக் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் — அதாவது 'நாப்கோ' என்னும் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'நாப்கோ' ஆண்டொன்றுக்கு சுத்தப்படுத்தப்பட்ட டெரிதாலிக் அமிலம் 20,000 டன்னும், ஆர்த்தோ ஸைலீன் 30.000 டன்னும், [illegible] 30,000 டன்னும் உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 2,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூ. 566 கோடி அன்னியச் செலாவணியும் அடங்கும். மைய அரசு மற்றும் நிதி நிறுவனங்களின் முடிவுகள் கிடைக்கப்பெற்ற 33 மாதங்களுக்குள் உற்பத்தியை 'நாப்கோ' நிறுவனம் தொடங்க





ஆரம்பித்துவிடும். இத்திட்டத்தினால் மணலி பகுதியின் சுற்றுப் புறங்களில் பெட்ரோ கெமிக்கல்ஸ் துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏற்பட வழி வகுக்கும். மேலும் இதனால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மைய அரசின் இறுதி ஒப்புதலை எதிர்நோக்கி மாநில அரசு சில முன் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1989-ல் செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் மணலி, வைக்காடு, அமுல்லைவாயில், கொசப்பூர், மாத்தூர் மற்றும் இளங்கஞ்சேரி ஆகிய கிராமங்களில் இத்திட்டத்திற்குத் தேவையான 1655.92 ஏக்கர் நிலங்களை, நில கையகப்படுத்துதல் சட்டத்தின் அவசர விதிகளைப் பயன்படுத்தி கையகப்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து, நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை தடை செய்யும் ஆணையைப் பெற்றனர். இவ்வழக்குகளை உயர்நீதி மன்றம் விசாரித்து, 25—10—1991 அன்று தள்ளுபடி செய்தது. அதனை எதிர்த்து, நிலச் சொந்தக்காரர்கள் தொடுத்த மேல் முறையீட்டையும் நீதிப்பேராணை மனுவையும் உயர்நீதி மன்றத்தின் பெஞ்ச் விசாரணை செய்து அதனையும் தள்ளுபடி செய்து 5—3—1992 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து நில எடுப்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இத்திட்டம் துரிதமாக நிறைவேறுவதற்குத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், சம்பந்தப் பட்ட அரசு மற்றும் அரசுக் கழகங்களின் அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. எனவே விரைவில் இந்தத் தொழிற்சாலை துவங்க எல்லா சாத்தியக்கூறுகளும் உள்ளன என்பதைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'நாப்கோ' நிறுவனத்தின் தொழிற்சாலை தொடங்கப்படுவதற்கான எல்லா பணிகளும் முடிந்துவிட்டன என்று நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் சில பத்திரிகைகளில் சமீபத்தில் செய்திகள் வந்துள்ளன. இந்த ஆரோமேடிக் தொழிற்சாலை ஏற்படுவதில் சில சிக்கல்கள், சில தடைகள் உள்ளன என்று வந்திருக்கின்றன. அதில் உள்ள சிக்கல்கள் என்ன, தடைகள் என்ன, அந்தத் தடைகள் அகற்றப் படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோலிலிருந்து கிடைக்கும் நாஃப்தா என்ற பொருளை மூலப் பொருளாகக் கொண்டு சுத்திகரிக்கப்பட்ட டெரிதாலிக் ஆசிட் அதாவது பியூரிஃபைடு

டெரிதாலிக் ஆசிட் தயாரிக்கப்படுகிறது. டெரிதாலிக் அமிலத்தை மூலப் பொருளாகக் கொண்டு பாரக்சலின் தயாரிக்கப்படுகின்றது. இந்தியாவில் உள்ள பாம்பே டையிங் மற்றும் ரிலையன்ஸ் கம்பெனி ஆகிய இந்த இரு நிறுவனங்கள் மட்டுமே பாரக்சலினிலிருந்து பாலியஸ்டர் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கின்றன. இந்த பாரக்சலின் இறக்குமதி செய்யும்போது 85 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது. பாம்பே டையிங் நிறுவனம் இந்த அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதால், இறக்குமதி வரியைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. [illegible] பத்திரிகைகளில் அண்மையில் சில செய்திகள் வந்தன; இந்த இறக்குமதி வரியைக் குறைத்தால் அயல் நாடுகளிலிருந்து பெட்ரோ கெமிக்கல் பிராடக்ட்ஸ் இந்தியாவில் குவிந்து விடும்; எனவே அரோமெடிக்ஸ் போன்ற தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு சிரமமாகப் போய்விடும், இங்கே லோக்கலாக டிமாண்ட் இல்லாமல் போய் விடும் என்று செய்திகள் வெளியிடப்பட்டன. ஆனால், இதுவரை இறக்குமதி வரி குறைக்கப்படவில்லை. எனவே, புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள நாப்தோ நிறுவனம் சீரான முறையில் உற்பத்தியைத் துவக்கி லாபகரமான முறையில் இயங்க எல்லாவிதமான வாய்ப்புகளும் உள்ளன. ஆகவே, இந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கு சமீபத்தில் எவ்விதப் பிரச்சினையும் உருவாக்கப் படவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரோமேடிக்ஸ் தொழிற்சாலையின் மூலம் எந்தமாதிரியான உப தொழில்களை ஆரம்பிக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோ கெமிகல்ஸ் புராடக்ட்ஸ் தொழிற்சாலை அமையும் இடத்தில், பல விதமான உப தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கம்பெனியை நிறுவுவதற்கு அந்த நிலச் சொந்தக்காரர்கள் [illegible] தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அவர்களுடைய குழந்தைகளுக்கு, அவர்களுடைய வீட்டில் படித்தவர்களுக்கு அந்தந் தொழிலில் முதல்





உரிமைக் கொடுத்து தொழிலாளர்களாக அமர்த்தவும், இந்தத் தொழிற்சாலையில் தமிழக அரசின் பங்கு எவ்வளவு சதவீதம் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறமையின் அடிப்படையில்தான் இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைக் கொடுக்க முடியும். இந்தத் தொழிற்சாலை, மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம்—மெட்ராஸ் ரிஃபைனரிஸ் லிமிடெட் மற்றும் சதர்ன் பெட்ரோ கெமிகல்ஸ் தொழில் நிறுவனம்—ஸ்பிக் இணைந்து நிறுவ இருக்கின்ற நிறுவனமாகும். எனவே, ஸ்பிக்கில் தமிழ்நாடு அரசுக்கு ஷேர்கள் இருக்கின்றன. இந்த தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசுக்கு எந்தவிதமான பங்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண். 43. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

43—

பரிசுச் சீட்டுகள் தனியார் அச்சகத்தில் அச்சிடுதல்.

* 10636—திரு. எம். ஆண்டி அம்பலம்;

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசின் பரிசுச் சீட்டுகள் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றனவா?

(ஆ) அரசு அச்சகங்கள் அல்லது தமிழரசு அச்சகத்தில் அவற்றினை அச்சிட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொல்லிவிட்டார். ஆனால், கோயம்புத்தூர், மதுரை, சென்னை போன்ற அரசு அச்சகங்களில் எவ்வளவு பேர் வேலை

செய்கிறார்கள்? அந்த அரசு அச்சகங்களிலே—தனியாருக்குக் கொடுக்கப்பட்ட இந்த சீட்டுகளை அச்சிடுவது சம்பந்தமாக அரசு பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் தமிழ்நாடு அரசு அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வந்தன. அரசு அச்சகத்தில் அப்போது ஆஃப்செட் முறையில் வண்ணத்தில் அச்சடிக்கப் போதுமான நவீன இயந்திரங்கள் இல்லாமையினால் பரிசுச் சீட்டுகளை தனியார் அச்சகத்தில் அச்சடிக்க அரசு ஆணை பிறப்பித்தது. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விதி எண் 11-ன்படி-தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை அரசு அச்சகத்திலோ அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் கோரி தனியார் அச்சகத்திலோ அச்சடிக்கலாம். தமிழ்நாடு பரிசுச் சீட்டு துறைக்கென்று ஒரு அச்சகம் தனியாக இல்லை. பரிசுச் சீட்டு விற்பனையில் நிலவிவரும் போட்டிக்கு ஏற்ப பல வண்ணங்களில், கண் கவர் படங்களுடன் பரிசுச் சீட்டுகளை அச்சடிப்பது மிகவும் அவசியமாகிறது. எனவேதான் தனியார் அச்சகத்தில் பரிசுச் சீட்டுகளை அச்சடிக்க ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு அரசின் அனுமதி பெற்று ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்து, இயக்குநர் தனியார் அச்சகத்தில் மிகுந்த பாதுகாப்பு உறுதியுடன் தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டுப் பெறுகிறார். போலி சீட்டுகளை தவிர்க்கும் எண்ணத்தில் நல்ல பாதுகாப்பு முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. என்றாலும் சமீபத்தில் பரிசு சீட்டுத் துறை இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை இயக்குநர் கலந்துரையாடி தற்போது தனியார் ஒப்பந்தப் புள்ளி முடிந்தவுடன் 1993-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுகளை அரசு அச்சகத்தில் அச்சடிப்பதற்கான சில இயந்திரங்களை வாங்க கருத்துரு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதனை அரசு பரிசீலனை செய்து வருகிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 9-55.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் தமிழரசு அச்சகத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. அந்த தமிழரசு அச்சகத்தில் பரிசு சீட்டுகள் அடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். தமிழரசு அச்சகத்தில் போதுமான அளவுக்கு வண்ண



வகைகளில் அச்சடிப்பதற்கு இப்போது வசதிகள் இல்லை. மேலும் சில இயந்திரங்கள் வாங்க வேண்டுமென்று ஒரு செயற் குறிப்பை தமிழரசு அச்சகத்தினர் அனுப்பி இருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் டிக்கட்டுகள் அச்சடிக்கிறபோது அங்கேயிருக்கிற ஏஜண்டுகளே போலியான டிக்கட்டுகளை அச்சடித்து விநியோகிப்பதாக அறிகிறோம். அதைக் கண்டுபிடிப்பதற்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை அறியவேதாடு பரிசு விழுந்து வாங்காமல் இருக்கிறார்களா, அப்படியானால் எவ்வளவு தொகை அரசிடம் அந்த வகையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யூகத்தின் அடிப்படையில் வினாவை எழுப்பி இருக்கிறார்கள். நான் ஏற்கனவே மூல வினாவிற்கு விடை அளிக்கிறபோது தெளிவாகக் குறிப்பிட்டேன். தனியார் அச்சகத்தில் பரிசு சீட்டுகளை அச்சடிக்கும்போது ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுகின்றன. அந்த ஒப்பந்தப் புள்ளிகளில் ஏற்ற ஒப்பந்தப்புள்ளி அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு பிறகு அச்சடிக்க விடப்படுகிறது. அங்கே அச்சகத்தில் தகுந்த பாதுகாப்பு உறுதியுடன் தமிழ்நாடு பரிசு சீட்டுகளை அச்சடித்து வருகிறோம். அதற்கு உரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். போலி சீட்டுகளை அவர்கள் அச்சடிக்காமல் இருப்பதற்குத்தான் தக்க பாதுகாப்புக்காக காவல்துறையினரோடு இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இருந்து அச்சடிக்கிறார்கள். இதுவரையில் அப்படிப்பட்ட போலி சீட்டு—தமிழகத்தில் கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலத்திற்கு மேலாக இந்தப் பரிசு சீட்டு முறை நடைமுறையில் இருக்கிறது என்றாலும் போலி சீட்டு தமிழகத்தைப் பொறுத்த வரையில் உருவாக்கப்பட்டது அல்லது பரப்பப்பட்டது என்கிற நிலை ஏற்படவில்லை. வேறு சில மாநிலங்களில் கூட அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அடுத்த ஆண்டு கிட்டத்தட்ட 1993-ஆம் ஆண்டு புதிய இயந்திரங்கள் எல்லாம் வாங்கப்பட்டதற்கு பிறகு அரசு அச்சகத்திலேயே அச்சடிக்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது இப்படிப்பட்ட சந்தேகத்திற்கு கூட இடம் ஏற்படாது என்பதைக் கூறிக் கொள்ள நான் விரும்புகிறேன். பரிசு சீட்டுகள் எவ்வளவு இருக்கின்றன, எவவளவு விற்காமல் இருக்கின்றன என்பதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 44, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

44—

சார் பதிவாளர் அலுவலகம் திறக்க நடவடிக்கை.

* 9939—திரு. சிங்கை கோவிந்தராசு :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் சிங்காநல்லூர் தொகுதி சர்க்கார் சாமக்குள ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதியை சார்ந்த சாமக்குள ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற் குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மக்களாட்சி நடத்தி வருகிறார் புரட்சித் தலைவி அவர்கள். ** புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்கிணங்க ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. மற்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி குறைபாடு கூறுவது கேள்வி நேரத்தில் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சிங்கை கோவிந்தராசு : இதுவரையில் யாரும் ஆற்றாத பணியை நம்முடைய ஒப்பற்ற தமிழக முதல்வர் ஆட்சியில் 14 பேரூராட்சிகளைக் கொண்ட சிங்காநல்லூர் தொகுதியினுடைய ஒன்றியப் பகுதியில் ஒரு லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். 20 கிலோ மீட்டர் சுற்றுப்புறத்தில் இதுபோன்ற சார் பதிவாளர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





அலுவலகம் இல்லை. ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழையெளிய மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிக்கு இத்தகைய சார் பதிவாளர் அலுவலகம் ஒன்றை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்—இல்லை என்ற சொல்லே இல்லாத இந்த ஆட்சியில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லாமல் என் தொகுதியின் நன்மைக்காக சார் பதிவாளர் அலுவலகம் கொடுக்க அடுத்த ஆண்டிலேயாவது முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை என்கிற பெயரால் புரட்சித் தலைவியினுடைய கைகள் கட்டப்பட்டு இருந்தாலும், அதையும் மீறி அவர்கள் இவ்வாண்டு 5 சார் பதிவாளர் அலுவலகங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள். அப்படி 5 அலுவலகங்கள் அமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறபோது, முன்னுரிமை கொடுக்கிறபோது, எங்கே இருக்கிற மக்கள் அதிகமாக சங்கடப்படுகிறார்களோ, அதை உத்தேசித்து, அதனுடைய முக்கியத்துவத்தைப் பார்த்து, அதற்கேற்றவாறு அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது சர்க்கார் சாமக்குளத்தில் அலுவலகம் அமைக்க வேண்டும் என்றால், அங்கே இருக்கிற கிராம மக்கள் இன்றைக்கு பெரியநாய்க்கன்பாளையத்திற்குச் சென்று, பதிவு செய்கிறார்கள். ஆனால், அது அவர்களுக்கு சங்கடமாக இருக்கும் என்றால், அவினாசி அருகாமையில் இருக்கிறது, அதுவும் சங்கடமாக இருந்தால், கோயம்புத்தூர் இருக்கிறது, அன்னூர் இருக்கிறது. அதைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்து, எது மக்களுக்கு சௌகரியமோ, அதைச் செய்வதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 45, திரு. இரா. தங்கராசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

ஆண்டிமடத்தில் அரசு கலைக் கல்லூரி.

45—

*9829—திரு. இரா. தங்கராசு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டிமடத்தில் அரசு கலைக்கல்லூரி கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே எனது தந்தை இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருந்தபோது, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அரியலூரில் ஒரு தொழில் பயிற்சிக் கல்லூரியை அமைத்துக் கொடுத்தார்கள். ஆகையினால், இன்றைக்குத் தமிழகத்திலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற, தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியார் அவர்களுடைய ஆட்சியிலே, ஏழைகள் வாழ்கின்ற பகுதியாக இருக்கிற ஆண்டிமடம் தொகுதியிலே ஒரு அரசுக் கலைக் கல்லூரியை அமைத்துத் தர ஆவன செய்ய; மீண்டும் அமைச்சர் அவர்களை இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பதில் ஆண்டிமடத்திற்கு மட்டுமல்ல, எல்லாத் தொகுதிகளுக்கும் பொதுவாகத் தான் நான் சொல்கிறேன். இனிமேற்கொண்டு அரசு தன்னுடைய பணத்தைத் தொடக்கக் கல்விக்குத் தான் அதிகம் செலவு செய்யுமே தவிர, கலைக் கல்லூரிக்குச் செலவு செய்யாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா. எண். 46, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

46—

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு உ.வே. சாமிநாதய்யர் பெயர் வைத்தல்.

*10385—திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் பெயர் வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே கூட, தமிழ்த் தொண்டு செய்தவர்களுக்கும், அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் எல்லாம் மதுரையிலே காமராஜர் பல்கலைக் கழகம் என்றும் பாரதிதாசன் பல்கலைக கழகம் என்றும், பாரதியார் பல்கலைக் கழகம் என்றும், பல பல்கலைக் கழகங்களுக்கு பெயர் வைத்திருந்தார்கள். அதே போல், நம்முடைய டாக்டர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே,—அவருடைய அரசியல் வாரிசாக இருக்கக்கூடிய நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே—தமிழுக்குத் தொண்டு செய்து, தமிழ் இலக்கியங்களில் தொன்மையை எடுத்துக் காட்டிய, தமிழ் மக்களால், தமிழ்த் தாத்தா என்று பெயர் பெற்ற, உ. வே. சாமிநாத அய்யர் அவர்களுடைய பெயரை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாத்தா மகோபாத்
யாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் பெயரை,
அவர் தமிழுக்குச் செய்திருக்கிற தொண்டை, இந்த அரசு
நன்றாக அறியும். அதற்கு, என்றைக்கும் நாங்கள் மக்களின்
சார்பாக மரியாதையும் அதற்கு உரிய மதிப்பையும் தர
நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்தப்
பிரச்சினை ஒரு பல்கலைக் கழகத்திற்கு பெயர் வைப்பது
என்பது. இது இதற்கு முன்னாலே, முதலமைச்சராக இருந்த,
நம்முடைய இதய தெய்வம், மாண்புமிகு எம். ஜி. ஆர்,
அவர்கள் காலத்திலே, கொண்டுவரப்பட்ட பல்கலைக் கழகம்
ஆகும். அதற்குப் பெயர் வைக்கின்ற ஒரு பிரச்சினை வருகிற
போது, எல்லாவற்றையும் நாங்கள் பரிசீலனை செய்துதான்
—அப்போது நானே கல்வி அமைச்சராக இருந்த காரணத்தி
னால், அதைப் பரிசீலனை செய்துதான்,—அந்தப் பெயரே
இருக்கட்டும் என்று நாங்கள் வைத்திருக்கிறோம். ஆகவே,
புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள் வார்த்தை
களாகவே, அதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.
அவர், தமிழ்ப் பல்கலைக் கழகத் திறப்பு விழாவிலே பேசுகிற
போது, "அறிஞர் தமிழுக்கு அரிய தொண்டாற்றி, சிலர்
தங்கள் உயிரையும் தியாகம் செய்துள்ளதால், ஒரு குறிப்பிட்ட

நபரின் பெயரை மட்டும் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டுவது, பிறரது கருத்தினை பாதிக்குமாதலால், இதனை தமிழ்ப் பல்கலைக் கழகம் என்றே அழைக்கலாம்''.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா. எண் 47, டாக்டர் பெ. வீரபாண்டியன். வினா எண் 48-ம் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒரே பொருள் பற்றியவை. வினா எண். 48, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

47—

பேரணாம்பட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.

*9592—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரணாம்பட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ)சுற்றுப்புறம் பாழ்பட்டிருப்பதால் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தோல் வளர்ச்சி கழகத்தின் உதவியுடன் பேரணாம்பட்டில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

48—

நிலத்தடி நீர் மாசு அடையாமல் இருக்க நடவடிக்கை

*10070—திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் ராணிப்பேட்டை, வேலூர், மேல்விஷாரம், நந்தியாலம், அரப்பாக்கம், கருகம்பத்தூர், முள்ளிபாளையும், ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய





பகுதிகளில் தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீர் காரணமாக 200அடி ஆழத்திற்கு நிலத்தடி நீர் மாசு அடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிலத்தடி நீர் கெடாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீர், நிலத்தடி நீரை மாசு படுத்தலை கட்டுப்படுத்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவு நீரை சுத்திகரிக்க '' Effluent Treatment '' (கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்) என்ற முறை நடைமுறைப் படுத்தப்படுகிறது. தொழிற் சாலைகளில் தொட்டிகளை மட்டும் கட்டி விட்டு, கழிவுநீரை தேக்கி வைத்துள்ளனர். சுத்திகரிப்பது இல்லை. ஒருவேளை சுத்திகரிப்பு வேலை நடைபெற்றாலும் வெளி வரும் கழிவு நீரில் கால் பங்கைத் தான் சுத்திகரிக்கிறார்கள். முக்கால் பங்கு கழிவுநீரை கால்வாயின் மூலமாக விளைச்சல் நிலங்களுக்கும், ஏரிகளுக்கும் அனுப்பி விடுகிறார்கள். இதை அரசு அறியுமா' உரிமையாளர்களின் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கிற கருத்து ஒரு தனிப்பட்ட தொழிற்சாலையிலே அப்படிப்பட்ட சுத்திகரிப்பு நிலயத்தை அமைத்திருப்பவர்கள் இப்படிப்பட்ட தவறுகளை சிலநேரங்களில் செய்கிறார்கள். அவ்வப்போது அதிகாரிகள் இதை பார்த்து பரிசோதித்து நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். இப்போது இதைப் பொறுத்த வரையில் நாம் சொல்வது பொது சுத்திகரிப்பு நிலையம். இதிலே ஏறத்தாழ 74 தொழிற்சாலைகளை ஒன்றாகச் சேர்த்து ரூ. 2.31 கோடியில் தனியாக பொதுவாக ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க இருக்கிறோம். அப்படி அமைத்து, அது முடிகிறபோது நிச்சயமாக இந்தத் தவறு அங்கே ஏற்படுவதற்கு வாய்ப்பே கிடையாது. எனவே இந்தப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பில்லை.

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு – அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் 464 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து வெளிவரும் கழிவுநீர் இன்று பாலாற்றிலே கலந்து, பல இடங்களில் எல்லாம் இன்று நிலத்தடி நீர் 200 அடி ஆழத்திற்குள் சென்று மாசுபடுத்தி விடுகிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஆகவே எங்களது வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில் எதிர்காலத்தில் குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்குமா என்கிற ஒரு பெரும் ஐயம் எல்லா மக்களிடமும் இப்போது பீதியாகக் குடிகொண்டிருக்கிறது. இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்ற மார்ச் மாதத்தில் சொல்கிறபோது அங்கே உடனடியாக சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று அடிக்கல் எல்லாம் நாட்டிவிட்டு, அப்படியே நின்று கொண்டு இருக்கின்றனவே ஒழிய, இன்னும் செயல்பட ஆரம்பிக்கவில்லை. ஆகவே இந்த சுத்திகரிப்பு நிலையங்கள் எப்போது செயல்படத் துவங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் இம்மாமன்றத்தில் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு உறுப்பினருக்கு இதுபோன்ற ஐயம் எல்லாம் தேவையில்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு இதை துரிதப்படுத்தியிருக்கிறது. இது ஏதோ இந்த அரசாங்கம் வந்த பின்பு பெரிய இரண்டு தொழிற்சாலைகள் வந்து, அதிலிருந்து கழிவுநீர் வந்து, 200 அடி ஆழத்திற்கு உடனடியாகப் போனது அல்ல. பல ஆண்டுக்காலமாக இருந்தது. இன்றைக்கு இந்த அரசாங்கம் இதிலே தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக 199 தொழிற்சாலைகளை ஒன்றாகச் சேர்த்து, அவைகள் அனைத்திலிருந்தும் வருகிற கழிவுநீரை வாய்க்கால் மூலமாக ஒரு இடத்திற்குக் கொண்டுவந்து, அங்கே சுத்திகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஏறத்தாழ ரூ. 9.38 கோடி செலவழிப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதிலே 50 சதவீதம் அரசாங்கம் மானியமாகக் கொடுக்கிறது. அதேபோன்று இன்னொரு தோல் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக 322 தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவுநீரை சுத்திகரிக்க, ஏறத்தாழ ரூ. 12.98 கோடி செலவில் தனியாக இன்னொரு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே இருக்கின்ற பிரச்சினை, எல்லா இடங்களிலிருந்தும்,





ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்து வருகின்ற வழியில், அங்கே தனியாருடைய இடத்தை எடுத்து, கால்வாய் அமைத்துக் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதே போன்று சுத்திகரிப்பு நிலையம் அமைக்கிறபோது, அதற்காக வங்கியில் கடன் பெறுகிற சூழ்நிலை இருக்கிறது. அதே போன்று தொழிற்சாலைகளைச் சார்ந்த அந்த உரிமையாளர்கள் எல்லோரும் உடனடியாகப் பணம் கட்டுவது இல்லை. தனித்தனியாக அவர்களை எல்லாம் சந்தித்து, இதிலே கொண்டு வந்து சேர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்களை 'மோடிவேட்' செய்துதான் இப்படி ஒரு கடுமையான நிலையைத்தான் இன்றைக்கு, இந்த அரசாங்கம் எடுத்து, அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது. எனவே இதை விரைவாக முடிக்க நிச்சயமாக முயற்சிகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் ஜெ. பரந்தாமன்.

<u>டாக்டர் ஜெ. பரந்தாமன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலயம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிற நமது புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் புதிதாக ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பை மட்டுமே தடுக்கும். ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பாதிப்பை இந்த சுத்திகரிப்பு நிலையம் தடுக்காது. எனவே தண்ணீர் தேக்கி வைக்க இயலாத காரணத்தால் நிலத்தடி நீர் குறைந்து உப்பு நீரின் அளவு அதிகரிக்கின்றது. கோடை போன்ற வறட்சி காலங்களில் பாதிப்பு அதிகமாக இருக்கிறது. குடிதண்ணீர் கூட கிடைக்க இயலாத நிலை உள்ளது. எனவே தண்ணீர் தேக்கி வைக்க, பத்திரப்பள்ளி அணைத் திட்டத்தையும், பாலாற்றின் குறுக்கே பச்சையூர் ரயில்வே கேட்டின் அருகே சிறு அணையையும் கட்டி, சுற்றுப் புறம் கெட்டிருக்கும் நிலையையும் மாற்றி, மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர, பொதுப்பணித்துறைக்கு மக்கள் நல் வாழ்வு துறை பரிந்துரை செய்து இந்தப் பாதிப்பிலிருந்து மக்களை காப்பாற்ற இதய உள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவுநீரை தடுத்து நிறுத்தி விட்டாலேயே நிச்சயமாக இந்தப் பிரச்சனை தீர்ந்துவிடும். அதற்கு,

பின்னாலே கொஞ்சம் மழை பெய்ந்து விட்டாலே ஓரளவிற்கு இது தீர்ந்து விடும் என்று கருதுகிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நம்முடைய பொதுப்பணித் துறையிலே சொன்னால் அவர்கள் அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் ஏரியில் கழிவு நீர் கலந்து விடுவதால் அந்த தண்ணீர் விவசாயத்திற்கும் பயன்படுவது கிடையாது. காற்றின் சுற்றுப்புறமும் கெட்டு இருக்கிறது. சுற்றுப்புற கிணற்றின் நீரும் பாழ்பட்டிருக்கிறது. கழிவு நீர் பாய்வதால் பயனற்று விட்ட நிலங்களையும் பாழ்பட்டு விட்ட ஏரி கிணறு ஆகியவைகளையும் மீண்டும் பழைய நிலைக்கே கொண்டு செல்ல ஏதேனும் விஞ்ஞான தீர்வு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். இந்த சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு கழிவு நீர் வருவது தடுக்கப்பட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும். புதியதாக விஞ்ஞான ஆராய்ச்சியை நாம் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். நிச்சயமாக இந்தப் பணி முடிந்த பின்னாலே இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாசு கட்டுப்பாடு வாரியம் என்பது வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் கடந்த 1½-2 ஆண்டுகளாக யார் மீதும் வழக்கு போட்டதாகவே தெரியவில்லை. ஆகவே எல்லா சேனல்களில் இருந்தும் தண்ணீர் வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அந்த ஆலை உரிமையாளர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி கழிவு நீரை வெளியே விடாமல் இருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அமைச்சரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் மாசு கட்டுப்பாடு வாரியத்திலே இன்றைக்கே சொல்லி உடனடியாக அத்தனை தொழிற்சாலைகளையும் மூடிவிடக்கூடிய பணியை மேற்கொள்ள முடியும். ஆனால்





அப்படி மேற்கொள்ளுகிறபோது அரசாங்கத்தின் சார்பாக அந்த தொழிலாளர்களை காப்பாற்ற வேண்டிய நிலையும் இருக்கிறது. எனவே தான் இப்படிப்பட்ட சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தச் செய்து அவர்களும் 50 தொழிலாளர்களை வைத்துக் கொண்டு தொழிற்சாலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முடியாது. எனவேதான் அரசாங்கம் 50 சதவீதம் மானியம் கொடுக்கிறோம் என்று சொல்லி, பொது சுத்திகரிப்பு நிலையங்கள் . அமையுங்கள் என்று சொல்லி மோடிவேட் செய்து கொண்டிருக்கிறோம். உடனடியாக போய் வழக்கு போட்டு தடுப்பதன் மூலமாக என்ன நடக்கும் என்றால், கழிவு நீரை வேறு எங்கும் கொண்டு போக முடியாத நிலையில் அந்தச் சின்னச் சின்னத் தொழிற்சாலைகளை மூடிவிடுவார்கள். தொழிலாளர்கள் வேலை இல்லாமல் திண்டாடுவார்கள். எனவே தான் அவர்களை மோடிவேட் செய்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கருதுகிறோமே தவிர அங்கே கடுமையான நடவடிக்கை எடுத்தால், இன்னொரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கேட்பார்கள். 'அந்த ஆலைகள் எல்லாம் திறக்கப்படுமா? அவைகள் மூடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று', வெள்ளிக்கிழமையே இன்னொரு வினா போடுவதற்கான நடவடிக்கையை எடுக்க முடியும். (சிரிப்பு) எனவே இதிலே முறையாக செய்து யாருக்கும் பாதகம் இல்லாத நிலையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எம். கிருஷ்ணன்.

திரு. எஸ்.எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காமன் டிரீட்மென்ட் பிளான்ட், இன்டர்னல் பிளான்ட் என்று ஒவ்வொரு இண்டஸ்டிரியிலேயும் தனித்தனியாக போடுகிறோம். அப்படி தனித் தனியாக போடுகிற இன்டர்னல் பிளான்ட்டை இம்மீடியட்டாக அந்த பேக்டரிகளையே போடச் சொன்னால், வெளியேற்றப்படும் அந்த கழிவு நீரில் நச்சுத் தன்மையின் கடுமை சற்று குறைவாக இருக்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பெரிய தொழிற்சாலைகளிலே அதை போட்டிருக்கிறார்கள். சின்ன சின்ன தொழிற்சாலைகளினால் அதை போட முடியாது என்ற காரணத்தினால் தான் அதை ஒன்றாக சேர்த்து செய்ய வேண்டும் என்று

[1992 செப்டம்பர் 23

சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுவதுமாக குறிப்பிட்ட அளவிற்கு டிரீட்மென்ட் செய்ய முடியவில்லை என்றாலும் கூட ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் டிரீட்மென்ட் செய்வதற்கு இண்டர்னல் பிளான்ட் போட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது பற்றி மாசு கட்டுப்பாடு வாரியத்திலே சொல்லி நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 49

திரு. எஸ்.எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே அது வராது. தனியாகத்தான் போட வேண்டும். வினா எண் 49, திரு. எம். பெரியவீரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

49—

நகரப் பேருந்துவிட நடவடிக்கை.

*9056—திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரிய குளம் தொகுதி, கொடைக்கானலில் நகரப் பேருந்துகளை புதிதாக விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உலக சுற்றுலா மையத்தின் ஒரு தலை சிறந்த நகரமாக இருக்கும் கொடைக்கானல் நகரப் பகுதியிலே பல கிராமங்களில் இருந்து வருகிற ஆயிரக் கணக்கான மக்களுக்கு நகரப் பேருந்து வசதி இல்லாமல் வெகுகாலமாக சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிடையாக வந்தபோது கூட மக்கள் அது பற்றி பெட்டிஷன் கொடுத்து நிறைவேற்



1992 செப்டம்பர் 23]

றித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதி மக்களின் நன்மையைக் கருதி அமைச்சர் அவர்கள் நகரப் பேருந்து விட முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கப்படுகிற ஒரு நகரப் பேருந்துக்கு 41 சதவீதம் தான் அந்த பேருந்திலே பயணம் செய்கிறார்கள். ஆகவே புதிய பேருந்துகள்— நகர பேருந்துகள் விடுகின்ற வாய்ப்பு அங்கே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றைக்கு அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கின்றபோது புதிய பேருந்தாக அதை மாற்றித்தர வேண்டும் என்று சொன்ன உடனே இந்த அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு காலையிலேயே அந்த புதிய பேருந்தை இயக்கினோம் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. தேவையான அளவுக்கு புறநகர் பேருந்துகள் எவ்வளவு தேவையோ அவ்வளவு பேருந்துகளை கொடைக்கானல் பகுதிக்கு இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 50, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

50—

ஆரணி தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு நகரப் பேருந்து சரிவரச் செல்ல நடவடிக்கை.

*11512—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆரணி தொகுதியில் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்கள் பலவற்றில் நகரப் பேருந்துகள் சரிவரச் செல்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஆரணித் தொகுதியில் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் பெரும்பாலான கிராமங்களுக்கு பேருந்துகள் சரிவர இயக்கப்பட்டு வருகின்றன.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சேவையே மகேசன் சேவை என்கிற கடமை உணர்வோடு செயல்படும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பேருந்துகள் செல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது எனக் கருதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்கள் எல்லாம் பேருந்து வசதி பெற வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள். இருப்பினும் தொகுதியில் மக்கள் குறை கேட்க சென்றபோது பல கிராமங்களுக்கு அத்தகைய பேருந்து வசதிகள் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்தே இதனை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால் அதற்கு ஏதாவது காரணத்தைச் சொல்லி விடுகிறார்கள். இல்லாவிட்டால் கேட்ட நாளிலிருந்து சுமார் ஒரு வார காலம் வரை விட்டு விட்டு மீண்டும் நிறுத்திவிடுகிறார்கள். இதனால் எனது தொகுதியில் பல கிராமங்கள் போதுமான பேருந்து வசதிகள் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இதை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்வார்களா என்றும், கிராமப்புறச் சாலைகள் பேருந்துகள் செல்ல ஏற்றதாக இல்லை. எனவே, சீரடையும் வரை பேருந்துகளை விட இயலாது என்றெல்லாம் காரணங்கள் காட்டப்படுகிறது. எனவே கிராமப்புறச் சாலைகளைச் சீர்படுத்தி பேருந்துகள் காலதாமதமின்றி விரைவில் விட ஏதுவாக கிராமப்புறச் சாலைகள் அமைத்தல், பராமரித்தல் போன்ற பணிகளை போக்குவரத்துத்துறை அமைச்சரகம் மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், அது போக்குவரத்துத்துறை அமைச்சரிடம் வராது. கிராம சாலைகள் எல்லாம் பொதுப்பணித்துறை அமைச்சரிடம் வருகிறது. முதல் பகுதிக்குப் பதில் சொல்லலாம். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் பேர்களுக்கு ஒரு ஊர் உண்டு ஆயிரம் பேர்களுக்கு ஒரு பேருந்து உண்டு என்ற தத்துவத்தை



1992 செப்டம்பர் 23]

நம்முடைய தங்கத் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் 1992-ஆவது ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றித் தருவார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 51, திருமதி கே.எம். கலைச்செல்வி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

51—

காட்பாடி-வி. கோட்டா சாலை.

*9954—திருமதி கே. எம். கலைச்செல்வி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காட்பாடி—வி. கோட்டா சாலையை 1992-93 ஆம் நிதி ஆண்டிலேயே அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திட்டம் ஏதும் இல்லை.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் இன்று தமிழகத்தில் ஒரு பொற்கால ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கின்ற இந்த வேளையில் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். கடந்த ஆண்டே இந்த கோரிக்கையை நான் அவரிடம் வைத்திருக்கிறேன். வருகின்ற நிதியாண்டிலாவது இந்தக்கோரிக்கையை ஏற்று நிச்சயம் அந்த நெடுஞ்சாலையை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையினுடைய நீளம் ஏறக்குறைய 56 கிலோ மீட்டர். இதிலே 18 கிலோ மீட்டர் இருவழிச் சாலையாக இருக்கிறது. மீதம் இருக்கின்ற 38 கிலோ மீட்டர் ஒருவழிச் சாலையாக இருக்கிறது. இன்றைக்கு பல்வேறு சாலைகளை ஒருவழிச் சாலைகளை சீர்படுத்துகின்ற திட்டத்திலே இந்த அரசு முனைப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இருவழிச் சாலையாக மாற்றுகின்ற

சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த ஒருவழிச் சாலைகளை இன்றைக்கும் தரம் உள்ள சாலைகளாக மாற்றியதற்குப் பின்னாலே இந்தச் சாலையை மேம்படுத்துகின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 52, திருமதி என். கனகவல்லி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

52—

இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து தென்பகுதிக்கு கால்வாய் அமைத்தல்.

* 10018— திருமதி என். கனகவல்லி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 9156 ஏக்கர் பயன்படக்கூடிய 28.7 கோடியில் அனுமதிக்கப்பட்டுள்ள வைப்பாற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து தென்பகுதிக்கு கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்கால்வாயினால் நம்பிபுரம் பகுதியிலுள்ள 1000 ஏக்கர் நிலமும் பயன்பெறும் வகையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்தை நம்பி வானம் பார்த்த பூமியைக் கொண்ட மக்களின் நலனில் அக்கறை கொண்ட நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இல்லை என்று இல்லாமல் இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து நம்பிபுரத்திற்கு 7 கிலோ மீட்டர் கால்வாய் அமைத்தால் கீழ்





நம்பியாபுரம், மேல் நம்பியாபுரம், பொன்னையாபுரம், முடித்தலை, நாருகாபுரம், இனாம் அருணாசலபுரம், ஐயம்பட்டி போன்ற வறண்ட பகுதியில் உள்ள ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் பயன்பெறும். நம்பிபுரத்திற்கு என்று தனியாக அணைக்கட்டு அமைக்கும்போது 1.4 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 70 இலட்சம் செலவிடப்பட வேண்டியுள்ளதால் இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து நம்பிபுரத்திற்கு கால்வாய் அமைத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு கருணையோடு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய நீர்த் தேக்கம் என்பது நம்முடைய ஒப்பற்ற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் 1992–93ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே தான் மிக நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு காமராஜர் மாவட்டத்திலே அந்தத்திட்டம் செயற்படுத்துவதற்கான வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு 28 கோடி ரூபாய். இன்றைக்கு அந்தத் திட்டத்தினால் ஏறத்தாழ 18 கிராமங்களுடைய பாசன வசதி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் முதல் கட்டப் பணிகளுக்காக 35 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். முதலில் இந்த 18 கிராமங்களும் நீர் வசதி பெற்றதற்குப் பின்னர் தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த துணைக்கால்வாய்த் திட்டம் பரிசீலிக்க முடியும். ஆகவே, மூல திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் வரும் காலங்களில் அவர் கேட்கின்ற அந்தத் துணைத் திட்டத்திற்கான வாய்ப்பை இந்த அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 53, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

53—

குடிநீர் வழங்க நடவடிக்கை.

*9286—திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தொகுதியில் பல ஊர்களுக்குக் குடிநீர் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

[1992 செப்டம்பர் 23

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு, திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1992-93-ஆம் ஆண்டில் 14 குடியிருப்புகளில் முழுமையாகக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தவும் 10 குடியிருப்புகளுக்கு பகுதி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தவும், எஞ்சிய குடியிருப்புகளுக்கு அவற்றின் தகுதிக்கேற்ப இனி வரும் ஆண்டுகளில் படிப்படியாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் மலையனூர் என்ற ஊருக்கு நீண்ட நாட்களாக குடிநீர் சப்ளை இல்லாமல் இருக்கிறது. படாளம் கூட்டு ரோடு அருகிலுள்ள கொளப்பாக்கம் என்ற கிராமத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. அங்கே ஒரே ஒரு போர் வெல் குழாய் கிணறு தான் இருக்கிறது. அந்த மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். தேவாதூர் என்ற கிராமத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, கட்டப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. அந்த நீர்த் தேக்கத் தொட்டி மேற்கொண்டு கட்டப்படாமல் இருக்கிறது. பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தாதகுப்பம் மற்றும் புலிக்கோடு ஆகிய கிராமங்களில் நீர்த் தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு குழாய் பதிக்கப்பட்டு, மின் மோட்டார் ஷெட் கட்டப்பட்டு கிணறு இல்லாமல் இருக்கிறது. செய்யூர் என்ற ஊரில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள். உங்கள் தொகுதி முழுவதும் இதில் வராது. உங்கள் தொகுதியிலுள்ள மற்ற எல்லாக் கிராமங்களுக்கும் என்று ஒரே வரியில் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. பி. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி குறைவாக இருப்பதால் கருணை உள்ளம் கொண்ட தெய்வத் தாய் அரசு இந்த குறையைப்போக்கி விரைவில் மதுராந்தகம் தொகுதியில் குடிநீர் வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் மதுராந்தகம் மற்றும் விளாத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இவற்றில் சுமார் 462 குடியிருப்புகள் இருக்கின்றன. இதில் 190 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மதுராந்தகத்தில் 106 குடியிருப்புகளும், விளாத்தூரில் 84 குடியிருப்புகளும் ஆக 190 குடியிருப்புகளுக்கு முழுமையாகத் தண்ணீர் தேவையை இந்த அரசு பூர்த்தி செய்திருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று தமிழகத்தினுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அளித்த அறிவுரையின்படி 1992–93-ஆம் ஆண்டில் 14 குடியிருப்புகளுக்கு சுமார் 43 இலட்சம் ரூபாய் செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் மார்ச், 1993க்குள் முடிக்கப்படும். எஞ்சியிருக்கிற குடியிருப்புகளுக்கும் படிப்படியாக நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 54, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

54—

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம்.

*10480—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986—ல் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று மாநில அரசின் சார்பாக மைய அரசுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் (உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கூறுவதற்காக மைய அரசு ஒரு குழுவை நியமித்தது. அதிலே தமிழக உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஒரு உறுப்பினராக இருந்தார்கள். அந்தக் குழு தன்

னுடைய விவாதங்களை முடித்து அறிக்கையை இந்த ஆண்டு
ஜனவரி மாதம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அளித்
துள்ளது. அறிக்கை மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திராவிட இயக்க வரலாற்றில் திருப்பு முனையாக
திராவிட சக்தியாக விளங்கி இன்றைக்கு தமிழக அரசின் வர
லாற்றிலும் ஆட்சித் துறையிலும் ஒரு அமைதிப் புரட்சியை
உருவாக்கி பொற்கால ஆட்சி நடத்தி வரக்கூடிய நம்முடைய
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, நம்
முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை
எடுத்து அது நல்ல நிலையில் இருப்பதாகத் தெரிவித்ததற்கு
நன்றி கூறி, ஏற்கெனவே உள்ள அந்த நுகர்வோர் பாதுகாப்பு
சட்டத்தில் என்ன மாற்றம் செய்யப்பட்டு, எத்தகைய பரிந்
துரைகள் அனுப்பப்பட்டுள்ளன, மைய அரசினுடைய நிலையை,
மைய அரசு திருத்த நம்முடைய அரசு வற்புறுத்துமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மைய அரசு அமைத்த குழு,
Consumers, Protection Act', Monopolies Restrictive Trades Practices
Act என்ற இரண்டிலும் மாற்றங்கள் செய்ய வேண்டுமென்பதை
எடுத்துச் சொல்லி இருக்கின்றது. அதிலே நிறைய அதிகாரங்
களை Consumers Court-க்கு அளிக்க வேண்டுமென்று சொல்லி
யிருக்கின்றோம். அதனுடைய அறிக்கை, பெரிய அறிக்கையை
அவ்வளவையும் இந்த நேரத்தில் சொல்லி முடிக்க முடியாது.
ஆனால், சொல்லப்பட்டிருக்கின்ற திருத்தங்கள் நிறைவேற்றப்
படுமானால் அது மிகப் பெரிய மாற்றத்தை நுகர்வோர் பாது
காப்புச் சட்டத்திலே கொண்டு வரும். அப்படிப்பட்ட மாற்
றத்தை விரைவிலே மத்திய அரசு கொண்டு வரும் என்று எதிர்
பார்க்கின்றோம். அதை வலியுறுத்தி இருக்கின்றோம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினுடைய பயன்
குறித்துப் பெரும்பாலான மக்கள் இன்னும் அறியாமல் உள்ளனர்.
அதனை மக்கள் இயக்கமாக மாற்றியமைக்கும் வகையில் மாநில
அரசு மைய அரசிடம் வற்புறுத்தியுள்ளதா ? இல்லையேல், இனி
வரக்கூடிய கலந்துரையாடல்களில் அதை வற்புறுத்துமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி
யின் ஆட்சியில், நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் நாடெங்கும்
பரப்பப்பட வேண்டுமென்பதில் இந்த அரசு அக்கறையாக இருக்



கின்றது. இப்பொழுது பெரும்பாலும் நகர்ப்புறங்களிலே
மட்டும்தான் கன்ஸ்யூமர் கவுன்சில்கள் இருக்கின்றன.
இதைக் கிராமங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும், பரவ
லாக்க வேண்டுமென்பதில் அரசு அக்கறை எடுத்து, யார் யார்
எங்கெங்கே இப்படிப்பட்ட இயக்கங்களைத் தோற்றுவிக்கிறார்
களோ அவர்களுக்கெல்லாம் ஆலோசனை வழங்கி அவர்களுக்கு
நிதியுதவிகூட வழங்கி வருகின்றோம். நான் இந்த நேரத்தைப்
பயன்படுத்தி, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும்,
இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு இதைக் கவனித்துப்
பரப்புவதற்காக உதவி புரிய வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.எஸ். துரைமுருகன்.

திரு. கே.எஸ். துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலே திருத்தம்
கொண்டு வரும்பொழுது (Medical Services and Legal Services)
மருத்துவப் பணி மற்றும் வழக்கறிஞர்கள் பணி அந்தச் சட்டத்
தினுடைய வரைமுறைக்குள் கொண்டு வரப்படுகின்ற யோசனை
இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மருத்துவம், அதே போல சட்டம்—சட்டத்
துறை, இன்னும் அதுபோக வீட்டு வசதி, லோக்கல் அட்மினிஸ்ட்
ரேஷன் இவைகளைக்கூட கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கு அடியிலே
கொண்டு வர வேண்டும் என்ற திருத்தங்கள் சொல்லப்பட்டிருக்
கின்றன. ஆனால், மைய அரசு இன்னும் அதிலே முடிவு எடுக்க
வில்லை. முடிவெடுத்து அதற்குப் பிறகு நாடாளுமன்றத்திலே
அது நிறைவேறிய பின்னால்தான் எது எது உறுதியாக வரும்
என்பதைச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 55, திரு.
எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை
அமைச்சர்.

55—

## விவசாயிகள், தொழிலாளர்கள் கட்டிய இன்சூரன்ஸ் பணத்தை திரும்பக்கொடுக்க நடவடிக்கை.

*10860—திரு.எஸ். எஸ். ராமசுப்பு :
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் இன்சூரன்ஸ் திட்ட
மாக மாதம் ரூ. 10 கட்டி வந்ததை திட்டம் நிறுத்தப்பட்டதால்
கட்டிய பணத்தை திரும்ப கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உறுப்பினர்கள் செலுத்திய சந்தாத் தொகையை உறுப்பினர்களுக்குத் திருப்பியளிக்க தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை எண் 480 நாள் 23—3—90ல் ஆணைகள் இடப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்குமாக இந்த இன்சூரன்ஸ் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டத்தை உருவாக்கினார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்கள், கிராமத்திலுள்ள இந்தத் தொழிலாளர்களுக்கு இது பயன் தரக்கூடிய திட்டமாக இது இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தை எதற்காக கைவிட்டார்கள் என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்தைக் கைவிட்டதற்குப் பின்னால் இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லியிருந்த பணமானது பல இடங்களிலே அவர்கள் பாஸ் புக்கையெல்லாம் திருப்பிக் கொடுத்த பின்னாலும் கூட, எங்களுடைய பகுதியிலே, தென்காசி, அதைப்போல, வி.கே. புதூர் தாலுக்காக்களிலேயெல்லாம் இன்னும் திருப்பிக் கொடுக்கப்படாமல், நீங்கள் ஆணையிட்ட பின்னாலும்கூட இன்னும் அது இருக்கின்றது ஏன் என்பதை அரசு அறியுமா? அரசு இது சம்பந்தமாக விளக்கங்களைக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை 10,68,990 நபர்களுக்குப் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 2,77,367 பேர்களுக்கும் பணம் திருப்பிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை ஆதாரத்தோடு உறுப்பினர் அவர்கள் சொன்னால் உரிய நடவடிக்கை எடுத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இருபதாண்டுக் காலமாக பொள்ளாச்சி பகுதியிலே இருக்கின்ற பாரம் தூக்கும் தொழிலாளர்கள், வேறு எந்தக் கட்சிக்கும் ஒரு உறுப்பினர்கூட இல்லை என்கின்ற ஒரு பெருமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களாக இருந்து



1992 செப்டம்பர் 23]

பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த உடனேயே அங்கே இருக்கிற அத்தனைத் தொழிலாளர்களும், இந்தத் திட்டத்திலே சேர்ந்து, மாதம் 10 ரூபாய் கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்படி கட்டிய நேரத்திலே அந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலமாக ஒருசில தொழிலாளர்களுக்கும். . . .

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன்னனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது. திரு. சந்திரசேகர், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி.பி. சந்திரசேகர் : இந்தத் திட்டத்தின் மூலமாக தொழிலாளர்களும் அதில் நன்மை பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்த சிறப்பான திட்டத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு நீக்கியிருக்கிற நேரத்திலே, இந்த திட்டம் நல்ல திட்டம் என்கின்ற வகையிலே, மீண்டும் அதை கொண்டுவர மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமலாக்கப்படுவதிலே ஏற்பட்ட பல்வேறு சிரமங்களுக்கு இடையிலேதான் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதிலே 18 வயது முதல் 55 வயது வரையுள்ளவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஆனால், 58 வயதுக்கு மேல் உறுப்பினர்களாக இருந்தவர்களும் அதேபோல் நோய்வாய்ப்பட்டவர்களும் உறுப்பினர்களாக இருந்ததால், ஆயுள் காப்பீட்டுக் கழகம் அதற்கான நஷ்ட ஈட்டைக் கொடுப்பதிலே பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, அதை தமிழக அரசு திருப்பிக் கொடுக்க வேண்டுமென்கிற ஒரு நிலை ஏற்பட்டது. எனவேதான், ஒட்டு மொத்தமாக தீர்மானம் செய்யப்பட்டு, இறுதியாக இந்த அரசாணை வெளியிடப்பட்டு, இந்தத் திட்டம் அமுலாக்கப்படுவதில் ஏற்பட்ட சிரமங்களின் அடிப்படையிலே நிறுத்தப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஏழை எளியோர்களுக்கான இன்ஷூரன்ஸ் திட்டங்கள், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் ஏதாவது, தமது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 56, திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

56—

## தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை

*9473—திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நெற்பயிர் பூச்சி தாக்குதலினால் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதைக் கட்டுப்படுத்த அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிர்கள், பூச்சித் தாக்குதலினால் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை முட்டைப் பருவத்திலோ



வேறு சில அடையாளங்களை வைத்தோ தாக்குதலுக்கு முன்னாலேயே கண்டுபிடித்து விடமுடியும். எனவே வேளாண்மைத் துறை அலுவலர்களால் எல்லோரும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பகுதி பகுதியாக இல்லாமல் ஒரு முழுமையான பகுதி அனைத்தையும் பாதுகாப்பு நடவடிக்கையாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்பயிர் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த, பூச்சிநோய் நிலை குறித்து வாராந்திர கணிப்பு செய்து, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி வல்லுநரிடம் ஆராய்ச்சி செய்யப்பட்டு, அதன் விவரத்தை விவசாயிகளுக்கு முன்னெச்சரிக்கையாக துண்டுப் பிரசுரங்கள், பத்திரிக்கை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவைகளின் மூலமாக அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பிற்காகவும், பூச்சி நோயிலிருந்து பயிர்களைக் காப்பதற்கும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், இருநாள் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, 50 சதவிகிதம் மானியத்தில் மருந்து தெளிக்கும் கருவிகளும், பூச்சி மருந்து மற்றும் பூச்சி நோயைக் கட்டுப்படுத்த 25 சதவிகிதம் மானியத்தில் மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 57, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

57—

## சூளைப்பள்ளம் பகுதியில் குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடிக் கட்டிடம்.

* 9963—திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எம்.ஜி.ஆர். நகரில் உள்ள சூளைப்பள்ளம் பகுதியில் வசிக்கும் குடிசைவாழ் மக்கள் மழைக் காலத்தில் வெள்ளப் பெருக்கினால் சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிசை மாற்று வாரியம், அப்பகுதியை உயர்த்தி, அடுக்குமாடிக் கட்டிடம் கட்டித்தர முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இவர்களை மாற்றிடங்களில் குடியமர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போது மாற்று இடம் தருவதாகச் சொன்னார்; நன்றி. மழைக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. செம்பரம்பாக்கத்திலிருந்து வருகிற வெள்ளம் ஒவ்வொரு தடவை மழை வரும்போதும், பெருக்கெடுத்துக் கொண்டு ஓடுகிறது. அந்த ஆற்றை ஒட்டியிருக்கிற சூலைப்பள்ளத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. ஒவ்வொரு தடவையும் வெள்ளம் வரும்போது கிட்டதட்டத் ஒருமாதம் அங்கே குடியிருக்க முடியாது. அவ்வளவு பெரிய பள்ளமாக ஆகியிருக்கிறது. இந்த மழைக் காலத்திற்குள்ளே ஒரு மாற்று இடம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பொழுது எம்.ஜி.ஆர். நகர் சூலைப்பள்ளம் பகுதியில் சுமார் 15 அடி முதல் 20 அடி பள்ளப் பகுதியிலே தாழ்வான பகுதியிலே அடங்கி இருக்கிறது. இந்தப் பகுதியில் 2,000 குடிசைகள் அல்ல ; மொத்தம் 3,000 குடிசைகள் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்திலும் வெள்ளத்தால் இந்தப் பகுதி பாதிக்கப் படுகிறது என்ற காரணத்தால்தான் பள்ளமான பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் இந்த இடங்களிலே கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருப்பினும் கூட, கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்தத் தாழ்வான பகுதிகளைச் சுற்றிப் பார்க்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உடனிருந்து வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தாழ்வான பகுதியிலே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று இடங்கள் அளிக்க அன்றே உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே 1992—93-ஆம் ஆண்டில் சுமார் 5,000 அடுக்கு மாடி வீடுகள் எந்த ஒரு ஆட்சிக் காலத்திலும்





இல்லாத அளவில் அரசு இந்த ஆண்டு செயல்படுத்த இருக்கின்றது. இந்தப் பகுதி Circular Corridor Railway Alignment உள் வட்ட இரயில் பாதை வழியில் அமைக்கப்பட இருக்கின்ற காரணத்தால் இந்தப் பகுதியில் மட்டும் அடுக்கு மாடி வீடுகள் கட்ட இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட வேளச்சேரிப் பகுதியிலே கூடிய விரைவில் சுமார் 1,046 காலி மனைகள் தயார் செய்து குடிசை வாழ் மக்கள் தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது. ஆகவே நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு உடனடியாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 58, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

58—

## சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு இறைச்சி உணவு வழங்கல்

*11551—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு வாரத்தில் ஒருமுறை இறைச்சி உணவும் சேர்த்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆகவே, இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். சத்துணவுக் கூடங்களில் படிக்கின்ற குழந்தைகளுக்குப் பெயரளவிலேதான் சத்துணவுக் கூடம் என்று இருக்கின்றதேயொழிய [illegible] உணவுகள் கொடுக்கின்ற விதத்தைப் பார்க்கின்ற [illegible] படிக்கின்ற குழந்தைகளுக்கு இளம் வய[illegible] வருமோ



164948
D
V211, 31'N92
N92:28:3

என்ற அச்சம்கூட நிறைய இடங்களில் இருக்கிறது. ** அந்தக் குழந்தைகளுக்கு வாரத்தில் ஒருமுறை கொடுத்துவந்த அந்த மாவு உருண்டையையும் நிறுத்திவிட்டார்கள். அதனால் இறைச்சியைக் கொடுப்பதற்கு வரும் நிதி ஆண்டிலாவது அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வி நேரத்தின்போது குற்றச்சாட்டு கூடாது என்று முன்னரே சொல்லியிருக்கிறேன். **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தில் 2 வயது முதல் 15 வயதுவரை உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகின்ற காரணத்தால் இறைச்சி போன்ற கடின உணவுப் பொருள்களை பயன்படுத்தி சத்துணவு வழங்கினால் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமையாது. மேலும் இறைச்சியைப் பயன்படுத்தித் தயாரிப்பதற்கு அதிக நேரம், அதிகச் செலவு தேவைப்படும். தற்போது பயன்படுத்தப் பட்டுவரும் அரிசி, பருப்பு, எண்ணெய் முதலியவற்றில் தேவையான சத்துணவுப் பொருள்கள் உள்ளன. மேலும் இயற்கை ரீதியாகவே புரதச் சத்து இருக்கின்ற முட்டையை வழங்குவதற்கும், எவ்விதக் கூடுதல் முயற்சி இல்லாமல் வேகவைத்து வழங்குவதற்கும் அது சுலபமாக உள்ளது. மேலும் புரதச் சத்துக்கள் நிரம்பி இருக்கின்ற முட்டையினை 2 முதல் 4 வயதுவரை உள்ள சிறு குழந்தைகள் முதல், 5-லிருந்து 9 வயதுவரை உள்ள குழந்தைகள், 10-லிருந்து 15 வரை உள்ள பள்ளியில் பயிலும் மாணவர்களும் உட்கொள்ளுவதால் அவர்களுக்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை. புரதச் சத்து நிறைந்த முட்டையை வழங்குவதற்கும் ‘இந்தியன் வெஜிடேரியன் காங்கிரஸ் என்ற அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து முட்டை உணவை விரும்புகிறவர்களுக்கு வேக வைத்த முட்டை வழங்குவதும், முட்டை உணவை விரும்பாதவர்களுக்கு சத்துணவு உருண்டை வழங்கும் முறையும் செயல்பட்டு வருகின்றது. முட்டை வழங்குவதற்கே ஆரம்ப நிலையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இறைச்சி உணவை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டால் கடும் எதிர்ப்பு ஏற்படும் நிலை உருவாகக் கூடும். மேலும், தமிழக வரலாற்றில் இதுவரையில் எவரும் காட்டாத அக்கறையைக் குழந்தைகள் நலத் திட்டத்தில் காட்டி, அதற்கான திட்டங்களைத் தீட்டி வருகின்ற எங்களுடைய அன்புத் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்த செப்டம்பர் 1-ஆம் தேதி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



யிலிருந்து பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றை விடப் புரதச் சத்து நிறைந்திருக்கிற ‘சோயா மாவு’ பருப்புடன் கலந்து அளிக்கப்படுகிறது என்பதையும் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப் படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகின்றன. இந்த பத்து ஆண்டுக் காலத்தில் எவரும் சாதிக்க முடியாத சாதனையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலேதான் புரட்சித் தலைவியின் அறிவுரைப்படி சத்துணவுத் திட்டத்திலே சாதித்து வருகிறோம் என்பதையும் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். எந்தச் சத்துணவும் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் நிறுத்தப்படவில்லை. கூடுதலாகத்தான் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 10.40

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது சத்துணவுக் கூடங்களில் உணவு சரிவர கொடுக்கப்படாததால், குழந்தைகளுக்குப் போலியோ நோய் வருகிறது என்று குறிப்பிட்டார். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போலியோ நோய் உணவுமூலமாக வருவது அல்ல. போலியோ வைரஸ் மூலமாக வருவது. (மேசையத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், இளம் பிள்ளைகளுக்கு இந்த போலியோ நோய் வரக்கூடாது என்பதற்காகத்தான் போலியோ வேக்சினை இலவசமாக நாங்கள் பிரைமரி ஹெல்த் செண்டர்களில் வழங்குகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>திரு. கே. செல்வராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அங்கே உணவு வழங்குகின்றபோது அந்தக் குழந்தைகளுக்கு, அந்த நோய் வருகின்றதற்குக் காரணம், முறையாக அவர்களுக்கு அரசு போடுகின்ற அளவு அந்தச் சத்துணவை அவர்கள் தருவதில்லை என்று நான் கூறினேனே, தவிர........அதைக் கண்காணிப்பதற்கு, கொடுக்கின்ற அந்த உணவுப் பொருட்கள் ஒழுங்காகத் தருகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு ஆய்வாளர்களை நியமிக்க உத்தேசம் உள்ளதா

என்பதனையும், அவர்களுக்கு நோய் வராமல் தடுப்பதற்கு இலவசமாக வாரத்திற்கு ஒருமுறை மருத்துவ வசதி அளிப்பதற்கு முகாம்கள் அமைக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செல்வராஜ், மாண்புமிகு முதல் அமைச்சர், இதற்குத்தான் அந்த இலவச போலியோ வேக்சீன் கொடுக்கிறோம் என்பதையே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தச் சத்துணவுக் கூடங்களை ஆய்வுசெய்வதற்கு சத்துணவுத் திட்டத்தினுடைய நேர்முக உதவியாளர்கள் ஆங்காங்கே பயன்படுத்தபடுகிறார்கள். இதைத் தவிர, உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற பி.டி.ஓ-க்கள் இந்தச் சத்துணவுப் பணியை கண்காணிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறார்கள். இதைத் தவிர, உலக வங்கியே இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தை பாராட்டி அறிக்கையும் விட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்த ராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளுடைய வாடிய உள்ளத்தை காண்கிற நேரத்திலே எல்லாம் வான் மழைப் பொழிவதுபோல, இரண்டு ஆண்டும் சத்துணவு சீர்கெட்டு இருந்தநேரத்திலே, நிதிநிலையில் அதிகம் பற்றாக்குறை இருந்தாலும் சிறப்பான சத்துணவுத் திட்டத்தை சத்துணவாகக் கொடுக்கின்ற எங்களுடைய தர்மத் தாயினுடைய ஆட்சியைப்போல் இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எங்கு எங்கு சத்துணவு கொடுக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்திலேதான் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் சொல்லுகின்றபோது நோய் வருவதாகச் சொன்னார்கள். இந்தச் சத்துணவு வழங்கப்பட்டக் காரணத்தினாலேதான் அந்தக் குழந்தைகளுக்கு வருகின்ற நோய்த் தடுக்கப்பட்டிருக்கிறது. உணவு சரியாக இல்லாத காரணத்தினால் நோய் வந்து கொண்டிருந்தது. இப்போது அந்த நோய் வருவது, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அந்தக் குழந்தைகளுக்கு அந்த நோய் குறைந்திருக்கிறது. வலுவான ஒரு சந்ததியை உருவாக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரை நான் கேட்டுக் கொள்வது நீங்கள் எந்தக் குறையைச் சொல்ல நினைத்தாலும் அதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்து தடுத்திருக்கிறது என்பதை இங்கே வருகின்ற பதில் மூலமாக உறுப்பினருக்குப் புரிகிறது என்று கருதுகிறேன். எனவே, ஏதாவது உண்மையிலே குறை இருப்பதைத் தேடிப்பிடித்து வந்து சொன்னால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 59. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

59—

கால்நடை பெருக்குத் திட்டம் மற்றும் தீவன உற்பத்தித் திட்டம் செயல்படுத்த உலக வங்கி வழங்கிய உதவி.

* 9021—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கால்நடை பெருக்குத் திட்டம் மற்றும் தீவன உற்பத்தித் திட்டம் செயல்படுத்த உலக வங்கி வழங்கிய நிதி உதவி எவ்வளவு ?

(ஆ) அத்திட்டத்தின் கீழ் உறை விந்து கொண்டு செல்லவும் பாதுகாக்கவும் உபயோகிக்கப்படும் திரவ நைட்ரஜன் எவ்வாறு பெறப்படுகின்றது ?

(இ) அதற்கு இதுவரை செலவான தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ரூ. 46.62 கோடி.

(ஆ) தேவைப்படும் திரவ நைட்டிரஜன், கால்நடை பராமரிப்புத் துறையின் ஈச்சங்கோட்டை அபிசேகப்பட்டி மற்றும் ஒசூர் பண்ணைகளில் தயாரிக்கப்படுகிறது. மேலும் அதிகப்படியாக தேவைப்படும் பொழுது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இணையம் மற்றும் தனியார் துறைகளின் மூலமும் பெறப்படுகிறது.

(இ) 1991—92-ம் ஆண்டில் 1,83,777 லிட்டர் திரவ நைட்ரஜன், ரூ. 17,03,673க்கு தனியார் நிறுவனங்கள் மூலம் பெற்று உபயோகப்படுத்தப்பட்டது.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து மருத்துவ மனைகளிலும் உறை விந்து வைத்துக் கொள்ள வசதி ஏற்படுத்தித் தர முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உறை விந்து வசதி ஏற்படுத்துவதற்காகத்தான் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இது போன்ற மாபெரும் திட்டத்தினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 60. திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

60—

அனந்த கோபாலபுரத்தில் பின்தங்கிய வகுப்பினர் விடுதி.

*11962 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (தெற்கு) ஊராட்சி அனந்தகோபாலபுரத்தில் பின்தங்கிய வகுப்பினர் விடுதி ஒன்றை அமைக்க 1992—93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாதரங்கோட்டைப் பகுதி என்பது பக்கத்திலே ஒரு 5 கிலோ மீட்டர் அளவுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட அம்பலகார இனத்தைச் சார்ந்த இன மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். அந்த பகுதியிலே இந்த பேக்வேர்ட் ஹாஸ்டல் என்பது மிகவும் அவசியமானது. 5, 6 கிலோ மீட்டர் அளவுக்கு போக்குவரத்து வசதியும் இல்லாமல் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த பள்ளிக்கு வருகின்ற மாணவர்கள் அங்கே தங்குவதற்கு இந்த ஹாஸ்டல் மிக மிக அவசியமாக இருக்கின்ற காரணத்தினால் அதே நேரத்தில் சென்ற ஆண்டு நம்முடைய டாக்டர் புரட்சி தலைவர் அவர்கள் முன்னிலையிலே நான் பேராவூரணிக்கும் நடவைக்குறிச்சிக்கும் ஹாஸ்டல் வேண்டும் என்று கேட்டபோது உடனடியாக அமைச்சர் பெரு மக்கள் பேக்வேர்ட் கிளாஸ் மினிஸ்டர் அவர்களும் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் நடவைக்குறிச்சிக்கு ஆதிதிராவிடர் ஹாஸ்டலும் பேராவூரணிக்கு பெண்கள் பேக்வார்ட் ஹாஸ்டலும் வழங்க உத்திரவிட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையில் இந்த அம்பலக்கார வகுப்பு மக்கள் வாழ்கின்ற இந்தப் பகுதியில் இந்த பேக்வேர்ட் ஹாஸ்டல் மிகமிக அவசியம் என்ற காரணத்தினால் மீண்டும் அதை பரிசீலிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பிறபட்டோர், மிகப் பிற்பட்டோர், சீர்மரபினர் மாணவர் மாணவியர்களுக்காக நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு 771 விடுதிகளை நடத்தி வருகிறது. தஞ்சை மாவட்டத்தை பொறுத்த வரையில் 35 விடுதிகள் இந்த மாணவியர்மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. இந்த மாமன்றத்திலே பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதிக்கு விடுதி ஒன்று வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தபோது, கேட்டதை எல்லாம் கொடுக்கும் ஆற்றல் குணம் கொண்ட வல்லமை கொண்ட நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 1992-93 ஆம் நிதி ஆண்டிலே அவருடைய தொகுதிக்கு பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி ஒன்றை அமைக்க உத்திரவிட்டுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

### வன வளர்ச்சிக்கு மத்திய அரசு மானியம்.

வினா எண் 8283—திரு மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வன வளர்ச்சிக்காக மத்திய அரசு ஏதேனும் மானியம் வழங்குகிறதா?

(ஆ) அது குறித்து விளக்கங்கள் தருக?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி வளர்ச்சிக்காக மத்திய அரசு மேற்கொள்ளும் திட்டம் ஒன்று உள்ளது. இத்திட்டம் மத்திய திட்டக்குழுவின் மூலமாக செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சில மாநிலங்களுக்கு மத்திய திட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை செயல் படுத்துவதற்காக மத்திய அரசு 90 சத விகிதம் மானியமாகவும், 10 சத விகிதம் கடனாகவும் நிதியுதவி வழங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி செல்லும் ஏழு மாவட்டங்களிலுள்ள 25 தாலுக்காகளில் இத்திட்டம் 1975-76 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் வனவள பாதுகாப்பு முக்கியமான அம்சமாகும். மற்ற சில அம்சங்களான மண்வள பாதுகாப்பு, தோட்டக்கலை, பழங்குடியினர் மேம்பாடு போன்றவைகளிலும் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. வனவள பாதுகாப்பு திட்டத்திற்காக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது:

| ஆண்டு. | ஒதுக்கீட்டுத் தொகை. | 31-3-92 வரையிலான செலவு. | பெறப்பட்ட மத்திய திட்ட உதவி. மானியம். 90 சதவிகிதம். | கடன் 10 சதவிகிதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1990—91 | 2.20 | 2.21 | 1.98 | 0.22 |
| 1991—92 | 2.20 | 2.25 | 1.98 | 0.22 |



2—

### கள்ளக்குறிச்சியில் சார் நிலை நீதிமன்றம்.

வினா எண். 3377—திரு. சி. இராமசாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளக்குறிச்சியில் வழக்கறிஞர்களின் நீண்ட நாளைய கோரிக்கையான சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

3—

### கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு.

வினா எண். 538—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், பாலாழி, ஆம்பாடி, வைகுண்டம், காமதேனு, காந்திமதி, நாகம்மாள், பால்குளம் போன்ற தனியார் பெரும் தோட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து சேமிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு புறம்போக்கு நிலங்களை கையகப் படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களின் எல்லைகள் குறிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

4—

கடலூர் கடற்கரை பகுதியை அழகுபடுத்துதல்.

வினா எண். 4580—திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூர் கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

5—

உடுமலை வட்டத்தில் தண்டத் தீர்வை.

வினா எண். 4768—திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1399, 1400 பசலிகளுக்கு பி. ஏ. பியில் உடுமலை வட்டத்தில் விதிக்கப்பட்ட தண்டத்தீர்வை ரூ. 40 லட்சம் நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு விதிக்கப்பட்ட தண்டத்தீர்வையை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) 1399 ஆம் பசலிக்கான தண்டத்தீர்வை கேட்புத் தொகையான ரூ. 18,20,127.61 மொத்தமும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது, ஆயினும் 1400 ஆம் ஆண்டிற்கான தண்டத் தீர்வை கேட்புத்தொகையான ரூ. 18,67,542.23 காசு நிலுவையில் உள்ளது.

(ஆ) மேலே குறிப்பிட்ட தண்டத் தீர்வை அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவானதால் இவ்வினாவிற்கு இடமில்லை.

6—

மாணவர்கள் குறைந்த தேர்வுக்கு தலைமையாசிரியர்கள் மீது நடவடிக்கை.

வினா எண். 1828—திரு. மா. சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பொதுத் தேர்வில் மாணவர் குறைந்த அளவில் தேர்ச்சிப் பெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர் மீது நடவடிக்கை எடுக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்தகைய நடவடிக்கைகளுக்கு கல்லூரி முதல்வர்களும் உட்படுத்தப்படுவார்களா?

மாண்புமிகு டாக்டர் அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

7—

மகப்பேறு மருத்துவமனை அமைத்தல்.

வினா எண். 2959—திரு. இரா. தங்கராசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், செந்துறை ஒன்றியம், செந்துறையில் 30 படுக்கைகள்கொண்ட மகப்பேறு மருத்துவமனை அமைக்க 1991—92-ம் ஆண்டுக்குள் தொகை செலுத்தப்பட்டுள்ளதால் அதை அமைத்துக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 செப்டம்பர் 23

(ஆ) ஆம் எனில் விரைவில் பணிமனை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

12—

கூட்டுறவுத்துறை நூற்பாலைகள்.

வினா எண் 8041—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் தற்போது கூட்டுறவுத்துறையின் கீழ், இயங்கும் நூற்பாலைகள் (மாவட்ட வாரியாக) எங்கெங்கு உள்ளன?

(ஆ) அவைகள் மாதந்தோறும் உற்பத்தி செய்யும் நூல் உற்பத்தி எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் (கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்) :

(அ) தமிழ்நாட்டில், திருநெல்வேலி - கட்டபொம்மன், காமராசர், வ.உ. சிதம்பரனார், சேலம், மதுரை, அண்ணா பெரியார், திருச்சி, கன்னியாகுமரி, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, வடஆற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் பதினெட்டு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) பதினெட்டு கூட்டுறவு நூற்பாலைகள், மாதம் ஒன்றிற்கு சுமார் 18,000 பேல் சிட்டம் மற்றும் கோன் நூல் உற்பத்தி செய்கின்றன. இதில் 10—ம் நெம்பர் நூல் முதல் 120-ம் நெம்பர் நூல் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.



1992 செப்டம்பர் 23]

13—

நூல்கட்டுகள் எடை சரியாக அளித்தல்.

வினா எண். 8925—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்பு மிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

'கூட்டுறவு நூற்பாலைகள், உற்பத்தி செய்யும் நூல் கட்டுகளின் எடை, நிர்ணயிக்கப்பட்டுள்ள எடையைக் காட்டிலும் (200 கிராம் முதல் 500 கிராம் வரை) குறைவாக உள்ளதால், நூல் கட்டுகள் சரியான எடையில் வழங்க அரசு ஆவன செய்யுமா'

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்:

கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல்கள், கோ-ஆப்டெக்ஸ் நூல் விநியோக நிலையங்கள் மூலம் கூட்டுறவு அமைப்பிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. நூலின் எடை குறித்து வித்தியாசம் இருந்து. அதனை நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தெரிவித்தால், சம்பந்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலை களுக்கு அனுப்பி, எடை சரிபார்த்து, குறைகளை உடனடி யாக நிவர்த்தி செய்ய அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப் பட்டு, குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

14—

ராதாபுரம் தொகுதியில் குளங்கள் மராமத்து.

வினா எண் 44—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ராதாபுரம் தொகுதியில் டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் உடைந்த அனைத்து குளங்களும் மராமத்து செய்யப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இராதாபுரம் தொகுதியில் 1990 டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தினாலான பொதுப்பணித்துறை கன்னியாகுமரி கோட்ட ஆளுகைக்குட்பட்ட அனைத்து குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் ஆகியவைகளில் ரூ. 3.20 இலட்சங்கள் செலவில் உடைப்புகள் தற்காலிகமாக அடைக்கப்பட்டு திருப்திகரமாக விவசாயம் முடிவடைந்துள்ளது.

2. இராதாபுரம் தொகுதியில் கன்னியாகுமரி கோட்ட ஆளுகைக்குட்பட்ட 25 குளங்கள் மற்றும் 5 கால்வாய்களில் தற்காலிக பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 14 குளங்கள் மற்றும் 7 கால்வாய்களில் நிரந்தர சீரமைப்புப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்காக 21 மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்) அவர்களால் ரூ. 8.20 லட்சங்கள் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படும் நிலையில் உள்ளன. கண்மாய்களில் தண்ணீர் வற்றியதும் மேற்படி வேலைகள் மேற்கொள்ளப்படும்.

3. இராதாபுரம் தொகுதியில் திருநெல்வேலி கோட்டத்தைச் சார்ந்த 12 குளங்கள் நிரந்தரமாக பழுது பார்க்கப்பட்டுவிட்டன.

15—

## நெடுஞ்சாலைத்துறை அலுவலகங்கள் இணைத்தல்.

வினா எண் 323—அ. பாப்பாசுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை மாவட்டத்தில் இணைந்துள்ள குளித்தலை தொகுதி நெடுஞ்சாலைத்துறை, திருச்சி மாவட்ட நெடுஞ்சாலைத் துறையுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

## வேலூர் பகுதியில் இரயில்வே மேம்பாலம்.

வினா எண். 493—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலூர் நகரில் பெங்களூர் செல்லும் சாலையிலும் வேலூர்-ராமநாயக்கன் பாளையம் செல்லும் பகுதியிலும் காட்பாடி, விழுப்புரம் சாலையிலும் ரயில் பாதைகளில் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) காட்பாடியிலிருந்து விழுப்புரம் செல்ல பயன்படும் மாநில அரசு சாலையான கடலூர்-சித்தூர் சாலையில் கி.மீ. 195/10-இல் தற்போது உள்ள குறுகிய வலுவிழந்த சாலை மேம்பாலத்தை ரூபாய் 200 இலட்சம் செலவில் திரும்பக் கட்ட 16—8—1990-ல் அரசு ஆணையிட்டுள்ளது. மற்ற இரண்டு பணிகள் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மேற்படி சாலை மேம்பாலப் பகுதி மட்டும் இரயில்வே துறையினரால் வைப்பு நிதி வேலையாக எடுத்துச் செயற்படுத்தப்படும். அதற்காக இரயில்வே துறையினருக்கு கட்டுமானத் தொகையில் 25 விழுக்காடு முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையினரின் மதிப்பீட்டுக்கு நெடுஞ்சாலைத் துறையினரின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பாலத்திற்கான அணுகுசாலை வேலை நெடுஞ்சாலைத் துறையினரால் நிறைவேற்றப்படவேண்டும். அதற்கான ஒப்பந்தப் புள்ளி முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தக்காரரால் 29-7-1991 தேதி முதல் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. 29—1—1993-க்குள் மொத்தப் பணியும் முடிவடையும் என

[1992 செப்டம்பர் 23

எதிர்பார்க்கப்படுகின்றது. இரயில்வே துறையினரால் செயல் படுத்தப்பட உள்ள சாலை மேம்பாலப் பணி இன்னும் துவக்கப்படவில்லை. இதை விரைவில் துவக்குமாறு இரயில்வே துறைக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

17—

## பேருந்து வழித்தடத் திட்டம்.

வினா எண் 2072—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதியில் பேருந்து வழித்தட முன்னேற்றத் திட்டத்தின்கீழ் 1991–92-ல் எடுத்துள்ள சாலைகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பரமக்குடி தொகுதியில் கீழ்வரும் சாலைகள் 1991–92-ம் வருடத்திய பேருந்து வழித்தட திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன :—

(1) தேசிய நெடுஞ்சாலை-49-ல் இருந்து பொதுவக்குடி செல்லும் சாலை கி.மீ. 0/0–4/2.

(2) கீழச்செம்பனூர் சாலையிலிருந்து வீரப் பெருமாள் கோயில் செல்லும் சாலை கி.மீ. 2/2–3/6.

(3) இராமநாதபுரம் நயினார் கோயில் சாலையிலிருந்து கங்கைகொண்டான் கி.மீ. 0/0–1/0.

18—

## எட்டிவயல் கால்வாய் பாலம் கட்டுதல்.

வினா எண். 2129—டாக்டர் எஸ்.சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தேசிய நெடுஞ்சாலையிலிருந்து (தே. நெ. 49) காமன்கோட்டை வழியாக செவ்வூர் செல்லும் சாலையில் எட்டிவயல் கால்வாயில் பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும்?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) எட்டிவயல் கால்வாயில் பாலம் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை தளம் 3–2–1992-ல் ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

19—

## சாலை செப்பனிடல்.

வினா எண் 3116—டாக்டர் மு. அம்மமுத்துப் பிள்ளை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி தொகுதி, தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் வீரநாராயணமங்கலம் திருப்பதிசாரம் சாலை பழுதடைந்து உள்ளதால் அதை உடனடியாக செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பணி தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் , பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வீராணமங்கலம் சாலையில் தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மார்ச் 1992 இறுதிக்குள் இப் பணி நிறைவுபெறும். மேலும் சாலை சீரமைக்கும் பணி (கி.மீ— 1/0/5/6/க்கு) ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தம் பெறப்பட்டவுடன் பணி தொடங்கப்படும்.

20—

## அரசூர் அருகே இரயில்வே மேம்பாலம்.

வினா எண் 3792—திரு. டி. மூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிதம்பரம்—சீர்காழி நெடுஞ்சாலையில் (N. H. Roa அரசூர் அருகே ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசி செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

21—

குசஸ்தலை ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 3793—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கலகம்மா சத்திரம் - முத்துகொண்டாபுரம் இடையே செல்லும் குசஸ்தலை ஆறு குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற பேரவை வினாவில் குறிக்கப்பட்டுள்ள பாலம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. அணுகுசாலை பணியினை விரைவில் முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அணுகுசாலை அமைப்புப் பணிகளை முடித்தபின்பு இப்பாலத்தை போக்குவரத்திற்காக திறக்க இயலும்.

22—

திருத்தணி இரயில்வே கேட் மூடுதல்.

வினா எண் 3795—திரு. கே. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

திருத்தணி நகரில், வடக்குப் பகுதியில், சென்னை சாலையில் இரயில்வே நிலையம் அருகில் உள்ள இரயில்வே கேட்டை மூடிவிட ஏற்பாடு செய்வதை நிறுத்த அரசு ஆவன செய்யுமா?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

சென்னை—திருத்தணி ரேணிகுண்டா சாலை - சென்னை-பம்பாய் இரயில் தடத்தில் அமைந்துள்ள இருப்புப் பாதைக் கதவு அடிக்கடி மூடப்பட்டு வந்ததால், பேருந்து வாகனப் போக்குவரத்து இடையூறுகள் ஏற்பட்டு வந்தது. எனவே பேருந்து வாகனப் போக்குவரத்து வழிகோல இந்த இருப்புப் பாதைக் கதவிலிருந்து 200.00 மீ. தூரத்தில் சென்னை திருத்தணி — ரேணிகுண்டா சாலை கி.மீ. 84/6-ல் நெடுஞ் சாலை மற்றும் ஊரகப் பணித் துறையால் ஓர் சுரங்கப் பாதை கட்டப்பட்டு 24—7—1984-ஆம் நாளன்று போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்டு அதுமுதல் பேருந்து/வாகனப் போக்குவரத்து சீராக நடைபெற்று வருகிறது. பாதசாரிகள் மற்றும் மிதி வண்டிகளில் போக்குவரத்து வசதிக்காக இந்த இருப்புப் பாதைக் கடவு உள்ள இடத்தில் ஓர் நடைபாதை மேம்பாலம் இரயில்வே துறையினரால் கட்டப்பட்டு 9—10—1990-ஆம் நாள் முதல் அப்பகுதி மக்களின் உபயோகத்தில் உள்ளது. எனவே இரயில்வே துறை இந்த இருப்புப் பாதைக் கடவினை நிரந்தரமாக மூடிவிட்டது. இந்த இருப்புப் பாதைக் கடவினை மீண்டும் திறக்கவேண்டுமெனில் இரயில்வே துறைதான் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

23—

செம்மா-திருமலாபுரம் சாலை மராமத்து.

வினா எண் 3844—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதி, இட்டமொழி—வள்ளியூர் மெயின் ரோடு செம்மாடு சாலை - திருமலாபுரம் சாலைகளை பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலைகள் கீழ்க் காணும் இரண்டு சாலைகள் ஆகும் :—

(1) வள்ளியூர்—இட்டமொழி சாலையிலிருந்து செம்மாடு சாலை கி.மீ. 0/0—1/2 (ஊராட்சி ஒன்றியச் சாலை).

(2) வள்ளியூர்—இட்டமொழி சாலையிலிருந்து வள்ளியம்மாள்புரம் சாலை (வழி) திருமலாபுரம்.

(1) வள்ளியூர்—இட்டமொழி சாலையிலிருந்து செம்மாடு சாலை கி.மீ. 0/0—1/2-யினை (ஊராட்சி ஒன்றிய சாலை) தற்போது ஜவகர் வேலைவாய்ப்பு திட்டக் குறியீடு பூர்த்தி செய்யப்பட்டதால், 1992—93-ஆம் வருட ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தில் செயல்படுத்த பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(2) வள்ளியூர்—இட்டமொழி சாலை கி.மீ. 4/8-லிருந்து வள்ளியம்மாள்புரம் சாலை (வழி) திருமலாபுரம்.

இச்சாலை ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். இந்நச் சாலையின் நீளம் 4.4 கி.மீ. ஆகும். (அதாவது கி.மீ. 0/0—4/4) இச்சாலை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பராமரிக்கப்படும் தார் சாலையாகும். இந்தச் சாலையில் திருமலாபுரம் வரை கி.மீ. 0/0—2/0 வரையுள்ள தார் பகுதியை புதுப்பிக்க ரூ. 1.60 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகின்றது இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

24—

## பணகுடி—திருக்குருங்குடி சாலை பழுதுபார்த்தல்.

வினா எண் 3849—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராதாபுரம்,தொகுதி, பணகுடி—திருக்குரங்குடி மெயின் ரோட்டில் சேரும் சாலையை பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் , பொதுப் பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிக்கப்பட்ட சாலையானது கீழ் காணும் இரண்டு சாலை பற்றியதாகும் :—

(1) மதுரை—கன்னியாகுமரி சாலையிலிருந்து சேரன் மகாதேவி-பணங்குடி சாலை வரை (வழி) வடவிளை கி.மீ. 0/0—4/0 (அரசு இதர மாவட்ட சாலை) இச் சாலை நெடுஞ்





சாலை ஊரக பணித்துறை பராமரிப்பில் உள்ளது. இச்சாலை போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருவதாக அத்துறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) சேரன்மகாதேவி—பணங்குடி சாலை முதல் துரைசாமி புரம் சாலை :—

இச்சாலை வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிற்குட்பட்ட சாலை ஆகும். இச்சாலையினை 1991—92ஆம் வருடம் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பீட்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் செப்பனிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

25—

## மின்வாரியத்தில் பணியிடங்கள் நிரப்புதல்.

வினா எண். 3934 ஏ.—திரு. எம்.கே. பாலன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மின்வாரியத் துறையில் காலியாக உள்ள பணியிடத்தைப் பூர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் , பொதுப்பணித்துறை அமைச்சர்;

மின் வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை வேலை வாய்ப்பகம் மூலமாகவும் நேர்முகத் தேர்வு மற்றும் உள்முகத் தேர்வு மூலமாகவும் நிரப்புவதற்கு மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

26—

## பழவந்தாங்கல் சுரங்கப்பாதை.

வினா எண். 4179—திரு. எஸ். அண்ணாமலை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பழவந்தாங்கல் சுரங்கப்பாதையில் இரயில்வே நிர்வாகம் தனது பணிகளை முடித்துவிட்ட நிலையில் சுரங்கப்பாதை அமைக்க தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்;

ஆம். பழவந்தாங்கல் அருகிலுள்ள சுரங்கப் பாதையை விரைவில் கட்டி முடிக்க தமிழக அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

27—

ஆப்பனூர் கிராம பாலம்.

வினா எண். 4393—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி கோட்டம் முதுகுளத்தூர் உட்கோட்டம் கிடாத்திருக்கை கிராமத்திற்கும் ஆப்பனூர் கிராமத்திற்கும் இடையில் கிராமியச் சாலைத் திட்டத்தில் பகுதி 2 நிதி ஒதுக்கீட்டில் ஒரு பாலம் கட்டி முடித்தவுடன் இடிந்து விட்டதால் நகரப் பேருந்து வழித்தடம் அங்கீகரிக்கப்பட்டும் பேருந்து ஓட வழியில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்தப் பாலம் மீண்டும் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் குறிப்பிடும் சாலையில் கி.மீ. 1/8-இல் கட்டப்பட்ட தாம்போகியின் தளம் 1991 நவம்பரில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தில் இறங்கி விட்டது. தற்போது தற்காலிக நடவடிக்கையாக சரள் நிரப்பப்பட்டு வாகன போக்குவரத்து தடையில்லாமல் நடைபெற்று வருகிறது. 1992-93 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதி நிலைமையைப் பொருத்து தாம்போகியின் தளத்தை புதுப்பிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

28—

மின் கட்டணம்.

வினா எண். 4558—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா :



1992 செப்டம்பர் 23]

(அ) தமிழ்நாட்டில் தற்போது வசூலிக்கும் மின்கட்டணத்தை 300 யூனிட் வரை யூனிட்டுக்கு 75 காசு என வசூலிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

29—

புறம்போக்கு வீடுகளுக்கு மின் விளக்கு.

வினா எண். 4677—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புறம்போக்கு வீடுகளில் வாழ்பவர்களுக்கு ஒரு மின் விளக்கு (Single point) தற்காலிகமாக வழங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மின்வாரிய மின்விநியோக விதிகளின்படி புறம்போக்கு நிலங்களில் இருக்கும் வீடுகளுக்கு; ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் தகுதி பெறும் வீடுகளுக்கு இலவச மின்சாரம் வேண்டுவோர் வருவாய் துறையினரிடமிருந்து உரிய அதிகாரிகளால் (குறைந்தபட்சம் வட்டாட்சியரால்) வழங்கப்பட்ட தடையில்லாச் சான்றிதழுடன் நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் மனு செய்தால் புதிய மின் இணைப்பு வழங்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித் தலைவரின் எழுத்து மூல ஒப்புதல் இருந்தால் மட்டுமே மின் இணைப்பு விஸ்தரிக்க வேண்டும் என்று அம்மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளபடியால்; கன்னியாகுமரி

[1992 செப்டம்பர் 23

மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் புறம்போக்கு நிலங்களில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி வருவோரிடம் மாவட்ட ஆட்சித் தலைவருடைய தடையில்லாச் சான்றிதழுடன் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. தற்காலிகமாக மின் இணைப்பு வழங்குவது என்று ஏதும் விதிமுறைகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

30—

வாழைப் பந்தல் பகுதியில் தரைப்பாலம்.

வினா எண். 4699—திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செய்யாறு தொகுதியில் செய்யாற்றின் குறுக்கே கொருகாத்தூர், வாழைப்பந்தல் பகுதியில் தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) கொருங்காத்தூர் - வாழைப்பந்தல் சாலையில் செய்யாற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்கான கருத்துரு மைய சாலை நிதித் திட்டத்தின்கீழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றது. இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

31 —

கீழ் பவானித் திட்ட பாசன நிலங்கள்.

வினா எண். 4742—திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், எல்.பி.பி. வாய்க்காலில் பாசனம் பெறும் பூமி எத்தனை ஏக்கர்?

(ஆ) இப்பகுதியில் உள்ள கழிவு நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தினால் தண்டத் தீர்வை அதிகமாக வசூலிப்பதை அரசு அறியுமா ?



1992 செப்டம்பர் 23]

(இ) ஆம் எனில், அதனை வசூலிக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) கீழ்பவானித் திட்டத்தின் கீழ் முதன் முறைப் பாசனத்தில் 96,734 ஏக்கரும் இரண்டாம் முறைப் பாசனத்தில் 94,406 ஏக்கருமாக மொத்தம் 1,91,140 ஏக்கர் பாசனம் பெறுகின்றன.

(ஆ) கழிவு நீர்ப்பாசனத்திற்கு அபராதத் தண்ணீர் தீர்வை தமிழ்நாடு நீர்ப்பாசன செஸ் விதிச் சட்டம் 1865 மற்றும் பவானிசாகர் நீர்ப்பாசன செஸ் விதிகள் 1959-ன்படியும் விதிக்கப்பட்டு வருகிறது.

(இ) கழிவு நீர்ப்பாசனத்திற்கு அபராதத் தொகை வசூலிக்காமல் விட்டால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும்.

32—

குரிவன்கோட்டை கிராமத்திற்கு தெரு விளக்கு.

வினா எண். 4911—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் குரிவன்கோட்டை கிராமத்தில் அருந்ததியர் சமூகத்தினர் வாழுகின்ற இடத்தில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் குரிவன்கோட்டை கிராமத்தில் அருந்ததியர் சமூகத்தினர் வாழுகின்ற இடத்தில் இரண்டு (2) தெரு விளக்கு பொருத்துவதற்கான விஸ்தரிப்பு பணிகள் தற்பொழுது முடிக்கப்பட்டு விட்டன. விரைவில் மின் விளக்கு பொருத்திகள் அமைத்து மின் வசதியளிக்கப்படவுள்ளது.

33—

## கோவை மாநகராட்சியில் மின்சார இணைப்பு.

வினா எண். 5016—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகராட்சி மின்சாரப் பிரிவுக்கு புதிதாக மாநகராட்சிக்கு இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய இணைப்புகளையும் இணைக்க அரசு முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

34—

## வானகரம்—அம்பத்தூர் சாலையில் கூவம் ஆற்றுக்கு குறுக்கே பாலம்.

வினா எண். 5189—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், சைதை வட்டம், சென்னை, சித்தூர், பெங்களூர் நெடுஞ்சாலை வானகரம்—அம்பத்தூர் சாலை கூவம் ஆற்று குறுக்கில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திட்டம் எதுவும் இல்லை.



35—

## ஈச்சம்பூண்டி பாலம்.

வினா எண். 5254—திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் திருச்சி—தென்னாற்காடு மாவட்டங்களை இணைக்கும் ஈச்சம்பூண்டி பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் அமைக்கும் செயற் குறிப்பு தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

36—

## நாவலூர் கிராமத்திற்கு தெரு விளக்கு.

வினா எண். 5402—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, நாவலூர் கிராமத்து மக்களுக்கு தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

மங்களூர் தொகுதி நாவலூர் கிராமத்தில் ஏற்கனவே 30 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு கூடுதல் தெரு விளக்குகள் கோரி மின்வாரியத்திடம் மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

[1992 செப்டம்பர் 23

37—

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு குடியிருப்பு கட்டிடம்.

வினா எண். 5452—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கென தனி குடியிருப்பு கட்டிடம் ஒன்று கட்ட வேண்டுமென அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த முடிவு என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

38—

மலைவாழ் மக்கள் காலனிக்கு மின் இணைப்பு.

வினா எண். 5571—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சிக்குச் சேர்ந்த சோழகணை, சின்னசோழகணை, ஊசிமலை போன்ற மலைவாழ் மக்கள் காலனி பகுதிக்கு தெருவிளக்குகளும் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பும் வழங்காமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மின் இணைப்பு வழங்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:



1992 செப்டம்பர் 23]

(அ) மற்றும் (ஆ) : சோழகணையில் ஏற்கனவே 5 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. சோழகணை மற்றும் சின்ன சோழகணை பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் மற்றும் குடிசைகளுக்கு மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

ஊசிமலை பகுதிகளில் மின்வசதி கோரியுள்ள 19 குடிசைகளுக்கான மின் இணைப்புத்தர மின் கம்பங்கள் களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. மின் பாதைக்குத் தேவையான மின் கம்பிகள் முதலியன பெறப்படாததால் வேலை முடிக்கப்படவில்லை. அவை பெறப்பட்டபின் விரைவில் வேலை முடிக்கப்படும்.

39—

பயணியர் விடுதி.

வினா எண். 5622—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நத்தம் நகரம் தாலுகா தலைநகரமாக இருப்பதுடன் முக்கிய வர்த்தக மையமாகவும் இருப்பதால் இப்போது அங்கு இரு அறைகள் மட்டுமே கொண்டதாக இருக்கும் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை பயணியர் விடுதியை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப்பணித்துறை அமைச்சர்:—

நத்தம் பயணியர் விடுதியில் அதிக அளவில் பயணிகள் வந்து தங்குவதில்லை. நத்தம் வரும் பயணியர் மதுரை அல்லது திண்டுக்கல்லில் தங்கிச் செல்கின்றனர். எனவே, இந்தப் பயணியர் விடுதியை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை.

40—

சுண்ணாம்பு ஏரிக்கு வாய்க்கால் திட்டம்.

வினா எண். 5648—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மங்களூர் தொகுதி, சிறுபாக்கம் கிராமத்தில், சுண்ணாம்பு ஏரிக்கு அருகில் உள்ள ஓடையில் வாய்க்கால் வெட்டி அந்த ஏரிக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

[1992 செப்டம்பர் 23

(ஆ) ஆம் எனில், எப்போது கொண்டுவரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

41—

ஆயக்கட்டுகள் பராமரிப்பு.

வினா எண். 5981—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 50 ஏக்கருக்கும் குறைவாக ஆயக்கட்டுகள் கொண்ட ஏரிகளின் பராமரிப்பு மற்றும் தூர் எடுத்து ஆழப்படுத்தல் போன்றவற்றை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் விட வேண்டும் என அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 50 ஏக்கர்களுக்கு மேற்பட்ட ஆயக்கட்டுகள் உடைய ஏரிகளை பொதுப்பணித்துறையின் பராமரிப்பிலும், 50 ஏக்கர்களுக்கு கீழ் பட்ட ஆயக்கட்டுகளை உடைய ஏரிகளை ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பிலும் விட வேண்டும் என மதிப்பீட்டு குழு பரிந்துரை செய்துள்ளது.

42—

போளூர் நகரில் ரயில்வே மேம்பாலம்.

வினா எண். 6221—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 செப்டம்பர் 23]

(அ) சித்தூர்-கடலூர் சாலையில் போளூரில் நகர் மத்தியில் உள்ள ரயில்வே குறுக்கிட்டு போக்குவரத்து பாதிக்காவண்ணம் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:—

(அ) போளூர் நகர மத்தியில் அதாவது மாநில நெடுஞ்சாலையான கடலூர்-சித்தூர் சாலை கி.மீ. 141/4 மீ., விழுப்புரம்-காட்பாடி இருப்புப்பாதை இரயில்வே கி.மீ. 80/0-ம் சந்திக்கும் இடத்தில் தற்போது 98/13-14 எண்ணிட்ட ஓர் 'ஏ' வகுப்பு இருப்புப்பாதைக் கடவு அமைந்துள்ளது. குறைந்த பட்சம் ஒரு இலட்சம் இரயில் ஊர்தி அலகு என்ற குறியீட்டை அடைந்த இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாகத்தான் சாலை மேம்பாலம் அமைக்கப்படும். ஆனால், போளூரில் உள்ள இருப்புப் பாதை கடவு இந்த அலகினை அடையவில்லை. எனவே, மேம்பாலம் கட்டும் தகுதியைப் பெறவில்லை. ஆகவே, இந்த இருப்புப் பாதைக் கடவிற்குப் பதிலாக சாலை மேம்பாலம் கட்டும் பிரேரணையை இரயில்வே துறை ஏற்காது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

43—

போளூர் அத்திமூர் ஏரி கால்வாய்.

வினா எண். 6223—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் அத்திமூர் ஏரி நவீனப்படுத்தும் வேலையும் கால்வாய் செப்பனிடும் வேலையும் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அத்திமூர் ஏரியினை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை. அத்திமூர் ஏரியில் வரத்துக் கால்வாயை செப்பனிடும் பணி மேற்கொள்ளப்பட்டு மார்ச் 1972-ல் முடிக்கப்பட்டு விட்டது.

44—

இரண்டாம் புலிக்காட்டில் இளம்பொறியாளர் நியமனம்.

வினா எண். 6491—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம் இரண்டாம் புளிக்காட்டில் இளமின்பொறியாளர்கள் அமர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இரண்டாம் புலிக்காட்டில் ஐந்து விநியோக மின்மாற்றிகள் (Distribution Transformers) மற்றும் 201 மின் இணைப்புகள் மட்டுமே உள்ளது. மேலும் இரண்டாம் புளிக்காடு கிராமம் பெருமாள் கோயில் பிரிவுடன் இணைக்கப்பட்டு உதவிப்பொறியாளர் 'காத்தலும் மற்றும் பராமரித்தலும்' ஊரகம் பட்டுக்கோட்டையின் கீழ் இயங்கி வருகிறது. பெருமாள்கோயில் பிரிவில் மொத்தம் 43 மின்மாற்றிகள் (Distribution Transformers) மற்றும் 3284 மின் இணைப்புகள் உள்ளன. வேலை பளுவில் விதிமுறையின்படி ஒரு முதல் தரம் ஊரக பிரிவு அலுவலகம் அமைக்க 49 மின் மாற்றிகள் இருக்க வேண்டும். இரண்டாம் தரம் ஊரக பிரிவு அலுவலகம் அமைக்க 42 மின்மாற்றிகள் இருக்க வேண்டும். ஆகவே இரண்டாம் புலிக்காட்டில் 5 மின் மாற்றிகள் மட்டும் உள்ளதால் அங்கு ஒரு பிரிவு அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

அகர ஆலம்பாடிசாலை.

வினா எண். 6694—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள சேத்தியாத்தோப்பிலிருந்து வீரமுடையாநத்தம் வழியாக அகர ஆலம்பாடி செல்லும் தார் சாலையை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சேத்தியாதோப்பு—அகர ஆலம்பாடி சாலை (கி.மீ. 0/0 - 10/0) நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்படும் இதர மாவட்டச் சாலையாகும். இந்த சாலை ஒருவழித்தட அகலமுள்ள தார் மேற்பரப்புடைய சாலையாகும். இந்தச் சாலையில் கி.மீ. 1/0-2/4 மற்றும் 2/4, 3/4 3/0-7/0 (c) 7/0 - 9/6 ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

46—

அந்தியூர் கிராமங்களுக்கு தெருவிளக்கு.

வினா எண். 6932—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் குட்டையூர், சின்னசெங்குளம், கோயில் நத்தம், தொள்ளி ஒசூர் போன்ற 15 கிராமங்கள் தெருவிளக்கு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தெருவிளக்கு அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் குட்டையூர், சின்னசெங்குளம் கோயில் நத்தம் தொள்ளி ஒசூர் போன்ற 15 கிராமங்களுக்கு ஏற்கனவே தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

[1992 செப்டம்பர் 23

47—

## கம்பியாளர்கள் எண்ணிக்கை.

வினா எண் 7433—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் மின் ஒப்பந்தக்காரர்களிடம் "ஒயர் மென்" களாக பணி பார்ப்போர் எண்ணிக்கை விவரம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) இவர்கள் அந்தப் பணி செய்வதற்காக லைசன்ஸ் வழங்கக் கூடிய தேர்வுகளில் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா ?

(இ) இல்லையெனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் மின் ஒப்பந்தக்காரர்களிடம் 5770 பேர் கம்பியாளர்களாக பணி புரிகிறார்கள்.

(ஆ) ஆம்.

(இ) எழவில்லை.

48—

## மின் நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைத்தல்.

வினா எண். 7484—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மின்சார நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

இல்லை.



1992 செப்டம்பர் 23]

49—

## சி. புதுப்பேட்டையில் கடல் நீர் தடுப்பு சுவர்.

வினா எண் 7851—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி சி. புதுப்பேட்டை கிராமத்திற்குள் கடல்நீர் வராமல் தடுக்க தடுப்புச்சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழ வாய்ப்பில்லை.

50—

## தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு.

வினா எண் 8302—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிடர் மக்களின் தொகுப்பு வீடுகளுக்கு ஒரு விளக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) : ஆதிதிராவிடர் மக்களுக்காக அரசு திட்டங்களான என். ஆர். இ. பி. ஆர். எல். இ. ஜி. பி. தாட்கோ காமராசர் மற்றும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டங்களின் மூலம் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டு கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வழங்குவது ஏற்கனவே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

51—

நாமக்கல் கிளை மின் நிலையத்திற்கு மின்சாரம்.

வினா எண் 8431—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செல்லப்பம்பட்டியில் ஜவ்வரிசி மில்களும், கோழித் தீவன மில்களும், ரைஸ்மில் மற்றும் 300-க்கும் மேற்பட்ட சிறு தொழில்களும் நடைபெறுவதால் நாமக்கல் கிளை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் 24 மணி நேரமும் தொடர்ந்து வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) செல்லப்பப்பட்டி பகுதிக்கு நாமக்கல் உபமின் நிலையத்திலிருந்து 24 மணி நேர மின்சாரம் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தனிநபர் ஒருவர் தன்னுடைய நிலத்தில் மின்சார கம்பங்கள் நடக்கூடாது என முன்சீப் கோர்ட்டில் தடையுத்தரவு வாங்கியுள்ளதால், இந்த தடை நீக்கப்பட்டு மின்சார விஸ்தீரண வேலை முடிவுற்ற பின் 24 மணி நேரம் மின்சாரம் வழங்க இயலும். நீதிமன்றம் சம்பந்தப்பட்டிருப்பதால் தேதியை குறிப்பிட இயலாது.

52—

நெல்லித்துறை அனல் மின்நிலையம்.

வினா எண் 8568—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மேட்டுப்பாளையம் தொகுதியில் பல வருடங்களுக்கு முன்பு ஆய்வு செய்யப்பட்ட நெல்லித்துறை அனல் மின்நிலையம் அமைக்கப்படும் பணி எந்த நிலையில் உள்ளது ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையம் தொகுதியில் நெல்லித்துறையில் அனல் மின் நிலையத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. புனல் மின்நிலையம் அமைய சர்வே வேலைகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

53—

கள்ளக்குறிச்சியில் துணை மின் நிலையம்.

வினா எண். 8792—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம் சின்னசேலம் தொகுதியில் கள்ளக்குறிச்சியில் துணை மின்நிலையம் இல்லாததால் மின்சார விநியோகம் பாதிக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கள்ளக்குறிச்சிப் பகுதிக்கு தற்பொழுது சுமார் 15 கி.மீ. தொலைவில் சின்ன சேலத்தில் அமைந்துள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து வரும் 22 கி.வோ. கள்ளக்குறிச்சி மின்னூட்டி வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்னூட்டியின் கடைக்கோடிப்பகுதியில் மின் அழுத்தம் சிற்சில நேரங்களில் சற்று குறைவாக உள்ளது. இதனைச் சரி செய்வதற்காகவும், வருங்காலத் தேவையை (மின் பளுவை) நிறைவு செய்வதற்காகவும், கள்ளக்குறிச்சியில் ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின்நிலையம், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குரிய மின்சாரம் செலுத்துதல் (மற்றும்) பகிர்ந்தளிப்பதற்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு மின் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இத் துணை மின் நிலையத்திற்குத்தேவையான 2.18 எக்டேர் புறம்போக்கு நிலம், சடையம்பட்டு என்னும் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்டு அதனைக் கையகப்படுத்துவதற்கான பணிகள் மேற்

[1992 செப்டம்பர் 23,

கொள்ளப்பட்டுள்ளன. இத்துணை மின் நிலையத்திற்குத் தேவையான நிலம் கிடைத்ததும் 1993–94 இல் மின் நிலையப் நிறுவும் பணிகள் துவங்கப்படும்.

54—

தெருவிளக்குகள் பொருத்துதல்.

வினா எண். 498—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூர் நகரில் சைதாப்பேட்டை, டேவிட்நகர் கஸ்பா ஆகிய இடங்களில் தெருவிளக்குகள் பொருத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு தெரு விளக்குகள் பொருத்த ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): வேலூர் நகரில் சைதாப்பேட்டை டேவிட் நகர், கஸ்பா ஆகிய இடங்களில் விளக்குகள் பொருத்தப்படாமல் உள்ள இடங்களில் புதிதாக விளக்குகள் அமைக்க மின் வாரியத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் வேலூர் நகராட்சி ஆணையர் அவர்களால் எடுக்கப்பட்டு வருகின்றன. எரியாமல் உள்ள விளக்குகளும் நகராட்சியால் பழுது பார்த்து எரிய வைக்கப்படுகின்றன.

55—

ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண். 543— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி நயினார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணறுகள் எத்தனை ?

(ஆ) ஆழ்குழாய் கிணறுகள் மேலும் ஏற்படுத்த அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் அடங்கியுள்ள நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 78 ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன.

மேலகாரடர்ந்தகுடி கிராமத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புக்கு ரூ. 27,500 மதிப்பீட்டில் ஒரு ஆழ்குழாய் கிணறும் மற்றும் கிளியூரில் மாற்று ஆழ்குழாய் கிணறும் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

56—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 1259—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் எடையூர், மண்ணம்பாடி போன்ற கிராமங்களுக்கு கூட்டு குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

வரும் நிதியாண்டில் (1992–93) மண்ணாம்பாடி மற்றும் மண்ணாம்பாடி காலனி ஆகிய இரண்டு குடியிருப்புகளையும் இணைத்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும், எடையூர் காலனிக்கு ஒரு மின்விசை குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளன. எடையூர் கிராமத்திற்கு மின்விசை குடிநீர்த் திட்டத்தினால் ஏற்கனவே குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

[1992 செப்டம்பர் 23

57—

வினா எண். 2203—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) ஆதி திராவிடர்களுக்கு ஒரு போர்வெல் போட்டு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991-92 ஆம் ஆண்டின் சிறப்புத் தன்னிறைவு திட்டத்தில் இடையாத்தி(கி) கிராமத்தில் ஒரு போர்வெல் போட்டு கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது. அப்பணி தற்போது ஆரம்ப நிலையில் உள்ளது.

58—

வினா எண். 2036—திரு. சு. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) சேலம் டால்மியா மாக்னசைட் சுரங்கத்தில் சுற்று வட்டார கிராமங்களுக்குத் தேவையான குடிநீர் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) இந்தக் குடிநீரை டால்மியா மாக்னசைட் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு கிராமங்களுக்குக் குடிநீர் விநியோகிக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இது அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

(ஆ) இந்தக் குடிநீர் டால்மியா மாக்னசைட் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு கிராமங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.



[1992 செப்டம்பர் 23]

59—

நெடுங்குளம் - இராசிபுரம் காவிரி நீர்த்திட்டம்.

வினா எண். 2037—திரு. சு. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெடுங்குளம்—இராசிபுரம் காவிரி நீர் விநியோகிக்கும் திட்டம் உலக நாடுகள் வங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) நெடுங்குளம்—இராசிபுரம் காவிரி நீர் விநியோகிக்கும் திட்டம் உலக நாடுகள் வங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) ஆனால் நெடுங்குளம்--காட்டூர் அருகில் காவிரி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு இடைப்பாடி, இராசிபுரம் நகராட்சிகள், 9 பேரூராட்சிகள் மற்றும் 155 வழியோரக் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் ஆயுள் காப்பீட்டுக் கழக நிதி உதவியுடன் 1988 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

60—

ஆடலூர் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 3501—திரு. எஸ்.எம். துரை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட மலைப் பிரதேசமான ஆடலூரின் குடிநீர்ப் பற்றாக் குறையைத் தீர்க்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

[1992 செப்டம்பர் 23

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆம். ஆடலூர் கிராமத்திற்கு மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (WGP) ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் மின்னிறைப்பான் திட்டம் நடப்பு நிதியாண்டில் (1992—93ல்) செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

61—

## வடக்கு புலிமான் குளத்திற்கு நீர் வசதி.

வினா எண். 3608—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட புதூர் பஞ்சாயத்தில் வடக்கு புலிமான் குளத்தில் பைப் போட்டும் தண்ணீர் வராததை சரி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ராதாபுரம் புதூர் ஊராட்சி புலிமான்குளம், தெற்கு ஆதி திராவிடர் காலனி, புலிமான்குளம் வடக்கு காலனி மற்றும் சொக்கலிங்கபுரம் ஆகிய நான்கு கிராமங்களில் ஏற்கனவே உள்ள நீர் ஆதாரங்கள் வற்றி விட்ட நிலையில் மேற்கண்ட நான்கு கிராமங்களுக்கும் மாற்று ஆழ் குழாய் திட்டம் ரூ. 1.70 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப் பணிகள் முடிவுற்று விசைப் பம்புக்கு மின் இணைப்பு பெற்று தற்போது திட்டம் சோதனை ஓட்டத்தில் உள்ளது. விரைவில் குடிநீர் திட்டம் ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைத்து பயனுக்கு கொண்டு வரப்படும்.



[1992 செப்டம்பர் 23]

62—

## குடிநீர் வசதி.

வினா எண் 3614—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதி கடத்தங்குளி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி சரி செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூத்தங்குளி கிராமத்தில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி செப்பனிடப்பட்டு தற்போது குடிநீர் விநியோகம் சீரான நிலையில் உள்ளது. எனவே இது தொடர்பான செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. (ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கடத்தங்குளி என்ற பெயரில் கிராமம் ஏதும் இல்லை).

63—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 3615—திருமதி ரமணி நல்லவம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதி திருவம்பலபுரம் பஞ்சாயத்தில் முருகானந்தம் யோரிலிருந்து மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் வர செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இங்கு ஏற்கெனவே கையிறைப்பான்கள் இயங்கி வருகின்றன. ராதாபுரம் தொகுதி திருவம்பலபுரம் பஞ்சாயத்தில் முருகானந்தம் யோரிலிருந்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் வரச் செய்யும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1992 செப்டம்பர் 23

64—

குண்டல் பகுதிக்கு குடிநீர் வசதி.

வினா எண். 3621—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதியிலுள்ள குண்டல் பகுதிக்கு நல்லி மூலம் குடிநீர் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இராதாபுரம் தொகுதியிலுள்ள குண்டல் பகுதிக்கு நல்லி மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது இல்லை. ஆனால் அடுத்த ஆண்டு நீர் ஆதாரம் கிடைக்கச் செய்யும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நீர் ஆதாரம் கிடைக்குமாயின் அந்த கிராமத்தில் (குண்டல்) மின் விசை பம்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டு நல்லி மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

65—

திசையன்விளையில் குடிநீர் வசதி.

வினா எண். 3629—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராதாபுரம் தொகுதி திசையன்விளை 7-வது வார்டு முஸ்லீம் தெரு பகுதியில் ஒரு அடி பைப் வசதி செய்து தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இது பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ள பகுதி. புதிதாக கை இறைப்பான் அமைக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை.



1992 செப்டம்பர் 83]

66—

புதுனை கிராமத்திற்கு குடிநீர் வசதி.

வினா எண். 3631—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி செட்டிகுளம் பஞ்சாயத்தில் புதுனை ஆதிதிராவிடர் காலனிக்கு ஒரு அடி பைப் வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் செட்டிகுளம் ஊராட்சியைச் சேர்ந்த புதுனை ஆதி திராவிடர் குடியிருப்பில் 225 மக்கட்தொகை கொண்ட 40 குடும்பங்கள் உள்ளன. மேற்படி குடியிருப்பிற்கு செட்டிக்குளம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் ஒரு நல்லி அமைத்து போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புக்கு ஒரு அடி பைப் வசதி செய்துதரும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

67—

இளையநெய்னார் குளத்திற்கு குடிநீர் வசதி.

வினா எண். 3632—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதி சௌந்த பஞ்சாயத்தில் இளைய நெய்னார் குளம் பகுதியில் ஒரு அடி பைப் வசதி செய்து தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சௌந்த பஞ்சாயத்தில் இளையநெய்னார்குளம் பகுதிக்கு ஏற்கனவே இரு கையிறைப்பான்கள் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, ஒரு அடி பைப் வசதி செய்து தரும் திட்டம் தற்போதைக்கு இல்லை.

[1992 செப்டம்பர் 23

68—

அணைக்கரை காலனிக்கு குழாய் வசதி.

வினா எண். 3635—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதி, அணைக்கரை ஆதிதிராவிடர் காலனியில் ஒரு அடி பைப் வசதி செய்துதரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த அணைக்கரை ஆதிதிராவிடர் காலனியில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 35. மக்கள் தொகை 175. இங்கு இரண்டு தெரு நல்லிகள் உள்ளன. தற்போது குடிநீர் போதுமானதாக உள்ளது. எனவே இக்காலனியில் ஒரு அடி பைப் வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

69—

வாழைத்தோட்டம் கிராமத்திற்கு நீர் வசதி.

வினா எண். 3636—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி, குமாரபுரம் பஞ்சாயத்தில் வாழைத் தோட்டம் தெற்கு தெருவில் ஒரு அடி பைப் வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வாழைத்தோட்டம் கிராமத்திற்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 15,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டி தற்போது நான்கு பொதுக்



1992 செப்டம்பர் 23]

குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஒரு அடி பைப் வசதி செய்து தரும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

70—

புலிமான்குளம் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 3639—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி புதூர் பஞ்சாயத்தில் புலிமான் குளம், ராஜம்மாள்புரம் பகுதிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1990-91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் கீழ் புலிமான்குளத்திற்கு ஒரு குடிநீர்த் திட்டம் வழிவகை செய்து தற்போது முடிக்கப்பட்டுள்ளது. அந்த குடிநீர்த் திட்டம் விரைவில் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும். ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரும் திட்டம் தற்போது இல்லை.

71—

ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 3640—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி, கள்ளிக்குளம் வடக்கு ரதவீதி, கீழத்தெரு பகுதிகளில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இக்கிராமத்தில், இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து 27 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. எனவே புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

[1992 செப்டம்பர் 23

72—

கீகுளம் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு.

வினா எண் 3641— திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி, தெற்கு வள்ளியூர் கீகுளம் பகுதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஏற்கனவே தெற்கு வள்ளியூர் கீகுளம் தலைச்சேரியில் ஒரு கை இறைப்பான் அமைக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, இப்பகுதியில் ஒரு ஆழ்த்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

73—

கைலாசபுரம் பகுதிக்கு ஆழ்குழாய் வசதி.

வினா எண். 3643—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி கைலாசபுரம் பகுதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இராதாபுரம் தொகுதி கைலாசபுரம் பகுதியில் தற்போது ஒரு ஆழ்குழாய்க் கிணறு நல்ல முறையில் இயங்கி வருவதால், மேலும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.



1992 செப்டம்பர் 23]

74—

எருமைக்குளம் பகுதிக்கு ஆழ்குழாய் வசதி.

வினா எண். 3644—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி திசையன்விளை பஞ்சாயத்தில் எருமைக்குளம் அருகே ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்துத் தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இது பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ளது. புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

75—

ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண்.3645—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி நவலடி பஞ்சாயத்து தத்துவநேரி ஆதி திராவிடர் காலனியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. ஆனால் வரும் நிதியாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

[1992 செப்டம்பர் 23

76—

வினா எண். 3646—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பார:

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட திருவம்பலபுரம் ஆதி திராவிடர் காலனியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருவம்பலபுரம் ஆதி திராவிடர் காலனியில் ஒரு ஆழ்த்துளைக் கிணறு அமைத்துத்தரும் செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை. இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் (1991—92) நீர் ஆதாரம் திருவம்பலபுரம் கிராமத்திற்கு அமைக்கும் திட்டம் உள்ளது. நீர் ஆதாரம் கிடைக்கப் பெற்றதும் வரும் நிதி ஆண்டில் திருவம்பலபுரத்திற்கு மின் விசைப் பம்பு அமைக்கும் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இது செயல்படும் பட்சத்தில் திருவம்பலபுரம் ஆதி திராவிடர் காலனியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

77—

ஊயத்தூர் பகுதிக்கு குடிநீர்.

வினா எண். 3648—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி ஊயத்தூர் பகுதியில் ஒரு ஆழ் குழாய்க் கிணறு வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி ஊயத்தூர் பகுதியில் ஏற்கனவே ஆழ்க்குழாய்க் கிணறு வசதி செய்து, பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இப்பகுதிக்கு தனியாக செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.



1992 செப்டம்பர் 23]

78—

ரோஸ்மியாபுரம் பகுதியில் குடிநீர் திட்டம்.

வினா எண். 3835—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி திருமலாபுரம் பஞ்சாயத்தில் ரோஸ்மியாபுரம் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி தெற்கு வள்ளியூர் ஊராட்சியில் உள்ள ரோஸ்மியாபுரம் பகுதியில் தற்போது இரண்டு ஆழ் குழாய்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு 1992-93 ஆம் ஆண்டு குடிநீர்த் திட்டத்தில் சேர்க்க ஆவன செய்யப்படும்.

79—

கள்ளி குளத்திற்கு குடிதண்ணீர் வசதி.

வினா எண். 3837—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி திருமலாபுரம் பஞ்சாயத்தில் மகிழ்ச்சிபுரம் தொகுதியில் கள்ளிகுளத்திற்கு வரும் மெயின் பைப்பில் உள்ள அவுட்லெட்ஸ்-இல் ஒரு நல்லி (Tap) வைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இந்தப்பகுதி குடிநீர் வசதி பெற்றுள்ளது. பொதுவாக பிரதானக்குழாயில் நல்லி வைப்பதில்லை. எனவே, இவ்வாறு நல்லி வைக்கின்ற திட்டம் எதுவும் இல்லை.

80—

**பெருமாள்புரம் பகுதியில் ஆழ் குழாய்க் கிணறு.**

வினா எண். 3840—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி சமூக ரெங்கபுரம் பஞ்சாயத்தில் பெருமாள்புரம் பகுதியில் குடிதண்ணீர் குழாய்க்கிணறு வசதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சமூக ரெங்கபுரம் பஞ்சாயத்தில் ஏற்கனவே 1 இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டப்பட்டு 33 பொது விநியோகக் குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே இக்கிராமத்திலுள்ள பெருமாள்புரம் பகுதியில் ஆழ்குழாய்க்கிணறு அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

81—

**அருள்மொழித் தேவன் காலனிக்கு வானொலி மன்றம்.**

வினா எண். 4119—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள அருள்மொழித்தேவன் காலனிக்கு வானொலி மன்றம் அமைத்துத் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 31—3—1992-க்குள் வானொலி மன்றம் அமைத்துத் தரப்படும்.



82—

**வல்லம் கிராமத்தில் வானொலி மன்றம்.**

வினா எண். 4130—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம் வல்லம் கிராமத்தில் வானொலி மன்றம் அமைத்துத் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1992–93 ஆம் ஆண்டில் வானொலி மன்றம் அமைத்துத் தரப்படும்.

83—

**கூட்டுக்குடிநீர்த் திட்டம்.**

வினா எண். 4844—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியில் பவானி ஆற்றில் இருந்து நகலூர், சின்னதம்பிபாளையம், மைக்கேல் பாளையம், பிரமதேசம் போன்ற ஊராட்சிப்பகுதி கிராம மக்களுக்கு அடிகால் கூட்டுக்குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எப்போது பணி ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அடிகால் கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஆய்வில் உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிவுற்று திட்ட மதிப்பீடு தயாரித்து அதற்கு நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல்கள் வழங்கப்பட்டபின், பணிகள் துவங்கப்படும்.

[1992 செப்டம்பர் 23

84—

வினா எண். 4949—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பெரியார் மாவட்டம், அந்தியூரில் உள்ள ஏரியில் உள்ள ஆழ்குழாயில் மோட்டார் இணைப்பு வைத்து மேல் நிலைத் தொட்டி கட்டி, புதுப்பாளையம், ஆத்தப்பம்பாளையம், கூடுமைனார் போன்ற ஊர்களுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அந்தியூரிலுள்ள ஏரியில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் மோட்டார் இணைப்பு வைத்து, புதுப்பாளையம், ஆத்தப்பம்பாளையம், கூடுமைனார் ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால் நாகலூர், சின்னத்தம்பிப்பாளையம், மைக்கேல்பாளையம் பஞ்சாயத்துக்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இம்மூன்று குடியிருப்புகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

85—

## கிராமக் குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண். 5135—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமக்குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் 1988–89, 1989–90 ஆகிய ஆண்டுகளில் நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியப் பகுதிகளில் புதிதாக பைப் லைன்கள் அமைக்கும் பணிகள் எங்கெங்கு மேற்கொள்ளப் பட்டன ?

(ஆ) இவற்றிற்காக அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(இ) அவற்றில் எங்கெங்கு பணிகள் முழுமையுற்று செயல் படுகின்றன ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கிராமக்குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் 1988–89, 1989–90 ஆகிய ஆண்டுகளில் நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியப் பகுதிகளில் புதிதாக பைப்லைன்கள் அமைக்கும் பணிகள் எதுவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

86—

## ஆழ்குழாய் அமைத்தல்.

வினா எண் 509 —திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம் கே. ஆர். அண்ட் கோ. இல்லத்திற்கு அருகிலுள்ள சின்னப்பள்ளத்தில் வசிக்கும் மக்களுக்கு இதுவரை குடிநீருக்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு கூட அமைக்கப்படாததினால் உடன் குடிதண்ணீர் வசதிக்காக ஆழ்குழாய்க்கிணறு ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சின்னப்பள்ளம் கே. ஆர். அண்ட் கோ. இல்லத்திற்கு அருகிலுள்ள வீடுகளின் தொகுப்பு ஒரு புதிய குடியிருப்பு ஆகும். இதன் மக்கட் தொகை 80. இங்கு 100-க்கும் குறைவாக மக்கட் தொகை இருப்பதினால் இதை தனிக்குடியிருப்பாகக் கருதி குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள இயலவில்லை. எனினும், தற்போது பணிகள் நடைபெற்று வரும் பரயன்காடு கூட்டுக்குடி நீர்த் திட்டம் முடிவுற்றவுடன், இத்திட்டத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட பகுதிக்கு குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வசதி செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைக்கு ஆழ்குழாய் அமைக்கும் திட்டம் இல்லை.

87—

### குடிநீர் வசதி.

வினா எண். 5120—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியில் அந்தியூர் பேரூராட்சிக்கு உட்பட்ட காமராஜ் வீதி, சத்யா நகர், ஆசிரியர் குடியிருப்பு, கவுண்டர் காலனி போன்ற பகுதிகளுக்கு குடிப்பதற்கு ஆற்று நீர் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், 1991–92 இல் பணி ஆரம்பிக்கப் படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு. திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அந்தியூர் பேரூராட்சிக்குட்பட்ட காமராஜ் வீதி, சத்தியா நகர், ஆசிரியர் குடியிருப்பு, கவுண்டர் காலனி ஆகிய நான்கு குடியிருப்புகளில் கவுண்டர் காலனி ஆகிய இரண்டிற்கு மட்டும் காமராஜ் வீதி, கவுண்டர் காலனி ஆகிய இரண்டிற்கு மட்டும் ஆற்று நீர் விஸ் தீர்ப்பு உள்ளது. மற்ற இரண்டு குடியிருப்புகளுக்கு திட்டம் எதுவும் பரிசிலனையில் இல்லை.

88—

### தேக்கன்காடு கிராமக் கிணற்றுக்குச்சுற்றுச் சுவர்.

வினா எண். 5661—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பர்கூர் கிராமம் தேக்கன்காடு கிணற்றினை ஆழப்படுத்தி, கிணற்றின் சுவற்றினை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பர்கூர் ஊராட்சியில் உள்ள தேக்கன்காடு குக்கிராமத்தில் உள்ள கிணற்றில் இவ்வாண்டு பெய்த மழையால் நீர்வரத்து அதிக





மாக உள்ளது. எனவே தற்போது அதை ஆழப்படுத்த இயலாது. அக்கிணற்றுக்கு சுற்றுச்சுவர் கட்ட சுமார் ரூ. 20,000 செலவாகும். மேற்படி சுற்றுச்சுவர் கட்ட தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதியில்லாத காரணத்தால் இப்பணியை எடுத்துச் செய்ய இயலாத நிலைமை உள்ளது.

89—

### குடிநீர் வசதி.

வினா எண். 5784—திரு. வி.கே. இலட்சுமணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மாவட்டத்தில், பில்லூர் அணைக்கட்டிலிருந்து பல்லடம் வரை பல கிராமக் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாவட்டத்தில் பில்லூர் அணைக்கட்டிலிருந்து பல்லடம் வரை 521 கிராமங்களுக்கான குடிநீர்த் துணைத்திட்டத்திற்கான துணை நீரேற்றுக் குழாய், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, நீரேற்று அறை, மேல் நிலை நீர்த்தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் முடிவானதும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டமானது 6/93-க்குள் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரும் வகையில் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

90—

### மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் கட்டுதல்.

வினா எண். 8077—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆனைமலை ஒன்றியம், கோட்டூர் பேரூராட்சியிலும் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியிலும் தண்ணீர் பற்றாக் குறையைப் போக்க குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆனைமலை ஒன்றியம் கோட்டூர் பேரூராட்சியிலும், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியிலும் கூடுதலாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டி குடிநீர் விநியோகம் செய்வதற்கான யாதொரு திட்டமும் தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

91—

வினா எண். 7691—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள அம்மன்குப்பம் கிராமத்திற்கு குடிநீர் மேல் நிலைத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம். இந்நிதியாண்டில் (1992-93) அம்மன்குப்பம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. 91-92-க்குள் முடித்து மக்கள் பயனுக்கு கொண்டுவர ஆவன செய்யப்பட்டுள்ளது.

92—

## கிராமங்களுக்கு சிறுவாணி நீர்வசதி.

வினா எண். 8558—திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கு கிடைக்கும் சிறுவாணி குடிநீர் அதன் அருகாமையில் உள்ள



1992 செப்டம்பர் 23]

காளப்பட்டி பேரூராட்சி, வெள்ளலூர் பேரூராட்சி, சரவணம்பட்டி பேரூராட்சி, சின்னவேடம்பட்டி பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு கிடைக்குமாறு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கு கிடைக்கும் சிறுவாணி குடிநீர் திட்டத்திலிருந்து காளப்பட்டி, வெள்ளலூர், சரவணம்பட்டி மற்றும் சின்னவேடம்பட்டி பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

## குடிநீர் வசதி.

வினா எண் 8560—திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிங்காநல்லூர் தொகுதியில் ஒன்றியப் பகுதியான சர்க்கார் சாமகுளத்தில் நடந்துவரும் அத்திக்கடவு குடிநீர் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அந்த திட்டம் எப்போது முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) சிங்காநல்லூர் தொகுதியில் ஒன்றியப் பகுதியான சர்க்கார் சாமகுளத்தில் நடந்துவரும் அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தில் 1992 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை மொத்தப் பணிகளில் 42 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மீதமுள்ள இத்திட்டப் பணிகள் அனைத்தும் 30-6-1993-க்குள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரும் வகையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

[1992 செப்டம்பர் 23

94—

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.

வினா எண் 9719-ஏ—திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திருத்தம் குறித்து மாநில அரசின் கருத்தை மத்திய அரசு கேட்டுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்கு திருத்தங்கள் கூறுவதற்காக இந்திய அரசு செயற்குழு ஒன்றினை அமைத்துள்ளது. இந்தக் குழுவில் தமிழக அரசின் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஒரு உறுப்பினர் ஆவார். இக்குழு இதுவரை 4 முறை கூட்டங்களைக் கூட்டி இச்சட்டங்கள் பற்றி விவாதித்துள்ளது. கடைசிக் கூட்டம் சென்ற ஆண்டு டிசம்பர் 6ஆம் தேதி அகமதாபாத்தில் நடைபெற்றது. செயற்குழு தன்னுடைய அறிக்கையை இந்த ஆண்டு ஜனவரி மாதம் மத்திய அரசிற்கு சமர்ப்பித்துள்ளது. அறிக்கை மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.

95—

## தொழில் தகராறு சட்டத் திருத்தம்.

வினா எண். 9731—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தொழிற் சங்கங்களை அங்கீகரிக்கும்போது நேர்மையற்ற தொழிற் பழக்கங்களை தடுக்க தொழிற் தகராறு சட்டம் மற்றும் தொழிற்சங்க சட்டங்களை திருத்துவது பற்றிய கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் இருந்ததன் மீது என்ன முடிவெடுக்கப்பட்டது ?

(ஆ) இது குறித்த சட்டத்திருத்தங்கள் ஏதேனும் மத்திய அரசு வெளியிட்டிருப்பின் அவற்றின் மீது மாநில அரசு எடுத்த நடவடிக்கை விவரம் என்ன ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. செ. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) தொழிற் சங்கங்களை அங்கீகரிக்கும்போது நேர்மையற்ற தொழிற் பழக்கங்களைத்தடுக்க தொழிற் தகராறு சட்டம் மற்றும் தொழிற்சங்க சட்டங்களைத் திருத்துவது பற்றிய கருத்துரு மீது மத்திய அரசு இதுவரை எந்தவித முடிவும் எடுக்கவில்லை.

(ஆ) எழாது.

96—

## அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை.

வினா எண். 8647—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 12-வது பொதுக்குழுக் கூட்டத்தில் 8.5 சதம் சத்துள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 600 என விலை நிர்ணயம் செய்ய வேண்டுமெனவும் கரும்பு உற்பத்தியாளர்களிடம் திருப்பித்தர இயலாத தொகை (என்.ஆர்.டி.) என பீடித்தம் செய்வதை மாற்றி திருப்பித்தரப்படும் மூலதனம் (ஆர்.டி.) என அறிவித்து திருப்பித் தருமாறும் அரசுக்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அரசின் முடிவு என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1992 செப்டம்பர் 23

97—

குளித்தலையில் அரசு ஊழியருக்கு வீட்டு வசதி.

வினா எண். 8856—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலையில் தமிழ்நாடு வீட்டு வசதி துறையின் கீழ் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை.

98—

மயானக் கொட்டகை அமைத்தல்.

வினா எண். 2794—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பழவேனிற்காட்டில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு மயானக் கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

பழவேனிற்காட்டில் உள்ள ஆதிதிராவிடர்கட்கு மயானக் கொட்டகை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை. மேற்படி பணி மேற்கொள்ள ரூ. 13,500 செலவாகும். இதற்கு ஊராட்சியில் நிதி வசதியில்லை.



1992 செப்டம்பர் 23]

99—

மத்திய அரசிடம் மக்காச்சோளம் ஒதுக்கீடு கோருதல்.

வினா எண். 2884—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மாதந்தோறும் தமிழகத்திற்கு கோழித் தீவனமாக 15,000 டன் மக்காச்சோளம் தேவைப்படுவதாலும், தமிழகத்தில் கிடைக்கும் அளவு குறைவாக இருப்பதாலும் மாதந்தோறும் 7,500 டன் அளவு மக்காச்சோளம் வழங்குமாறு மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

மைய அரசு பொது விநியோகத்தின் கீழ் வழங்குவதற்கென்று அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களையே ஒதுக்கீடு செய்கிறது. எனவே சோளம் ஒதுக்கீடு செய்ய வாய்ப்பில்லை.

100—

கிராமிய நூற்பு நிலையங்கள்.

வினா எண். 7955—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டதிலுள்ள கிராமிய நூற்பு நிலையங்கள் எத்தனை?

(ஆ) ஒன்றியத்திற்கு ஒரு கிராமிய நூற்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர். :

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது :—

[1992 செப்டம்பர் 23

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மொத்தம் 27 கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும், ஊராட்சி ஒன்றியங்களின் பெயரும். | கிராமிய நூற்பு நிலையங்களின் பெயர். | கிராமிய நூற்பு நிலைய எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. புதுக்கோட்டை (4)— | புதுக்கோட்டை | 1 |
| | திருக்கோகர்ணம் | 1 |
| | உசிலங்குளம் | 1 |
| | கோவில்பட்டி | 1 |
| 2. திருவரங்குளம்(10) | திருவரங்குளம் | 4 |
| | வம்பன்காலனி | 1 |
| | அரசடிப்பட்டி | 1 |
| | கொத்தமங்களம் | 1 |
| | வன்னியன்விடுதி | 1 |
| | கீரமங்கலம் (மே) | 1 |
| | கீரமங்கலம் | |
| 3. அறந்தாங்கி (3) | அறந்தாங்கி | 1 |
| | மேலப்பட்டு | 1 |
| | பூலைமாநகர் | 1 |
| 4. அரிமழம் (1) | கே. இராயவரம் | 1 |
| 5. குண்ணாண்டார் கோவில் (2) | கீரனூர் | 1 |
| | கொளத்தூர் | 1 |
| 6. விராலிமலை (3) | விராலிமலை | 1 |
| | பேராம்பூர் | 1 |
| | வெள்ளரோடை | 1 |
| 7. அன்னவாசல் (1) | இலுப்பூர் | 1 |
| 8. கரம்பக்குடி (4) | தீர்த்தான்விடுதி | 1 |
| | செம்பட்டுவிடுதி | 1 |
| 9. திருமயம் (1) | விராச்சிலை | 1 |
| | மொத்தம் ... | 27 |



1992 சேப்டம்பர் 23[

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 13 ஊராட்சி ஒன்றியங்கள் இயங்குகின்றன. அவற்றில் 9 ஊராட்சி ஒன்றியங்களில் 27 கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. எஞ்சியுள்ள மணமேல்குடி, ஆவுடையார்கோயில், பொன்னமராவதி மற்றும் கந்தர்வக் கோட்டை ஆகிய ஒன்றியங்களில் விவசாயத் தொழிலில் அதிக வருமானம் கிடைப்பதால் கிராமிய நூற்பு நிலையங்களில் பணியாற்ற நூற்பாளர்கள் முன்வரவில்லை. ஆதலின் இந்த ஒன்றியங்களில் கிராமிய நூற்பு நிலையம் அமைக்க இயலவில்லை.

101—

## மாவட்டங்களில் உள்ள மத்திய சிறைகளில் போதுமான குடிநீர் வசதி செய்தல்.

வினா எண் 5552— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களில் உள்ள மத்திய சிறைகள் மற்றும் சென்னை மத்திய சிறையில் உள்ள கைதிகளுக்கு போதுமான குடிநீர் வசதி இன்றி இருக்கும் நிலைப் பற்றி அரசு ஆய்வு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மாவட்டங்களில் உள்ள அனைத்து மத்திய சிறைகளிலும் மற்றும் சென்னை மத்திய சிறையிலும் உள்ள சிறைவாசிகளுக்கு போதுமான குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

102—

## வறட்சி காரணமாக குடிநீர் தட்டுப்பாட்டை போக்க அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண். 3241—திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியின் காரணமாக குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசு எவ்வளவு தொகை நடப்பு நிதி ஆண்டுக்கு ஒதுக்குயுள்ளது ?

[1992 செப்டம்பர் 23

(ஆ) எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு தொகை மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) ஒதுக்கப்பட்ட தொகை எந்த விதத்தில் பயன்படுத்தப் பட்டது ?

(ஈ) இன்னும் எந்த மாவட்டங்களுக்கு தண்ணீர் தட்டுப்பாட்டிற்காக தொகை ஒதுக்க வேண்டும் என்று எந்தெந்த மாவட்ட ஆட்சியர்கள் கோரியுள்ளார்கள் ?

(உ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்,
வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கவும், இதர இடர்பாடுகள் ஏற்படின் நிவாரணம் வழங்கவும் நடப்பு நிதியாண்டில் இடர்பாடு நிவாரண நிதியில் ரூ. 39 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) ஒதுக்கப்பட்ட தொகை குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கவும், லாரி மூலம் குடிநீர் வழங்கவும், ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்தல், திறந்த வெளிக் கிணறுகளை ஆழப்படுத்தல், திறந்த வெளிக் கிணறுகள் அமைத்தல், குழாய்களை நீட்டித்தல், தனி மின் தடம் அமைத்தல் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் குடிநீர் ஆதாரங்களில் உள்ள சிறு பழுதுகளை செப்பனிடுதல் முதலிய பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

(ஈ) மேலும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், பெரியார், மதுரை, திருவண்ணாமலை-சம்புவராயர், தென் ஆற்காடு, சிதம்பரனார், சேலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஆட்சியர்கள் தண்ணீர் தட்டுப்பாட்டிற்காக நிதி ஒதுக்கக் கோரியுள்ளனர்.

(உ) மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையை இடர்பாடு நிவாரணநிதிக்குழு ஆய்வு செய்து நிதியுதவி ரூ. 2 கோடி அளிக்க பரிந்துரை செய்ததை அரசு ஏற்று இணைப்பு 2-ல் உள்ளவாறு 20—9—1991-ல் வெளியிடப்பட்டுள்ளது.



1992 செப்டம்பர் 23]

இணைப்பு—1.

20—9—1991-க்கு முன்னால் வழங்கப்பட்ட தொகை:—

| மாவட்டத்தின் பெயர் (1) | (ரூபாய் இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 1. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் .. | 12.09 |
| 2. திண்டுக்கல், அண்ணா .. .. .. | 24.50 |
| 3. நீலகிரி .. .. .. | 19.00 |
| 4. சிதம்பரனார் .. .. .. | 5.50 |
| 5. இராமநாதபுரம் .. .. .. | 18.50 |
| 6. திருநெல்வேலி-கட்டபொம்மன் .. | 17.90 |
| 7. கன்னியாகுமரி .. .. .. | 24.60 |
| 8. தர்மபுரி .. .. .. | 24.50 |
| 9. பெரியார் .. .. .. | 48.80 |
| 10. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். .. .. | 33.30 |
| 11. திருவண்ணாமலை—சம்புவராயர் .. | 19.18 |
| 12. தென்னாற்காடு .. .. .. | 89.00 |
| 13. தஞ்சாவூர் .. .. .. | 21.93 |
| 14. மதுரை .. .. .. | 19.50 |
| 15. கோயம்புத்தூர் .. .. .. | 73.00 |
| 16. வடஆற்காடு—அம்பேத்கார் .. .. | 68.50 |
| 17. சேலம் .. .. .. | 64.50 |
| 18. புதுக்கோட்டை .. .. .. | 26.00 |
| 19. திருச்சிராப்பள்ளி .. .. .. | 17.50 |
| | 627.80 |

[1992 செப்டம்பர் 23

இணைப்பு—2.

20–9–1991 ஆம் நாளிட்ட அரசாணையில் வழங்கப்பட்ட தொகை:—

| மாவட்டத்தின் பெயர்: (1) | (ரூபாய் இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி .. .. .. | 10.50 |
| 2. தஞ்சாவூர் .. .. .. | 5.00 |
| 3. இராமநாதபுரம் .. .. .. | 10.16 |
| 4. பெரியார் .. .. .. | 29.25 |
| 5. தென்னாற்காடு .. .. .. | 38.50 |
| 6. சிதம்பரனார் .. .. .. | 22.50 |
| 7. சேலம் .. .. .. | 28.00 |
| 8. கோயம்புத்தூர் .. .. .. | 17.50 |
| 9. புதுக்கோட்டை .. .. .. | 31.59 |
| 10. மதுரை .. .. .. | 7.00 |
| | 200.00 |

108—

பட்டா வழங்க நடவடிக்கை.

வினா எண் 5083—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் பவானி வட்டத்தில் உள்ள நத்தம் தனி தாசில்தார் அவர்கள், 1989-90, 1990-91-ல் அந்தியூர் தொகுதியில் பட்டா வழங்க சர்வே செய்தும் பல ஊர் மக்களுக்கு பட்டா வழங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் துரித நடவடிக்கை எடுத்து 1991-92க்குள் அத்தனை பேருக்கும் பட்டா வழங்கப்படுமா?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பவானி வட்டத்தில் நில அளவைப் பணி முடிக்கப்பட்டு நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் பட்டா வழங்கும் பணி தற்சமயம் முன்னேற்றத்தில் உள்ளது. மேற்கண்ட ஊர்களுக்கு விரைவில் பட்டா வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

104—

தமிழ்நாட்டிலுள்ள உபரிநிலங்கள்.

வினா எண் 6501—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கடந்த 30 ஆண்டுகளில் உபரி நிலங்கள், உபரி என அறிவிக்கப்பட்ட நிலங்கள், கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் ஆகியவற்றின் விவரம் என்ன?

(ஆ) அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் சொந்த வீட்டுமனையற்ற ஏழை மக்களுக்கு இதுவரை பிரித்து அளிக்கப்பட்டிருக்கின்றனவா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டத்தின்கீழ் 29–2–1992 வரை மிகையாக அறிவிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு, கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| (1) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961,— இன்கீழ் 29–2–1992 வரை மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலங்கள். | 1,80,760 ஏக்கர். |
| (2) மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலங்களில் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் | 1,71,426 ஏக்கர். |

(ஆ) அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் 1,44,782 ஏக்கர் நிலங்கள் 1,19,912 நிலமற்றவர்களுக்கு விவசாயத்திற்காக ஒப்படை செய்யப்பட்டுள்ளது. வீட்டுமனையற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (உபரி நில விதியோக) விதிகளில் வழிவகையில்லை.

105— [1992 செப்டம்பர் 23

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நில அளவைத் துறை பணியாளர் நியமித்தல்.

வினா எண் 7479—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு நில அளவைத் துறை பணியாளரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நில அளவைத் துறை பணியாளரை நியமிக்க அரசிடம் தற்போது செயற் குறிப்பு ஏதும் இல்லை.

106—

மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் மாவட்ட வாரியான விவரம்.

வினா எண் 174—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் எண்ணிக்கை இம்மாநிலத்தில் பெருகியுள்ளனவா?

(அ) அப்படியாயின் 1980 முதல் இன்று வரை மாவட்ட வாரியான விவரம் மற்றும்

(இ) அவைகளின் எண்ணிக்கை:

(1) பெண்கள் பள்ளிகள்.
(2) ஆண்கள் பள்ளிகள்.
(3) இருபாலரும் படிக்கும் பள்ளிகள்.

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) விடை அட்டவணை I-ல் வைக்கப்பட்டுள்ளது.

(இ) (1) 21
(2) 13
(3) 877

911



அட்டவணை—1.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் மாவட்ட வாரியான (ம) ஆண்டுவாரியான விவர அறிக்கை.

| வரிசை எண் மற்றும் மாவட்டங்களின் பெயர்கள். | | 1981—82 ஆ. | 1981—82 பெ. | 1981—82 இ.பா. | 1982—83 ஆ. | 1982—83 பெ. | 1982—83 இ.பா. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 சென்னை | | | | | 2 | 1 | 5 |
| 2 செங்கல்பட்டு— எம்.ஜி.ஆர். | | | | | | | 3 |
| 3 மதுரை | | | 1 | | | | 1 |
| 4 திண்டுக்கல்— அண்ணா | | | | | | | 1 |
| 5 காமராஜர் | | | | | | | |
| 6 பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | | | | 1 | | | |
| 7 இராமநாதபுரம் | | | | | | | 1 |
| 8 திருநெல்வேலி கட்டபொம்மன் | | | | | | | |
| 9 சிதம்பரனார் | | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 கன்னியாகுமரி | ... | .. | ... | .. | 1 | .. |
| 11 திருச்சிராப்பள்ளி | ... | .. | ... | .. | ... | .. |
| 12 புதுக்கோட்டை | ... | .. | ... | ... | ... | .. |
| 13 தஞ்சாவூர் | ... | .. | 1 | .. | .. | 1 |
| 14 தென்னாற்காடு | .. | 1 | ... | .. | 3 | 3 |
| 15 தருமபுரி | ... | ... | ... | .. | ... | 1 |
| 16 பெரியார் | ... | .. | .. | ... | 2 | 1 |
| 17 வட ஆற்காடு-அம்பேத்கார் | 1 | ... | ... | ... | ... | .. |
| 18 சேலம் | 1 | 1 | 1 | .. | ... | 2 |
| 19 கோயம்புத்தூர் | 1 | 5 | 3 | .. | ... | 5 |
| 20 நீலகிரி | .. | .. | ... | ... | ... | .. |
| 21 திருவண்ணாமலை—சம்புவராயர் | .. | .. | .. | .. | ... | .. |
| | 3 | 6 | 11 | 2 | 3 | 25 |

ஆ—ஆண்கள் பெ—பெண்கள் இ.பா.—இருபாலரும்



அட்டவணை 1.—தொடர்ச்சி.

| (1) | (2). | 1981—82. ஆ. (9) | 1981—82. பெ. (10) | 1981—82. இ.பா. (11) | 1982—83. ஆ. (12) | 1982—83. பெ. (13) | 1982—83. இ.பா. (14) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | .. | 1 | 5 | 3 | 1 | 9 |
| 2 | செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். | ... | ... | 2 | ... | ... | 3 |
| 3 | மதுரை | ... | ... | 2 | .. | 1 | 2 |
| 4 | திண்டுக்கல்-அண்ணா | ... | ... | 1 | ... | ... | ... |
| 5 | காமராஜர் | ... | ... | ... | ... | ... | .. |
| 6 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். | ... | ... | 2 | ... | ... | ... |
| 7 | இராமநாதபுரம் | ... | ... | ... | ... | ... | |
| 8 | திருநெல்வேலி-கட்டபொம்மன். | ... | ... | 1 | ... | .. | 2 |
| 9 | சிதம்பரனார் | .. | ... | 1 | .. | .. | ... |
| 10 | கன்னியாகுமரி | .. | .. | .. | .. | .. | .. |
| 11 | திருச்சிராப்பள்ளி | ... | .. | 1 | .. | .. | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | புதுக்கோட்டை | — | — | 1 | — | — | — |
| 13 | தஞ்சாவூர் | — | — | — | — | — | 1 |
| 14 | தென்னாற்காடு | — | — | — | — | — | 4 |
| 15 | தருமபுரி | — | — | — | — | — | 1 |
| 16 | பெரியார் | — | — | 1 | — | — | 2 |
| 17 | வட ஆற்காடு-அம்பேத்கார் | — | — | — | — | — | 1 |
| 18 | சேலம் | — | — | — | — | — | 1 |
| 19 | கோயம்புத்தூர் | — | — | 3 | — | — | 3 |
| 20 | நீலகிரி | — | — | — | — | — | — |
| 21 | திருவண்ணாமலை-சம்புவராயர் | — | — | 1 | — | — | — |
| | | — | 1 | 21 | 8 | 8 | 34 |



அட்டவணை 1.—தொடர்ச்சி.

| (1) | (2) | 1983–84. ஆ. (15) | 1983–84. பெ. (16) | 1983–84. இ.பா. (17) | 1984–85 ஆ. (18) | 1984–85 பெ. (19) | 1984–85 இ.பா. (20) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | ... | 12 | — | 1 | 13 |
| 2 | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | — | — | 7 | — | — | 14 |
| 3 | மதுரை | — | 1 | — | — | 2 | 4 |
| 4 | திண்டுக்கல்-அண்ணா | — | — | — | — | — | 2 |
| 5 | காமராஜர் | — | — | — | — | — | ... |
| 6 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். | — | — | — | — | — | 1 |
| 7 | இராமநாதபுரம் | — | — | — | — | — | — |
| 8 | திருநெல்வேலி-கட்டபொம்மன். | — | — | 1 | — | — | 3 |
| 9 | சிதம்பரனார் | — | — | — | — | — | 1 |
| 10 | கன்னியாகுமரி | — | — | 1 | — | — | — |
| 11 | திருச்சிராப்பள்ளி | — | — | — | — | — | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | புதுக்கோட்டை | .. | .. | .. | .. | .. | .. |
| 13 | தஞ்சாவூர் | .. | .. | 1 | .. | .. | 3 |
| 14 | தென்னாற்காடு | .. | .. | .. | .. | .. | 4 |
| 15 | தருமபுரி | .. | .. | .. | .. | .. | 1 |
| 16 | பெரியார் | .. | .. | .. | .. | .. | 2 |
| 17 | வடஆற்காடு—அம்பேத்கார் | .. | .. | .. | .. | .. | 3 |
| 18 | சேலம் | .. | 1 | 1 | .. | .. | 6 |
| 19 | கோயம்புத்தூர் | .. | .. | 2 | .. | .. | 6 |
| 20 | நீலகிரி | .. | .. | .. | .. | .. | 1 |
| 21 | திருவண்ணாமலை—சம்புவராயர் | .. | .. | .. | .. | .. | .. |
| | | 1 | 2 | 25 | .. | 1 | 65 |

ஆ. —ஆண்கள். பெ.—பெண்கள். இ.பா.—இருபாலரும்.



அட்டவணை 1.—தொடர்ச்சி.

| | | 1985—86 | | | 1986—87 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆ. | பெ. | இ.பா. | ஆ. | பெ. | இ.பா. |
| (1) | (2) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) |
| 1 | சென்னை | 1 | .. | 7 | .. | .. | 12 |
| 2 | செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். | .. | .. | 9 | .. | .. | 13 |
| 3 | மதுரை | .. | .. | 3 | .. | .. | 7 |
| 4 | திண்டுக்கல்—அண்ணா | .. | .. | .. | 1 | .. | 5 |
| 5 | காமராஜர் | .. | .. | .. | .. | .. | 3 |
| 6 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். | .. | .. | 2 | .. | .. | .. |
| 7 | இராமநாதபுரம் | .. | .. | .. | .. | .. | .. |
| 8 | திருநெல்வேலி-கட்டபொம்மன். | .. | .. | 2 | .. | .. | 1 |
| 9 | சிதம்பரனார் | .. | .. | 2 | .. | .. | .. |
| 10 | கன்னியாகுமரி | .. | .. | 1 | .. | .. | 2 |
| 11 | திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | .. | .. | 3 |
| 12 | புதுக்கோட்டை | .. | .. | .. | .. | .. | .. |

அட்டவணை—1—தொடர்ச்சி

| வரிசை எண். (1) | மாவட்டங்களின் பெயர்கள். (2) | 1987–88 ஆ. (27) | 1987–88 பெ. (28) | 1987–88 இ.பா. (29) | 1988–89 ஆ. (30) | 1988–89 பெ. (31) | 1988–89 இ.பா. (32) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | .. | .. | 27 | .. | .. | 36 |
| 2 | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | .. | .. | 15 | .. | .. | 19 |
| 3 | மதுரை | .. | .. | 14 | .. | .. | 13 |
| 4 | திண்டுக்கல்-அண்ணா | .. | .. | 4 | .. | 1 | 1 |
| 5 | காமராஜர் | .. | .. | 3 | .. | .. | 3 |
| 6 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். | .. | .. | 1 | .. | .. | 3 |
| 7 | இராமநாதபுரம் | .. | .. | 2 | .. | .. | 1 |
| 8 | திருநெல்வேலி-கட்டபொம்மன் | .. | .. | 3 | .. | .. | 3 |
| 9 | சிதம்பரனார் | .. | .. | 3 | .. | .. | .. |
| 10 | கன்னியாகுமரி | .. | .. | 2 | .. | .. | 6 |
| 11 | திருச்சிராப்பள்ளி | .. | .. | 6 | .. | .. | 8 |
| 12 | புதுக்கோட்டை | .. | .. | 2 | .. | .. | 4 |
| 13 | தஞ்சாவூர் | .. | .. | .. | .. | .. | 4 |
| 14 | தென்னார்க்காடு | .. | .. | 2 | .. | .. | 7 |
| 15 | தருமபுரி | .. | .. | 1 | .. | .. | 2 |
| 16 | பெரியார் | .. | 1 | 2 | .. | .. | 8 |
| 17 | வடஆற்காடு-அம்பேத்கார் | .. | .. | 3 | .. | .. | 7 |
| 18 | சேலம் | .. | .. | 5 | .. | .. | 4 |
| 19 | கோயம்புத்தூர் | .. | .. | 5 | .. | 1 | 8 |
| 20 | நீலகிரி | .. | .. | .. | .. | .. | 2 |
| 21 | திருவண்ணாமலை-சம்புவராயர் | .. | .. | .. | .. | .. | 2 |
| | | 1 | 1 | 45 | 1 | 1 | 90 |

ஆ.—ஆண்கள். பெ.—பெண்கள். இ.பா.—இருபாலரும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | தஞ்சாவூர் | .. | .. | 10 | .. | .. | 13 |
| 14 | தென்னாற்காடு | .. | .. | 10 | .. | .. | 13 |
| 15 | தருமபுரி | .. | .. | 3 | .. | .. | 2 |
| 16 | பெரியார் | .. | 1 | 5 | .. | .. | 5 |
| 17 | வடஆற்காடு-அம்பேத்கார் | .. | .. | 5 | .. | .. | 6 |
| 18 | சேலம் | .. | .. | 5 | .. | .. | 5 |
| 19 | கோயம்புத்தூர் | .. | .. | 9 | .. | .. | 8 |
| 20 | நீலகிரி | .. | .. | 1 | .. | .. | .. |
| 21 | திருவண்ணாமலை-சம்புவராயர் | .. | .. | 1 | .. | .. | 1 |
| | | .. | 1 | 133 | .. | 1 | 147 |

ஆ.—ஆண்கள் பெ.—பெண்கள் இ. பா.—இருபாலரும்



| வரிசை எண். | மாவட்டங்களின் பெயர். | 1989—90 | | | 1990—91 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆ. | பெ. | இ.பா. | ஆ. | பெ. | இ.பா. |
| (1) | (2) | (33) | (34) | (35) | (36) | (37) | (38) |
| 1 | சென்னை | .. | .. | 21 | .. | .. | 13 |
| 2 | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | .. | .. | 23 | .. | .. | 17 |
| 3 | மதுரை | .. | .. | 6 | .. | .. | 14 |
| 4 | திண்டுக்கல்-அண்ணா | .. | .. | 6 | .. | .. | 2 |
| 5 | காமராஜர் | .. | .. | 2 | .. | .. | 2 |
| 6 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | .. | .. | 2 | .. | .. | 1 |
| 7 | இராமநாதபுரம் | .. | .. | 3 | .. | .. | .. |
| 8 | திருநெல்வேலி-கட்டபொம்மன் | .. | .. | 7 | .. | .. | 6 |
| 9 | சிதம்பரனார் | .. | .. | 2 | .. | .. | 3 |
| 10 | கன்னியாகுமரி | .. | .. | 6 | .. | .. | 6 |
| 11 | திருச்சிராப்பள்ளி | .. | .. | 7 | .. | .. | 7 |
| 12 | புதுக்கோட்டை | .. | .. | 1 | .. | .. | .. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | தஞ்சாவூர் | .. | .. | 6 | .. | .. | 11 |
| 14 | தென்னாற்காடு | .. | .. | 9 | .. | .. | 1 |
| 15 | தருமபுரி | .. | .. | 3 | .. | .. | 2 |
| 16 | பெரியார் | .. | .. | 6 | .. | .. | 3 |
| 17 | வடஆற்காடு-அம்பேத்கார் | .. | 1 | 2 | .. | .. | 6 |
| 18 | சேலம் | .. | .. | 11 | .. | .. | 10 |
| 19 | கோயம்புத்தூர் | 1 | .. | 12 | .. | .. | 3 |
| 20 | நீலகிரி | .. | .. | 2 | .. | .. | 3 |
| 21 | திருவண்ணாமலை-சம்புவராயர் | .. | .. | 1 | .. | .. | 1 |
| | | 1 | 1 | 138 | .. | .. | 111 |

ஆ.—ஆண்கள் பெ.—பெண்கள். இ.பா.—இரு பாலரும்.



அட்டவணை 1—தொடர்ச்சி.

| வரிசை எண். | மாவட்டங்களின் பெயர்கள். | 1991—92 ஆ. | பெ. | இ.பா. | மொத்தம் ஆ. | பெ. | இ.பா. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (39) | (40) | (41) | (42) | (43) | (44) |
| 1 | சென்னை | 1 | 1 | 9 | 8 | 5 | 169 |
| 2 | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | .. | .. | 6 | .. | .. | 131 |
| 3 | மதுரை | .. | .. | .. | .. | 3 | 66 |
| 4 | திண்டுக்கல்-அண்ணா | .. | .. | 2 | 1 | 1 | 24 |
| 5 | காமராஜர் | — | — | — | — | — | 16 |
| 6 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | .. | .. | .. | .. | .. | 13 |
| 7 | இராமநாதபுரம் | .. | .. | .. | .. | .. | 7 |
| 8 | திருநெல்வேலி-கட்டபொம்மன் | .. | .. | 3 | .. | .. | 32 |
| 9 | சிதம்பரனார் | .. | .. | .. | .. | .. | 13 |
| 10 | கன்னியாகுமரி | .. | .. | .. | .. | .. | 24 |
| 11 | திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | .. | .. | 37 |
| 12 | புதுக்கோட்டை | .. | .. | .. | .. | .. | 8 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | தஞ்சாவூர் | .. | .. | 1 | .. | .. | 49 |
| 14 | தென்னார்க்காடு | .. | .. | .. | .. | 1 | 53 |
| 15 | தருமபுரி | .. | .. | 1 | .. | .. | 17 |
| 16 | பெரியார் | .. | .. | 2 | .. | 4 | 36 |
| 17 | வடஆற்காடு-அம்பேத்கார் | .. | .. | .. | 1 | 1 | 34 |
| 18 | சேலம் | .. | .. | 3 | 1 | 2 | 54 |
| 19 | கோயம்புத்தூர் | .. | .. | .. | 2 | 4 | 72 |
| 20 | நீலகிரி | .. | .. | 1 | .. | .. | 10 |
| 21 | திருவண்ணாமலை-சம்புவராயர் | .. | .. | 1 | .. | .. | 12 |
| | | 1 | 1 | 32 | 13 | 21 | 877 |

மொத்தம் .. 911

ஆ.—ஆண்கள். பெ.—பெண்கள். இ.பா.—இருபாலரும்.





107

**உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக உள்ள தொழிலாசிரியர் பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை.**

**வினா எண். 922—திரு. ஆர். சிங்காரம்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் உள்ள உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் காலியாக உள்ள தொழிலாசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :**

ஆம்.

108—

**அரசு மானியம் பெறும் கலைக் கல்லூரிகள்.**

**வினா எண். 1417—டாக்டர் எஸ். சுந்தரராஜ்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மானியம் பெறும் கலைக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் எத்தனை?

(ஆ) அவற்றில் பணியாற்றும் ஆதிதிராவிடர் பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் எத்தனை சதவீதம்?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:**

(அ) மொத்தம் 132 கல்லூரிகள்.

(ஆ) 1—1—1988 முதல் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள், பணிமூப்பின் அடிப்படையில் தேர்வுநிலை மற்றும் முதுநிலை விரிவுரையாளர்கள் பணியிடங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மானியம்

[1992 செப்டம்பர் 23

பெறும் கலைக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆதி திராவிட இன விரிவுரையாளர்கள் தொடர்பான விவரம் பின்வருமாறு:

| | மொத்தம். | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | |
| விரிவுரையாளர்கள் (தேர்வுநிலை). | 1,422 | 4 | .. | ஆண்கள் கல்லூரி. |
| | 463 | 5 | 1 | பெண்கள் கல்லூரி. |
| மொத்தம் .. | 1,885 | 9 | 1 | |
| விரிவுரையாளர்கள் (முதுநிலை) | 2,594 | 40 | 1 | ஆண்கள் கல்லூரி. |
| | 775 | 14 | .. | மகளிர் கல்லூரி. |
| மொத்தம் | 3,369 | 54 | 1 | |
| விரிவுரையாளர்கள். | 2,956 | 177 | 1 | ஆண்கள் கல்லூரி, |
| | 1,650 | 72 | 6 | மகளிர் கல்லூரி. |
| மொத்தம் | 4,606 | 249 | 7 | |

இக்கல்லூரிகளில் மொத்தம் 9,860 விரிவுரையாளர்கள் உள்ளனர். அதில் ஆதிதிராவிடர் விரிவுரையாளர்கள் எண்ணிக்கை 312-ம் பழங்குடியினர் எண்ணிக்கை 9-ம் ஆகும். இது மொத்தத்தில் 3.35 விழுக்காடு ஆகும்.

109—

## பரமக்குடி தொகுதியில் உயர்நிலைப்பள்ளிகள்.

வினா எண் 2411—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பரமக்குடி தொகுதியில் எத்தனை நகராட்சி மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக 1990—91 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டுள்ளன ?



[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

பரமக்குடி தொகுதியில் எந்த நடுநிலை பள்ளியும் 1990-91 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படவில்லை.

110—

## நூலக இயக்ககம் தழைப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண் 4103—திரு ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டில் நூலக இயக்ககம் தழைப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:—

தமிழ்நாட்டில் நூலக இயக்ககம் தழைப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது.:

### விவர அறிக்கை.

தமிழ்நாட்டில் நூலக இயக்ககம் தழைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பொதுச் சொத்தான பொது நூலகங்களைக் காப்பதிலும், வளர்ப்பதிலும் பொது மக்களுக்கு பெரும் பங்கு உண்டு என்பதை அவர்கள் உணரவும், நூலக இயக்ககம் தழைக்க தேவையான நன்கொடைகள் பொது மக்களிடம் இருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெற்று நூலக வளர்ச்சி மாநாடு நடத்தப்பட்டு வருகிறது.

2. மாவட்டந்தோறும் நூலக வளர்ச்சி மாநாடு நடத்துவதற்கு அரசாணை எண். 1497, கல்வித் துறை, நாள் 6-12-1988 -இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நூலக வளர்ச்சி மாநாடு மூலம் நூலகத்திற்கு தேவையான நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள், தளவாடப் பொருட்கள் அன்பளிப்பாக பெறப்பட்டு, நூலகத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை சென்னை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., திருநெல்வேலி, திருச்சி, மதுரை, வட ஆற்காடு-அம்பேத்கார், பெரியார், தஞ்சாவூர், காமராசர், தென்னாற்காடு

[1992 செப்டம்பர் 23

மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்ற 12 மாவட்டங்களில் நூலக வளர்ச்சி மாநாடு நடைபெற்றுள்ளது. இதர மாவட்டங்களில் நூலக வளர்ச்சி மாநாடு நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1990–91 ஆம் ஆண்டில் பொது மக்களின் பேராதரவையும் நன் மதிப்பையும் பெற்று மாவட்டந்தோறும் நூலக வளர்ச்சியில் நாட்டங் கொண்டு நூலகங்களுக்குத் தேவையான தளவாடப் பொருட்கள், அலமாரி, மேஜை, நாற்காலி, தண்ணீர் பாத்திரம், டம்ளர், கடிகாரம், மின்சாதனங்கள், நூல் அடுக்குகள் போன்றவைகள் சுமார் ரூ. 105 இலட்சம் மதிப்பில் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. நூலக வளர்ச்சி மாநாடுகள் நடைபெற்ற மாவட்டங்களில் மாநாடு முடிந்தவுடன் நன்கொடைகள் பெறுவது நிறுத்தப்படாமல் தொடர்ந்து நன்கொடைகள் பெறப்பட்டு வருகின்றன.

3. பொது நூலக இயக்ககம் தழைக்க 1991–92 ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் எட்டு குறிக்கோள்களை அரசின் அனுமதியுடன் பொது நூலகத் துறை ஏற்றுச் செயல்படுத்தி வருகிறது.

அவை முறையே :—

1. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் இலவச நிலம் பெறுதல்.

2. பொது நூலகங்கள் செயல்படும் ஊர்களில் உள்ள படித்த ஒவ்வொருவரையும் நூலக உறுப்பினராகச் சேர்த்தல்.

3. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் போதிய தளவாடங்களைப் பெறுதல்.

4. பொது நூலகம் ஒவ்வொன்றுக்கும் இரு பகுதி நேர நூலகங்கள் திறந்து செயல்படுத்துதல்.

5. பொது மக்களிடமிருந்து நூலகங்களுக்கு நன்கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறுதல்.

6. நூலகந்தோறும் புரவலர் சேர்த்து நூலக இயக்கத்தை வளர்த்தல்.

7. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்தக் கட்டிடத்தில் செயல்படச் செய்தல்.



1992 செப்டம்பர் 23]

8. நூலகங்களை வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் தத்து எடுக்க ஆவன செய்தல்.

மேற்காணும் குறிக்கோள்களின் அடிப்படையில் பொது மக்களின் ஒத்துழைப்போடு நூலக வளர்ச்சிப் பணி செம்மையாக வளர்ந்து பொது மக்களுக்கும், உறுப்பினர், வாசகர் ஆகியோருக்கும் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

இலவச காலிமனை பெறுதல்:

நூலகங்கள் வசதியில்லாத கட்டடங்களிலும் வாடகைக் கட்டடங்களிலும் செயல்படுத்துவதற்குப் பதிலாக சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு தனியாரிடமிருந்தும், உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்தும் இலவசக் காலி மனைகள் பெறப்பட்டு வருகிறது.

உறுப்பினர் சேர்க்கை :

படித்த ஒவ்வொருவரையும் பொது நூலகங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களின் அறிவை வளர்ப்பதில் நூலகத் துறை குறிக்கோளாக ஏற்று செயல்பட்டு வருகிறது.

பொதுமக்களின் நன்கொடை :

நூலகங்களுக்குத் தேவையான தளவாடங்கள் நூலக வரி வசூலிலிருந்தோ, அரசு மான்யம் பெற்றோ, முழுத் தேவையையும், பூர்த்தி செய்ய இயலாது. எனவே பொது மக்களிடமிருந்து தேவையான தளவாடங்கள் நன்கொடையாகப் பெறப்பட்டு வருகின்றன.

பகுதி நேர நூலகங்கள் :

கிளை நூலகங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு பணியிடங்களை அனுமதிக்க வேண்டும். இதனால் அரசுக்கு அதிக செலவினம் ஏற்படும். தற்போது நிதி நெருக்கடி காரணமாக ஒவ்வொரு நூலகத்திற்கும் பகுதிநேர நூலகங்கள் ஏற்படுத்தி அதற்கான செலவினம் நூலக நிதியிலிருந்து செலவிடப்பட்டு நூலக இயக்கம் தழைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் நன்கொடை— நூல்கள் மற்றும் பருவ இதழ்கள்:

நூலகங்களுக்குப் பொதுமக்களிடமிருந்து நூல்கள் நன்கொடையாகவும் நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் நன்கொடையாகவும் பெற்று, பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.

[1992 செப்டம்பர் 23

<u>புரவலர் சேர்க்கை :</u>

பொது நூலக இயக்கம் தழைக்க, நூலகத்தின்பால் ஈடுபாடும் பேராதரவும் உள்ள பொதுமக்களிடமிருந்து ரூ. 1,000 நன்கொடை பெற்று அவர்கள் அந்த ஊர் கிளை நூலகத்தின் புரவலராக ஏற்கப்படுகிறார்கள். அவர்கள் அளிக்கும் அந்த நன்கொடை மூலம் பெறப்படும் வட்டித் தொகை அந்தந்த நூலக பணிக்காக செலவிடப்பட்டு வருகிறது.

<u>நூலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கச் செய்தல் :</u>

தனியாரிடமிருந்தும் உள்ளாட்சி நிறுவனங்களிடம் இருந்தும் பெறப்படும் இலவசக் காலி மனைகளில் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் 600 சதுர அடி பரப்பளவில் Project A : Minimum Building Programme Type Design 'A' இன் கீழும், ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் 1,200 சதுர அடி பரப்பளவில் Type Design 'B' இன் கீழும் நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

<u>பொது நூலகங்களை தத்து எடுத்தல் :</u>

தனியார் நிறுவனங்கள், தேசிய வங்கிகள் தொழில் நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் சாலையின் நடுவே போக்குவரத்து சீராக இயங்குவதற்கு தடுப்புகள் அமைத்தும் முக்கியமான சாலைகளின் சந்திப்புகளில் பூங்காவை அமைத்து அழகு படுத்தியும், சில பூங்காக்களை செம்மையாக பராமரித்தும் வருகின்றன. அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனங்கள் பொது நூலகங்களை தத்து எடுத்து அதற்காகும் செலவினங்களை ஏற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்காணும் முறையிலே 1991 ஆம் ஆண்டில் பொது நூலகத் துறையின் சாதனைகள் முறையே கீழ் வருமாறு :

<u>1990–91 ஆம் ஆண்டு சாதனைகள் :</u>

<u>குறிக்கோள் 1-இன்படி காலி மனை பெறுதல் :</u>

| | |
|---|---|
| (அ) தனியார் பத்திரப் பதிவு மூலம் பெறப்பட்ட காலி மனைகளின் எண்ணிக்கை. | 311 |
| (ஆ) உள்ளாட்சி நிறுவனம் பத்திரப் பதிவு மூலம் பெறப்பட்ட காலி மனைகளின் எண்ணிக்கை | 364 |
| (இ) உள்ளாட்சி நிறுவனம் தீர்மானம் மூலம் பெறப்பட்ட காலி மனைகளின் எண்ணிக்கை. | 868 |
| மொத்தம் ... | 1,543 |



1992 செப்டம்பர் 23]

1,543 காலி மனைகளின் guide linc—மதிப்பு ரூ. 245 இலட்சம்.

1,543 காலி மனைகளின் உள்ளூர் நிலவரப்படி மதிப்பு ரூ. 1,000 இலட்சம்.

<u>குறிக்கோள் 2— நூலக உறுப்பினராகச் சேர்த்தல் :</u>

| | இலட்சம். |
|---|---|
| 1988—89-இல் உறுப்பினர் எண்ணிக்கை .. .. | 16.03 |
| 1989—90-இல் உறுப்பினர் எண்ணிக்கை .. .. | 17,53 |
| 1990—91-இல் உறுப்பினர் எண்ணிக்கை .. | 19,25 |

<u>குறிக்கோள் 3— நன்கொடையாக தளவாடங்கள் பெறுதல் :</u>

| | ரூபாய் இலட்சம். |
|---|---|
| தளவாடப் பொருட்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்ட தன் மதிப்பு ... .. | 105 |

<u>குறிக்கோள் 4—பகுதி நேர நூலகம் திறந்து செயல்படுத்துதல் :</u>

| | |
|---|---|
| பகுதி நேர நூலகங்களின் எண்ணிக்கை .. | 826 |

| | ரூபாய் இலட்சம். |
|---|---|
| <u>குறிக்கோள் 5— நன்கொடையாக பெறப்பட்ட நூல்கள் மற்றும் பருவ இதழ்களின் மதிப்பு</u> .. | 8.25 |

குறிக்கோள் 6 :

| | |
|---|---|
| புரவலர் சேர்க்கை எண்ணிக்கை ... .. | 3010 |

| | ரூபாய் இலட்சம். |
|---|---|
| புரவலர் நன்கொடை வசூல் ... .. | 30.10 |

[1992 செப்டம்பர் 23

குறிக்கோள் 7 :

ஒவ்வொரு நூலகத்தையும் சொந்தக் கட்டடத்தில் செயல்படச் செய்தல் :

| | |
|---|---|
| 1988-க்கு முன்பு இருந்த சொந்தக் கட்டடங்களின் எண்ணிக்கை .. .. | 115 |
| 4/1988 முதல் 3/91 முடிய கட்டி முடிக்கப்பட்ட மற்றும் கட்டப்பட்டு வரும் கட்டடங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 386 |

கட்டடப் பணிக்காக செலவிடப்பட்ட தொகை. ரூ.624 இலட்சம்

குறிக்கோள் 8 :

| | |
|---|---|
| நூலகங்களை வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் தத்து எடுக்கப்பட்ட நூலகங்களின் எண்ணிக்கை (மதுரை யானைக்கால் கிளை நூலகம்) .. | 1 |

1991—92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நன்கொடைகள் பெறப்பட்டும் உறுப்பினர் சேர்க்கையும் புரவலர் சேர்க்கையும் இலவச நிலம் பெறுவதும் தொடர்ந்து மாவட்ட நூலக ஆணைக் குழுக்களில் நடைபெற்று வருகிறது.

தற்போது 18 மாவட்ட நூலக ஆணைக் குழுக்களில் மட்டும் மாவட்ட மைய நூலகம் செயல்பட்டு வருகிறது. புதிதாக துவக்கப்பட்ட நான்கு மாவட்டங்களிலும் மாவட்ட மைய நூலகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். அவை முறையே :—

1. திருவண்ணாமலை—சம்புவராயர்.
2. தூத்துக்குடி.
3. இராமநாதபுரம் மற்றும்
4. நாகப்பட்டினம்-காயிதே மில்லத்.



1992 செப்டம்பர் 23]

111—

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தில் கடந்த 5 ஆண்டுகளாக வெளிவந்த புதிய நூல்கள்.

வினா எண் 4528—திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக எத்தனை புதிய நூல்கள் வெளிவந்திருக்கின்றன?

(ஆ) புதிய நூல்களைக் கொண்டு வருவதை மேலும் வேகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[1992 செப்டம்பர் 23

## இணைப்பு.

### தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம்.

1988—89, 1989—90, 1990—91 ஆம் ஆண்டுகளில் புதிதாக வெளியிட்டுள்ள பாட நூல்கள்.

முதல் வகுப்பு :

(1) தமிழ்.
(2) கணக்கு.
(3) சூழ்நிலையியல்.
(4) வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

இரண்டாம் வகுப்பு :

(1) தமிழ்.
(2) கணக்கு.
(3) சூழ்நிலையியல்.
(4) வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி,

மூன்றாம் வகுப்பு :

(1) தமிழ்.
(2) ஆங்கிலம்.
(3) கணக்கு.
(4) சூழ்நிலையியல்-அறிவியல்.
(5) சூழ்நிலையியல்-சமூகவியல் (அனைத்து மாவட்டங்களும்)
(6) வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

நான்காம் வகுப்பு :

(1) தமிழ்.
(2) ஆங்கிலம்.
(3) கணக்கு.
(4) சூழ்நிலையியல்-அறிவியல்.
(5) சூழ்நிலையியல்-சமூகவியல்.
(3) வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.



1992 செப்டம்பர் 23]

ஐந்தாம் வகுப்பு :

1. தமிழ்.
2. ஆங்கிலம்.
3. கணக்கு.
4. சூழ்நிலையியல்-அறிவியல்.
5. சூழ்நிலையியல்-சமூகவியல்.
6. வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

### ஆறாம் வகுப்பு.

தமிழ் வழி :

1. தமிழ்.
2. சிறுகதைச் செல்வம்.
3. கணக்கு.
4. அறிவியல்.
5. சமூக அறிவியல்.

ஆங்கில வழி :

1. English Course Book.
2. Stories for Young Readers.
3. Mathematics.
4. Seience.
5. Soeial Science.

### ஏழாம் வகுப்பு

தமிழ் வழி :

1. தமிழ்.
2. புரவலரும் புலவரும்.
3. கணக்கு.
4. அறிவியல்.
5. சமூக அறிவியல்.

[1992 செப்டம்பர் 28

ஆங்கில வழி :

1. English Course Book.
2. Stories to Read and Remember.
3. Mathematice.
4. Science.
5. Social Science.

எட்டாம் வகுப்பு.

தமிழ் வழி :

1. தமிழ்.
2. நாடுகாத்த நல்லோர்.
3. தமிழ் இலக்கணம்.
4. கணக்கு.
5. அறிவியல்.
6. சமூக அறிவியல்.

ஆங்கில வழி :

1. English Course Book.
2. Read and Relish.
3. Mathematics.
4. Science.
5. Social Science.

ஒன்பதாம் வகுப்பு :

தமிழ் வழி :

1. தமிழ்.
2. கட்டுரை மலர்கள்.
3. தமிழ் இலக்கணம்.
4. கணக்கு.
5. அறிவியல்.
6. சமூக அறிவியல்.



1992 செப்டம்பர் 28]

ஆங்கில வழி :

1. English Course Book.
2. Stories to Remember.
3. Mathematics.
4. Science.
5. Social Science.

பத்தாம் வகுப்பு.

தமிழ் வழி :

1. தமிழ்.
2. சிந்தனைச் செல்வம்.
3. தமிழ் இலக்கணம்.
4. கணக்கு.
5. அறிவியல்.
6. சமூக அறிவியல்.
7. தமிழ் (ஆங்கிலோ இந்தியப் பள்ளி.)

ஆங்கில வழி :

1. English Course Book.
2. Seven Buds.
3. Mathematics.
4. Science.
5. Social Science

மேல்நிலை முதலாம் ஆண்டு.

தமிழ் வழி :

1. பொதுத் தமிழ்.
2. தமிழ்த்துணை பாடம்
3. சிறப்புத் தமிழ்
4. கணக்கு
5. இயற்பியல்
6. வேதியியல்

தமிழ் வழி—தொடர்ச்சி

7. உயிரியல்
8. தாவரயியல்.
9. விலங்கியல்
10. கணிப் பொறியியல்.
11. வரலாறு
12. பொருளியல்
13. புவியியல்.

ஆங்கில வழி :

1. English Course Book.
2. Blossoms (An Anthology of Indo-Anglian Short Stories).
3. English-Advanced.
4. Mathematics.
5. Physics.
6. Chemistry.
7. Bioloy.
8. Botony.
9. Zoology.
10. Computer Science.
11. History.
12. Economics.
13. Geography.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு.

தமிழ் வழி :

1. பொதுத் தமிழ்
2. சிறுகதைத் திரட்டு
3. சிறப்புத் தமிழ்
4. கணக்கு
5. இயற்பியல்
6. வேதியியல்



8. தாவரவியல்
9. விலங்கியல்
10. கணிப்பொறியியல்
11. வரலாறு
12. பொருளியல்
13. புவியியல்

ஆங்கில வழி :

1. English Course Book.
2. Flagrant Flowers.
3. English Advanced.
4 Mathemetices,
5, Physics,
6, Chemistry,
7, Biology,
8, Botony
9 Zoology
10 Computer Soience
11 History
12 Economics
13 Geography

164948

புதிதாக வெளியிடப்பட்ட சிறுபான்மை மொழி நூல்கள்.

(மலையாளம், கன்னடம், உருது மற்றும் தெலுங்கு)

முதலாம் வகுப்பு :

1. கணக்கு.
2. சூழ்நிலையியல்.
3. வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

இரண்டாம் வகுப்பு :

1. கணக்கு.
2. சூழ்நிலையியல்.
3. வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

[1992 செப்டம்பர் 23

மூன்றாம் வகுப்பு :

1. கணக்கு.
2. சூழ்நிலையியல்-அறிவியல்.
3. சூழ்நிலையியல்-சமூகவியல் (மாவட்டப் பகுதி).
4. வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

நான்காம் வகுப்பு :

1. கணக்கு.
2. சூழ்நிலையியல்-அறிவியல்.
3. சூழ்நிலையியல்-சமூகவியல்.
4. வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

ஐந்தாம் வகுப்பு :

1. கணக்கு.
2. சூழ்நிலையியல்-அறிவியல்.
3. சூழ்நிலையியல்-சமூகவியல்.
4. வாழ்க்கைக் கல்வி மற்றும் கலைக் கல்வி.

ஆறாம் வகுப்பு :

1. கணக்கு.
2. அறிவியல்.
3. சமூக அறிவியல்.

ஏழாம் வகுப்பு :

1. கணக்கு.
2. அறிவியல்.
3. சமூக அறிவியல்.



1992 செப்டம்பர் 23]

எட்டாம் வகுப்பு :

1. கணக்கு.
2. அறிவியல்.
3. சமூக அறிவியல்.

ஒன்பதாம் வகுப்பு :

1. கணக்கு.
2. அறிவியல்.
3. சமூக அறிவியல்.

பத்தாம் வகுப்பு :

1. கணக்கு.
2. அறிவியல்.
3. சமூக அறிவியல்.

[1992 செப்டம்பர் 23

112. ஆரம்பப் பள்ளியில் மேலும் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம்.

வினா எண். 5482—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மகாதேவி தொகுதி-கடையம் ஊராட்சி ஒன்றியம், அஞ்சான் கட்டளை ஊராட்சி, நாலான் கட்டளை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் மேலும் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி-கடையம் ஊராட்சி ஒன்றியம், அஞ்சான் கட்டளை ஊராட்சி, நாலான் கட்டளை ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் (ஜுனியர்) பணியிடம் வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

113—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை.

வினா எண். 5995—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த 3 ஆண்டுகளில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆண்கள், பெண்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் சிறப்பு குடும்ப நல அறுவை சிகிச்சை முகாம்கள் எத்தனை நடத்தப்பட்டன?

(இ) அவற்றில் அறுவை சிகிச்சை பெற்ற ஆண்கள், பெண்கள் எண்ணிக்கை எவ்வளவு?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

(அ) கடந்த மூன்றாண்டுகளில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆண்கள், பெண்கள் எண்ணிக்கை:—

| ஆண்டு. | குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள். | |
|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். |
| 1988–89 | 3,538 | 13,479 |
| 1989–90 | 718 | 15,336 |
| 1990–91 | 256 | 14,596 |

(ஆ) கடந்த மூன்றாண்டுகளில் இம்மாவட்டத்தில் நடத்தப்பட்ட சிறப்பு குடும்பநல அறுவை சிகிச்சை முகாம்கள்:—

| ஆண்டு. | முகாம்கள். |
|---|---|
| 1988–89 | 175 |
| 1989–90 | 156 |
| 1990–91 | 172 |

(இ) அவற்றில் அறுவை சிகிச்சை பெற்ற ஆண்கள், பெண்களின் எண்ணிக்கை.—

| ஆண்டு. | முகாம்களில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள். | |
|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். |
| 1988–89 | .. | 2,709 |
| 1989–90 | .. | 3,096 |
| 1990–91 | 6 | 2,377 |

114—

கோயம்புத்தூர் பி. எஸ். ஜி. மருத்துவக் கல்லூரி.

Question No. 6039—THIRU M. SUNDARADASS: Will the Honourable Minister for Health be pleased to state :

(a) Whether the authorities of the P.S.G. Medical College Coimbatore has not informed the students selected by the Centra Government about the transfers made from that college to Chengalpattu Medical College during 1991 ?

(b) The action taken for this lapse ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் கோயம்புத்தூர் பி. எஸ். ஜி. மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பப்படுவதில்லை. மாநில அரசு மருத்துவப் படிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களே அக்கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறார்கள். அரசு நியமனதாரர்களுக்காக அந்தத் தனியார் கல்லூரியில் 40 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

1991–92-ல் கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. மருத்துவக் கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 40 மாணவர்களில் 8 பேர் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு அரசால் மறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

115—

## தமிழகத்தில் பிறப்பு விகிதம்.

வினா எண். 6111—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு எத்தனை குறைந்துள்ளது. ?

(ஆ) அதனை மேலும் குறைக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) 1990-ம் ஆண்டுக்கான இந்தியாவின் பொதுப் பதிவாளர் தயாரித்துள்ள மாதிரி பதிவின்படி தமிழ் நாட்டில் பிறப்பு விகிதம் 1,000 மக்கள் தொகைக்கு 22.4 ஆகக் குறைந்துள்ளது. 1989-ஆம் ஆண்டு இது 23.1 ஆக இருந்தது.

(ஆ) விவரமாக விளக்கங்கள் இணைப்பில் தொடுக்கப்பட்டுள்ளன.





பிறப்பு விகிதத்தை மேலும் குறைப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது:-

1. கருவளத்தன்மை மிக்க, 20 வயது முதல் 30 வயது வரையிலான இளம் தம்பதியினரை அணுகி கருத்தடைக்கான தற்காலிக முறையை அல்லது நிரந்தர முறையை ஏற்கும்படி ஊக்கப்படுத்தும் தீவிரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. மாவட்டங்களில், குடும்ப நலத்திட்டத்தை ஏற்காது தயக்கம் காட்டும் இடங்களில், சிறு குடும்பநெறி ஓங்கும் வகையில் தகவல், கல்வி, தொடர்ப்புப்பணிகள் முனைப்புடன் நிறைவேற்றப்பட்டு ஆவன செய்யப்பட்டுள்ளது.

3. பெண்களின் திருமண வயதை 21 ஆக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்தும், 22 வயதுக்கு முன்னால் கர்ப்பம் தரிப்பதால் உண்டாகும் ஆபத்துகள் பற்றியும் விளக்கப்பட்டு வருகிறது.

4. கிராமப்புறங்களிலும் மற்றும் நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலும் சிசு மரணத்தையும், தாய் மரணத்தையும் குறைக்கும் வகையில் தாய் சேய் நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5. பிறந்தவுடன் குழந்தையின் எடை 2.5 கிலோ முதல் 3 கிலோவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். அதாவது அந்த அளவு எடையுள்ள ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற கொள்கை மக்களிடையே பரப்பப்பட்டு வருகிறது.

6. குழந்தை இல்லாத தம்பதியர்கள் குழந்தைப் பெற்றுக் கொள்வதை தள்ளிப் போடுவதற்கும், ஒரு குழந்தை உள்ள தம்பதியர்கள், அடுத்தக் குழந்தைக்கு தக்க இடைவெளி தருவதற்கும் உரிய கருத்தடை முறைகள் இவையிவையென விளக்கப்பட்டு ஏற்றுச் செயல்படுத்துமாறு தூண்டப்படுகிறார்கள்.

7. தகுதி வாய்ந்த தம்பதியருக்கு தேவையான காப்பர்-டி, நிரோத், உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகள் போன்ற கருத்தடை சாதனங்கள், எல்லா துணைச் சுகாதார நிலையங்களிலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

8. தாய்மார்களுக்கு அவரவர் பகுதிகளிலேயே கருத்தடை வளையம் பொருத்துவதற்கு ஏற்றவகையில் சுகாதாரப் பார்வையாளர்களும், துணைச் செவிலியர், மருத்துவத் தாதியர்களும், கருத்தடை வளையம் பொருத்துவதில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

116—

## போகலூர் ஒன்றியத்திலுள்ள கண்மாய்கள்.

வினா எண்.1433—டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

மாண்புமிகு பொதுபணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் போகலூர் ஒன்றியத்தில் உள்ள கண்மாய்கள் எத்தனை ?

(ஆ) அவைகள் எந்த ஆண்டு மராமத்து செய்யப்பட்டன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், போகலூர் ஒன்றியத்தில் 33 பொதுப்பணித்துறை கண்மாய்களும், 49 முன்னாள் ஜமீன் கண்மாய்களும் 5 ஊராட்சி ஒன்றியக் கண்மாய்களும் உள்ளன.

(ஆ) மேற் கூறியவற்றில், பொதுப்பணித்துறையின்கீழ் பராமரிப்பில் உள்ள கண்மாய்களின் பட்டியலும் அவற்றில் முந்தைய ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற நிதி நிலைமைக் கேற்ப மராமத்து செய்யப்பட்ட விபரங்களும் அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது.



### அட்டவணை.

முந்தைய ஆண்டுகளில் பொதுப்பணித்துறை கண்மாய்கள் பராமரிக்கப்பட்ட விவரங்கள்.

| வரிசை எண்ணும் கண்மாயின் பெயரும். (1) | 1986–87 (2) | 1987–88 (3) | 1988–89 (4) | 1989–90 (5) | 1990–91 (6) | குறிப்புரை. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆணைக்குடி | 71,000 | 42,500 | 20,000 | .. | .. | 1991-92 ரூ. 40,000க்கு மதிப்பீடு ஒப்பளிக்கப் படவுள்ளது. |
| 2 அனுமனேரி | .. | 25,000 | 69,000 | .. | 2,000 | |
| 3 பு. கருங்குளம் | .. | 30,000 | .. | .. | 25,000 | |
| 4 கும்முகோட்டை | .. | .. | .. | .. | 25,000 | |
| 5 கெ. கருங்குளம் | .. | .. | .. | .. | 4,500 | |
| 6 கிழாம்பல் | .. | 15,000 | 62,000 | .. | .. | |
| 7 இழக்கோட்டை | .. | 15,000 | .. | .. | .. | |
| 8 கவுதக்குடி | .. | 15,000 | .. | .. | .. | |
| 9 கள்ளிக்கோட்டை | .. | .. | .. | .. | .. | வருங்காலங்களில் கிடைக் கக் கூடிய நிதி நிலைக் கேற்ப தேவையான மராமத்து வேலை செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 10 மென்னந்தி | 59,000 | .. | .. | .. | .. | 1991–92 ரூ. 40,000க்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது. |
| 11 முதலூர் | 27,000 | .. | .. | .. | .. | 1991–92 ரூ. 60,000-க்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது. |
| 12 நிலையம்பாடி | ... | ... | ... | ... | ... | வருங்காலங்களில் இடைக்கக் கூடிய நிதிநிலைக்கேற்ப தேவையான மராமத்து வேலை செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். |
| 13 பூவிளத்தூர் | .. | 23,500 | 63,000 | ... | ... | |
| 14 பொட்டிதட்டி | .. | .. | .. | 15,000 | 32,000 | |
| 15 பாண்டிக்கண்மாய் | .. | 60,000 | .. | .. | .. | |
| 16 மேசலூர் சிறிய கண்மாய். | 48,00 | ... | ... | ... | .. | |
| 17 செவ்வூர் | .. | 50,000 | .. | .. | .. | |
| 18 தென்னவனூர் | 97,000 | 15,000 | .. | .. | 5,600 | |
| 19 உரத்தூர் | 67,000 | ... | .. | .. | 42,000 | |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 20 கொள்ளனூர் | ... | ... | ... | ... | .. | வருங்காலங்களில் இடைக்கக் கூடிய நிதிநிலைக்கேற்ப வேலை செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். |
| 21 எஸ். கொடிக்குளம் | ... | 18,000 | .. | .. | .. | |
| 22 மஞ்சூர் கண்மாய் | .. | 15,000 | 23,000 | 27,000 | ... | |
| 23 செம்பனூர் பெரிய கண்மாய். | 48,000 | ... | ... | ... | 1,000 | |
| 24 வைரவனேந்தல் | 50,000 | .. | .. | .. | 25,000 | |
| 25 வீரவனூர் | .. | 96,000 | .. | .. | .. | |
| 26 ஏடடிவயல் | ... | ... | .. | .. | .. | 1991–92ல் ரூ. 60,000 மதிப்பீட்டு ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது. |
| 27 காமன்கோட்டை | .. | .. | ... | .. | 25,000 | |
| 28 முத்துவயல் | .. | .. | 20,000 | .. | .. | |
| 29 எ. புத்தூர் | ... | ... | .. | ... | .. | 1991–92ல் ரூ. 1,00,000 மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது. |
| 30 செய்யாலூர் | 72,000 | .. | 28,000 | ... | .. | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 31 திவனூர் | .. | .. | .. | .. | .. | வருங்காலங்களில் கிடைக்கக் கூடிய நிதிநிலைக்கேற்ப வேலை செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். |
| 32 அரியக்குடி | .. | .. | 22,500 | .. | .. | |
| 33 போகலூர் | 38,000 | .. | 64,000 | .. | .. | |



117—

குளக்கரையை உயர்த்திக் கட்டுதல்

வினா எண். 1834—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் களையாம்படி குளக்கரையை உடனடியாகப் பராமரித்து உயர்த்திக்கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

இல்லை.

118—

தெருவிளக்கு அமைத்தல்

வினா எண். 1846—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வ) ஊராட்சி புதுநகர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர். :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை ஊராட்சியைச் சார்ந்த புதுநகருக்கு ஏற்கெனவே நான்கு (4) தெருவிளக்குகள் பொருத்தி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அவை நல்லநிலையில் இயங்கி வருகின்றன.

தற்போது இக் காலனியில் கூடுதலாக தெருவிளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை. ஆயினும் இவற்றிற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றால் அவை முறையாக பதிவு செய்யப்பட்டு வரிசைகிரம அடிப்படையில் இப் பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின் வசதி வழங்க ஆவன செய்யப்படும்.

119— 

## ஆண்டாங்கொல்லைக்கு தெருவிளக்கு இணைப்பு

வினா எண். 1889—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) ஊராட்சி ஆண்டாங்கொல்லைக்கு தெருவிளக்கு இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) ஊராட்சி ஆண்டாங்கொல்லைக்கு ஏற்கனவே நான்கு (4) தெருவிளக்குகள் பொருத்தி மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. அவை நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

மேலும், இக்காலனிக்கு கூடுதலாக தெருவிளக்கு பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் தற்போது மின் வாரியத்திடம் நிலுவையில் இல்லை. ஆயினும், இவற்றிற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றால் அவை முறையாக பதிவுசெய்து, வரிசைக்கிரம அடிப்படையில் இப் பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

120—

## ஆதிதிராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்கு

வினா எண். 1907—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக்கோட்டை பெரியார் நகர் ஆதிதிராவிடர்கள் காலனிக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன, பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை பெரியார் நகர் ஆதிதிராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்கு அமைக்கக்கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை. ஆயினும், அவ்வாறு





குடிசை விண்ணப்பங்கள் வரப்பெற்றவுடன், தகுதியுள்ள குடிசைகளுக்கு அவ்விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

121—

## தெருவிளக்கு விஸ்தரிப்பு

வினா எண். 1996—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கு) ஆதி திராவிடர் காலனிக்கு தெருவிளக்குகள் பொருத்தி ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டு அவைகள் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இதைத் தவிர, இக் காலனியில் கூடுதல் தெரு விளக்கு பொருத்தக்கோரி விண்ணப்பம் ஏதும் இதுவரை மின் வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை. அப்படி விண்ணப்பங்கள் வருமாயின் விண்ணப்பங்களில் பதிவு வரிசைக்கிரம அடிப்படையில் அப்பகுதிகளுக்கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் வசதி செய்ய ஆவன செய்யப்படும்.

122—

## ஒற்றை விளக்கு அமைத்தல்

வினா எண். 2003—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா.உஞ்சிய விடுதி ஆதி திராவிடர் வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர் வீடுகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புக் கோரி 5 விண்ணப்பங்கள் 2—9—1991-இல் மின் வாரிய அலுவலகத் திற்கு வந்துள்ளது. இவ்விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப் படையில், தகுதிபெறும் குடிசைகளுக்கு அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

123—

## தெரு விளக்கு விஸ்தரிப்பு

வினா எண். 2192— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக் காடு ஊராட்சி ஆதி திராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணித் துறை அமைச்சர் :

சொர்ணக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு 7 (1×40 வாட் குழல் விளக்குகள்) தெரு விளக்குகள் பொருத்தி ஏற் கெனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்குகள் நல்ல நிலைமையில் இயங்கி வருகின்றன. சொர்ணக்காடு ஆதிதிரா விடர் தெருவிற்கு கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

124—

## தெருவிளக்கு விஸ்தரிப்பு

வினா எண். 2193—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக் காடு ஊராட்சி பட்டத்தூரணி (வடக்கிற்கும்) படப்பினார் வயல் வடக்கிற்கும் தெரு விளக்கு விஸ்தரிப்புக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

சொர்ணக்காடு ஊராட்சி பட்டத் தூரணி வடக்கு மற்றும் படப்பினார் வயல் பகுதிகளுக்கு 20 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டு நன்றாக இயங்கி வருகின்றன. மேற் குறிப்பிட்ட பகுதியிலிருந்து 31 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி 16—5—1986இல் விண்ணப்பம் ஒன்று மின்வாரியத்தால் பெறப்பட்டுள்ளது. இப் பணிக்கு எல்லா கம்பங்களும் ஏற்கெனவே நடப்பட்டுள்ளன. 1992–93ஆம் ஆண்டில் இப்பணி முடிக்கப்பெறும்.

125—

## தார் சாலை அமைத்தல்

வினா எண். 2274—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேரா வூரணியிலிருந்து கட்டையன்காடு வழியாக பாலத்தளி வரை வரும் உட்கோட்ட சாலையை பராமரித்து தார் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்.

இல்லை.

126—

## ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு மின் இணைப்பு

வினா எண். 2336.—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாளத்தளி ஊராட்சி எண்ணாணி வயல் ஆதி திராவிடர் காலனி வீடு களுக்கு மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பாளத்தளி ஊராட்சி எண்ணாணி வயல் ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு இலவச மின்சாரம் வேண்டி "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" திட்டத்தின் கீழ் விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் தற்போது நிலுவையில் இல்லை. மேற் குறிப்பிட்ட பகுதியில் விண்ணப்பங்கள் வரப்பெறுமாயின், அவைகள் முறையாக பதிவு செய்யப்பட்டு விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கிட்டிற்கேற்ப "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

127—

குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு

வினா எண். 2337—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பாளத்தளியைச் சேர்ந்த வைரவன் காலனி மக்களின் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பளாத்தளியைச் சேர்ந்த வைரவன் காலனி மக்களின் குடிசைகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் கேட்டு விண்ணப்பங்கள் ஏதும் தற்போது மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை. ஆயினும், அவ்வாறுவிண்ணப்பங்கள் வருமாயின் அவ்விண்ணப்பங்கள் பதிவு வரிசை அடிப்படையில் தகுதிபெறும் குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப வழங்க ஆவன செய்யப்படும்.



1992 செப்டம்பர் 23]

128—

ஒற்றை விளக்கு அமைத்தல்

வினா எண். 2374—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (சி) ஆதி திராவிடர்களின் வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணபன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (சி) ஆதி திராவிடர்களின் வீடுகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 26 இலவச மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு அவைகள் நல்ல நிலையில் இயக்கத்தில் உள்ளன. இக்காலனியில் மேலும், 20 குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு கேட்டு அப்பகுதி மின் வாரிய அலுவலகத்திற்கு 17—11—1989இல் விண்ணப்பங்கள் வந்துள்ளன. இப்பிரிவு அலுவலகத்தில் இதற்கு முன் 25—5—1989லிருந்து 45 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதால், மேற்படி 20 குடிசை விண்ணப்பங்களுக்கு அப்பிரிவு அலுவலக பதிவு வரிசை அடிப்படையில் இப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

129—

தார் சாலை அமைத்தல்

வினா எண். 2722—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவனம் பெரியநாயகிபுரத்தில் யூனியன் அருகிலிருந்து நெடுவாசல் செல்லும் சாலையை தார் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் பெரியநாயகிபுரத்தில் யூனியன் அருகிலிருந்து நெடுவாசல் செல்லும் சாலையின் பெயர் நெடுவாசல் சாலை கி.மீ. 0/0—6/0 என்பதாகும். இச்சாலை பேருந்து தட மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே தார் சாலையாக மேம்பாடு செய்யப்பட்டு விட்டது. தற்போது இச்சாலையில் சில பகுதிகளில் பழுது ஏற்பட்டுள்ளது. வரும் நிதியாண்டுகளில் பராமரிப்பு நிதிநிலைக்கேற்றவாறு பழுதுகள் சீர் செய்யப்பட்டு இச்சாலை பராமரிக்கப்படும்.

130—

## தடுப்பு சுவர் அமைத்தல்

வினா எண். 2736 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குருவிக்கரம்பை ஊராட்சி அரசு மேனிலைப்பள்ளி ஓரமாகச் செல்லும் பெரிய ஏரி வடிகால் வாரியில் தடுப்புச் சுவர் அமைத்து கட்டிடங்கள் பாதுகாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

131—

## ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண். 2773—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பழைய முதல் சேரி வீதி காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் பழைய முதல் சேரி காலனியில் ஏற்கெனவே 31 குடிசை மின் இணைப்புகள் இயக்கத்தில் உள்ளன. மேற்கண்ட பகுதியில் ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின்வசதி கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

132—

## தடுப்புச் சுவர் கட்டுதல்.

வினா எண். 2773—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் ஊராட்சியைச் சேர்ந்த கீழத்தோட்டத்தின் அருகில் உள்ள காட்டாற்றின் அரிப்பினால் பாதிக்கப்படுகிற ஊரின் வட வரை பகுதியில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

133—

## தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க நடவடிக்கை.

வினா எண். 2862—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் ராஜா மடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு ஏற்கெனவே 3 தெருவிளக்குகள் (1×40 வாட்) பொருத்தப்பட்டு எரியும் நிலையில் உள்ளது. கூடுதல் விளக்குகளுக்காக விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் பெறப்படவில்லை.

134—

ஏரியை மராமத்து செய்தல்.

வினா எண். 3088—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பட்டாங்காடு ஏரியை புல்டோசர் வைத்து மராமத்து செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

135—

தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 3096—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம், இந்திராநகர் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகர பஞ்சாயத்திற்கு ஏற்கெனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. பெருமகளூர் நகரம் இந்திரா நகரில் தெருவிளக்குகள் வேண்டி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

136—

வினா எண். 3149—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி சேது சாலையிலிருந்து சோமநாத பட்டினம் செல்லும் வெற்றுச் சாலையில் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை, அமைச்சர்:

திருவத்தேவன் ஊராட்சி சோமநாதபட்டினத்தில் 5 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்குகள் நன்றாக இயங்கி வருகின்றன. சேதுசாலையிலிருந்து சோமநாதபட்டினம் செல்லும் வெற்றுச் சாலையில் தெரு விளக்குகள் அமைக்கக்கோரி விண்ணப்பம் எதுவும் மின்வாரிய அலுவலகத்திற்கு இதுவரை வரவில்லை.

137—

தஞ்சாவூர் மாவட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு உடனடியாக மின் இணைப்பு.

வினா எண். 3494—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

காவிரியில் முன்போல் தண்ணீர் வராத நிலையில் தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

முன்னாள் தஞ்சாவூர் மாவட்டத்தில் (நாகப்பட்டினம் காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களாக இப்போது பிரிக்கப்பட்டுள்ளது) வடிமுனைக்குழாய் குழாய்க்கிணறுகள் மற்றும் துளைக் கிணறுகள்; ஆகியவற்றிற்கு மின் இணைப்பு கோரி 22,244 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பகுதிகள் காவிரி டெல்டாவில் கடைமடைப் பகுதிகளில் உள்ளதால் இப்பகுதி களில் வடிகுழாய்க் கிணறுகள் மூலம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. விவசாய பம்புசெட்டுகளுக்கான மொத்த இலக்கீடு ஆண்டொன்றிற்கு 40,000 ஆகும். இவ்விலக்கு மாவட்டங்களி லுள்ள நிலுவையிலுள்ள விவசாய விண்ணப்பங்களில் எண்ணிக் கையின் விகிதாச்சாரத்தில் மாவட்டங்களிடையே பகிர்ந்தளிக் கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம் சிறப்பு உணவு உற்பத்தி திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாலும், மேலும் முன்னாள் தஞ்சாவூர் மாவட்டத்தில் (தற்சமயம் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள்) உள்ள அனைத்து வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு சிறப்பு முன்னுரிமையின் கீழ் மின் இணைப்பு தர அரசு ஆணை பிறப்பித்துள்ளதாலும் இம் மாவட்ட விவசாயிகள் மற்றைய மாவட்ட விவசாயிகளைவிட மின் இணைப்பிற்கு குறைந்த காலமே காத்திருக்க வேண்டி இருப்பினும் இம்மாவட்டந்திற்கு ஆண்டுதோறும் அதிகப்படி யான இலக்கீடாக சுமார் 2,500 பம்பு செட்டுகள் நிர்ணயிக்கப் பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 அல்லது 4 ஆண்டு களில் மின் இணைப்பு பெறும் நிலை உள்ளது.

தற்பொழுது மின்வாரியத்திலுள்ள மோசமான நிதிநிலை மைகளின் காரணமாக அனைத்து விண்ணப்பங்களுக்கும் உடனடி மின் இணைப்பு தருவது என்பதற்கு வாய்ப்பில்லை.

138—

வெம்பக்கோட்டை கண்மாய்க்கு நீர்வரத்துக் கால்வாய்.

வினா எண். 3800—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் [கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) வெம்பக்கோட்டை கண்மாய்க்கு நீர்வரத்துக் கால் வாய் வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்திலிருந்து அமைக்க படுமா ?



(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) வெம்பக்கோட்டை கண்மாயின் முழு நீர்மட்ட அளவானது வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தின் முழு நீர் மட்ட அளவைவிட சுமார் 2.45 மீட்டர் உயரத்தில் உள்ளது. மேலும் கண்மாயின் தரைமட்டமானது நீர்த்தேக்கத்தின் முழு நீர் மட்டத்தை விட 0.3 மீட்டர் உயரத்தில் உள்ளது. எனவே, வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்திலிருந்து வெம்பக்கோட்டை கண்மாய்க்கு நீர்வரத்துக் கால்வாய் வெட்டினால் கண்மாயில் உள்ள தண்ணீரானது வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்திற்கு வந்துவிடும். எனவே வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தி லிருந்து வெம்பக்கோட்டை கண்மாய்க்கு நீர்வரத்துக் கால்வாய் அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

139—

குடிசைப் பகுதிகளுக்கு துரிதமாக மின்இணைப்பு.

வினா எண். 4564— திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) குடிசைப்பகுதி மக்களுக்கு மின் இணைப்பு வழங்கு வதில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, துரிதமாக மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர்.

(அ) ஒவ்வொரு ஆண்டும் அரசு திட்ட ஒதுக்கீட்டின் அடிப் படையில் 40,000 குடிசை மின் இணைப்புகள் வழங்கப்படு கின்றன. அரசு விதிகளின்படி மின் இணைப்புக்குத் தகுதிபெறும் குடிசை வீடுகளுக்கு வரப்பெற்ற விண்ணப்பங்களின் பதிவு

வரிசை அடிப்படையில் இலக்குக்குட்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதில் கட்டுப்பாடுகளை தளர்த்துவது என்று எந்த பிரச்சினையும் இல்லை.

(ஆ) எழவில்லை.

140—

## சாலையைப் பராமரித்தல்.

வினா எண். 4646—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள நொச்சிக்குளம் விலக்கு—ஆர். நவநீத கிருஷ்ணாபுரம் சாலை பராமரிப்பில்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சாலையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நவநீதகிருஷ்ணாபுரம் சாலையானது அரசு சாலையல்ல. இது ஆலங்குளம் ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் சாலையாகும். 2.6 கி.மீ. நீளம் உள்ள இந்த கற்சாலையை மேம்பாடு செய்ய ரூ. 3.00 லட்சம் தேவைப்படும். 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள சாலையில், சாலை மற்றும் பாலப்பணிகளை நெடுஞ்சாலைத்துறையின் பகுதி 2 திட்டத்தில் எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்படவில்லை. எனவே இந்தப் பணியினை இத்துறையின் பகுதி 2 திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது.

141—

## கூடுதல் தெரு விளக்குகள்.

வினா எண். 5682—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம் ஏ. பி. நாடானூர் ஊராட்சி மன்றத்திற்கு கூடுதல் தெருவிளக்குகள் அமைத்திட அனுமதி வழங்கஅரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?





(ஆ) ஆம் எனில், எப்போது அனுமதி வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) சேரன்மகாதேவி கடையம் ஒன்றியம் ஏ. பி. நாடானூரில் கூடுதலாக 30 தெருவிளக்குகள் அமைத்திட 30—12—1988 இல் மனு பெறப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் காப்பீட்டுத் தொகை ஏ. பி. நாடானூர் ஊராட்சியால் இதுவரை செலுத்தப்படவில்லை.

(ஆ) காப்பீட்டுத்தொகை செலுத்தப்பட்டால், அரசின் தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவு திட்டத்தின்கீழ் இவ்விளக்குகள் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்படும்.

142—

## பாலம் கட்டுதல்.

வினா எண் 5362—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், பிடாரப்பட்டியிலிருந்து இக்கறைகோசுக்குறிச்சி செல்லும் சாலையின் குறுக்கே செல்லும் காட்டாற்றில் அடிக்கடி வெள்ளம் வருவதால், நத்தத்திலிருந்து பிடாரப்பட்டி இக்கறைகோசுக்குறிச்சி வழியாக துவரங்குறிச்சிக்கு டவுன் பஸ் விட முடியாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த சாலையில் காட்டாற்றினால் பாதிக்கப்படும் பகுதியில் பாலம் கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

[1992 செப்டம்பர் 23

143—

மறைமலை நகரியத்திற்கு குடிதண்ணீர்.

வினா எண் 408—திரு. ம. தனபால் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைமலை நகரியத்தில் குடிதண்ணீர் இரண்டு நாளைக்கு ஒரு முறை விடப்படுவதை மாற்றி தினமும் இரண்டு வேளை விடுவதற்கு அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : மறைமலை நகருக்கு பாலாற்று குடிநீர் வழங்கும் திட்டம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பில் அதன் நிதியின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், ஏஜென்சி முறையில் பராமரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு ஒரு தடவை குடிநீர் வழங்குவது வழக்கமாகவும், குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் அளவிலும் உள்ளது. நிதிப் பற்றாக் குறையின காரணமாக தினமும், இரண்டு வேளை குடிநீர் விடுவது சாத்தியமில்லை.

144—

கப்பிச் சாலையை தார் சாலையாக மாற்றல்.

வினா எண் 688—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணைவயல் ஊராட்சி கம்மயன்கண்ணியிலிருந்து ஆதிதிராவிடர் தெரு, தெற்குத் தெரு, சுந்தரராசபுரம் வழியாக பட்டுக்கோட்டை மெயின் சாலை கார்க்கவயல் வரை உள்ள கப்பி சாலையை தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை, அமைச்சர்:

இல்லை.



1992 செப்டம்பர் 23]

145—

கருங்கல் கப்பிச் சாலை அமைத்தல்.

வினா எண் 684—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், ஆவணம் பெரியநாயகிபுரம் அகமுடையார் பள்ளியிலிருந்து துலுக்க விடுதி செல்லும் சாலையை செப்பனிட்டு கருங்கல் கப்பிச் சாலையாக மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை, அமைச்சர்:

இல்லை.

146—

வலச்சேரிக்காட்டில் மேல்நிலைத் தொட்டி.

வினா எண் 858—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியைச் சேர்ந்த வலச்சேரிக்காட்டில் மேல்நிலைத் தொட்டி அவசரமாகக் கட்ட அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித், துறை அமைச்சர்:

ஆம். உள்ளது. வலச்சேரி கிராமம் திருச்சிற்றம்பலம் ஊராட்சி, பேராவூரணி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதன் மக்கட் தொகை 1,580 ஆகும். இது பகுதியாக செயலாக்கப்பட்ட கிராமம். நடப்பு நிதியாண்டில் ஆயுட் காப்பீட்டு கழக நிதி உதவியுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டு செயலாக்கப்பட உள்ளது.

[1992 செப்டம்பர் 23

147—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 900—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மருங்கப்பள்ளம் ஊராட்சியைச் சார்ந்த சங்கரன் கொல்லையில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித், துறை அமைச்சர்:

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மருங்கப்பள்ளம் ஊராட்சியில் 1990இல் வாரியம் மேற்கொண்ட மறு ஆய்வின் படி சங்கரன்கொல்லை என்ற தனி குடியிருப்பு கிடையாது. மருங்கப்பள்ளம் குடியிருப்பில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1,500 மக்கட் தொகை கொண்ட மருங்கப்பள்ளம் குடியிருப்புக்கு போதுமானதாக இல்லை. தற்போதைய மறு ஆய்வின்படி இக்குடியிருப்பு பகுதியாகச் செயலாக்கப்பட்டதாகும். வரும் நிதியாண்டுகளில் மேல்நிலைத் தொட்டி கட்டித்தர நட வடிக்கை எடுக்கலாம் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

148—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விரிவாக்கல்

வினா எண். 914—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரி யங்கோட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விரிவாக்கி எல்லா வார்டுகளுக்கும் குடிநீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித், துறை அமைச்சர்:

இல்லை. வீரியங்கோட்டை கிராமம், வீரியங்கோட்டை ஊராட்சி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதன் மக்கட் தொகை 2,000 ஆகும். மறு ஆய்வின்படி இக் குடியிருப்பு பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்டதாகும் தற்போது 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் மின்னிறைப்பான் திட்டம் மற்றும் இரண்டு கைப்பம்பு திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வரு கிறது. வரும் நிதியாண்டுகளில், அதிக கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர திட்டம் மேற்கொள்ளப் படும்.

149—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 915— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு மேலக் குடியிருப்பு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இரண்டாம்புளிக்காடு கிராமம், இரண்டாம் புளிக்காடு ஊராட்சி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த தாகும். இதன் மக்கட் தொகை 1,500 ஆகும். மறு ஆய் வின்படி இக்குடியிருப்பு பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப் பட்ட கிராமம். மேலக் குடியிருப்பு என்று தனியாக ஒரு குடி யிருப்பு கிடையாது. தற்போது இரண்டாம் புளிக்காடு கிரா மத்தில் ஒரு இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[1992 செப்டம்பர் 23

150—

தார் சாலை அமைத்தல்.

வினா எண். 986—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் மெயின் சாலையிலிருந்து வாடிக்காடு—கீழப்புனவாசல் மதன் பட்டவூர் வழியாகச் செல்லும் சாலையைச் செப்பனிட்டு தார் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை.

151—

ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள்

வினா எண். 1345—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை உமாரெட்டியூர் ஆதி திராவிடர் மக்கள், வீட்டு வசதி இல்லாது துயரம் அடைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் 1991-92இல் இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு முயலுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1991-92ஆம் ஆண்டில், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள உமாரெட்டியூர் ஆதி திராவிட குடியிருப்புக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டம் அனுமதிக்கப்படவில்லை. எதிர் வரும் நிதியாண்டில் அரசு ஒதுக்கீட்டிற்கேற்ப தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1992 செப்டம்பர் 23]

152—

ஆதி திராவிட மக்களுக்கு காலனி வீடுகள்

வினா எண். 1422—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், பரமக்குடி தொகுதியில் போகலூர் ஒன்றியத்தில் ஆதி திராவிடர் மக்களுக்கு 1988-89 மற்றும் 1989-90இல் எத்தனை காலனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் போகலூர் ஒன்றியத்தில் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 1988-89 ஆம் ஆண்டில் 148 வீடுகளும், 1989-90 ஆம் ஆண்டில் 44 வீடுகளுமாக மொத்தம் 192 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

153—

மயானப் பாதை அமைத்தல்

வினா எண். 1844—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாரதம் கோட்டை (வ) ஊராட்சி மேலக்கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு மயானப்பாதையும், தகரக் கொட்டகையும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாரதம் கோட்டை (வ) ஊராட்சி மேலக் கொள்ளுக்காடு ஆதி திராவிடர்

களுக்கு மயானச்சாலை வசதி உள்ளது. அந்த மயான்ச் சாலைக்கு சிகப்பு கப்பி போடவும் மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைக்கவும் இந்நிதியாண்டில், (1991–92) இல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய வாய்ப்பு உள்ளது.

154—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண். 1873—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், கீழ்க்குறிச்சி வடக்குத் தெருவிற்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இக்குடியிருப்பில் மொத்த மக்கட் தொகை சுமார் 150 மட்டுமே. தற்பொழுது இயங்கிவரும் ஆழ்குழாய் கிணறு போதுமானதாகும். எனவே தனியாக செயக்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை,

155—

## மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண். 1935—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்புளிக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பெரிய தாக்கித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை. கழுகுப்புளிக்காட்டின் மக்கள் தொகை 3,000 ஆகும். 1987ஆம் வருடம் (ஏ.ஆர்.பி.) விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் லிட்டர் கொள்





ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 2,500 மீட்டர் நீளத்திற்கு பகிர்மான குழாயும், 19 பொதுக் குடிநீர்க் குழாய் களுடன் கூடிய மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. வாரிய விதிமுறைகளின்படி இது போதுமானதாகும்.

156—

## கப்பிச்சாலை அமைத்தல்

வினா எண். 1980—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி வல்லம்பக்கொல்லையிலிருந்து கா. உஞ்சிய விடுதிவரை செல்லும் ஆற்றுக்கரைச் சாலையைக் கப்பிச்சாலையாக மாற்றி ஒன்றிய சாலையாக அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு.அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர்.

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை ஊராட்சி வல்லம்பக்கொல்லையிலிருந்து கா. உஞ்சிய விடுதி வரை செல்லும் ஆற்றுக்கரைச் சாலையில் 2.6 கி.மீ. தூரத்திற்கு மண்வேலை செய்து, கருங்கல் கப்பிப்போட ரூ. 3.4 இலட்சம். செலவாகும். போதுமான நிதிவசதி இல்லையாததால், இச்சாலையை தற்சமயம் மேம்பாடு செய்ய செயற்குறிப்பு தற்சமயம் ஏதுமில்லை.

157—

## மயானத்தில் தகரக் கொட்டகை

வினா எண். 2002—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம் காட்டாத்தி உஞ்சியவிடுதி ஆதி திராவிடர்களுக்கு மயானத்தில் தகரக் கொட்டகை அமைத்துக் கொடுக்கஅரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1991-92ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்படும் நிதி வசதிக் கேற்ப காட்டாத்தி உஞ்சிய விடுதி ஆதி திராவிடர்களுக்கு மயானத்தில் தகரக்கொட்டகை அமைத்துத்தரப்படும் என்று தஞ்சாவூர் மாவட்ட திட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

158—

## சமுதாயக் கிணற்றை தூர் எடுக்க நடவடிக்கை

வினா எண். 2007 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர் தெருவிலுள்ள சமுதாயக் கிணற்றை தூர் எடுத்துச் சுத்தப்படுத்தி போர்வெல் போட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர்) :

கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர் தெருவில் இரு குடிநீர் கிணறுகள் உள்ளன. அவை ஆண்டுதோறும் தூர் எடுத்து சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இக்கிணற்றுக்குப் பக்கத்தில் ஒரு போர்வெல் போட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

159—

## கூடுதல் தெருவிளக்கு அமைத்தல்

வினா எண். 2181—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர்மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அலுவலத்தில் கூடுதல் தெருவிளக்கு விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் அலிவலம் ஊராட்சியில் தற்போது 50 தெருவிளக்குகள் உள்ளன. மேற்படி ஊராட்சியின் குடிநீர் பராமரிப்பு மற்றும் இதர காரணங்களுக்காக ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஊராட்சிக்கு வழங்கப்பட்ட முன் தொகை மொத்தம் ரூ. 24,153 ஊராட்சியிலிருந்து ஒன்றியம் பொது நிதிக்கு ஈடுசெய்யப்படாமல் உள்ளது. ஊராட்சி நிதி நிலை உயரும்போது, புதிய தெருவிளக்குகள் அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

160—

## கப்பிச்சாலையை தார் சாலையாக மாற்றுதல்.

வினா எண். 2206—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி கொடி மரத்திலிருந்து தெற்கு ஆதி திராவிடர் தெரு வரை செல்லும் கப்பிச் சாலையை தார்ச்சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் இடையாத்தி, கொடி மரத்திலிருந்து தெற்கு ஆதி திராவிடர் தெரு வரை செல்லும் கப்பிச்சாலை 3 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலையில் 2 கி.மீ. கருங்கல் ஜல்லி சாலையாக உள்ளது. மீதி 1 கி.மீ. கப்பிச்சாலையாகும். இச் சாலையை தார்ச்சாலையாக்க ரூ. 3 இலட்சம் ஆகும். இச் சாலையை தார்ச்சாலையாக மாற்றிட செயற்குறிப்பு தற்சமயம் ஏதுமில்லை.

[1992 செப்டம்பர் 23

161—

பரமக்குடி நகராட்சிக்கு உலக வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்.

வினா எண். 2272—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சிக்கு உலக வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர்.

பரமக்குடி நகராட்சியில் உலக வங்கி நிதி உதவியுடன் திட்டங்கள் ஏதும் தற்போது செயல்பாட்டில் இல்லை.

162—

மயானச்சாலை அமைத்தல்.

வினா எண். 2325—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பாலத்தளி ஊராட்சி மனவயல் காந்தி நகருக்கு மயானச்சாலையும் தகரக் கொட்டகையும் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் பாலத்தளி ஊராட்சி மனவயல் காந்தி நகருக்கு மயானச்சாலை மனவயல் பாலத்தளி சாலை கி.மீ. 1/8-ல் பிரிந்து செல்கிறது. இது 0.2 கி. மீட்டர் நீளமுள்ள மண்சாலையாக உள்ளது. இச்சாலையை மேம்பாடு செய்யவும் தகரக் கொட்டகை அமைக்கவும் தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.



1992 செப்டம்பர் 23]

163—

மயானச்சாலை அமைத்தல்.

வினா எண். 2340—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்கு சாலையும், மயானக் கொட்டகையும் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்கு சாலையும், மயானக் கொட்டகையும் அமைத்துத் தரும் பணி குறித்து அரசிடம் தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே உள்ள மயானச் சாலைக்கு கப்பி போடவும் தகரக் கொட்டகை போடவும் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும் ஒதுக்கீட்டிற்கு தகுந்தவாறு இப்பணியினை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

164—

புறம்போக்கு நிலத்தில் சமுதாயக்களம் அமைத்தல்.

வினா எண். 2368—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கு காவக்காரன் தெருவில் உள்ள புறம்போக்கு நிலத்தில் சமுதாயக்களம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மேற்குறிப்பிட்ட புறம்போக்கு நிலத்தில் மேடான பகுதிகளை தற்சமயம் நெற்களமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாண்டு நெற்களம் கட்ட திட்டம் ஏதுமில்லை.

165—

கப்பிச்சாலை அமைத்தல்.

வினா எண். 2378—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த விழுதலை வட்டத்தின் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த விழுதலை வட்டத்தில் சாலை 2 கி.மீ. நீளமுடைய ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ள சிகப்புக் கப்பிச் சாலையாகும். இதனை கருங்கல் கப்பிச் சாலையாக மாற்றிட ரூ. 3 லட்சம் செலவாகும். தற் சமயம் இது பற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

166—

தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண். 2529—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பட்டத் தூரணி வடக்கிற்கு தொலைக்காட்சி, வானொலிப் பெட்டிகள் வைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள், அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விபரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித்



தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்புக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சிகளே வாங்கிக் கொள்ளலாம்.

167—

காரங்குடாவிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.

வினா எண். 2965—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடாவில் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அடிக்கடி பழுதுபடுவதை நிரந்தரமாக பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், மரக்காவலசை ஊராட்சியைச் சேர்ந்த காரங்குடாவில் இருக்கும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 3,400 செலவில் சீர் செய்யப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும் சிறு பழுதுகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு வருகிறது. எனவே இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

168—

அன்னை இந்திரா நினைவு அரங்கு எனப் பெயர் சூட்டல்.

வினா எண். 3443—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

கோவை வ.உ.சி. பூங்காவில் கட்டப்பட்டுள்ள அரங்கிற்கு '' அன்னை இந்திரா நினைவு அரங்கு '' எனப் பெயர் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாநகராட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாமன்றம் அமைந்தபின்பு, வ.உ.சி. பூங்காவில் கட்டப்பட்டுள்ள அரங்கிற்கு பெயர் சூட்டுவது தொடர்பாக, அம் மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றுவதன் பேரில் அரசு முடிவு எடுக்கும்.

169—

ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து சம்பளம்.

வினா எண். 3545—திரு. மு. தென்னவன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற இளநிலை உதவியாளர், காசாளர், தட்டச்சர் போன்ற அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்களின் நிதியிலிருந்து ஊதியம் பெறுகின்ற பணியாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து ஊதியம் அளிக்கலாமா என்ற செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்டது. அரசின் நிதி நிலை நிறைவளிப்பதாக இல்லை என்பதால் மேற்சொன்ன பணியாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து ஊதியம் அளிக்கலாமா என்பது பற்றிய செயற் குறிப்பினை தற்போதைக்கு தள்ளிப் போடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.



170—

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறைகள்.

வினா எண். 3580—திரு. டி. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்பு இருந்தது போல் அறைகள் ஒதுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அரசு ஆணை எண். 659, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 19-8-1986-ன்படி, ஊராட்சி ஒன்றியங்களில் சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, மாதத்தில் ஒருநாள் மக்களின் குறைகளைக் கேட்டு ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் உதவியுடன் நிவர்த்தி செய்ய ஊராட்சி ஒன்றிய மன்ற அறையை ஒதுக்கிக் கொடுத்து கூட்ட அறைக்குள் அனுமதிக்குமாறு அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கும் ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளன. மாதத்தில் எந்த நாளில் மன்ற அறையை ஒதுக்கலாம் என்பதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து முடிவு செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

171—

பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சரி செய்தல்.

வினா எண். 3612—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதி, விஜயாபதி பஞ்சாயத்தில் முஸ்லீம் தெரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை சரி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரம் தொகுதி, விஜயாபதி ஊராட்சியில் விஜயாபதி முஸ்லீம் தெரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பழுதுநீக்கம் செய்யப்பட்டு தற்போது சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே இது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

172—

ஆதிதிராவிடர் காலனிக்கு அடி பைப் வசதி செய்தல்.

வினா எண். 3633—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி கஸ்தூரி ரெங்கபுரம் பஞ்சாயத்தில் பெருகண்ணாய்குளம் ஆதிதிராவிடர் காலனியில் ஒரு அடி பைப் வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெருகண்ணாய்குளம் ஆதி திராவிடர் காலனியில் 225 மக்கட் தொகை கொண்ட 45 குடும்பங்கள் உள்ளன. மேற்படி காலனிக்கு ஒரு கிணறும் மற்றும் ஒரு அடி பைப்பும் குடிநீர் ஆதாரங்களாக அமைந்துள்ளன. அங்கு தற்போது குடிநீர் வசதி போதுமானதாக உள்ளது. எனவே இக்காலனியில் அடி பைப் வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

173—

ஆதிதிராவிடர் காலனிக்கு அடி பைப் வசதி செய்தல்.

வினா எண். 3634—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதி, கஸ்தூரி ரெங்கபுரம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட முடவன்குளம் ஆதிதிராவிடர் காலனியில் ஒரு



1992 செப்டம்பர் 23]

அடி பைப் வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் இராதாபுரம் ஒன்றியம் கஸ்தூரி ரெங்கபுரம் ஊராட்சியைச் சேர்ந்த முடவன் குளம் ஆதிதிராவிடர் காலனியில் தற்போது குடிநீர் ஆதாரங்களாக கிணறு ஒன்றும் மூன்று தெரு நல்லிகளும் உள்ளன. முடவன்குளம் ஆதிதிராவிடர் காலனி பக்கம் பள்ளிக்கூடப் பக்கமும், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பக்கமும் ஆழ் குழாய் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு தண்ணீர் கிடைக்காததால் கைவிடப்பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள கிணற்றில் போதுமான தண்ணீர் வசதி உள்ளது. எனவே அடி பைப் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

174—

கோனார்துறை குடியிருப்பு, நாடார்துறை குடியிருப்புப் பகுதிகளுக்கு குடி தண்ணீர்.

வினா எண். 3830—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராதாபுரம் தொகுதி, கோனார்துறை குடியிருப்பு, நாடார் துறை குடியிருப்புப்பகுதிகளுக்கு முத்துநாடார் குடியிருப்பிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

துறை நாடார் குடியிருப்புக்கு 1991—92-ல் விசைக்குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட உள்ளது. நீர் ஆதாரம் கிடைக்கப் பெற்றதும், இக்குடியிருப்பிற்கு தனியாக திட்டம் செயல்படுத்தப் படும்.

[1992 செப்டம்பர் 23

175—

## சாலை வசதி.

வினா எண். 4148—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பால்வாத்துண்ணன் கிராமத்திற்கு ரோடு வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பால் வாத்துண்ணன் கிராமத்திற்கு சாலை வசதி செய்ய ரூ. 15,000 மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டு சாலைப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

176—

## தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க நடவடிக்கை.

வினா எண். 5822—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தோட்டத் தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் பல காலமாக கூட்டுப் பேர முறையில் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி தொழிலாளர்களுக்கு தினக் கூலியாகவும், பணியாளர்களுக்கு மாதச் சம்பளமாகவும் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றது தோட்ட நிறுவனங்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பல்



1992 செப்டம்பர் 23]

வேறு சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி தற்பொழுது தினக்கூலி ரூ. 27.54 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத் தொழிலில் உள்ளவர்களுக்கு ஊதிய நிர்ணயம் கூட்டுப்பேர முறையில் செய்யப்படுவதால் அரசு மட்டத்தில் மாதச்சம்பளம் கொடுப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

மாத அடிப்படையில் சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தாலும் தற்பொழுது தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் 21—9—1990 அன்று ஏற்பட்ட ஒப்பந்தம் அமுலில் உள்ள காலத்தில் (31—12—1992 வரை) அதைமாற்றி அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

177—

## தொழிலாளர்களின் பிள்ளைகள் படிக்க அரசு உதவித் தொகை.

வினா எண். 8255—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர்களின் பிள்ளைகள் தொழில் நுணுக்கப் படிப்பு (பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம்) படிக்க அரசு உதவித் தொகை வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டொன்றுக்கு எவ்வளவு உதவித் தொகை வழங்கப்படுகிறது?

(இ) கடந்த 3 ஆண்டுகளில் இத்தகு உதவித் தொகை பெற்றோர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) தொழிலாளர்களின் பிள்ளைகள் தொழில்நுணுக்கப் படிப்பு படிக்க தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் உதவித் தொகை வழங்குகிறது.

(ஆ) இணைப்பு 'அ' வில் கண்டுள்ளவாறு ஒவ்வொரு ஆண்டும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(இ) கடந்த 3 ஆண்டுகளில் மாவட்ட வாரியாக உதவித் தொகை பெற்றவர்களின் விவரம் இணைப்பு 'ஆ'வில் கொடுக்கப்பமடுள்ளது.

## இணைப்பு 'அ'

### ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகையின் விவரம்.

| வரிசை எண்ணும் கல்வியின் பெயரும். | உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை. | ஆண்டொன்றுக்கு அனுமதிக்கப்படும் தொகை. ரூபாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1. மருத்துவக் பட்டப் படிப்பு | 25 | 1,200 |
| 2. பொறியியல் பட்டப் படிப்பு | 50 | 1,200 |
| 3. சட்டக் கல்வி .. .. | 25 | 1,200 |
| 4. வேளாண்மைப் பட்டக் கல்வி | 25 | 1,200 |
| 5. பொறியியல் பட்டக் கல்வி .. | 150 | 720 |
| 6. மருத்துவப் பட்டயக் கல்வி .. | 25 | 720 |
| 7. தொழிற் கல்வி (ஐ.டி.ஐ.) .. | 75 | 360 |
| 8. மேல்நிலைக்கல்வி .. | மாவட்டத்திற்கு 3 பேர் வீதம். | 600 |



## இணைப்பு 'ஆ'

### 1989—90 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக தொழில் நுணுக்கப்-படிப்புக்காக உதவித் தொகை பெற்றோர் விவரப் பட்டியல்.

| மாவட்டத்தின் பெயர். | பி.இ. | எம்.பி., பி.எஸ்., | பொறியியல் பட்டயக் கல்வி. | ஐ.டி.ஐ. | விவசாயம். | சட்டம். | மருத்துவ பட்டயக் கல்வி. | மேல்நிலைக் கல்வி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| சென்னை .. .. | 28 | 16 | 41 | 18 | 3 | 2 | 4 | 5 | 117 |
| செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். .. | 5 | 2 | 5 | 2 | .. | .. | 2 | 5 | 31 |
| இராமநாதபுரம் .. .. | 1 | 1 | 2 | 2 | .. | .. | .. | 2 | 8 |
| பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகன். | 1 | 1 | 2 | 2 | .. | .. | .. | 2 | 8 |
| திண்டுக்கல் அண்ணா .. | 2 | 2 | 1 | 3 | .. | .. | .. | 2 | 10 |
| சிதம்பரனார் .. .. | 4 | 5 | 10 | 3 | 1 | 1 | .. | 3 | 25 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திருநெல்வேலி கட்டபொம்மன் | 8 | 2 | 22 | 9 | .. | .. | 1 | 5 | 47 |
| கன்னியாகுமரி .. .. | 2 | 2 | 3 | 2 | 1 | .. | .. | 4 | 14 |
| காமராஜர் .. .. .. | 2 | 1 | 12 | 2 | .. | 1 | .. | 5 | 23 |
| புதுக்கோட்டை .. .. | 2 | 1 | 2 | 1 | .. | .. | .. | 2 | 8 |
| திருச்சி .. .. .. | 4 | 1 | 16 | 29 | 2 | 1 | 2 | 4 | 59 |
| தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத். | 6 | 2 | 12 | 15 | .. | 1 | 4 | 5 | 45 |
| தென்னாற்காடு .. .. | 4 | 2 | 22 | 9 | .. | 1 | .. | 4 | 42 |
| கோவை .. .. .. | 14 | 8 | 32 | 1 | 2 | 3 | .. | 4 | 64 |
| சேலம் .. .. .. | 9 | 2 | 13 | 2 | .. | 1 | .. | 4 | 31 |
| தர்மபுரி .. .. .. | 1 | 1 | 3 | 4 | .. | .. | .. | 3 | 12 |
| உதகை .. .. .. | .. | 1 | 1 | 2 | .. | .. | .. | 3 | 7 |
| பெரியார் .. .. .. | 2 | 2 | 15 | 4 | .. | .. | .. | 4 | 27 |
| மதுரை .. .. .. | 3 | 2 | 5 | .. | .. | .. | 4 | 46 | 16 |
| வடாற்காடு அம்பேத்கார் .. | 2 | 2 | 8 | 2 | .. | 1 | .. | 4 | 19 |
| மொத்தம் .. | 100 | 56 | 227 | 112 | 12 | 9 | 13 | 74 | 603 |



இணைப்பு 'ஆ'—தொடர்ச்சி.

1989-90 ஆம் ஆண்டில் மொத்தம் வழங்கியுள்ள கல்வி உதவித் தொகை

| வரிசை எண்ணும் கல்வியின் பெயரும். | உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை. | ஒருவருக்கு வழங்கப்படும் தொகை. ரூ. | மொத்தம் வழங்கியத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பி.இ... .. .. .. .. | 100 | 1,200 | 1,20,000 |
| 2. எம்.பி., பி.எஸ். .. .. .. | 56 | 1,200 | 67,200 |
| 3. பொறியியல் பட்டயக் கல்வி .. | 227 | 720 | 1,63,440 |
| 4. ஐ.டி.ஐ. .. .. .. .. | 112 | 360 | 40,320 |
| 5. விவசாயம் .. .. .. .. | 12 | 1,200 | 14,400 |
| 6. சட்டம் .. .. .. .. | 9 | 1,200 | 10,800 |
| 7. மருத்துவப் பட்டயக் கல்வி .. .. | 13 | 720 | 9,360 |
| 8. மேல்நிலைக் கல்வி .. .. .. | 74 | 600 | 44,400 |
| மொத்தம் .. | 603 | .. | 4,69,920 |

## இணைப்பு "ஆ"—தொடர்ச்சி.

**1990–91 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக தொழில் நுணுக்கப் படிப்புக்காக உதவித் தொகை பெற்றோர் விவரப் பட்டியல்.**

| மாவட்டத்தின் பெயர். | பி.இ. | எம்.பி., பி.எஸ்., | பொறியியல் பட்டயக் கல்வி. | ஐ.டி.ஐ. | விவசாயம். | சட்டம். | மருத்துவ பட்டயக் கல்வி. | மேல்நிலைக் கல்வி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| சென்னை .. | 21 | 11 | 31 | 12 | 3 | 2 | .. | 5 | 85 |
| செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | 3 | 1 | 3 | .. | .. | .. | .. | 1 | 10 |
| இராமநாதபுரம் | .. | 1 | 1 | .. | .. | .. | .. | 1 | 3 |
| பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 2 |
| திண்டுக்கல் அண்ணா | 1 | 1 | .. | .. | .. | .. | .. | 1 | 3 |
| சிதம்பரனார் | 3 | 4 | 6 | 1 | 1 | 1 | 1 | 3 | 20 |
| திருநெல்வேலி—கட்டபொம்மன் | 6 | 2 | 17 | 7 | .. | 1 | .. | 4 | 37 |
| கன்னியாகுமரி | 1 | 3 | 2 | .. | .. | .. | .. | 4 | 10 |
| காமராஜர் | 1 | 1 | 9 | .. | .. | 1 | .. | 5 | 17 |
| புதுக்கோட்டை | .. | .. | 2 | .. | .. | .. | .. | .. | 2 |
| திருச்சி | 2 | 1 | 12 | 28 | .. | .. | .. | 4 | 47 |
| தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் | 6 | .. | 8 | 11 | .. | 1 | .. | 5 | 31 |
| தென்னாற்காடு | 3 | 1 | 19 | 9 | .. | 1 | .. | 4 | 37 |
| கோவை | 13 | 9 | 28 | 1 | .. | 3 | .. | 4 | 58 |
| சேலம் | 9 | 2 | 11 | 2 | .. | 1 | .. | 4 | 29 |
| தர்மபுரி | .. | 1 | 2 | .. | .. | .. | .. | 1 | 4 |
| உதகை | .. | 2 | .. | .. | .. | .. | .. | 3 | 5 |
| பெரியார் | 2 | 2 | 17 | 4 | .. | .. | .. | 4 | 29 |
| மதுரை | 3 | 2 | 3 | .. | .. | .. | .. | 4 | 12 |
| வடாற்காடு-அம்பேத்கார் | 2 | 2 | 7 | 2 | .. | 1 | .. | 4 | 18 |
| மொத்தம் | 76 | 46 | 178 | 77 | 4 | 12 | 1 | 65 | 459 |

## இணைப்பு 'ஆ'

### 1990–91 ஆம் ஆண்டில் மொத்தம் வழங்கியுள்ள கல்வி உதவித் தொகை.

| வரிசை எண்ணும் கல்வியின் பெயரும். | உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை. | ஒருவருக்கு வழங்கப்படும் தொகை. | மொத்தம் வழங்கிய தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (3) |
| | | ரூ. | ரூ. |
| 1. பி.இ. | 76 | 1,200 | 91,200 |
| 2. எம்.பி., பி.எஸ். | 46 | 1,200 | 55,200 |
| 3. பொறியியல் பட்டயக் கல்வி | 178 | 720 | 1,28,160 |
| 4. ஐ.டி.ஐ. | 77 | 360 | 27,720 |
| 5. விவசாயக் கல்வி | 4 | 1,200 | 4,800 |
| 6. சட்டம் | 12 | 1,200 | 14,400 |
| 7. மருத்துவ பட்டயக் கல்வி | 1 | 720 | 720 |
| 8. மேல் நிலைக் கல்வி | 65 | 600 | 39,000 |
| மொத்தம் | 459 | .. | 3,61,200 |



### 1991–92 ஆம் ஆண்டின் மாவட்ட வாரியாக தொழில் நுணுக்கப் [illegible]ப்புக்காக உதவித் தொகை பெற்றோர் விவரப் பட்டியல்.

| மாவட்டத்தின் பெயர். | பி.இ. | எம்.பி.பி.எஸ். | பொறியியல் பட்டயக் கல்வி. | ஐ.டி.ஐ. | விவசாயம். | சட்டம். | மருத்துவ பட்டயக் கல்வி. | மேல்நிலைக் கல்வி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| சென்னை | 28 | 9 | 24 | 13 | 1 | 4 | 1 | 6 | 86 |
| செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | 6 | — | 7 | — | — | — | — | 3 | 16 |
| இராமநாதபுரம் | 1 | 1 | 2 | 14 | — | — | — | 1 | 19 |
| பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகன் | — | — | 2 | — | — | — | — | 1 | 3 |
| திண்டுக்கல்-அண்ணா | 1 | 1 | — | 2 | — | .. | — | 5 | 10 |
| சிதம்பரனார் | 2 | 3 | 4 | 4 | .. | .. | .. | 5 | 18 |
| திருநெல்வேலி-கட்டபொம்மன் | 5 | 7 | 27 | 10 | .. | .. | .. | 5 | 54 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கன்னியாகுமரி | 8 | 3 | 2 | — | — | — | — | 4 | 17 |
| காமராஜர் | 2 | .. | 7 | .. | .. | .. | .. | 5 | 14 |
| புதுக்கோட்டை | .. | .. | 2 | 1 | .. | .. | .. | .. | 3 |
| திருச்சி | 2 | 2 | 12 | 31 | .. | .. | .. | 4 | 51 |
| தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதேமில்லத் | 4 | .. | 12 | 9 | .. | .. | .. | 6 | 31 |
| தென்னார்க்காடு | 2 | 2 | 12 | 7 | .. | .. | .. | 5 | 28 |
| கோவை | 18 | 6 | 32 | .. | .. | .. | .. | 4 | 60 |
| சேலம் | 10 | 6 | 13 | .. | 3 | .. | .. | 5 | 37 |
| தர்மபுரி | 1 | .. | 2 | .. | .. | .. | .. | 1 | 4 |
| உதகை | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| பெரியார் | 1 | 1 | 17 | 4 | .. | .. | .. | 3 | 26 |
| மதுரை | 7 | 2 | 8 | 12 | .. | .. | .. | 6 | 35 |
| வடார்க்காடு-அம்பேத்கார் | 1 | 2 | 4 | 1 | 1 | .. | .. | 4 | 13 |
| மொத்தம் | 100 | 45 | 189 | 109 | 5 | 4 | 1 | 73 | 526 |



இணைப்பு 'ஆ'—தொடர்ச்சி.

1991-92 ஆம் ஆண்டில் மொத்தம் வழங்கியுள்ள கல்வி உதவித் தொகை.

| வரிசை எண்ணும், கல்வியின் பெயரும். | உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை. | ஒருவருக்கு வழங்கப்படும் உதவித் தொகை. | மொத்தம் வழங்கிய உதவித் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 பி.இ. | 100 | 1,200 | 1,20,000 |
| 2 எம்.பி.பி.எஸ். | 45 | 1,200 | 54,000 |
| 3 பொறியியல் பட்டயக் கல்வி | 189 | 720 | 1,36,080 |
| 4 ஐ.டி.ஐ. | 109 | 360 | 39,240 |
| 5 விவசாயக் கல்வி | 5 | 1,200 | 6,000 |
| 6 சட்டக் கல்வி | 4 | 1,200 | 4,800 |
| 7 மருத்துவப் பட்டயக் கல்வி | 1 | 720 | 720 |
| 8 மேல்நிலைக் கல்வி | 73 | 600 | 43,800 |
| மொத்தம் | 526 | .... | 4,04,640 |

[1992 செப்டம்பர் 23

## மானிய விலையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நெல் மற்றும் தானிய விதைகள்.

178—

வினா எண் 5990—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1988-89, 1989-90, 1990-91 ஜனவரி வரையில் 50 சத மானிய அடிப்படையில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நெல் மற்றும் தானிய விதைகள், பயிர் பாதுகாப்பு மருந்து ஆகிய வேளாண்மை இடுபொருள்கள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மதிப்பு எவ்வளவு ?

(இ) அவற்றில் முறைகேடுகள் நடைபெற்றதாக ஏதேனும் முறையீடுகள் அரசுக்கு வந்தனவா ?

(ஈ) ஆம் எனில், இப்போது அவைபற்றி ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப். கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) 1988-89, 1989-90, மற்றும் 1990-91 ஜனவரி வரையில் ஆதிதிராவிடர் சிறப்பு நலத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் வேளாண் பெருமக்களுக்கு திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 25 மற்றும் 50 சத மானிய விலையில் நெல் மற்றும் சிறு தானிய விதைகள், எண்ணெய் வித்து, தென்னங் கன்று, பயிர் பாதுகாப்பு மருந்துகள், பயிர் பாதுகாப்புச் சாதனங்கள், வேளாண் கருவிகள் மற்றும் நுண்ணூட்டச் சத்து, நுண்ணுயிர் உரம் வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் மரக் கன்றுகள் வழங்கப்படுவதில்லை.



1992 செப்டம்பர் 23]

(ஆ) அவற்றின் மதிப்பு வருமாறு :—

| வரிசை எண்ணும் ஆண்டும். (1) | | நெல் மற்றும் சிறு தானியங்கள். (2) | ப.பா. மருந்து. (3) | எண்ணெய் வித்து. (4) |
|---|---|---|---|---|
| 1 | 1988-89 .. .. | 46,570 | 47,430 | 54,000 |
| 2 | 1989-90 .. .. | 1,34,968 | 1,08,671 | 6,650 |
| 3 | 1990-91 ஜனவரி 1991 வரை. | 16,420 | 2,144 | 5,000 |

| வரிசை எண்ணும் ஆண்டும். (1) | | தென்னங் கன்று. (5) | பயிர் பாதுகாப்பு சாதனங்கள் வேளாண் கருவிகள். (6) | பயறு விதை. (7) | நுண்ணுயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட சத்து உரங்கள். (8) |
|---|---|---|---|---|---|
| 1 | 1988–89 .. | 6,984 | 1,60,000 | .. | .. |
| 2 | 1989–90 .. | 9,998 | 76,000 | .. | .. |
| 3 | 1990–91 ஜனவரி 1991 வரை. | 14,788 | .. | 32,046 | 16,16[illegible] |

** 25 சதவீதம் மானியம் மட்டும். ஏனையவற்றிற்கு 50 சதவீதம் மானியம்.

(இ) இல்லை.

(ஈ) இக் கேள்விக்கான பதில் எழவில்லை.

179—

## ஒட்டங்காட்டில் விவசாய டெப்போ அமைத்தல்.

வினா எண் 7342—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காட்டில் விவசாய டெப்போ ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 செப்டம்பர் 23

விடை—

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

இல்லை.

**180—**

**குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் வீடுகள் கட்டுதல்.**

வினா எண் 799—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

என்.ஆர்.ஒய். (NRY) வேலைவாய்ப்புத் திட்டத்தின், குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (Shelter Upgradation scheme) மூலம் வீடுகள் கட்ட பரமக்குடி நகராட்சிக்கு அரசு அனுமதித்துள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :**

ஆம். நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பரமக்குடி நகராட்சியில் 1991-92 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 500 குடியிருப்புகளை மேம்படுத்துவதற்கு ஹட்கோ நிறுவனம் நிதி வழங்கியுள்ளது.

**181—**

**கோயம்புத்தூரில் வீட்டுவசதி வாரியம்மூலம் கட்டும் வீடுகள்.**

வினா எண் 4985—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூரில் 1991–92 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியம்மூலம் எத்தனை வீடுகள் எங்கெங்கு கட்டப்பட உள்ளன ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிகள் துவங்கப்படும் ?



1992 செப்டம்பர் 23]

விடை—

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

**விவர அறிக்கை.**

கோயம்புத்தூரில், கணபதி புறநகர் திட்டப் பகுதியில் குறைந்த வருவாயினருக்காக 332 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்காக 308 குடியிருப்புகளும், உயர் வருவாயினருக்காக 130 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. இதுதவிர, இவ்வாண்டில் கணபதி பகுதி 2-இல் 200 மனைகளும், பகுதி 3-இல் 350 மனைகளுக்கான அபிவிருத்திப் பணிகள் இவ்வாண்டு முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பு நிதியாண்டில் 1991-92-இல் 876 மனைகள் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றின் விவரமாவது :—

| திட்டப் பெயர். | பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர். | குறைந்த வருவாய்ப் பிரிவினர். | மத்திய வருவாய்ப் பிரிவினர். | உயர் வருவாய்ப் பிரிவினர். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கணபதி பகுதி 2 | 82 | 113 | 19 | 9 | 223 |
| கணபதி பகுதி 3 | 355 | 224 | 44 | 30 | 653 |
| மனைகள் .. | 437 | 337 | 63 | 39 | 876 |

182 —

குடிசைமாற்று வாரியம் கட்டும் குடியிருப்புகளில் பீடித் தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்.

வினா எண் 6525—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசை மாற்று வாரியம் கட்டும் புதிய குடியிருப்புகளில் குறிப்பிட்ட எண்ணிக்கை பீடித் தொழிலாளர்களுக்கென ஒதுக்க வாரியம் அறிவுறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை ஒதுக்கப்பட்ட குடியிருப்பு எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

183—

பழுதடைந்த குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள்

வினா எண் 6544—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் எங்கெங்கு பழுதடைந்து அல்லது இடிந்து விழும் நிலை உள்ளது என வாரியம் ஏதேனும் சர்வே செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன '



விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) இல்லை, எனினும், குடியிருப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் அவ்வப்போது கண்டறியப்பட்டு நிதி நிலைமைக்கேற்ப பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) வினா எழவில்லை.

184—

சத்துணவு மையங்களிலுள்ள பொறுப்பாளர்கள் எண்ணிக்கை

வினா எண். 813—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பணியாற்றிக் கொண்டிருக்கும் சத்துணவு மையங்களில் பொறுப்பாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் இட ஒதுக்கீடு அடிப்படையில் (Reservation) நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் இயங்கும் சத்துணவு மையங்களில் பணியாற்றிக் கொண்டு இருக்கும் மொத்தப் பொறுப்பாளர்கள் 67,576 பேர்.

(ஆ) ஆம். எனினும் சில இடங்களில் உள்ளூரில் உள்ளவர்களையே நியமிக்க வேண்டி இருப்பதால் அந்த இடங்களில் இட ஒதுக்கீடு அடிப்படையில் பொறுப்பாளர்களை நியமனம் செய்யாவிடினும், தற்சமயம் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

[1992 செப்டம்பர் 23

185—

தாட்கோ நிர்வாகத்தின்மூலம் மான்யம் அளிக்க ஒதுக்கிய தொகை.

வினா எண் 2021—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1991–92 ஆம் ஆண்டு தாட்கோ நிர்வாகத்தின் மூலம் மானியம் அளிக்க ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) இது கடந்த ஆண்டைவிட எவ்வளவு குறைந்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ரூ. 38.413 இலட்சங்கள்.

(ஆ) ரூ. 58.272 இலட்சங்கள் அதாவது 1989-90 ஆம் ஆண்டில் தாட்கோவில் வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் செலவிடப்படாமல் இருந்த தொகையும் சேர்த்து 1990-91 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டதால் இராமநாதபுரம் மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும் அவ்வாண்டில் வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவிடப் பட்ட தொகை அதிகரித்தது. இதற்கேற்ப இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1990-91ல் அதிகமாக செலவிடப் பட்டது.

186—

ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண். 2654—திரு. ஆர்.சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஆதி திராவிடர்களின் புதிய காலனி வீட்டிற்கு ஒற்றை விளக்கு போட்டுத் தர அரசிற்கு செயற்குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மகிழங்கோட்டையைச் சேர்ந்த 25 ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பயனாளிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை தமிழ்நாடு மின்சார வாரியம் அதிராம்பட்டினம் நிர்வாக பொறியாளருக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக 26–12–1991 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

187—

தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள்.

வினா எண் 3222– திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராஜா அண்ணாமலைபுரம், பட்டினப்பாக்கம், நாகேஸ்வரராவ் பூங்கா மற்றும் சித்திரைக்குளம் பகுதிகளில் இயங்கும் தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் நடக்கும் கலப்படத்தை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

ராஜா அண்ணாமலைபுரம், பட்டினப்பாக்கம், நாகேஸ்வரராவ் பூங்கா மற்றும் சித்திரைக்குளம் பகுதிகளில் இயங்கும் தானியங்கிப் பால் வழங்கும் நிலையங்களில் முறையாகத் தரமான பால் வழங்க மேற்கொண்ட நடவடிக்கைகள் கீழ்வருமாறு :—

| தானியங்கி எண். | இடம். | சலுகைதாரர் பொறுப்பு. | மேற்கொண்ட நடவடிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 007 | ராஜா அண்ணாமலைபுரம். | ஆர். டி. பாஸ்கர். | இந்தத் தானியங்கி பால் வழங்கும் நிலையம், இணையத்தின் பால் தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அலு |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| | | | வலர்களால், 11 முறை பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு குறை காணப்படவில்லை என்று அறியப்பட்டது. இந்நிலையத்தில் தரமான பால் வழங்கப்படுகிறது என்று கண்டறியப்பட்டது. |
| 002 | பட்டினப் பாக்கம். | 1. பா. பாலசுப்ரமணியம். | சலுகைதாரர் திரு. பாலசுப்ரமணியத்தின் கோரிக்கைக்கிணங்க 13-7-1991 முதல் அவர் அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். |
| | | 2. எஸ். பால்ராஜ் | பின்னர் 13-7-1991 முதல் பொறுப்பு வகித்து வந்த சலுகைதாரர் திரு. பால்ராஜும் அவருடைய கோரிக்கைக்கிணங்க விடுவிக்கப்பட்டார். |
| | | 3. வி. சுப்பராமன். | பின்னர் 24-10-1991இல் பொறுப்பேற்ற சலுகைதாரர் திரு. வி. சுப்பராமன் கலப்பட குறறத்திற்காக 6-12-1991 அன்று விடுவிக்கப்பட்டார். |
| | | 4. ப. கிராமி | கடைசியாக தற்பொழுது திரு. ப. கிராமி என்பவர் 6-12-1991 முதல் புதுப் பொறுப்பாளராக இருந்து வருக்றார். |
| 026 | நாகேஸ்வரராவ் பூங்கா. | எஸ். கிருஷ்ணசாமி. | இந்தத் தானியங்கி பால் வழங்கும் நிலையம் 8 முறை அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்டுத் தரமான பால் வழங்கப்பட்டு வருகிறது எனக் கண்டறியப்பட்டது. சோதனையின்போது கலப்படம் ஏதும் காணப்படவில்லை. |
| 006 | சித்திரைக்குளம். | எம். தங்கராஜ். | இந்தத் தானியங்கிப் பால் வழங்கு நிலையம் 1-1-1991 முதல் 13-9-1991 வரை 18 முறை சம்பந்தப்பட்ட அலு |



| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| | | | வலர்களால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு தரமான பால் மக்களுக்கு வழங்கப்படுகிறது என கண்டறியப்பட்டது. சோதனையின்போது கலப்படம் ஏதும் காணப்படவில்லை. |

## மனைப் பட்டா வழங்கல்.

188—

வினா எண் 4041—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள தச்சக்காடு காலனி மக்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில்' எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து முன்மொழிவு பெறப்பட்டு அரசு மட்டத்தில் பரிசீலனை செய்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

189—

## வெளி மாநிலங்களில் படிக்கும் தமிழ் மாணவர்களின் சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு தொல்லை ஏற்படுத்துவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 4590—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வெளிமாநிலக் கோட்டாவில், வெளி மாநிலங்களுக்குச் சென்று (B.V.Sc.) போன்ற பட்டப்படிப்புகளில் சேரும்

தமிழக மாணவர்களை மதிக்காமல் சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு தொல்லை ஏற்படுத்தப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இது குறித்து முறையீடு ஏதும் அரசு பெறவில்லை.

190—

அத்தாணியில் அரசினர் மாணவியர் இல்லம்.

வினா எண் 4964—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில் அத்தாணியில் ஓர் அரசினர் மாணவியர் இல்லத்தினை திறக்க அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

தற்போது அத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

191—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைத்தல்.

வினா எண் 5146—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேதாரண்யம் தொகுதியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

வேதாரண்யம் தொகுதியில் ஏற்கனவே இரண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேவையான பால் உற்பத்தியில்லாததால் கூடுதல் சங்கங்கள் அமைக்கும் கருத்துரு இல்லை.

192—

ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா.

வினா எண் 5675—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட பெஜிலிபாளையத்தில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் கிராமம், பெஜிலிபாளையம், ஊசிமலை, துருசனாம்பாளையம், தட்டக்கரை ஆகிய இடங்களில் வசிக்கும் 42 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்ய பர்கூர் கிராமம் ரீ.ச. 403/1, சாலையில் 1.02.0 எக்டேர் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பிரிவு 7—ன் கீழான அறிவிக்கைக்கு அரசின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இறுதி நடவடிக்கையான நில எடுப்பு அலுவலரின் அவார்டு விசாரணை முடிந்ததும் நிலம் கைக்கொள்ளப்பட்டு, சம்பந்தப் பட்ட பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்.

**193—**

மீனவர் காலனியைப் பழுது பார்த்தல்.

வினா எண் 2660—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் இராசாமடம் ஊராட்சியைச் சேர்ந்த கீழத்தோட்டத்தில் உள்ள பழுதுபட்ட மீனவர் காலனியைப் பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

இல்லை.

**194—**

கொள்ளுக்காட்டில் உள்ள அகதிகளை வேறு இடத்திற்கு மாற்றல்.

வினா எண் 3071—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காட்டில் உள்ள அகதிகளை வேறு இடத்திற்கு அகற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

கடலோரப் பகுதிகளில் அமைந்திருந்த முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்தபோது தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து அனைத்து அகதி முகாம்களும் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டது. தற்சமயம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அகதி முகாம் இல்லை.



**195—**

மீனவர்கள் தொழில் செய்வதற்காக தகரக் கொட்டகை அமைத்தல்.

வினா எண் 6554—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிபட்டிணம் கடலோரத்தில் மீனவர்கள் தொழில் செய்வதற்காகப் போடப்பட்டுள்ள கீற்றுக் கொட்டகைகளில் அடிக்கடி தீப்பிடிப்பதால் அதை மாற்றி தகரக் கொட்டகை போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**196—**

மீனவர் சாலையை செப்பனிட்டு தார் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 6577—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கத்தேவன் மெயின் சாலையிலிருந்து கடற்கரை வரை செல்லும் மீனவர் சாலையை செப்பனிட்டு தார் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தை சார்ந்த அடைக்கத்தேவன் கிராமத்தில் தென் பகுதியிலிருந்து கடற்கரை வரை செல்லும் சாலையை (கி.மீ. 0/0 முதல்

1.60 வரை) அபிவிருத்தி செய்திட ரூ. 2.20 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையில் செயல்படுத்திட ஆணையிடப்பட்டு, அத்துறை இப் பணியைக் கைவிட்டுவிட்ட நிலையில் மீண்டும் மீனளத் துறை மூலம் ரூ. 3.46 இலட்சம் திருத்திய செலவில் ஒரு அடுக்கு கல் பரத்தி சாலை முடியும் தருவாயில் உள்ளது. மேலும் சாலையில் தார் போட்டு அபிவிருத்தி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

197—

## மிகவும் பின்தங்கியவர்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்கல்

வினா எண். 6697—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு, ஊராட்சி வேலக்குடி, நவக்கொல்லை காலனி நாடியமடத்து இடத்தில் குடியிருக்கும் மிகவும் பின்தங்கியவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

தற்பொழுது இல்லை.

198—

## இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டுநூல் உற்பத்தி

வினா எண். 1209—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டுநூல் உற்பத்தி எவ்வளவு ?



(ஆ) பட்டுநூலை கொள்முதல் செய்வதற்கு அரசு வெளிச் சந்தை அலுவலகம் திறக்க முன்வருமா ?

(இ) பட்டுநூல் நூற்பு மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆண்டொன்றுக்கு 600 கிலோ உற்பத்தி செய்யப் படுகிறது.

(ஆ) ஏற்கனவே மதுரையில் பட்டு நூலினை கொள் முதல் செய்ய டான்சில்கின் கிளை நிறுவனம் ஒன்று உள்ளது. இராமநாதபுர மாவட்டத்தில் அரசு வெளிச்சந்தை அலுவலகம் திறக்க திட்டம் ஏதும் தற்போதில்லை.

(இ) இல்லை.

199—

## திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இயங்கும் கிராமிய நூற்பு நிலையங்கள்

வினா எண் 5538—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் இயங்கும் கிராமிய நூற்பு நிலையங்களின் எண்ணிக்கைகளின் விவரம் என்ன ?

(ஆ) இத்தகைய கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்க விதித்துள்ள நெறிமுறை விவரம் என்ன ?

(இ) இத்தகு கிராமிய நூற்பு நிலையங்களை பின்தங்கிய தாலூக்காக்களில் ஒன்றாக அரசு அங்கீகரித்துள்ள நத்தம் தாலூக்காவில் உள்ள அனைத்து கிராமங்களிலும் அமைத்து மிகவும் நலிவடைந்த கிராமப் பெண்கள் தொழில் வாய்ப்பு பெற அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் 20 கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்குகின்றன (இணைப்பிலுள்ளபடி).

(ஆ) கிராமிய நூற்பு நிலையம் ஆரம்பிக்க 60 'நீளம்×30' அகலத்தில் மின் இணைப்புடன் கூடிய கட்டிடம் வேண்டும் குறைந்தது ஆர்வமுள்ள 30 பெண் நூற்பாளர்கள் தேவை.

(இ) நத்தம் தாலூகாவில் ஊராளிப்பட்டி என்கிற கிராமத்தில் 3–8–1983 அன்று ஒரு கிராமிய நூற்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இக் கிராமிய நூற்பு நிலையம் ஆரம்பநாள் முதல் நிலைய நூற்பாளர்கள் பணிக்கு சரியாக வராததினால் 1990 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் இது மூடப்பட்டது. இத் தாலூகாவில் மற்ற இடங்களிலும் நூற்பாளர்கள் தேவையான அளவு முன்வராததாலும் தேவையான கட்டிடங்கள் கிடைக்க வில்லை என்பதாலும் கிராமிய நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்க முடியவில்லை.



2 செப்டம்பர் 23]

இணைப்பு.

திண்டுக்கல்— அண்ணா மாவட்டத்தில் இயங்கும் கிராமிய நூற்பு நிலையங்களின் பெயர்கள்.

1. பொருளூர்.
2. பாலசமுத்திரம்.
3. தொப்பம்பட்டி.
4. பி. ஜி. வலசு.
5. புளியம்பட்டி.
6. கீரனூர்
7. சிவஞானபுரம்.
8. அழகம்பட்டி.
9. பெரியகாயம்புத்தூர்.
10. வள்ளிபட்டி.
11. இடையன்வலசு.
12. நரிகல் பெட்டி.
13. அனுமந்தராயன்கோட்டை.
14. சில்லிவார்பட்டி.
15. பூசாரிபட்டி.
16. அம்மாபட்டி.
17. அம்பாத் துரை.
18. சின்னாளப்பட்டி—1.
19. சின்னாளப்பட்டி—2.
20. சின்னாளப்பட்டி—3.

[1992 செப்டம்பர் 2

200—

## தமிழகத்திலுள்ள சர்வோதய சங்கங்கள்.

வினா எண். 7887—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை சர்வோதய சங்கங்கள் உள்ளன? அவற்றின் பணிகள் யாவை?

(ஆ) அச்சங்களுக்கு அரசு தள்ளுபடி மான்யம் வழங்குகிறதா?

(இ) ஆம் எனில், நடப்பு ஆண்டு வரை மான்யத் தொகை வழங்கப்பட்டு விட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 66 சர்வோதய சங்கங்கள் தற்போது செயல்படுகின்றன. கதர் கிராமத் தொழில் திட்டங்கள் இச்சங்கங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிதியாண்டும் முடிந்த பிறகு அவ்வருடத்திற்கான தள்ளுபடி மான்யக் கோரிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டு பெறப்படுகின்றன. நடப்பு ஆண்டினை பொறுத்தமட்டில் 31—3—1992-க்குப் பிறகு தள்ளுபடி மான்யக் கோரிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1992 செப்டம்பர் 23]

201—

## கணக்குகள் இணக்கம் செய்யப்படாமல் இருக்கும் தொகை.

வினா எண் 2830—திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1984-85 ஆம் ஆண்டு முதல் 1988-89 வரையில் ஏறத்தாழ 619.00 கோடி ரூபாய் அளவிற்கு தவறான வகைப்பாடுகளின் கீழ் கணக்குகள் இணக்கம் செய்யப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) தவறுக்குப் பொறுப்பாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுக்கு அவசியமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கணக்குத் துறைத் தலைவரின் 14-11-1991 நாளிட்ட நேர்முகக் கடிதத்தின்படி இணக்கம் செய்யப்படாமல் இருக்கும் மொத்தத் தொகை ரூ. 135.13 கோடியாகக் குறைக்கப்பட்டது.

(இ) இது குறித்து ஆய்வு செய்ய நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

202—

## தமிழக அரசு பரிசுச் சீட்டுத் துறையால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுக்கள்.

வினா எண் 8737—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழக அரசு பரிசுச் சீட்டுத் துறையால் தற்பொழுது எத்தனை வகையான பரிசுச் சீட்டுக்கள் நடத்தப்படுகின்றன?

(ஆ) இவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

(இ) இவற்றின் விற்பனையை அதிகரிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் துறையால் தற்பொழுது ஆறு வகையான பரிசுச் சீட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம், விற்பனை வரி செலுத்தியது போக ஆண்டுக்கு சராசரியாக சுமார் ரூ. 2 கோடி நிகர வருமானம் கிடைக்கிறது.

(இ) பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்கான வழி வகைகளை ஆராய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி அரசு அதிகாரிகள் மட்டக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

203—

## திருச்சி நகரத்தில் பேருந்து நிலையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல்.

வினா எண் 2474—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி நகரத்தில் இராணுவ மையத்திற்கான நிலத்தில் ஒரு பகுதியை கையகப்படுத்துவதற்கு மத்திய அரசினை அணுகி, அந்த நிலத்தில் பேருந்து நிலையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய்த்துறை அமைச்சர்:

இராணுவ மையத்திற்கான நிலங்கள் அவர்களது உபயோகத்திற்கு வேண்டும் என்பதால் நிலத்தை மாநில அரசுக்கு மாற்ற முடியாது.



210—

## பட்டா வழங்க நடவடிக்கை.

வினா எண் 2700—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் மாவடுகுறிச்சி ஊராட்சி ஆண்டவன் கோவில் சர்வே எண் 233/8-ல் 17 பேருக்கு பட்டா வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் வருவாய்த்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம் பேராவூரணி வட்டம் மாவடுக்குறிச்சி கிராமத்தில் புல எண் 233/8 குளம் புறம்போக்கு என வகைப்பாடு கொண்டது. நீர்நிலம் புறம்போக்கு நிலங்களை ஒப்படைச் செய்யத் தடை உள்ளதால் மேற்கண்ட நிலத்தில் அடமானம் செய்வது குறித்து அரசிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

205—

## மனைப்பட்டா வழங்க நடவடிக்கை.

வினா எண் 4117—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அருள்மொழித்தேவன் கிராமத்திற்கு நத்தம் புறம்போக்கு நிலத்தில் மனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நத்தம் நில அளவைப் பணியில் பட்டா வழங்க அவரவர்கள் இருக்கும் இடத்தை அளந்து அறிவிப்பு கொடுக்கப்பட்டு விசாரணை செய்து விட்டதாக தெரிய வருவதால் மார்ச் 1992 மாத இறுதிக்குள் பட்டா வழங்கப்படும்.

[1992 செப்டம்பர் 23

206—

கிணறு தோண்டும்போது இறந்தவர்களுக்கு அரசு வழங்கிய உதவித் தொகை.

வினா எண் 4945—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டில் கிணறு தோண்டும்போது இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களுக்கு அரசு வழங்கிய உதவித் தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மூன்று பேர்.

(ஆ) அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணமாக தலா ரூ. 10,000 (மொத்தம் ரூ. 30,000) வழங்கப்பட்டுள்ளது.

207—

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 6— திரு. இரா. நடேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர்;

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 செப்டம்பர் 23]

208—

உசிலம்பட்டியில் பெண்கள் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 264—திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பெண்கள் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

209—

மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்.

வினா எண் 2085—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை நகரில் உள்ள ராணியார் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 செப்டம்பர் 23

210—

பள்ளிகளில் மாணவர்கள் விளையாட போதிய இடவசதி செய்ய நடவடிக்கை.

வினா எண் 2579—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பல பள்ளிகளில் மாணவர்கள் விளையாட உடற் பயிற்சி செய்ய போதிய இடவசதி இல்லாததால் அருகில் உள்ள தனியார் நிலத்தை கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இடவசதி இல்லாத பள்ளிகளிடமிருந்து சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக தேவையான நிலத்தை கையகப்படுத்த கருத்துரு கிடைக்கப் பெற்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

211—

ஓராசிரியர் பள்ளி தொடங்க நடவடிக்கை

வினா எண் 3001—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருகளூர், ஆர். கே. நகரில் ஓராசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

212—

வினா எண் 3075—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புதுப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயலில் ஓராசிரியர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

213—

கொரடாச்சேரி பெண்கள் உயர்நிலைப்பள்ளி

வினா எண் 3282—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருவாரூர் தொகுதியைச் சார்ந்த கொரடாச்சேரி பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் ஓரிரு வகுப்பறைகள் மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளதால் உடன் சீரமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போது இல்லை. வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கு ஏற்ப பழுதுப்பணிகள் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

214—

நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பணிமாற்றம்.

வினா எண் 5169—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகளுக்கு பணிமாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிகளுக்கு பணிமாற்றம் செய்ய செயற் குறிப்பு அரசிடம் பரிசீலனையில் இல்லை.

[1992 செப்டம்பர் 23

215—

## கோடாலி கருப்பூர் அரசு உயர்நிலைப்பள்ளி

வினா எண் 5247—திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, கோடாலி கருப்பூர் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிடத்திற்கு மேல் ஷீட் போடாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மேற்கூரையில் ஆஸ்பெஸ்டாஸ் தகடு போடப்பட்டு 25—2—1992 அன்று தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

216—

## நூல் நிலையம் திறக்க நடவடிக்கை

வினா எண் 5663—திரு. வெ. பெரியசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம் பர்கூர் ஊராட்சியில் எப்போது நூல் நிலையம் திறக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போது இல்லை.

217—

## பெண்கள் மேல் நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 6210—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ போளூர் தொகுதி களம்பூரில் பெண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

218—

## நூல் நிலையம் அமைத்தல்

வினா எண். 6619—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் ராமர் கோவில் அருகில் ஒரு நூல் நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போது இல்லை.

219—

## நல்ல அறிஞர்களின் நூல்கள் பொது நூலகங்களுக்கு கிடைக்க நடவடிக்கை.

வினா எண். 6653—திரு. உ. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொது நூலகங்களுக்கு அரசு வாங்கும் நூல்களுக்கு பக்கத்திற்கு இவ்வளவு பணம் என விலை நிர்ணயம் செய்யப் படுவதால் நல்ல அறிஞர்களின் நூல்கள் பொது நூலகங்களுக்கு கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான மாற்றுத் திட்டங்கள் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பொது நூலகங்களுக்காக அரசு -கும் நூல்களுக்கு பக்கத்துக்கு இவ்வளவு தொகை என வி- நிர்ணயம் செய்திருந்தபோதிலும் நல்ல அறிஞர்களின் நூல்கள்

[1992 செப்டம்பர் 23

நூல் தேர்வுக்குழு பரிந்துரைப்படி பொது நூலகங்களுக்கு வாங்கி வழங்கப்படுகின்றன. எனவே, நல்ல அறிஞர்களின் நூல்கள் பொது நூலகங்களுக்குக் கிடைப்பதில்லையென்பது உண்மையல்ல.

220—

நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண். 7021— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கொன்றைக்காட்டில் நூல் நிலையம் ஒன்று வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தற்போது இல்லை.

221—

அறிவியல் கூடம் அமைத்தல்.

வினா எண். 7139— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கருவிக்குறிச்சியில் அரசு உயர்நிலைப்பள்ளியில் அறிவியல் கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம், கல்வி அமைச்சர்,

இல்லை.

222—

கிளை நூலகம் அமைத்தல்.

வினா எண். 7167— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், கீழபுனவாசலில் கிளை நூலகம் ஒன்று தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போது இல்லை.

223—

நூலகம் அமைத்தல்.

வினா எண். 7282— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலத்தில் நூலகம் ஒன்று அமைத்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போது இல்லை.

224—

நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண். 7304— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு நூல் நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போது இல்லை.

225—

நிறுத்தப்பட்ட நகர விளையாட்டுப் போட்டிகளை மீண்டும் நடத்த நடவடிக்கை.

வினா எண். 7836— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு மாவட்டத்திலும், நிறுத்தப்பட்ட நகர விளையாட்டுப் போட்டிகளை மீண்டும் நடத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

நகர விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதால், விளையாட்டு முன்னேற்றத்தில் யாதொரு பயனும் கிட்டவில்லை. எனவே, நிறுத்தப்பட்ட நகர விளையாட்டுகளை மீண்டும் நடத்த, செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

226—

மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கல்.

வினா எண். 8211—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கல்வி ஆண்டு துவக்கத்தில் நெரிசலை தவிர்த்து புத்தகங்களை மாணவர்கள் எளிதில் வாங்கிட நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கிட அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

1 முதல் 12 வகுப்பு வரையிலுள்ள பாடநூல்களை கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்னதாகவே மாணவர்களுக்கு தட்டுப்பாடின்றி எளிதில் கிடைக்கும் வகையில் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் திட்டமிட்டு சிறப்புற செயல்பட்டு விநியோகப் பணியை மேற்கொள்கிறது. எனவே, நியாயவிலைக் கடைகள் மூலம் பாடநூல்கள் விநியோகம் செய்ய வேண்டிய நிலை எழவில்லை.

227—

பெண் மருத்துவர் பணியிடம் நிரப்ப நடவடிக்கை.

வினா எண். 3413—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி நகராட்சியால் நடத்தப்படும் அண்ணாமலை மகப்பேறு மருத்துவமனையில் பெண் மருத்துவர் பணியிடம் ஒன்று நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா ? ''



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. சு. முததுசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பழனி நகராட்சி அண்ணாமலை மகப்பேறு மருத்துவமனையில் பெண மருத்துவ அலுவலர் பணியிடம் ஒன்றும், குடும்பநலத்திட்ட பெண் மருத்துவ அலுவலர் பணியிடம் ஒன்றும், ஆக இரண்டு மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் உண்டு. இதில் குடும்பநலத்திட்ட பெண் மருத்துவ அலுவலர் பணியிடம் மட்டும் 1—1—1991 முதல் 3—3—1991 முடிய காலியாக இருந்தது. அப்பணியிடம் 4—3—1991 முதல் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. (அண்ணாமலை மகப்பேறு விடுதி பெண் மருத்துவ அலுவலர் பணியிடத்தில் திருமதி என். ஹேமலதா என்பவர் 21—12—1990 முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்).

228—

மூளைக்காய்ச்சல் நோய் வராமல் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண். 8065—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மூளைக் காய்ச்சலுக்கு மூலகாரணம் என்ன ?

(ஆ) 1992 ஆம் ஆண்டு மூளைக் காய்ச்சல் நோய்க்குப் பலியானவர்கள் எத்தனை பேர்கள்?

(இ) மூளைக் காய்ச்சல் வராமல் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மூளைக் காய்ச்சல் என்பது மூளையைப் பாதிக்கின்ற ஒரு நோய், தொற்று நோய் கிருமியான ஜப்பானிய 'வைரஸ் (Japanese-B-Encephalitis Virus) என்ற நோய்க்கிருமி, மூளையின் உறை, முதுகுத்தண்டு ஆகிய வற்றைப் பாதிப்பதால் இந் நோய் வருகிறது. பறவைகள் மற்றும் பன்றிகள் உடலில் உள்ள வைரஸ் கிருமிகள், சிலவகை கொசுக்களினால் சுமந்து பரப்பப்

படுகிறது. இந்த கொசுக்களால் வைரஸ் கிருமிகள் பறவைகள் மற்றும் பன்றிகளிடமிருந்து மனித உயிர்களுக்கு பரப்பப்பட்டு அந்த மனிதர்கள் இறக்கும் வரை தொற்றிக்கொள்கிறது.

(ஆ) 122 நபர்கள் இந்நோயினால் இறந்தனர்.

(இ) மலாத்தியான் புகை போக்கி மூலம் புகையினை செலுத்தியும், பூச்சிக் கொல்லி மருந்துகளை செலுத்தி புகை தெளிப்பான் மூலமும் (Fogging Operation) பன்றிக் கொட்டில்கள், இலாயங்கள், மாட்டுத் தொட்டில்கள் முதலான பாதிக்கப்பட்ட இடங்களில் புகையிடுதல் மூலமும் மேற்கொண்டு மூளை காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இந்நோய் கண்ட கிராமங்கள் மற்றும் இந்நோயினால் பாதிக்கப்படும் என அறியப்படுகின்ற இடங்கல் தீவிர கண்காணிப்பின்மூலம் நோய் கண்டவர்களை விரைவில் கண்டுபிடித்து, நோய்ப் பரவாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

229—

சவுக்கு மரங்கள் தீவிர சாகுபடி செய்ய நடவடிக்கை.

வினா எண். 5426—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அண்டை மாநில வியாபார சந்தைகளில் பணப்பயிராக விளங்கும் வேதாரண்யம்தொகுதியில் விளையும் சவுக்குமரங்களின் தீவிர சாகுபடிக்கு அரசு என்ன முயற்சி மேற்கொண்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இயன்ற வரையில் ஆற்றுப்படுகைகளிலும், மணற்பாங்கான நிலங்களிலும் சவுக்கு விளையக்கூடிய புறம்போக்கு நிலங்களிலும் மற்றும் தகுதியிள்ள அரசு பொதுநிலங்களிலும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் துறை ஒப்புதலுடன் கிராம மக்கள் ஒத்துழைப்புடனும் சமூகக் காடுகள் பிரிவினால் சவுக்கு பயிரிடப்படுகிறது.

மேலும் இப்பயிருக்கு ஓரிரு ஆண்டுகளுக்காவது கோடைகாலங்களில் மட்டுமாவது நீர் ஊற்றி பாதுகாக்க வேண்டியுள்ளதால் அந்த அளவு நீர் வசதியுள்ள இடங்கள் அதிகம் இல்லாததாலும், ஆடு மாடுகளினால் சேதம் ஏற்படாத இடங்களாக இருக்க வேண்டியுள்ளதாலும் சவுக்கு வளரக்கூடிய ஒதுக்குக் காடுகள் அதிகம் இல்லாததனாலும் மிக அதிக அளவில் சவுக்கு மரங்கள் வளர்க்க இயலவில்லை.



இருப்பினும் இயன்றவரை சவுக்கு மரங்கள் வளர்க்கத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. விவசாயத்திற்கு தகுதியில்லாத மணற்பாங்கானத் தனியார் நிலங்களிலும், வரப்பு கரைகளிலும் சவுக்கு வளர்க்க ஊக்கம் அளிக்கப்படுகிறது.

230—

கலங்கரை விளக்கம் அமைத்தல்.

வினா எண். 6897—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கணேசபுரம் கலங்கரை விளக்கம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

231—

வினா எண். 6970—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னமனை கடற்கரையில் கலங்கரை விளக்கு அமைத்துக் கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா :

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து துறை அமைச்சர் :

இல்லை.

232—

**பஸ் கட்டண உயர்வை ரத்து செய்ய அல்லது குறைக்க நடவடிக்கை.**

வினா எண். 7467— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை அளிப்பாரா:

சமீபத்தில் உயர்த்திய பஸ் கட்டண உயர்வை ரத்துசெய்ய அல்லது குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா:

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சமீபத்தில் உயர்த்திய பஸ் கட்டண உயர்வை ரத்து செய்ய அல்லது குறைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

233—

**தமிழ்நாட்டிலுள்ள சிறிய துறைமுகங்கள்.**

வினா எண். 8292— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு சிறிய துறைமுகங்கள் உள்ளன?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் அவற்றின் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் ஆண்டுவாரியாக எவ்வளவு?

(இ) அவற்றின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் எவ்வளவு செலவிடப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) சிறு துறைமுகங்கள்:

1. இராமேஸ்வரம் துறைமுகம்.
2. பாம்பன் துறைமுகம்.



3. வாலிநோக்கம் துறைமுகம்.
4. குளச்சல் துறைமுகம்.
5. கன்னியாகுமரி துறைமுகம்.

| | ஆண்டு. | | வருமானம். ரூ. |
|---|---|---|---|
| (ஆ) | 1989–90 | .. | 44,20,547 |
| | 1990–91 | .. | 43,27,478 |
| | 1991–92 | .. | 38,95,128 |
| (இ) | 1989–90 | .. | 78,76,173 |
| | 1990–91 | .. | 92,39,929 |
| | 1991–92 | .. | 94,39,886 |

234—

**ரயில் பயண நேரத்தை குறைக்க நடவடிக்கை.**

வினா எண். 8435— திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துச் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

ஆத்தூரிலிருந்து விருத்தாச்சலம் வழியாக சென்னை வரும் ரயில் பயணம் சுமார் 10 மணி நேரத்திற்கு மேல் ஆவதால் இப் பயண நேரத்தை குறைத்து துரிதமாக சென்னைக்கு வர மத்திய அரசிடம் மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அவசியமில்லையென கருதப்படுகிறது.

235—

**அந்தியூர் தொகுதியில் விசைத்தறிகள் இயக்க உரிமம்.**

வினா எண். 643— திரு வே. பெரியசாமி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் 1989–90, 1990–91-ல் எத்தனை விசைத்தறிகள் இயக்க அரசு உரிமம் வழங்கியுள்ளது?

[1992 செப்டம்பர் 23

(ஆ) உரிமம் பெறாமல் விசைத்தறி ஓட்டுபவர்கள் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ?

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் 1989-90-ல் 313 விசைத்தறிகள் இயக்கவும் 1990-91-ல் 82 விசைத்தறிகள் இயக்கவும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பகுதியில் உரிமம் பெறாமல் விசைத்தறி ஓட்டுபவர்கள் எவரும் இல்லை.

236—

ஏற்றுமதியான கைத்தறித்துணி மற்றும் ஆடைகளின் மதிப்பு

வினா எண். 6532—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து கூட்டுறவு சொசைட்டி மற்றும் தனியார் மூலம் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி ஆன கைத்தறித்துணி மற்றும், ஆடைகளின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) இதற்கு முந்திய ஆண்டுகளைவிட கைத்தறித்துணிகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி குறைந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் தயார் செய்து கோ-ஆப்டெக்ஸ் மூலமும், தனியார் உற்பத்தி செய்து ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்தின்



1992 செப்டம்பர் 23]

மூலமும் ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறி துணி மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி புள்ளி விவரம் கீழே கொடுக்கப்படுகிறது:—

| | 1988–89 | 1989–90 | 1990–91 |
|---|---|---|---|
| | | | (ரூபாய் கோடியில்.) |
| 1. கோ-ஆப்டெக்ஸ் மூலம் ஏற்றுமதி மதிப்பு | 0.74 | 1.09 | 0.99 |
| 2. ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்தின் மூலம் மதிப்பு | 70.61 | 84.37 | 100.16 |
| மொத்தம் | 71.35 | 85.46 | 101.15 |

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

237—

கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்

வினா எண். 8919—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மொடக்குறிச்சித் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

238—

புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுதல்.

வினா எண். 3815—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம் தொண்டியர்காடு புயல் பாதுகாப்பு இல்லம் கட்டிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

239—

தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 4859—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் உச்சிகொத்தை கிராம அருந்ததியர் மக்கள் தெரு விளக்கு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி — கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் உச்சிகொத்தை கிராம அருந்ததியர் மக்கள் வாழும் பகுதியில் ஏற்கனவே ஒரு தெரு விளக்கு பொருத்தப்பட்டு தற்சமயம் எரியும் நிலையில் உள்ளது. இப்பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குக் கோரி மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.



240—

குடிசைக்கு இலவச மின் விளக்கு திட்டம்.

வினா எண். 6006—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு, பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைக்கு ஒரு இலவச மின் விளக்கு திட்டத்தின் படி நத்தம் தொகுதி சானார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியப் பகுதிகளில் இதுவரை இணைப்புத் தரப்பட்ட மின் விளக்குகள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இன்னும் எத்தனை மின் விளக்கு இணைப்பு அளிக்கப் படாமல் இருக்கிறது ?

(இ) இவ்வாண்டிலேனும் அத்திட்டத்தின்படி அனைத்திற்கும் இணைப்புகள் அளிக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) குடிசைக்கு ஒரு இலவச மின் விளக்கு திட்டத்தின் படி நத்தம் தொகுதியில் இதுவரை 3,207 குடிசை மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) 414 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்க விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

(இ) 1991–92 ஆம் ஆண்டு அப்பகுதி இலக்கீடு எய்தப் பெற்று விட்டபடியால் நிலுவையில் உள்ள 414 குடிசை விண்ணப்பங்களுக்கு கீழ்க்கண்டவாறு மின் வசதியளிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1992–93-ல் | 197 எண்ணிக்கை. |
| 1993–94-ல் | 217 எண்ணிக்கை. |
| மொத்தம் | 414 எண்ணிக்கை. |

[1992 செப்டம்பர் 23

241—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புதிதாக அதிக அறைகள் கொண்ட விடுதி கட்டுதல்.

வினா எண். 6059—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதி புதிதாக அதிக அறைகள் கொண்ட கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நிதிநிலைக்கேற்ப கட்டப்படும்.

242—

புயல் பாதுகாப்புக் கட்டிடம் கட்டுதல்

வினா எண். 6550— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப் பட்டினத்திற்கு புயல் பாதுகாப்புக்கட்டிடம் கட்டிக் கொடுப் பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.



1992 செப்டம்பர் 23]

243—

குடிநீர்த் தொட்டியைச் சீர்செய்தல்

வினா எண். 666— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா?

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் குடி நீர்த் தொட்டி பழுதடைந்துள்ளதால் உடனடியாகச் சீர்செய்திட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, புதுக் கோட்டை உள்ளூர் ஊராட்சியில் இரண்டு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் உள்ளது. அதில் ஒன்று பழுது அடைந்ததை 2—9—1991இல் சீர் செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

244—

தெரு விளக்கை மீண்டும் எரிய வைக்க நடவடிக்கை

வினா எண். 1880— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரத்தில் தெரு விளக்கை மீண்டும் எரிய வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அனந்தகோபாலபுரத் தில் தெரு விளக்குகளை மீண்டும் எரிய வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அனைத்து தெரு விளக்குகளும் தற்போது எரி கின்றன.

[1992 செப்டம்பர் 23

245—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் அமைத்தல்.

வினா எண். 1883—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கீழக்கொள்ளுக்காடு கீழத் தெருவிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கீழக்கொள்ளுக்காடு, கீழத்தெருவிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது ஆழ் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் தற்போது செயற் குறிப்பு இல்லை.

246—

மேல்நிலைத் நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண். 1913— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டையைச் சேர்ந்த சூரங்கொல்லையில் கீழ்ப்பகுதியில் போர்வெல் போட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நடுவிக்கோட்டையைச் சேர்ந்த சூரங்கொல்லையில் தற்பொழுதுள்ள இரண்டு கையிறைப்பான்கள் போதுமானதாகும். ஆழ் துளைக் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.



164948

1992 செப்டம்பர் 23]

247—

வினா எண். 1999— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ) ஆதி திராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கு) ஆதி திராவிடர்களுக்கு ஒரு கையிறைப்பானும், 2 பொதுக் குழாய்களும் உள்ளன. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் தற்போது செயற் குறிப்பு இல்லை.

248—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டர் இணைப்பு.

வினா எண். 2228— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேளார் தெருவிலுள்ள புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைத்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேளார் தெருவிலுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைத்துத் தண்ணீர் சப்ளை செய்ய மின் இணைப்பு வேலைகள் நடப்பில் உள்ளன.



V211,31(N92

249—

போர்வெல் அமைத்தல்

வினா எண். 2518— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆண்டார் கோட்டை வடக்கில் ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், ஆண்டார்கோட்டையில் 1982-83 ஆம் ஆண்டு ஒரு மின்விசை திட்டம் எம்.என்.பி. மூலம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. ஆகையால், மேற்படியூர் வடக்கில் ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

250—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண். 2550— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன் காடு ஊராட்சி பனஞ்சேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன்காடு ஊராட்சி பனஞ்சேரியில் 1990 வாரிய கணக்கின்படி 410 மக்கட் தொகை உள்ளது. இக்கிராமத்தில் ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட தற்போது அரசிடம் செயற் குறிப்பு இல்லை.



251—

கப்பிச்சாலை அமைத்தல்.

வினா எண். 2524—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அறந்தாங்கி மெயின் சாலையிலிருந்து பட்டத் தூரணி ஊருக்குள் செல்லும் சாலையை செப்பனிட்டு கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி மெயின் சாலையிலிருந்து பட்டத் தூரணி ஊருக்குள் செல்லும் சாலை மொத்தம் 1.2 கி. மீட்டர் நீளமுள்ள ஊராட்சி சாலையாகும். இதில் 0.4 கி.மீ. தூரம் கருங்கல் கப்பிச் சாலையாகவும் மீதியுள்ள 0.8 கி.மீ. தூரம் சிவப்பு கப்பிச் சாலையாகவும் அமைந்துள்ளது. இச் சாலையை செப்பனிட தற்சமயம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

252—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.

வினா எண். 2548—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் வலப்பிரமன் காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்து சரிவர இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றிய வலப்பிரமன்காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுது பார்க்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

[1992 செப்டம்பர் 23

253 —

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைப்பு கொடுத்தல்.

வினா எண். 2655—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஊராட்சி மாதாகோயில் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைப்பு கொடுத்து இயங்கச் செய்யும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஊராட்சி மாதாகோவில் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்குத் மின் மோட்டார் இணைப்பு கொடுக்க, மின் இணைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை அனைத்தும் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு, மின்சார வாரியம் மின் இணைப்புத் தர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

254 —

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 2684—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் ஊராட்சியைச் சேர்ந்த செட்டிக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

செட்டிக் காட்டில் ஒரு விசைப்பம்பு திட்டம் அமைக்கப் பட்டு தற்பொழுது முற்றிலும் நிறைவுபெறும் கிராமமாக வகை செய்யப்பட்டு உள்ளது. மேலும் ஒரு மேல்நிலை நீர்த் தேக்க தொட்டித் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.



1992 செப்டம்பர் 23]

255—

## பழுதுபட்ட போர்வெல்லைச் சரிசெய்தல்.

வினா எண். 2696—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கீழக்காட்டில் உள்ள பழுதுபட்ட போர்வெல்லை (Borewell) சரிபார்த்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் ஊராட்சி கீழக்காடு கிராமத்தில் இரண்டு கையிறைப்பான்கள் உள்ளன. அவற்றில் 1982-83-ல் நிறுவப்பட்ட ஒரு கையிறைப்பான் தூர்ந்து போய் பயனற்றதாகிவிட்டது. இதற்கு பதிலாக மாற்று ஆழ் குழாய் கிணறு அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட உள்ளது.

256—

## கப்பிச்சாலை அமைத்தல்.

வினா எண். 2714—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பைங்காவிலிருந்து ஐயனார் கோவில் செல்லும் மண் சாலையை கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் கப்பிச் சாலையை தார்ச் சாலையாக்க மட்டுமே வழிவகையுள்ளதால் பேராவூரணி ஒன்றியம் பைங்காவிலிருந்து ஐயனார் கோவில் செல்லும் மண் சாலையை கப்பிச்சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

[1992 செப்டம்பர் 23

257—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.**

வினா எண். 2786—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெளிமடத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியிலுள்ள வெளிமடத்தில் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கிடையாது. ஆனால் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இத்தொட்டியில் பழுதுபட்ட குழாய்கள் சீர் செய்யப்பட்டு இக்கிராமத்திற்கு தற்போது தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கடலோர கிராமங்களுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் இரண்டாம் புலிக்காட்டில் இருந்தும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

258—

**ஒரே கதவு இலக்கத்தில் 500-க்கு மேற்பட்ட வீடுகள்.**

வினா எண் 2804—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி நகராட்சியில் ஒரே கதவு இலக்கத்தில் 500-க்கு மேற்பட்ட வீடுகள் எத்தனை வார்டுகளில் உள்ளன?

(ஆ) அவற்றை தனித்தனியாக இலக்கம் இட அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) ஒரு வார்டிலும் இல்லை.



1992 செப்டம்பர் 23]

(ஆ) பரமக்குடி நகராட்சிப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் குடிசைகளுக்கு தனித்தனி எண்ணாகக் கதவிலக்கம் கொடுப்பதற்கு பதில் ஒரே கதவிலக்கத்தின் ஏ, பி. என்ற வரிசையில் கதவிலக்கம் பல வருடங்களுக்கு முன்பே கொடுக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. தற்போது கதவிலக்கங்கள் கண்டுபிடிப்பதில் சிரமங்கள் உள்ளதால் பொது மக்களின் நலன் கருதி பழைய கதவிலக்கங்களை மாற்றி ஒவ்வொரு தெருவிற்கும் முறைப்படி வரிசையாக கதவிலக்கம் கொடுப்பதற்கு முடிவெடுத்து இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நகராட்சி ஆணையர் எடுத்து வருகிறார்.

259—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.**

வினா எண் 2859—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் இரண்டு பொதுக் குழாய் மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவே இக்குடியிருப்பிற்குப் போதுமானது. ஆகையால், தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

260—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.**

வினா எண் 3006—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சி புதுக் குடியிருப்பிற்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 செப்டம்பர் 23

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சி புதுக்குடியிருப்பிற்கு 1984—85-ஆம் நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இதுவே இக்கிராமத்திற்குப் போதுமானதாக உள்ளது. ஆகையால் புதியதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

261—

தார்ச் சாலை அமைத்தல்.

வினா எண் 3013—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டினம் கடற்கரை செல்லும் சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், சம்பைப்பட்டினம் கடற்கரை செல்லும் சாலை 0.4. கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதில் பேருந்து போக்குவரத்து இல்லாததால் இதை தார்ச்சாலையாக மாற்றிட இயலாது. எனவே இது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

262—

மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்த்தல்.

வினா எண் 3014—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டினம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்



1992 செப்டம்பர் 23]

உள்ள மோட்டார் பழுதாக உள்ளதாலும், பைப் லயன்கள் உடைந்துள்ளதாலும், உடன் பழுது பார்த்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், சம்பைப் பட்டினம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் பழுதினை செப்பனிட்டு, உடைந்த பைப் லைகன்ஸை சீர் செய்து தற்போது தண்ணீர் முறையாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

263—

தெருவிளக்கு விஸ்தரிப்பு.

வினா எண் 3087—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கூத்தாடி வயல் ஆதிதிராவிடர் தெருவில் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சோலைக்காடு ஊராட்சியில் அடங்கிய குக்கிராமம் கூத்தாடிவயல். இங்கு 22 ஆதிதிராவிடர் குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த குக்கிராமங்களுக்கு முன்பே தெரு விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. முக்கிய சாலையிலிருந்து உள்ளடங்கிய பகுதிக்கு மின் விஸ்தரிப்பு செய்ய ஊராட்சியில் போதுமான நிதி வசதியில்லை. 1991—92 ஆம் ஆண்டின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கூத்தாடிவயல் ஆதி திராவிடர் தெருவிற்கு மின்விளக்கு விஸ்தரிப்பு பணியினை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[1992 செப்டம்பர் 23

264—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 3137—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடி ஆதிதிராவிடர் தெருவில் தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடி ஆதி திராவிடர் காலனியில் 1986-ல் ஏ.ஆர்.பி. மூலம் நிறுவப்பெற்ற தென்னங்குடி ஓ.எச்.டி. மூலம் 2 குடிநீர் மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

265—

நெய்ச்சொத்துக் குளத்தை பராமரித்தல்.

வினா எண் 3138—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தென்னக்குடி ஆதி திராவிடர் தெருவில் உள்ள நெய்ச்சொத்துப்க்குளத்தை பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் தென்னக்குடி ஆதி திராவிடர் தெரு நெய்ச்சொத்துக் குளத்தை பராமரித்துக் கொடுக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.



1992 செப்டம்பர் 23]

266—

சென்னை நகரில் இரவு நேர தங்கும் விடுதி.

வினா எண் 3199—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் நடைபாதைவாசிகளுக்கு ( Pavement dwellers ) இரவு நேர தங்கும் விடுதி (Night Shelter) அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(ஆ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில், நடைபாதையில் வசிப்போர்களுக்கு இரவு நேரத்தில் தங்கும் வகையில், கண்ணப்பர் திடல், பேசின் பாலம் சாலை மற்றும் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி மையம் ஆகிய மூன்று இடங்களில் இரவு நேர தங்கும் விடுதிகள் கட்ட சென்னை மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்டது. முதல் கட்டமாக கண்ணப்பர் திடலில் இரவுநேர தங்கும் விடுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மற்ற இரு இடங்களில் கட்டுவதற்கு நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

267—

வைகை அணை நீர்.

வினா எண் 3368—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீருக்காக வைகை அணை நீரை நம்பியுள்ள இராமநாதபுரம் மாவட்ட மக்கள் எத்தனை சதவீதம்?

(ஆ) இப்போது மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

[1992 செப்டம்பர் 23

**விடை—**

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தின் மொத்த மக்கட் தொகை 10.22 இலட்சம் ஆகும். இதில் ஏறத்தாழ 35 சதவீதம் மக்கள் குடிநீருக்காக வைகை அணை நீரை நம்பியுள்ளனர்.

(ஆ) இல்லை.

**268—**

குடிநீர் இணைப்பு வழங்கல்.

வினா எண் 3622—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

''ராதபுரம் தொகுதி, குட்டம் பஞ்சாயத்தில் கூடுதாளை பகுதிக்கு குட்டம் பஞ்சாயத்து மேலநிலை தொட்டியிலிருந்து குடிநீர் இணைப்பு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

கூடுதாளைக்கு இந்த ஆண்டு (1992–93-ல்) தனியாக மின்விசை பம்பு மூலம் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் எடுத்துக் கொள்ள ஆவன செய்யப்படும்.

**269—**

குடிதண்ணீர் வசதி செய்தல்.

வினா எண் 4138.—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கேந்திரக்கிள்ளையில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி குடிதண்ணீர் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



1992 செப்டம்பர் 23]

**விடை—**

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம். இவ்வாண்டில் (1991–92) விசை இறைப்பான் திட்டத்திற்கான குழாய்க் கிணறு போடப் பட்டு, வரும் நிதி ஆண்டிற்குள் (1992–93) திட்டத்தை முழுமையாக முடித்து மக்கள்பயனுக்குக் கொண்டுவர ஆவன செய்யப் பட்டுள்ளது.

**270—**

ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரோடு ரோலர் வழங்கல்.

வினா எண் 4513—திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாலைகள் விரைவிலே பழுதுபார்ப்பதற்கு ரோடு ரோலர் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் 51 ஊராட்சி ஒன்றியங்களில் சாலை உருளைகள் உள்ளன. இவற்றில் பல ஊராட்சி ஒன்றியங்களில் சாலை உருளைகள் வருடத்தில் பல நாட்கள் உபயோகப்படுத்தபடாமலே உள்ளன. இவ்வுருளைகளை மற்ற ஒன்றியங்களும் பயன்படுத்தலாம். மேலும் சாலை உருளை இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் அவ்வட்டாரத்திலுள்ள நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரிடமிருந்து சாலை உருளைகளை வாடகைக்குப் பெற வாய்ப்புள்ளது. ஆகவே சாலைகளை பழுதுபார்ப்பதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனியாக சாலை உருளை தேவை இருப்பதான சூழ்நிலை தற்போது இல்லை.

271—

தொலைக்காட்சிப் பெட்டியை பழுது பார்த்தல்.

வினா எண் 7315—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், உப்புவிடுதி பழுதுபட்ட தொலைக்காட்சிப் பெட்டியை பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்க்கப்பட்டு, 17-7-1991 முதல் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

272—

அமுதம் அங்காடி.

வினா எண் 7019—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மறீறும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கொன்றைக் காட்டில் இயங்கி வரும் அமுதம் அங்காடியை நிரந்தரம் ஆக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கொன்றைக் காட்டில் தற்சமயம் இயங்கிவரும் அங்காடி, பகுதி நேரக் கடையாகும். இந்தக் கடையில் 429 குடும்ப அட்டைகள் இணைக்கப் பட்டுள்ளன. மேற்படி நியாயவிலைக் கடைகள் திறக்கப்படுவதன் காலகம் கிராமத்திலுள்ள முழுநேரக் கடையில் கொன்றைக்காடு கிராம குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருந்தன. இக்கிராம மக்கள் அதிக தூரம் நடந்து சென்று காலகம் கிராமத்தில் அத்தியாவசியப் பண்டங்கள் பெற்று வந்ததைக் கருத்திற்கொண்டு, கொன்றைக்காட்டில் பகுதி நேரக்





கடை திறக்கப்பட்டது. காலகம், கொன்றைக்காடு ஆகிய இரு கிராம நியாய விலைக் கடைகளும் ஒரே கூட்டுறவு வங்கியால் நிர்வகிக்கப்படுகின்றன. கொன்றைக்காடு பகுதிநேரக் கடையை முழுநேரக் கடையாக நிர்வகிப்பது பொருளாதார ரீதியில் இயலாததால், கொன்றைக்காடு பகுதி நேரக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

273—

கடைகளில் விலைப் பட்டியலை கட்டாயம் வெளியே வைக்க நடவடிக்கை.

வினா எண். 8745—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அத்தியாவசியமான பொருட்களை விற்பனை செய்யும் கடைக்காரர்கள், விலைப் பட்டியலை கட்டாயம் வெளியே வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா :

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு அத்தியாவசியப் பொருட்கள் (இருப்பு மற்றும் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தல் மற்றும் கணக்குகள் பராமரித்தல்) ஆணை 1977-ன்படி, வணிகர்கள் கடைகளில் விலைப் பட்டியல் மற்றும் இருப்பு அடங்கிய தகவல் பலகையை தவறாது வைத்தல் வேண்டும். இது உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் செயலாக்கப்படுகிறது.

274—

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போர் எண்ணிக்கை.

வினா எண் 5367—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கடந்த பத்தாண்டு மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருப்போர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக விவரம் என்ன ?

(ஆ) அவற்றில் ஓரளவு படித்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவற்றில் பட்டதாரிகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஈ) பதிவு செய்து பத்தாண்டுகளுக்கும் மேலாக காத்திருப்போருக்கு இனிவரும் வேலை வாய்ப்புகளில் அமர்த்த முன்னுரிமை சலுகை அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) : விடைகள் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

(ஈ) இப்பொருள் தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.



இணைப்பு 2.

31—12—1991 ஆம் தேதியன்று செல்லுபடிவ பதிவேட்டில் உள்ளோர் எண்ணிக்கை.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | 5 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருப்போர் / 10 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருப்போர். | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம். | முதுநிலைப் பட்டதாரிகள் உள்ளிட்ட பட்டதாரிகள். | ஓரளவு படித்த வர்கள் (8வது தேறியோர் மெட்ரிக் தவறியோர் வரை). | மொத்தம். | முதுநிலைப் பட்டதாரிகள் உள்ளிட்ட பட்டதாரிகள். | ஓரளவு படித்த வர்கள் (8-வது முதல் மெட்ரிக் தவறியோர் வரை). |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. சென்னை | 97,415 | 9,335 | 48,459 | 49,624 | 7,162 | 19,723 |
| 2. தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னை-4. | 11,237 | 11,237 | .. | 3,135 | 3,135 | .. |
| 3. செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டம். | 58,352 | 4,060 | 17,651 | 29,423 | 163 | 10,622 |
| 4. வடஆற்காடு—அம்பேத்கார் | 43,399 | 4,306 | 22,009 | 11,495 | 873 | 3,170 |
| 5. தென்னாற்காடு | 46,395 | 3,123 | 16,260 | 23,084 | 363 | 10,311 |
| 6. திருவண்ணாமலை—சம்புவராயர். | 11,873 | 1,037 | 3,604 | 4,648 | 314 | 1,441 |
| 7. திருச்சிராப்பள்ளி | 67,844 | 8,118 | 13,479 | 24,501 | 1,140 | 6,345 |
| 8. தஞ்சாவூர் | 14,636 | 1,158 | 3,583 | 3,576 | 196 | 906 |
| 9. நாகப்பட்டினம்—காயிதே மில்லத். | 18,936 | 1,571 | 6,740 | 2,755 | 131 | 902 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 10. புதுக்கோட்டை | 18,787 | 1,044 | 6,395 | 4,840 | 131 | 2,612 |
| 11. மதுரை | 50,616 | 4,200 | 10,313 | 28,323 | 3,620 | 6,175 |
| 12. இராமநாதபுரம் | 6,503 | 472 | 1,398 | 1,089 | 19 | 201 |
| 13. காமராஜர் | 15,696 | 820 | 4,678 | 2,378 | 369 | 491 |
| 14. திண்டுக்கல்—அண்ணா | 6,760 | 744 | 1,404 | 2,045 | 283 | 542 |
| 15. சிதம்பரனார் | 10,386 | 1,806 | 2,349 | 2,878 | 85 | 768 |
| 16. நெல்லை—கட்டபொம்மன் | 56,384 | 5,174 | 12,353 | 9,132 | 878 | 1,204 |
| 17. கன்னியாகுமரி | 27,212 | 3,024 | 9,608 | 7,862 | 1,212 | 2,212 |
| 18. கோயம்புத்தூர் | 32,074 | 3,886 | 6,956 | 26,975 | 5,641 | 2,722 |
| 19. நீலகிரி | 13,232 | 940 | 4,047 | 4,892 | 279 | 2,096 |
| 20. பெரியார் | 35,550 | 2,865 | 10,508 | 7,233 | 993 | 2,003 |
| 21. தர்மபுரி | 21,460 | 1,162 | 5,911 | 5,048 | 75 | 1,674 |
| 22. சேலம் | 33,596 | 2,016 | 7,099 | 6,323 | 396 | 4,124 |
| 23. பசும்பொன் முத்துராமலிங்க தேவர். | 23,186 | 706 | 3,216 | 5,119 | 266 | 1,548 |
| மொத்தம் : | 721,529 | 72,814 | 217,970 | 266,288 | 27,725 | 79,050 |

(க) சென்னையில் உள்ள தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் எல்லை, தமிழ்நாடு முழுவதற்கும் பரந்துள்ளது. எனவே அந்த அலுவலகத்தினை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதற்குமான விவரம் அளிக்கப் பட்டுள்ளன.





275—

## விவசாய டெப்போ அமைத்தல்

வினா எண் 7279—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி நடுமனைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு விவசாய டெப்போ ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை.

276—

## குடிசைமாற்று வாரியத்தின் விரிவாக்கத் திட்டங்கள்

வினா எண் 6503—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைமாற்று வாரியம் மாவட்டத் தலைநகர்கள் அல்லாமல் முனிசிபல் நகரங்கள், தாலுக்கா தலைநகரங்கள் ஆகிய பகுதிகளிலும் தன் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த விரிவாக்க திட்டங்களை விரைவில் செயல்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் 103 நகராட்சி நகரங்களுக்கும் ( Municipal Towns ) 91 வட்டத் தலைநகர்களுக்கும் ( Taluk headquarters) ஏற்கெனவே விரிவு படுத்தப்பட்டுள்ளது. குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகளை அரசினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் மானிய உதவியுடன் குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கண்ட இடங்களில் செயல்படுத்தி வருகின்றது.

[1992 செப்டம்பர் 23

277—

பால்வாடிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 1177— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரைக்கு பால்வாடி கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

1991—92 ஆம் ஆண்டில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 9.98 கோடி மதிப்பீட்டில் 1409 புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது போன்று 1992—93 ஆம் ஆண்டிற்கும் மேற்படி திட்டத்திற்கு 10.42 கோடி மதிப்பீட்டில் 1470 புதிய மையக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே மாவட்ட ஆட்சியரால் தேவைகளின் அடிப்படையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்பொழுது மேற்கூறிய மையத்திற்கான கட்டிடத்தின் தேவை குறித்தும் பரிசீலிக்கப்படும்.

278—

பாலர் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 6463— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ருத்திர சிந்தாமணி பாலர் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

1991—92 ஆம் ஆண்டில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 9.98 கோடி மதிப்பீட்டில் 1,409 புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது போன்று



199 செப்டம்பர் 23]

1992—93 ஆம் ஆண்டிற்கும் மேற்படி திட்டத்திற்கு ரூ. 10.42 கோடி மதிப்பீட்டில் 1,470 புதிய மையக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே மாவட்ட ஆட்சியரால் தேவைகளின் அடிப்படையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்பொழுது மேற்கூறிய மையத்திற்கான கட்டிடத்தின் தேவை குறித்தும் பரிசீலிக்கப்படும்.

279—

பாலர் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 6702— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெரியகத்தி கோட்டை பாலர் பள்ளிக்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

1991—92 ஆம் ஆண்டில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 9.98 கோடி மதிப்பீட்டில் 1,409 புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுபோன்று 1992—93 ஆம் ஆண்டிற்கும் மேற்படி திட்டத்திற்கு ரூ. 10.42 கோடி மதிப்பீட்டில் 1,470 புதிய மையக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே மாவட்ட ஆட்சியரால் தேவைகளின் அடிப்படையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்பொழுது மேற்கூறிய மையத்திற்கான கட்டிடத்தின் தேவை குறித்தும் பரிசீலிக்கப்படும்.

280—

சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 6779— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஊராட்சி ஆண்டிக்காட்டிற்கு உள்ள சத்துணவுக்

[1992 செப்டம்பர் 23

கூடத்திற்கு நிலையான கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

1991–92 ஆம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத் தின்கீழ் ரூபாய் 9.98 கோடி மதிப்பீட்டில் 1,409 புதிய கட்டி டங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது போன்று 1992–93 ஆம் ஆண்டிற்கும் மேற்படி திட்டத்திற்கு ரூ. 10.42 கோடி மதிப்பீட்டில் 1,470 புதிய மையக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே மாவட்ட ஆட்சியரால் தேவைகளின் அடிப்படையில் கட்டிடங் கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்பொழுது மேற் கூறிய மையத்திற்கான கட்டிடத்தின் தேவை குறித்தும் பரிசீலிக்கப் படும்.

281—

## குப்பத்தேவன் நடுநிலைப் பள்ளியில் 324 பேர்களுக்கு சத்துணவு போட நடவடிக்கை

வினா எண் 6907— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் நடுநிலைப் பள்ளியில் 624 மாணவர்களில் 300 பேர்களுக்கு சத்துணவு போடப்படுவதை 324 பேர் களுக்காக சத்துணவு போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

இந்த நடுநிலைப் பள்ளியில் வேலை நாட்களில் 370 குழந்தைகளும், பள்ளி விடுமுறை நாட்களில் 80 குழந்தை களும் சத்துணவு சாப்பிடும் வகையில் எண்ணிக்கை நிர்ணயிக்கப் பட்டுள்ளது.



1992 செப்டம்பர் 23]

282—

## பால்வாடி அமைத்தல்.

வினா எண் 7030— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச் சிற்றம்பலம் ஊராட்சி நரியங்காட்டில் இடையர் தெருவை இணைத்து ஒரு பால்வாடி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி நரியங்காட்டில் இடையர் தெருவை இணைத்து ஒரு குழந்தைகள் நல மையம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

283—

## பாலர் பள்ளி தொடங்க நடவடிக்கை.

வினா எண் 7124— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி மிதியக்குடிக்காட்டில் பாலர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

தற்சமயம் இல்லை.

[1992 செப்டம்பர் 23

284—

சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 7132—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல் காட்டிலுள்ள சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல்காடு சத்துணவு மையத்துக்குக் கட்டிடம் கட்டித்தர போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் இங்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

285—

சத்துணவுக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 7175—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, சிறிய தெற்குக்காடு சத்துணவுக் கட்டிடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமத்தில் சத்துணவு மையம் இல்லை. எனவே கட்டிடம் கட்டுவதற்கான அவசியம் ஏற்படவில்லை.



1992 செப்டம்பர் 23]

286—

பாலர் பள்ளி தொடங்க நடவடிக்கை.

வினா எண் 7201—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சொக்கநாதபுரம் ஊராட்சி கீழக்காட்டில் பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

சொக்கநாதபுரம் ஊராட்சி கீழக்காடு கிராமத்தில் 20 வீடுகள் மட்டுமே உள்ளது. கீழக்காடு கிராமத்தில் இருநீது ½கி.மீ. தூரத்தில் புக்கரம்பை கிராமத்தில் குழந்தைகள் சத்துணவு மையம் இயங்கி வருகிறது. எனவே கீழக்காடு கிராமத்தில் புதிதாக குழந்தைகள் சத்துணவு மையம் திறக்க உத்தேசம் ஏதும் இல்லை.

287—

ஆதி திராவிடப் பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்க நடவடிக்கை.

வினா எண் 7302—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம்—நாராண்டி ஆதி திராவிடப் பெண்களுக்குத் தையற் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு மற்றும் மதுக்கூர் ஆகிய இடங்களில் சமூக நலத்துறையின் சார்பாக, பெண்களுக்கு தையற்பயிற்சி அளிக்கும் மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் நாராண்டி கிராமத்தில் ஆதி திராவிடப் பெண்களுக்கென்று தனியாக தையற் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

288—

மகளிருக்கு 30 சதவிகிதம் வேலை வாய்ப்பு குறித்து அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண் 8226—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மகளிருக்கு அனைத்து அரசு அலுவலகங்களிலும் 30 சதவிகிதம் வேலை வாய்ப்பு தரும் அரசின் கொள்கைப்படி அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

அரசாணை நிலை எண் 89, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 17-2-1989-ன் படி அரசுத் துறை மற்றும் அரசுப் பொதுத் துறை நிறுவனங்களில் ஏற்படும் காலியிடங்களில் 30 சதவீதத்தை மகளிருக்கே ஒதுக்க வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி பெண்களுக்கான இடங்கள் எப்படி நிரப்பப்பட வேண்டும் என மாதிரி சுழற்சி முறை (Roster) வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்த 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதைக் கண்காணிக்க சமூக நல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி செல், அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 30 சதவிகிதம் ஒதுக்கீட்டுப்படி எந்தெந்த அலுவலகங்களில் மகளிருக்கு வேலை தரப்பட்டுள்ளது என்பதை இந்த செல் சேகரித்து வருகிறது.

289—

தையல் தொழிற் பயிற்சி மையம் அமைத்தல்.

வினா எண் 8244—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை தொகுதி வடவாளம் பஞ்சாயத்திற்குட்பட்ட வடக்கு செட்டியாபட்டி கிராமத்தில் தையல் தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

இல்லை.

290—

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள ஆதரவற்றோர் விடுதிகள்.

வினா எண் 8375—செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் சமூக நலத்துறை சார்பாக உள்ள ஆதரவற்றோர் விடுதிகள் எத்தனை ?

(ஆ) அதில் முதியோர்களையும் சேர்த்து பாதுகாப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில், திண்டுக்கல்லில் 250 குழந்தைகள் கொண்ட ஒரு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருகிறது.

(ஆ) இவ்வில்லத்தில் 5 வயது முதல் 18 வயது வரையுள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். இதில் முதியோர்களைச் சேர்த்து பாதுகாப்பு அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

291—

விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை.

வினா எண் 9909—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் இளம் விதவைகள் பற்றிய விவரம் எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) இதுவரை கணக்கெடுக்கப்படவில்லை என்றால் சத்துணவுக் கூடத்தில் பணிபுரியும் மகளிரைக் கொண்டு விவரம் எடுத்து மறுவாழ்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டத்தின் (விதவை மறுமணத் திட்டம்) கீழ் 18 வயது முதல் 30 வயதுடைய விதவைகளின் மறுமணத்தை, தம்பதியருக்கும் நிதியுதவி வழங்குவதன் மூலம் ஊக்குவிக்கிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள் சிலருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப் படுகின்றன. பல்லாவரத்தில் செயல்பட்டு வரும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேவை இல்லங்கள் மூலம் மேல்நிலைப் பிரிவில் தேர்ச்சி பெற்று வயது வரம்பு கடந்த விதவைகளுக்கும் இப்பயிற்சியில் சேர முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. மேலும் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், விதவைகளுக்கும் வேலை வாய்ப்பினைப் பெற ஆவன செய்யப்படுகின்றன.

(இ) இல்லை.

292—

## கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு அரசு சலுகைகள்.

வினா எண் 10025—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிடப் பெண்ணை கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் பிற வகுப்பைச் சார்ந்த ஆண்களுக்கு அரசு சலுகைகள் ஏதேனும் அளிக்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.





(ஆ) கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு பாராட்டுப் பத்திரம், திருமணச் செலவிற்காக ரூ. 1,000 உதவிப் பணமும், தம்பதியர் இருவர் பெயரிலும் ரூ. 4,000 தேசிய சேமிப்புப் பத்திரமாக 6 ஆண்டுகளுக்குப் பின்னர் பயனளிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன. கலப்புத் திருமணத் தம்பதியரில் தாழ்த்தப்பட்ட இனத்தவரைச் சார்ந்திருந்தால் வேலை வாய்ப்பகத்தில் முன்னுரிமை அளிக்க வகை செய்யட்பட்டுள்ளது. சென்னை நகர் தவிர மற்ற இடங்களில் வீடு மனையற்ற தம்பதிகளுக்கு 3 செண்ட் நிலமும், சென்னை நகரில் தவணை கொள்முதல் திட்டத்தின் கீழ் வீட்டுவசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம் மூலமாக வீடுமனை வாங்குவதற்கு முன்பணம் ரூ. 1,200 மானியம் வழங்குவதுடன் ஒவ்வொரு ஆண்டும் குடிசை மாற்று வாரியத்தின் தவணை கொள்முதல் திட்டத்தின் கீழ் 10 வீடுகளை மாதம் ரூ. 250-க்கு குறைந்த வருமானமுள்ள தம்பதியருக்கு ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

293—

## காலனி வீடுகளுக்கு மின்வசதி.

வினா எண் 4236—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டிமடம் தொகுதி, சிலுவைச்சேரி கிராமத்தில் காலனி வீடுகளுக்கு மின்வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், சிலுவைச்சேரி கிராமத் தில் 1988-89ல் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத் தில் 21 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளது. மேற்படி காலனியில் உள்ள 21 வீடுகளுக்கும் மின் இணைப்பு தர ரூ. 210 வைப்புத் தொகை மின் வாரியத்திற்குச் செலுத்தப் பட்டுள்ளது. தற்போது மேற்படி காலனியில் தெரு விளக்குகள் போடுவதற்குக் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. விரைவில் தெரு விளக்குகள் அமைத்தல், வீடுகளுக்கு மின் இணைப்பு தருதல் ஆகிய பணிகள் முடிக்கப்படும்.

294—

## தீண்டாமை ஒழிப்புக்காக சிறப்பு விளம்பரங்கள்.

வினா எண் 5609—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தீண்டாமை ஒழிப்புக்காக சிறப்பு விளம்பரங்கள் செய்யவும், விளம்பர செய்திப் படங்கள் காட்டவும் எந்தெந்த மாவட்டங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளது ?

(ஆ) அவற்றின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமை ஒழிப்பிற்காக சிறப்பு விளம்பரங்கள் செய்யவும், விளம்பர செய்திப் படங்கள் காட்டவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

295—

## ஆதிதிராவிட மக்கள் தொழில் தொடங்க அரசு பொறுப்புறுதி வழங்கல்.

வினா எண் 5787—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) NSFDC–National Scheduled Castes and Schedule[illegible] Tribes Finance and Development Corporation, New Delh[illegible] மூலம் தமிழகத்திலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தொழி[illegible] தொடங்க தமிழக அரசின் Guarantee தேவைப்படுவதா[illegible] இதை அளிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை அரசு துரிதமா[illegible]





விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர் தேசியத் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிதியுதவியினைத் தாட்கோ மூலம் பெறும்போது ஒவ்வொரு இனத்திற்கும் தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதி — Guarantee வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறு ஒவ்வொரு இனத்தின் மீதும் பொறுப்புறுதி பெற அரசை அணுகும்போது ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டும், தொழில் முனைவோர் விரைந்து உதவிபெற வேண்டுமென்ற நோக்கோடும் ஏற்கனவே அரசு ரூ. 10.00 கோடி வரைக்கும் ஒரு ஒட்டுமொத்த பொறுப்புறுதி ( Block Guarantee ) வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது.

296—

## கோழி வளர்க்க அரசு உதவி.

வினா எண் 5940—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பெண்கள் சங்கம் அமைக்காமல் தனியாக கறிக்கோழி, முட்டைக்கோழி வளர்க்க முன்வந்தால் அதற்கு அரசு உதவிட முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

கறிக்கோழி, முட்டைக்கோழி வளர்க்க முன்வருவோருக்கு அவர்கள் ஆண்களாய் இருந்தாலும், அல்லது பெண்களாய் இருந்தாலும் அரசு உதவி செய்து வருகிறது. அதற்காக பெண்கள் தனியே சங்கம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

[1992 செப்டம்பர் 23

297—

தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரக் குழு.

வினா எண் 6269—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநில அளவில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரக் குழு தற்பொழுது செயல்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அத்தகைய குழுக்களை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத் திற்கென மாநில அளவில் இரண்டு பிரச்சாரக் குழுக்கள் நிய மிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. ஒரு குழு சென்னையை தலைமையிடமாகக் கொண்டும், மற்றொரு பிரச்சாரக் குழு திருச்சியை தலைமையிடமாகக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன.

298—

கால்நடை மருந்தகம் அமைத்தல்.

வினா எண் 7809—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்பு மிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தோகமலை ஒன்றியம், ராச்சாண்டார் திருமலையில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கும் திட்டம் அரசு பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்



1992 செப்டம்பர் 23]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

299—

மலைவாழ் மக்கள் வளர்ச்சி மையம் அமைத்தல்.

வினா எண் 7828—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

வால்பாறை பகுதியில் மலைவாழ் மக்கள் வளர்ச்சி மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

300—

மாதகள்ளி அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை.

வினா எண் 3461—திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்தியமங்கலம் தாளவாடி ஒன்றியம், மாதகள்ளியில் அரசுக்கு சொந்தமாக உள்ள 800 ஏக்கர் பட்டு வளர்ப்பு பண்ணையில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை ஏக்கர் பயிரிடப் படுகிறது ?

(ஆ) இதன் மூலம் செய்யப்படும் பட்டு உற்பத்தி வேலை செய்யும் ஆட்களின் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்கா தாளவாடி ஒன்றியம் மாதஹள்ளியில் பெரிய அளவு அரசு பட்டுப்பண்ணை சொந்தமாக மொத்தப் பரப்பு 781.68 ஏக்கர் உள்ளது. இதில் தற்போது 210 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பரப்பில் மல்பெரி செடிகளில் இருந்து இலைகள் பறிக்கப்பட்டு பட்டுப்புழு வளாப்பு செய்யப்படுகிறது. சுமார் 200 ஏக்கர் பரப்பளவு நிலம் பயிர்செய்யப்பட முடியாத அளவிற்கு பாறைகளாகவும், கற்ககளாவும் மற்றும் அரசு குடியிருப்பு களாகவும் உள்ளது. மீதி உள்ள 371.68 ஏக்கரில் ஒவ்வொரு ஆண்டும் சுமர்ர் 50 ஏக்கரில் மல்பெரி புதிதாகநடவு செய்யத் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) 3990-1991-ம் ஆண்டில் 8,200 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டில்(1991-92) ஜனவரி முடிய 5,450 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. இப்பண்ணையில் பணியாற்றும் தினக்கூலி பணி யாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 18 வீதம் கூலி வழங்கப்படு கிறது. இத்தினக்கூலி பணியாளர்களுக்கு ஒரு ஆண்டில் சுமார் 300 நாட்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு தினக்கூலி பணியாளர்யளுக்கும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 5,400 வருமானம் கிடைக்கிறது.



## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. திருநாவுக்கரசு அவர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) டாக்டர் குமாரதாஸ், நீங்கள் என்னுடைய அனுமதி கோரி எதுவும் கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து .... (குறுக்கீடுகள்) டாக்டர் குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடு கள்) என்னுடைய அனுமதியின்றி பேசினால் வெளியேற்ற வேண்டி வரும். குமாரதாஸ் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் (குறுக்கீடுகள்) திரு. திருநாவுக்கரசு உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்). இது கவன ஈர்ப்புத் தீர்மானம். இதிலே வேண்டாம். இன்று பொது விவாதத்தின் மீது நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். எனவே அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதிலே உங்களுக்குப் பதில் கொடுத்திருக்கிறேன். அதையும் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் பதில் கொடுத்திருக் கிறேன். என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். உட்காருங் கள். (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன் அவர்களும் முது குளத்தூரில் ஒரு கலவரப் பகுதியாக இருக்கிறது என்று ஒரு குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கும் அந்தப் பதில் கொடுத்து இருக்கிறேன். இன்று துணை மானியக் கோரிக்கையின் மீது உங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதன்மீது பேசும்போது சொல்லலாம். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ், (குறுக்கீடு) இன்று நீங்கள் பேசு வதற்கு இங்கே வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும். (குறுக்கீடு) அறையிலே கேட்டதாகச் சொல்கிறீர்கள். அறை யிலே கேட்டதை இங்கே வந்து எழுப்பக்கூடாது. அறையிலே கேட்கவேண்டியதை இங்கே வந்து கேட்கக் கூடாது. உட்காருங் கள். (குறுக்கீடு). உட்காருங்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்புகள் தொடர்பாக என்னுடைய அறையில் சொன்ன ஒவ்வொருவரும் கொடுத்திருக்கின்ற அறிவிப்பின் மீதும் இங்கே நான் விளக்க முடியாது. (குறுக்கீடு) நான் கேட்டதற்குப் பதில்சொல்லி யிருக்கிறேன். உங்களுக்கு என்னுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறேன். அதை அவையில் வந்து கிளப்பவேண்டுமெனபது இல்லை.

[1992 செப்டம்பர் 23

## 3. ஒழுங்குப் பிரச்சினை

### பணியாளர் தேர்வாணைக்குழுமம் பற்றி அவையில் எழுப்ப அனுமதி மறுக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் .............

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளுங்கள்.

பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப் பற்றி அவையில் பிரச்சினை எழுப்ப முடியாது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்பது அரசியல் சட்டத்தின்படி அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு தன்னாட்சி அமைப் பாகும். அதனுடைய அறிக்கை வைக்கிறபோது, அந்த அறிக்கை யின் மீது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாமே தவிர அதைப் பற்றி விவாதம் எழுப்புவது முறையல்ல. (குறுக்கீடுகள்) அதைப் பற்றி உங்களுக்கு அறையிலேயே சொல்லி இருக்கிறேன். நான் அங்கே சொன்ன பிறகு இங்கே வந்து கேட்பதில் அர்த்தம் இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எந்தக் கருத்தையும் என்னுடைய அறையிலே வந்து சொல்லுங்கள். நான் அனுமதி மறுத்தபிறகு இங்கே வந்து குறிப்பிடுவது முறையல்ல (குறுக்கீடு). நான் அனுமதி மறுப்பதை இங்கே வந்து எழுப்புவது முறையல்ல. (குறுக்கீடு) திரு. அழகிரி சம்பந்தம் இல்லாமல் நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்' உட்காருங்கள். திரு. அழகிரிக்கு இதில் சம்பந்தமே இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) கொடுத்தவர் பேசினார் என்றால் அர்த்தம் இருக்கிறது. அவர் கொடுத்துவிட்டு என்னிடம் கேட்கிறார். திரு. அழகிரி, திரு. பி. வி. இராஜேந்திரன் எல் லோருமே நிற்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) இன்று பொது விவாதத்திலே எல்லோருமே உங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. எனவே, இன்று நீங்கள் கொடுத்த அறிவிப்புகளுக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அவருடைய பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. தாமரைக்கனி உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. தாமரைக்கனி உட்காரவேண்டும் (குறுக்கீடு கள்) திரு. தாமரைக்கனி உட்காரவேண்டும் (குறுக்கீடுகள்) தயவு செய்து எல்லோரும் அந்தப் பக்கம் பார்த் துப்பேசக் கூடாது. என்னைப் பார்த்துப் பேச வேண்டும். எல்லோரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தாமரைக்கனி உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்களே ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசினால் என்ன முறை இருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளைச் சார்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் ''ஜீரோ ஹவர் ஹீரோக்கள்'' என்று புகழ் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ''ஜீரோ ஹவர் ஹீரோக்கள்'' தினமும் சட்டப்பேரவைத் தலைவரிடம் அனுமதி பெறாமல் பேசிக் கொண்டு அவையின் நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்புகூர்ந்து காங்கிரஸ் கட்சி உறுப் பினர்களும் அவர்களுடன் சேர்ந்துகொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் முறைப்படி மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரை அவரது அறையில் சந்தித்து அவரது அனுமதியைப் பெற்றுப் பேசலாம் என்று தெரிவித்துக் கொள் கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங் கள். (குறுக்கீடுகள்) இது திரு. பீட்டர் அல்போன்ஸ் கிளப்பி இருக்கின்ற பிரச்சினை, (குறுக்கீடு) டாக்டர் தே. குமாரதாஸ், அவர்கள் உங்களைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அப்படி என்றால் நீங்கள் தான் அந்த ஹீரோவா? (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர். சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவையி னுடைய நேரத்தை அனாவசியமாக வீணாக்குவதற்கு நாங்கள் நிச்சயமாக துணை போக மாட்டோம். நான் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து தங்கள் கவனத்தைக் கோரினேன். தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடைய தலைவர்..(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான் சொல்கிறேன். நான் சொல்லிவிடுகிறேன். இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடுகள்) நான் சொல்லி விடுகிறேனே. (குறுக்கீடுகள்) இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்கிறேன். பாயிண்ட் அப் ஆர்டர் சொல்வதற்கு உங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான்தான் சொல்கிறேனே, என்னிடம் கொடுத்ததுதானே. (குறுக்கீடுகள்) இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் எப்படி வரும்? நான் உங்களுக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்திருப்பதை பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கொண்டு வர முடியாது. அரசியல் சட்டப்படி அமைக்கப்பட் டிருக்கின்ற தன்னாட்சிமிக்க ஒரு அமைப்பைப் பற்றி இங்கே விவாதிப்பதை இதுவரையிலே அனுமதித்ததில்லை. எனக்கு

முன்பு இருந்த பேரவைத் தலைவர்களும் அனுமதித்ததில்லை. (குறுக்கீடுகள்) அதை என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) பாயிண்ட் ஆப் ஆர்டர் என்பதே, அவையினுடைய நடவடிக்கையில் நீங்கள் ஏதாவது ஒழுங்குப் பிரச்சினையாகக் கிளப்பினால்தான் வரும். (குறுக்கீடுகள்) இது அவையிலே கிளப்ப வேண்டிய பிரச்சினை அல்ல. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான்தான் சொல்லிவிட்டேனே. நான் சொன்னதற்குப் பிறகும், பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று சொன்னதற்கும் பிறகும் ....

Thiru. S.PETER ALPHONSE: You have rejected m request,

Mr. SPEAKAR: You are on a point of order. I say that there is no point of order. There ends the matter.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, under Rule 116, any Member can rise on a point of order at any given time, barring the Question-hour. The Rule s:ys, "Any member may at any time Submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine himself to stating the point.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்தில் அறையில் வந்து ஒரு பிரச்சினை என்று சொல்லி நான் அனுமதி மறுத்தது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டரில் வரும் என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்கிறேன் (குறுக்கீடுகள்) பாயிண்ட் ஆப் ஆர்டரா, இல்லையா என்று நான்தானே சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லும்போது அவரை எப்படி அனுமதிப்பது ? (குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மைக் வரவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம் ? (குறுக்கீடு) நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதுதான் நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) பாயிண்ட் ஆப் ஆர்டர் என்பது அவையினுடைய நடவடிக்கைகளின் மீது ஓர் உறுப்பினர் எழுப்புகின்ற பிரச்சினை, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் என்னுடைய அறையிலே வந்து ஒரு பிரச்சினை சம்பந்தமாக ஒரு கருத்தைத் தெரிவித்து, நான் அவருக்கு பதில் சொல்லியிருக்கிறேன். எழுத்து மூலமாகவும், சொல்லி இருக்கிறேன். அதைப் பற்றி பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று கிளப்புகிறார். அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. எனவே, இப்போது எழுப்ப வேண்டாமென்று கேட்டிருக்கிறேன். நான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர்



இல்லை என்று சொன்னதற்குப் பிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த பாயிண்ட் ஆப் ஆர்டரை நான் அனுமதிப்பது எப்படி ?

திரு. எஸ். ஆர் பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அவரை ஒழுங்குப் பிரச்சினை
எழுப்ப நீங்கள் அனுமதித்தீர்கள். அப்படி அனுமதித்ததற்குப்
பின்னாலே அவர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார். நான்
என்ன சொல்ல வருகிறேன என்றால், அவர் முதல் வார்த்தை
சொன்னவுடன் பாயினட் ஆஃப் ஆர்டரில் அது வராது என்று
சொன்னால் அது எப்படி சரியாக இருக்கும்? அதை எழுப்புவதற்கு
அனுமதியுங்கள். பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் அது வராது என்று
சொன்னால் நீங்கள் நிச்சயமாக அதற்கு அனுமதி மறுக்கலாம்.
பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் என்ன சொல்ல வருகிறார், என்ன
பிரச்சினை என்று அவர் விளக்குவதற்கு அவருக்கு அனுமதி
அளிக்க வேண்டும். அதுதான் முறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொல்
கிறேன். அவர் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்தவுடன் பேச
அனுமதித்தேன். அவரை அனுமதித்தவுடன, பப்ளிக் சர்வீஸ்
கமிஷன் பற்றி, அதனுடைய தலைவர், (குறுக்கீடு) என்று
சொன்னார். (குறுக்கீடு) அதைப்பற்றி என்னுடைய அறையி
லேயே கேட்டார். சர்வீஸ் கமிஷன் பற்றி அவையில் விவாதிக்க
முடியாது என்று சொன்னேன். (குறுக்கீடு) இப்போது அவரை
அனுமதித்தவுடன் சர்வீஸ் கமிஷன் என்று சொன்னார். சர்வீஸ்
கமிஷனைப்பற்றி இங்கே பேச முடியாது. (குறுக்கீடு) என்னுடைய
அறையில் கேட்ட விஷயம் அது. என்னுடைய அறையிலே
கொடுத்துச் சொன்னது. அவருக்கு அனுமதி மறுத்திருக்கிறேன்.
எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்துவதுதான் திரு. பீட்டர்
அல்போன்ஸ் அவர்களுக்கும் பொருந்தும். (குறுக்கீடு) பாயிண்ட்
ஆப் ஆர்டர் இல்லை என்று சொன்னதற்குப் பிறகு எப்படிப் பேச
முடியும் ? (குறுக்கீடு) பாயிண்ட் ஆப் ஆர்டர்
இல்லாததை பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று கிளப்புவதற்கு
எங்கே இடம் இருக்கிறது ? மாண்புமிகு போக்குவரத்துத் துறை
அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே தேர்
வாணைக் குழு பற்றி பேசக்கூடாது என்று சஹாரி காலத்திலே
வரையறை வகுக்கப்பட்டிருக்கிறது. அங்கே அனுமதி மறுக்கப்
பட்டிருக்கிறது. ஆகவே இங்கே அது பற்றி கிளப்ப முடியாது
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுப் பணித் துறை அமைச்சர் உட்காருங்கள். தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) இங்கே வந்து விவாதிக்க முடியாது என்பதை அறையிலேயே தெரிவித்திருக்கிறேன். அப்படித் தெரிவித்ததற்குப் பிறகு ''பாயிண்ட் ஆஃப் ஆர்டர்'' என்று அந்தப் பிரச்சினையையே கிளப்புவது எப்படி முறையாகும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி என்ன சொல்ல விரும்புகிறாரோ அதைச் சொல்ல அனுமதியுங்கள் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்கிற கருத்து இந்த அவையின் மரபுகளுக்கும், விதிகளுக்கும் ஒவ்வாததாக இருந்தால் அதைச் சொன்ன பிறகு அவைக் குறிப்பேட்டிலிருந்து அந்தச் சொற்றொடர்களை நீக்கலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நேற்றைய தினம் நான் நமது செயலாளர் அவர்களிடம், இன்று இந்தப் பிரச்சினை பற்றி நான் அவையில் எழுப்ப தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கோரி இருந்தேன். தங்களை இன்று காலை நான் சந்தித்துக் கேட்டபோது, தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பற்றி விவாதிப்பதற்கு நம்முடைய அவையில் இடமில்லை. அதற்கு விதிகள் அனுமதிக்கவில்லை என்று நீங்கள் தெரிவித்தீர்கள். அந்த உங்களுடைய முடிவைப் பற்றி, I wanted to raise a point of order. I wanted to raise the point of order regarding the decision of the Hon. Speaker.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் என்ன என்று விதியைப் பாருங்கள். "A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as to regulate the busines of the House...." அறையில் நான் சொன்ன சில நடைமுறைக் கருத்துக்கள் இங்கே பாயின்ட் .ஆஃப் ஆர்டர் என்று எப்படி வரும்? அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் ஆர்டரில். வராது என்பதற்காகத்தான் சொனேன். திரு. ரங்கராஜன்.

முற்பகல் 11-30

*திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, under rule 116 (7) (e) a Point of Order cannot be raised 'to seek clarification and introduce new points under the pretext of raising a Point of Order.(Interruption) Yes you are raising a new point.



1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது ஸ்பீக்கருடைய சில தீர்ப்புகள்மீது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம் என்பதற்கு எங்கே விதி இருக்கிறது? பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் அது 'relating to the business of the House'... (Interruption).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'A Point of Order may be raised in relation to the business before the House at the moment'. You are refusing the permission. So....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : There is no Point of Order. அது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்? நீங்களே சொல்லுங்கள். Business of the House-ல் எப்படி வரும்? (குறுக்கீடு).. நான் அறையில் இதற்கு அனுமதி மறுத்ததற்குப் பிறகு எந்த வகையிலும் யாரும் இங்கே எழுப்ப முடியாது. அது தான் விதி. மாண்புமிகு நிதி அமைச்சர்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை மட்டும் நான் கூற விரும்புகிறேன். அரசமைப்புச் சட்டத்தின் 323-வது பிரிவின் படி, யூனியன் சர்வீஸ் கமிஷன் பற்றியும், மாநில சர்வீஸ் கமிஷன் பற்றியும் தெளிவாகக் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. மாநில சர்வீஸ் கமிஷனைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, 'It shall be the duty of a State Commission to present annually to the Governor of the State a report as to the work done by the Commission, and it shall be the duty of a Joint Commission to present annually to the Governor of each of the States the needs of which are served by the Joint Commission a report as to the work done by the Commission in relation to the State, and in either case the Governor, shall, on receipt of such report, cause a copy thereof together with a memorandum explaining, as respects the cases, if any, where the advice of the Commision was not accepted, the reasons for such non-acceptance to be laid before the Legislature of the State.." ஆக கவர்னருக்குப் போக வேண்டும். கவர்னர் அதை ஒப்புக் கொள்ளாவிட்டால் அந்த ரிப்போர்ட்டை இங்கே அனுப்பலாம். அது பேரவைமுன் வைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் அது பற்றி, அதாவது அந்த ரிப்போர்ட்டின் மீது விவாதிக்க இடம் இருக்கிறது. ஆகவே கவர்னர் ஒரு முடிவை எடுக்காத வரையிலும் இந்த அவையில் அதைப்பற்றி யாரும் பேசக்கூடாது ஆக, கவர்னர் '..was not accepted, the reasons for such non-acceptance..'

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 செப்டம்பர் 23

ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கான காரண விளக்கத்தோடு மெமோரண்டத்தை அனுப்பி; '..to be laid before the Legislature of the State.....' என்று இருக்கிறது. அப்படி வந்ததற்குப் பிறகுதான்..

**Thiru S. PETER ALPHONSE:** We are not discussing the report and the day-to-day business of the Public Service Commission. Only for that order of Governor is necessary. Now it is only on a letter written by the Chairman of the Public Service Commission (Interruption)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை இங்கே விவாதிக்க முடியாது என்று இருக்கிறது. (குறுக்கீடு) அவர் எழுதிய கடிதத்தைப் பற்றியெல்லாம் இங்கே வந்து விவாதிக்க முடியாது. சர்வீஸ் கமிஷனைப்பற்றி இங்கே விவாதிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அப்படியானால் நாளைக்கு இங்கே வந்து ஒரு ஜட்ஜைப் பற்றி விவாதிக்கலாம், நாளைக்கு இங்கே பார்லிமெண்ட்டைப் பற்றி விவாதிக்கலாம் என்றெல்லாம் போய்விடும். தயவுசெய்து (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அவரை உட்காரச் சொல்லுங்கள். மிரட்டுவது போல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பினருக்கும் எழுந்து பேச உரிமை இருக்கிறது. (குறுக்கீடு.)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நான் படித்துக்கொண்டு இருக்கிறேன். என்னைக் கூப்பிட்டுப் பேசுகிறார். மிரட்டுகிறாரா? I am very sorry for that. என்னைப் பார்த்து மிரட்டுகிறார். I am very sorry for that. (Interruption).

**Thiru C. P. Pattabiraman:** I am very sorry He should not have used that word. The Minister has a right to address the Assembly.

**Thiru S. R. Balasubramoniyan:** He is addressing me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப் பணித் துறை அமைச்சர் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்.)

திரு. இரா. தாமரைக்கனி: **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1992 செப்டம்பர் 23]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவரும் என்னைப் பார்த்துப் பேசவேண்டும். எதிர்க்கட்சித் தலைவரோ, தாமரைக் கனியோ ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசக்கூடாது.

(காங்கிரஸ் கட்சியின் சில உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கையின் அருகில் வந்து தரையில் அமர்ந்து கொண்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சரியா? (குறுக்கீடு) இல்லை, இல்லை, எல்லோரையும் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன், எல்லோரையும் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். விதிமுறைகளின்படி இருக்கவேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: விதிமுறைகளைப் படிக்க அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்.)

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரையும் நான் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். (குறுக்கீடு.)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்
(குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள்
கள் (குறுக்கீடு) நீங்கள் இப்படி நடந்தால் எல்
(குறுக்கீடு) விதிமுறையை மீறிப் போக வேண்டியதுதான் வரும்
லோரும் விதிமுறைகளை மீறிப் போக வேண்டித்
(குறுக்கீடு) எல்லோரும் நான் நிற்கின்றேன். (குறுக்கீடு) நான்
தான் வரும். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும்
கேட்டால் தானே முடியும். (குறுக்கீடு)
நின்றுகொண்டு இருந்தால் எப்படி? ....... ..(குறுக்கீடு).

திரு. பி. வி. இராஜேந்திரன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன பிரச்னை
என்று சொன்னால் தானே முடியும். (குறுக்கீடுகள்) இது முறை
யல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்
(குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு
கள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நின்று
கொண்டு இருக்கிறேன். நீங்கள் உட்கார்ந்தால்தான் நான்
சொல்ல முடியும். (குறுக்கீடு) நான் நின்று கொண்டு இருக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கிறேன். நான் நின்றுகொண்டு இருக்கிறபோது , நீங்கள் திடீரென்று நின்றுகொண்டு இருந்தால் எப்படி உங்களுக்கு மைக் கொடுப்பார்கள் ? (குறுக்கீடு) சில விதிமுறைகளின்படி நான் நிற்கிறபோது நீங்கள் உட்கார்ந்தால்தான் நான் யார் பேசுவது என்று சொல்ல முடியும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தாமரைக்கனி அவர்களைத் தாங்கள் வெளியேற்ற வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உணர்ச்சிவசப்பட வேண்டாம் என்றும் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எழுந்து இந்த அவையில் பேசுவதற்கு இங்கே என்ன உரிமை இருக்கிறதோ, அதே உரிமை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு அமைச்சரோ அல்லது கொறடாவோ எழுந்து பேசுகின்றபோது, 'எங்களை மிரட்ட வேண்டாம், மிரட்டுகிறீர்களா ? என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்பது, சரியானது அல்ல என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எனக்குத் தெரிந்தவரை கடந்த இரண்டு நாட்களாக காங்கிரசு கட்சியைச் சார்ந்த சில உறுப்பினர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையை இங்கே ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்து, அதற்கு வாய்ப்பு ஏற்படாததால், ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு இன்று, இந்தப் பிரச்சினையை ஏற்படுத்துகிறார்களோ என்ற ஐயம் எழுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை இங்கே யாரும் மிரட்டவில்லை ; எந்த அமைச்சரும் அந்த அளவுக்கு மரபையோ, பண்பையோ மறந்தவர்கள் அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்று சொல்ல வேண்டும். இங்கே சில உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு, இருப்பது. தாமரைக்கனி இங்கே முறைகேடாக நடந்துகொள்கிறார் ; நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரி உட்கார்ந்து இருக்கிறார்கள். தாமரைக்கனி பல்வேறு நேரங்களில் முறைகேடாக



நடந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் எஞ்சிய நாட்கள் அனைத்துக்கும் அவர் அவையை விட்டு வெளியேற்றப்பட்டு இருக்கிறார். எனவே, அவர் இன்று புதிதாக ஆரம்பித்து இருக்கிறார் என்பதல்ல. இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர் நடந்துகொண்ட முறைகேட்டுக்காக அவர் வெளியேற்றப்படுகிறார். ஏற்கெனவே அவர் அவையைவிட்டு வெளியேறிவிட்ட காரணத்தால் இன்று முழுவதும் அவைக்கு வரக் கூடாது என உத்தரவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பின்னர் எழுந்து தங்களது இருக்கைகளுக்குச் சென்றனர்).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' எழுந்து நின்று பேசும்போது என்னை மிரட்டவில்லை ' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் கவனிக்கவில்லை. நான் கான்ஸ்ட்டிடியூஷன் புத்தகத்தை படித்துக்கொண்டு இருந்தேன். எங்கள் கட்சி உறுப்பினர்களைக் கூப்பிட்டு, என்னை அவர் கூப்பிட்டு, உட்கார்ந்தபடியே என்னை மிரட்டினார். அதை சபையிலே நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா ? அதைப்பற்றி நான் பேச எழுந்தால், அதற்கு உங்களுடைய கொறடா என்னோடு மோதலுக்கு வருகிறார். அமைச்சர் அவர்கள் நடந்து கொண்ட முறை வேதனை தரத்தக்கது. It is really unfortunate. நீங்கள் எப்படி முடிவு எடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதைப்போல ஒரு அமைச்சர் சட்டப்பேரவையிலே நடந்து கொள்ளக் கூடாது. முன்பு ஒரு முறை இதே அவையிலே என்னிடத்திலே ஒரு அமைச்சர் தவறாக நடந்துகொண்டபோது அன்றைய தினம் பேரவைத் தலைவரிடத்திலே அந்த விஷயத்தைக் குறிப்பிட்டபோது பேரவைத் தலைவர் அதற்கு கண்டனம் தெரிவித்து இருக்கிறார் என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நாங்கள் வேண்டுமென்றே பிரச்சினைகளை எழுப்புகிறோம் என்று தயவு செய்து நினைக்காதீர்கள். நானாக எந்தப் பிரச்சினையையும் எழுப்பாமல் அமர்ந்துகொண்டுதான் இருந்தேன் பிரச்சினைகள் வருகின்ற நேரத்திலே, பேசக்கூடாது என்று எதிர்பார்ப்பது சரியல்ல பிரச்சினை வந்தது. அவர்களிடத்திலே ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்று கேட்டார். அதை எழுப்ப அனுமதித்தீர்கள். அதைத்தான் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, வேண்டுமென்றே பிரச்சினைகளுக்காக தேடி அலைகிறோம் என்கிற எண்ணம் தயவு

செய்து யாருக்கும் தேவையில்லை ; அதுபோன்ற எண்ணம் எங்களுக்கு நிச்சயமாக கிடையாது. சபை எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் அமைதியாக நடைபெற வேண்டும் , அதற்கு எங்களுடைய ஒத்துழைப்பு உண்டு. ஆனால், இதைப்போல மிரட்டுவதை நிச்சயமாக நாங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளமுடியாது. (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இன்னும் சில சட்டமன்ற உறுபினர்களும் எழுந்து நின்று ஆவேசமாகப் பேசுகிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு அவர்கள் கூச்சல் போட்டும் பேசுகிறார்கள். அந்த உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்றால், அதே போல அவர்களுக்கு பதில் சொல்லும் உரிமையும் ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, உணர்ச்சி வசப்பட்ட சிலநேரங்களில்எதிர்த்தரப்பில்இருப்பவர்கள் எழுந்து ஆவேசமாகப் பேசுகிறபோது, அதற்கு பதில் சொல்கிற வகையில் இங்கே மாண்புமிகு அமைச்சர்களோ அல்லது சட்டமன்றக் கொறடாவோ அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்த வேறு உறுப்பினர்களோ எழுந்து நின்று பேசக் கூடாது என்று சொன்னால், நாங்கள் சத்தம் போட்டுக் கொண்டே இருப்போம், நீங்கள் பதில் சொல்லக்கூடாது என்று சொல்வது போலத்தான் இருக்கிறது. இவர்கள் எழுந்து நின்று பேசினால் உடனே எங்களை மிரட்டுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு.)

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லி விட்டீர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் பார்த்தவன் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஆணித்தரமாகச் சொல்லுகிறேன். சட்டமன்றப் பேரவையின் மரபுகளையும் விதிகளையும் மறந்து ஒரு எதிர்க்கட்சித் தலைவரை மிரட்டுகிற அளவுக்கு பண்பு மறந்தவர்கள் அல்ல எங்கள் அமைச்சர்கள் ; எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள். (மேசையைச் தட்டும் -ஒலி.)





மாண்புமிகு பேரவை தலைவர்: இதிலே வந்த பிரச்சினையே
திரு. தாமரைக்கனி முறைகேடாக நடந்து கொள்கிறார்
என்பதையொட்டியது. எதிர்க்கட்சித் தலைவரும் மற்ற
உறுப்பினர்களும் அந்த நேரத்தில் ஆவேசமாக சில பிரச்சினை
களைக் கிளப்பி கோண்டிருந்தீர்கள். பல உறுப்பினர்கள் அவரை
நோக்கியே பேசிக்கொண்டிருந்தீர்கள். அந்த நேரத்திலேயே
சொன்னேன். திரு. தாமரைக்கனியுடைய நடவடிக்கைகளை
இந்த அவையில் எந்த நேரத்திலேயும், எந்த வகையிலேயும்
யாரும் அனுமதித்தது இல்லை. இன்றைக்கு இந்தப் பிரச்சினை
வந்ததிலிருந்து ஏழெட்டு தடவை, பத்து தடவை அவருடைய
பெயரைக் கூறி அழைத்து விட்டேன். அதைப்போல ஒவ்வொரு
நாளும் அவர் ஏதோ முறைகேடாக நடக்கிறபோதெல்லாம்
அவரை,நடவடிக்கை யெடுக்க வேண்டி வரும், உட்கார வேண்டும்,
என்று எச்சரித்தே உட்கார வைத்திருக்கிறோம். அதற்கு மேல்
இரண்டொரு நாள் பார்த்து விட்டு அவரை ஒவ்வொரு சட்ட
மன்றக் கூட்டத் தொடரிலும் நடவடிக்கையெடுத்து வெளியேற்றி
இருக்கிறோம். ஒரு உறுப்பினரை நடவடிக்கையெடுத்து வெளி
யேற்றுவது என்பது எஞ்சிய கூட்டத் தொடருக்கு மட்டும் தான்
செய்ய முடியும். நம்முடைய விதிமுறைகளில் இருக்கிற வரம்பு
அந்த அளவுக்குத்தான் நமக்கு உரிமை கொடுத்து இருக்கிறது.
அந்த வகையிலே ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் அவர் வெளி
யேற்றப்பட்டு இருக்கிறார் அல்லது எஞ்சிய கூட்டத் தொடர்
முழுவதும் அவர் வரக்கூடாது என்று உத்தரவிடப்
பட்டிருக்கிறார். எனவே, அவருடைய நடவடிக்கைகளை எந்தக்
காலத்திலேயும் அரசோ, அவைத் தலைவரோ அனுமதித்தது
இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்பேர்ப்பட்ட உறுப்பினர்
இன்று கூச்சல் போட்டார் என்பதற்காக இந்த அளவுக்கு
நீங்களும் வேகப்பட்டு (குறுக்கீடு) அவர் செய்கை எல்லாமே
வரம்பு மீறியது என்றுதானே சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி ஒரு
சுயேச்சை உறுப்பினர். அவர் ஆளுங்கட்சி உறுப்பினர் அல்ல.
எனவே, அவர் எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. அதேசமயத்தில்
உறுப்பினர் திரு. தாமரைக்கனி ஒரு தவறான சொல்லைப் பயன்
படுத்தினார் என்பதை நான் அறிந்தவுடன் அவரை வெளியேற்றுங்
கள் என்று நானே தங்களிடம் கோரிக்கை விடுத்தேன். அத்துடன்
பிரச்சினை முடிந்து விட்டது. அதனை அத்தோடு விட்டுவிடா
மல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்கள்
அமைச்சர்களையும் சட்டமன்றக் கொறடாவையும் பார்த்து,
தன்னை அவர்கள் மிரட்டுகிறார்கள் என்று சொல்வதுதான்
மிகவும் வருத்தத்திற்குரியது. (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பிரச்சினைக்கு நான்
வருகிறேன். திரு. தாமரைக்கனி பிரச்சினையை முடித்துவிட்டு

அமைச்சர்களைக் கவனித்து கொண்டுதான் இருந்தேன். ஒவ்வொருவரும் எழுந்து அதற்குப் பதில் சொல்வதற்கு எல்லா அமைச்சர்களும் நிற்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : எழுந்து நிற்கவில்லை. உட்கார்ந்து கொண்டுதான் இருந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களுக்கும் இருக்கிற உரிமை அமைச்சர்களுக்கும் உண்டு. அதை நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லமுடியாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். நான் இங்கே நன்றாக பார்த்துக் கொண்டிருந்த காரணத்தால் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்துக் கொண்டிருந்த போது அமைச்சர் அவர்கள் அவரிடத்தில் ஒரு கருத்தைச் சொல்ல முயன்றார். அவர் சொன்னார் என்னிடத்தில் சண்டைக்கு வந்தார் என்று. அவர் ஏதாவது பேசிக்கொண்டிருந்தபோது பேசியிருந்தால்கூட அதிலே பொருத்தம் இருக்கும் சண்டைக்கு வருகிறார் என்று சொல்லலாம். அவர் படித்துக் கொண்டிருக்கும் போது அவர் மீது இவருக்கு தேவையில்லாமல் கோபம் வர அவசியம் இல்லை. அவர் பேசவில்லை. படித்துக் கொண்டிருந்தார். அவரே அதைச் சொன்னார். எனவே, அந்த நேரத்தில் அவருக்கு கோபம் வர நியாயமே இல்லை. அவர் இந்தக் கடிதம் எல்லோருக்கும் வந்திருக்கிறது. பாராளுமன்றத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளை அவர்கள் அனுமதிக்கவில்லை என்பதை மற்றவர்களுக்கு சொல்ல முடியவில்லை. காரணம் அங்கே கூச்சலாக இருந்த காரணத்தால் அவருக்கு சொல்ல முடியவில்லை என்ற காரணத்தால், தலைவரிடத்தில் சொன்னால், தலைவர் மற்றவர்களுக்கு சொல்வார் என்ற உணர்வோடு தான், கொஞ்சம் தூரமாக இருந்த காரணத்தால், கொஞ்சம் சத்தமாக சொன்னாரேயொழிய வேறொன்றும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவரை எதற்கு நாங்கள் அனாவசியமாக மிரட்ட வேண்டும் ? அப்படி ஒன்றும் இல்லை. அதற்குப் பின்னால் திரு. பட்டாபிராமன் அவர்கள் பேசுகிறபோது அங்கே வார்த்தைகள் வந்த காரணத்தால் வேறுவிதமாக நடந்திருக்கிறது. ஆனால் அமைச்சரைப் பொறுத்தவரையில் அவர் எந்த விதத்திலும் மிரட்ட வேண்டுமென்ற நோக்கத்தில் இல்லை. அவர் அந்தக் கருத்தை எதிர்க்கட்சித் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு போனால் அவர் மற்ற உறுப்பினர்களுக்கு சொல்வார் என்ற உணர்வோடு சொன்னாரேயொழிய மிரட்டுகிற நோக்கத்தில் இல்லை. அப்படி ஒருவேளை நடந்திருந்தால், ஆமாம் என்று ஒப்புக்கொள்வதில் எங்களுக்கொன்றும் பயமில்லை. அப்படி நடக்கவில்லை. ஏன் அப்படி நாங்கள் சொல்ல வேண்டும்.





முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். நான் இங்கே இருந்து கவனித்துக் கொண்டிருந்த வரையில், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கையை நீட்டி, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி தலைவர் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அது மிரட்டுகிற தொனியில் இல்லை என்பதைத்தான் நான் இங்கிருந்து கவனித்தேன். எனவே, அவர், உங்களை அழைத்து, இப்படி என்னைப் பேசவிடாமல் சத்தம் போடுகிறார்கள் என்பதைச் சொல்வதற்காக, அவர்கள் அழைத்த அழைப்பாகத்தான் அதை நான் கவனித்தேன். இதற்கிடையில் என்னைப் பேசவிடாமல் வேறு வேறு விவகாரம் எல்லாம் வந்துவிட்டதால் தான், இவ்வளவு பிரச்சினையும். எனவே, இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துவிட்டு, அடுத்த பிரச்சினைக்குச் செல்லலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடு). நீங்கள் ஏதாவது பேசுவதாக இருந்தால், என்னுடைய அறையிலே வந்து தெரிவித்துவிட்டு, எழுப்பலாம்.

## 4. ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு ''எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.'' என்று பத்திரிகைகளில் செய்தி வெளி வந்துள்ளது பற்றி பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு குறித்து.

திரு, எஸ். திருநாவுக்கரசு : நேற்று என்னை நீங்கள் சுயேச்சை என்று சொல்லி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு), அதை வேண்டுமானால் சொல்லி விடுகிறேன், சில பத்திரிக்கையாளர்கள் எம்,ஜி,ஆர். அண்ணா தி.மு.க, என்று உங்களைப் போட்ட காரணத்தால் அப்படிப்பட்ட கட்சி சட்டமன்றத்தில் இல்லை, (குறுக்கீடு) அதை நான் சொல்லாமல் யார் சொல்ல முடியும். (குறுக்கீடு) இல்லை, சுயேச்சைதான், (குறுக்கீடு) நீங்கள் கேளுங்கள். இந்த அவை விதிமுறைகளின்படி காங்கிரஸ் கட்சி, தி.மு.க., பா. ம. க., ஆகிய கட்சிகள் தவிர வேறு எந்தக் கட்சியும் விதிப்படி அங்கீகாரம் பெறாதவை (குறுக்கீடு) அது இருக்கலாம். நீங்கள் அந்தக் கட்சியாக இருக்கலாம். (குறுக்கீடு) நான் நேற்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நான் நேற்று சொல்லி இருக்கிறேன். நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தது ஒரு கட்சி என்று இருக்கிறபோது, இன்னொரு கட்சி என்று போடுகிற நிலைமை வந்தால், நீங்கள் அன்-அட்டாச்டா அல்லது இன்டிபென்டெண்டா என்று முடிவு எடுக்கவேண்டிய அதிகாரம் பேரவைத் தலைவருக்குத்தான். (குறுக்கீடு) எப்படி பத்திரிகைகளில்

போடுகிறார்கள்? இன்னொரு கட்சி என்று சொல்ல வந்தால் அது பற்றி எனக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வரவேண்டும். இல்லை என்று சொன்னால், நீங்கள் அன்அட்டாச்டா அல்லது இன்டிபென்டன்ட்டா என்று முடிவு எடுக்கும் அதிகாரம் எனக்கு உண்டு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : என்ன உண்டு ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்டு. (குறுக்கீடு). தயவு செய்து உட்காரவேண்டும். இப்படிப் பேசுவது முறையல்ல. ஏற்கனவே நேற்று இரண் டுமுறை வெளியேற்றப்பட்டவர். இரண்டு முறை ஒரு கூட்டத் தொடரில் வெளியேற்றப்பட்டால். . (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : இது அசெம்பிளி புக்தானே? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நேரத்தில், ஏதோ, ''அ.பு.த. கட்சி'' என்று கொடுத்து இருக்கிறீர்கள். பிறகு வேறு கட்சி எப்படி வருகிறது ? பத்திரிகையாளர்கள் போட்டக் காரணத்தாலே அந்தக் கட்சி என்று கோர வந்தால், நீங்கள் சுயேச்சையா, அல்லது எக்கட்சியும் சாராத அன்அட்டாச்டா என்று நான் முடிவு எடுக்க வேண்டும். (குறுக்கீடு) இன்னொரு கட்சி என்று கோரினால் (குறுக்கீடு) எலக்ஷன் கமிஷனிலேயிருந்து எனக்கு வரவில்லை. (குறுக்கீடு) எனக்கு வராத நேரத்தில், நான் முடிவு எடுக்க வேண்டியதுதான்வரும். (குறுக்கீடு) மாண்புமிகு சட்ட அமைச்சர். (குறுக்கீடு). உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்கார வேண்டும். சட்ட அமைச்சர் அவர்களைக் கூப்பிட்டு இருக்கிறேன். (குறுக்கீடு) உங்கள் விருப்பத்திற்குப் பேசக் கூடாது. (குறுக்கீடு). உங்கள் விருப்பத்திற்குப் பேசுவதற்கு புரட்சித் தலைவர் இறந்த நேரத்தில் சம்பாதித்த சம்பாதியத்தை வைத்து நடத்துகிற சினிமா கம்பெனி அல்ல, இந்தப் பேரவை (மேசையைத் தட்டும் ஒலி). இல்லை, தவறான சம்பாத்தியத்தில் வந்த சினிமா கம்பெனி அல்ல இந்தப் பேரவை. (குறுக்கீடு). தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் (குறுக்கீடு). தயவுசெய்து உட்காருங்கள். சட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு). முறைகேடாக நடந்து கொள்ள வேண்டாம். திருநாவுக்கரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது வரும்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் முடிக்கட்டும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், தன்னுடைய கட்சி தேர்தல் கமிஷனாலே அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்று சொல்கிறார்.

Registered party is different from Recognised Party. Your Party is not a recognised Party. It is only a registered party. Registered Party என்பது ஆயிரக்கணக்கான உதிரிகள் என்று சொன்னார்கள். (குறுக்கீடு). ஆயிரக்கணக்கான உதிரிக் கட்சிகள் பண்ணுவார்கள். ஆனால், அவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். Is it recognised? Is it a recognised Party? Have you got a recognised symbol? Every recognised party has is own recognised symbol.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்துப் பேச வேண்டும். (குறுக்கீடு).

முற்பகல் 11-20

Hon. THIRU K. A. KRISHNASWAMY : Every recognised Party has its own recognised Symbol. Anna D.M.K. has got Two Leaves. (Interruption) No, registered is different from recognised (Interruption) You have no locus standi (Interruption) அதை அங்கீகரிக்காத வரையில், தேர்தல் கமிஷன் அங்கீகரிக்காத வரையில், இந்த மாமன்றத்திலே அங்கீகாரம் கிடைக்காது. இதுதான் சட்டத்தினுடைய நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்தான். ஆனால், அந்தப் பெயரை எலெக்ஷன் கமிஷன் ஏற்றுக்கொள்ளவில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசிக்கொண்டு இருக்கிறார். மாண்புமிகு கல்வியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : அதற்குப் பிறகு அவர் வேறு பெயரை வைப்பதற்கு எழுதிக்கொடுத்து, அந்தப் பெயரைத்தான் இப்போது பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அதுவும் இன்னும் எலெக்ஷன் கமிஷனால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. ஏனென்றால் நான் அந்த வழக்கிலே சம்பந்தப் பட்டவன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அறிவித்திருக்கிற அறிவிப்பு நீங்கள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவுடன் நீங்கள் கொடுத்த ஒரு கட்சியின் பெயர். சட்டமன்றப் பேரவையின் '' WHO IS WHO '' புத்தகத்தில் இல்லை. உங்களை அனுமதிக்கவில்லை என்பது அல்ல. (குறுக்கீடு). நீங்கள் எழுப்பியதே முறைகேடாக எழுப்பியிருக்கிறீர்கள். எனவே, பத்திரிகைகளில் வெளிவந்து (குறுக்கீடு) என்னை இவர் அல்ல, இவர் தாத்தா வந்தாலும் விரட்ட முடியாது. (குறுக்கீடு). நான் சொல்லிவிடுகிறேன்.

இந்த அவையில் ஒரு கட்சிபற்றி நேற்றையதினம் சில பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற காரணத்தால் பத்திரிகைகளுக்கு நான் விடுத்த வேண்டுகோள். அதுபற்றி தலைமைக் கொறடா அவர்கள் என்னிடத்திலே ஒரு கோரிக்கை எழுப்பிய நேரத்தில், அப்படிப்பட்ட கட்சி இங்கே இல்லை. அதற்குப் பிறகு அந்தக் கட்சியின் பெயரை ஒரு உறுப்பினர் கோருவாரேயானால் அன்றுதேர்தல் கமிஷனிலே இருந்து வந்திருக்கிற, நீங்கள் சொன்ன கட்சியினுடைய பெயர் இருக்கிற காரணத்தால், இன்னொரு கட்சியினுடைய பெயரை அவர் இன்று கோரினால், அவர் இன்டிபெண்டண்டா அல்லது அன்-அட்டேச்டா என்று முடிவு எடுக்கவேண்டிய நிலைமையில் நான் இருக்கிறேன் என்று நான் நேற்றைக்குத் தெரிவித்திருக்கிறேன். இதை நான் தெரிவிக்காமல் வேறு யார் தெரிவிப்பது ? மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1972-ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க.வைத் துவக்கினார்கள். அண்ணா தி.மு.க. திண்டுக்கல்லிலே முதல் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தது. அப்போது அண்ணா தி.மு.க. அங்கீகரிக்கப்பட்ட கட்சி அல்ல. (Registered Party) அன்றைக்கு இரட்டை இலை சுயேச்சையினுடைய சின்னமாக இருந்தது. பிறகு, தேர்தலில் போதுமான வாக்குகளைப் பெற்று, தேர்தல் கமிஷன் அங்கீகரித்து, இது ஒரு ''ரெக்ககனைஸ்டு பார்ட்டி '' என்று சொல்லி, அந்தச் சின்னம்



தான் அண்ணா தி.மு.க. சின்னம் என்று சொல்லி, இன்றைக்கு இந்தியாவிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட கழகம், அண்ணா தி.மு. கழகம் சின்னம், இதுதான் நடைமுறை அரசியல் கட்சிகளுக்கு. அப்படிப்பட்ட நடைமுறை நண்பருடைய கட்சிக்கு இருக்கிறதா ? இன்றைக்கு ரெகக்னைஸ்டு பொலிட்டிகல் பார்ட்டி என்று அங்கீகரித்து, டில்லி எலெக்ஷன் கமிஷன் கொடுத்திருக்கிறதா என்பதனை அதற்குரிய ஆதாரத்தை உங்களிடத்திலே கொடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிற புத்தகத்தை வைத்துத்தான் நான் சொன்னேன். அதிலே ஒரு கட்சி என்று போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்போது இருக்கிற நிலைமையை வைத்து சட்டமன்ற விதிகளை வைத்து, அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு). அதிலே இருக்கலாம். இன்னொரு உறுப்பினருடைய பெயர்கூட அந்தக் கட்சி என்று தான் இருக்கிறது. இப்போது அதைப் பேசவேண்டியது இல்லை. (குறுக்கீடு). நீங்கள் கேட்டீர்கள், நேற்று என்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறீர்களே என்று. அதற்கு நான் பதில் சொல்லி விட்டேன். நீங்கள் கேட்டீர்கள், நான் பதில் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்.)

## 5. கவன ஈர்ப்பு

### நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் அடைப்பான்கள் பொருத்தும் பணிகுறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, திரு. ம. சின்னசாமி அவர்கள் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம், நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் சட்டர்ஸ் பொருத்தும் பணி நிறுத்தப்பட்டுள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம் நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் நீர்வழிந்தோடியில் 12.30 மீட்டர் அகலமும், 6.70 மீட்டர் உயரமும் உள்ள ஆறு கதவுகள் பொருத்தப்பட்டு வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இந்த அடைப்பான்கள் பொருத்தும் பணி (Erection of shutters) தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நிறுத்தப்படவில்லை. இப்பணி மேலும் நான்கு வாரங்களில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடைப்பான்கள் பொருத்தும் பணி முடியும் வரை, நொய்யல் ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத்தில் வழிந்தோடியின் மட்டமாகிய 7.30 மீட்டர் ஆழம் வரை நீரைத் தேக்கி இதற்கு கூடுதலாக வரப்பெற்ற நீரை இந்த அணைக்குக் கீழுள்ள நொய்யல் தடுப்பு அணைக்கு (Barrage) அனுப்பி அங்கிருந்து ஊட்டுக் கால்வாய் மூலமாக ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திற்கு கொண்டுசென்று, பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் தென்மேற்குப் பருவமழை காலத்தில் எடுக்கப்பட்டன. இந்த முறையில் நொய்யல் ஆற்றில் வரப்பெற்ற நீர் முழுவதையும் சேதமில்லாமல் பாசனத்திற்கு பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, பாசனத்திற்கு பாதிப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை. தற்பொழுது நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் 53 மில்லியன் கன அடி நீரும், ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்தில் 68 மில்லியன் கன அடி நீரும் உள்ளது. இந்த நீர், பாசனத்திற்கு உரிய காலத்தில் பயன்படுத்தப்படும்.

முற்பகல் 11—25

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஷட்டர்கள் பொருத்தும் பணி எப்போது துவங்கப்பட்டது? துவங்கப்பட்ட காலத்தில் இத்தனை காலகெடுவுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று ஏதாவது காலகெடு விதிக்கப்பட்டு, அந்தக் கால கெடுவுக்குள் முடிக்கப்படாமல் அந்தப் பணி தாமதப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் நீர்த்தேக்கி வைக்கின்ற அந்த ''எரக்ஷன் ஆப் ஷட்டர்ஸ்'' என்று சொல்லப்படுகிற அடைப்பான்கள் பொருத்தும் பணி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிறுத்தப்படவில்லை. இன்னும் 4 வார காலங்களிலே அந்தப் பணிகள் முடிக்கப்படும். ஆகவே, பாசன வசதிக்கு எந்தவிதமான இடையூறும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்



6. அறிக்கை அளித்தல்,

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக மருத்துவத்துறை குறித்த 1983—84—ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 7-ஆவது பேரவை அளித்த 24-ஆவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் 6—ஆவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்),

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1992—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்,''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

### (அ) உழவர்களுக்கான கடன் நிவாரணம்பற்றி ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சரின் அறிக்கை :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பதற்கு மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய அனுமதியைக் கோரி இருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23—3—1992-இல் நடைபெற்ற கேள்வி நேரத்தின் போதும், 8—4—1992 அன்று கூட்டுறவுத் துறைக்கான மானிய கோரிக்கைகளின் மீது விவாதம் நடைபெற்ற போதும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய போது, அப்போது தனக்குக் கிடைத்த, கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், கடன் பொறுப்பில் 50 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு விரும்பியது என்றும் எஞ்சியுள்ள 50 சதவீதத்தை மத்திய அரசு கடனாகத்தான் கொடுத்தது என்றும், வி.பி. சிங் அறிவித்த உழவர்களுக்கான கடன் நிவாரணத் திட்டம், வெறும் கண் துடைப்பு என்றும், உண்மையில் மாநில அரசு 50 சதவீத கடன் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது என்றும், எஞ்சியுள்ள 50 சதவீதத்தை மாநில அரசிடமிருந்து வசூலிக்கத் தக்க விதத்தில் கடனாகத்தான் மத்திய அரசு வழங்குகிறது என்றும் கூறி இருந்தார்கள். ஆனால் தற்போது சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் உண்மைகள் பின் வருமாறு என்பதை அரசின் சார்பில் அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தேசிய முன்னணி அரசு அறிவித்த கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து உழவர்கள் பெற்ற கடன்கள் குறித்து கடன் நிவாரணத் திட்டம் மொத்தம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் அமைதி காக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மொத்த கடன் தொகையில் 50 சதவீதத்தை மாநில அரசுகள் ஏற்கவும் எஞ்சியுள்ள தொகையை மத்திய அரசு ஏற்கவும் வகை செய்தது,





பல மாநிலங்கள் தங்களுக்கு நிதி இடர்பாடு உள்ளது என்று தெரிவித்ததை கருத்தில் கொண்டு மாநில அரசுகள் ஏற்க வேண்டிய 50 சதவீதத் தொகையை 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாகக் கருதப்பட்டது. இத்திட்டத்தின் செலவு பொறுப்புகள் முழுவதையும் மைய அரசு ஏற்கவில்லை. தமிழ் நாட்டிலே கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து உழவர்கள் பெற்ற கடனைப் பொறுத்தவரையில் இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு 289 கோடியே 43 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தொகையில் 61 கோடியே 67 இலட்சம் ரூபாயை கூட்டுறவு நிறுவனங்களுக்கு மத்திய அரசு இன்னும் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாபாடு மூலமாக கூட்டுறவு நிறுவனங்களுக்கு மத்திய அரசு இது வரையில் வழங்கிய 50 சதவீத தொகையை மாநில அரசு திருப்பிச் செலுத்தி வருகிறது.

முற்பகல் 11-30

### (ஆ) சத்துணவுத் திட்ட பணியாளர்களுக்கு வார விடுமுறை அளிப்பது குறித்து சமூகநல அமைச்சரின் அறிக்கை:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1982ஆம் ஆண்டு முதல் சுமார் 68,000 மையங்களில் 75 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் தினந்தோறும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்பெறும் குழந்தைகள் நல மையங்களும், 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்பெறும் பள்ளி மையங்களும் ஆண்டு முழுவதும் எல்லா நாட்களிலும் இயங்கி வருகின்றன. இந்த மையங்களில் பணி புரியும் பகுதி நேர பணியாளர்களுக்கு வார விடுமுறை எதுவும் கிடையாது. இந்தப் பணியாளர்களுக்கு வாரந்தோறும் சனி, ஞாயிறு விடுமுறை விட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. சத்துணவு பணியாளர் சங்கங்களின் முக்கியமான கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த கோரிக்கையை தாய் உள்ளத்தோடு பரிவுடன் பரிசீலித்தார்கள். சத்துணவு பணியாளர்களுக்கு வார விடுமுறை விட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் குழந்தைகளுக்கு

தினந்தோறும் சத்துணவு வழங்குவது எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தப்படக்கூடாது என்ற தனது விருப்பத்தையும் தெரிவித் தார்கள். அதற்குரிய மேலான யோசனையும், அறிவுரையும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெரிவிததுள்ளார்கள். இதை அடுத்து சத்துணவு ஊழியர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் எப்படி உணவு நிறுத்தப்படாமல் விடுமுறை வழங்குவது என்ற முதலமைச்சரின் அரிய ஆலோசனையை அவர்களுக்குத் தெரிவித்து ஆலோசனை செய்யப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழ்நாடு சத்துணவு பணியாளர் பேரவை, சத்துணவு அமைப் பாளர் நலச் சங்கம், பால சேவிகாக்கள் சங்கம் ஆகியவை கலந்து கொண்டன. அதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினை ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சரின் அரிய ஆலோசனை அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த பேச்சுவார்த்தை யின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு சத்துணவு பணியாளர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை அளிப்பதென ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவு மைய அமைப்பாளர்களுக்கு இனி எல்லா சனி, ஞாயிறு கிழமைகளிலும் விடுமுறை அளிக்கப்படும். ஆனால் அதே நேரத்தில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற உணவு நிறுத்தப்படாமல் மையத்தில் உள்ள சமையலர், உதவியாளர் ஆகிய இருவரும் மாற்று அடிப்படையில் சனிக்கிழமை, ஞாயிற் றுக்கிழமைகளில் ஒருவர் வந்திருந்து உணவைச் சமைத்து வழங்குவார். அதாவது சனிக்கிழமை உணவைச் சமைத்து வழங்குகின்ற சமையலர் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை எடுத்துக் கொள்வார். ஞாயிற்றுக்கிழமை உணவைச் சமைத்து வழங்கு கின்ற உதவியாளர் சனிக்கிழமை விடுமுறை எடுத்துக்கொள் வார். எனவே, அவர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும் உள்ள 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்துணவு பணியாளர்களின் 10 ஆண்டுக்கால கோரிக்கை கேட்பாரற்றுக் கிடந்ததை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 72 இலட்சம் குழந்தைகளுக்கு உணவும் நிறுத்தப்படா மல் நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 9. அறிவிப்பு.

### முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992--93—மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1992-93 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான



கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make further Grants to the Demands for the year 1992-93".

## 10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992–93—பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக் கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்பு மிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992-93 ஆம் ஆண்டுக்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 21—9—1992 ஆம் தேதி யிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1992-93 ஆம் ஆண்டுக் கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் " என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

கோரிக்கை :

A. வருவாய்க் கணக்கில் செலவு—

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரி களும், தீர்வைகளும்—நிருவாகம் .. | 31,18 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. | 37,37 |
| 11 | மாவட்ட நிருவாகம் .. .. .. | 55,01 |
| 12 | தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் .. .. .. .. | 7,55 |
| 13 | நீதி நிருவாகம் .. .. .. .. | 1,68 |

கோரிக்கை :

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 15 | காவல்துறை .. .. .. .. | 1,39,52 |
| 17 | கல்வி .. .. .. .. | 5,00 |
| 18 | மருத்துவம் .. .. .. .. | 30,14 |
| 20 | வேளாண்மை .. .. .. .. | 5,00 |
| 21 | மீனளம் .. .. .. .. | 15,26 |
| 23 | கூட்டுறவு .. .. .. .. | 69,26,54 |
| 24 | தொழில்கள் .. .. .. .. | 1,96,16 |
| 26 | கைத்தறியும் துணித் தொழிலும் .. | 45,10,00 |
| 33 | வீட்டுவசதி .. .. .. .. | 20,00 |
| 36 | பாசனம் .. .. .. .. | 1,04,00 |
| 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் .. | 8,80 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் .. .. .. | 1,43,44 |
| 43 | பல்வகை .. .. .. .. | 1,38,00 |
| 48 | ஊரகத் தொழில்கள் .. .. .. | 64,70 |
| 49 | குடிநீர் வழங்கல் .. .. .. | 42,94 |
| 50 | நகராட்சி நிருவாகம் .. .. .. | 7,00,00 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு .. .. .. .. | 1,31,82,29 |



B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—

| | | |
|---|---|---|
| 54 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. .. .. | 5,26,67 |
| 55 | பாசனம் குறித்த மூலதனச் செலவு .. | 1,10.00 |
| 56 | பொதுப் பணிகள்— கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 1,91,20 |
| 57 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. .. | 55,02 |
| 58 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூல தனச் செலவு .. .. .. | 10,33,00 |
| 61 | பல்வகை மூலதனச் செலவு .. .. | 3,21,39 |
| | மொத்தம்—B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு .. | 22,37,28 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—

| | | |
|---|---|---|
| 62 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. .. .. | 7,08,94 |
| | பெரு மொத்தம் .. | 1,61,28,51 |

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1, திரு. ஆர். சிங்காரம்

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் நில ஆவணங்களை கணினி மயமாக்கும் முன்னோடி திட்டத்தை அடுத்தடுத்த மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிர்வாகம் என்னும் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 55,01,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 4, திரு. ஆர். நடேசன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7, திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப் பெறவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப் பெறவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17, திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப் பெறவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14, திரு. ஆர். சிங்காரம்.

முற்பகல் 11-35

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் பயிர்க் கடனை 30—9—1992-ம் தேதிக்குள் கட்டுபவர்களுக்கு ஊக்கத் தொகை போனஸ் வழங்குவது 31—12—1992 வரை பணம் கட்ட தேதியை விஸ்தரிக்க அனுமதிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,26,54,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 18, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னைப் பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை காலதாமதமின்றி விரைவில் மேம்பாடு செய்து கொடுப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி இறேன் :

"மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,00,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."



1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 20, திருமதி ரமணி நல்லதம்பி. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 29, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதை துரிதப் படுத்துவது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,00,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 33, திரு. ஆர். நடேசன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 35, திரு ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் விருத்தாசலத் தில் தொடர் சூளை கற்குழாய் தயாரிப்பு தொழிற்சாலையை விரைவில் கட்டி முடித்து உற்பத்தியைத் தொடங்குவதன் அவ சியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,26,67,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 36, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதியில் பகுதிகளில் புதிய கால்வாய் அமைக்கவும், வடி கடைமடை கால் அமைக்கவும் ஆவன செய்வதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 1,10,00,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 39, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 49, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னையில் திரைப்பட நகர் உருவாக்குவதன் அவசியம் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 61—பல்வகை மூலதனச் செலவு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,21,39,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. இன்று உரை நிகழ்த்துகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்குள் அனைவரும் விவாதத்தில் பங்குபெற்று முடித்தால்தான் நாளைய தினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரை வழங்குவதற்கும் ஏனைய அரசினர் தீர்மானங்களை எடுத்துக்கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே குறிப்பிட்ட கால எல்லைக்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கையின் மீது எதிர்க்கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இந்த துணை மானியக் கோரிக்கையிலே வருவாய் கணக்கில் ரூ. 131.83 கோடியும், மூலதனம் மற்றும் கடன் கணக்கில் ரூ. 29.46 கோடியும் கேட்கப்பட்டுள்ளது. எதிர்பாராத செலவு நிதியத்திலிருந்து மொத்தம் 76.25 கோடி ரூபாயும் முன்பணமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கையின் மொத்தத் தொகையான ரூ. 9934 கோடியே 11 லட்சத்தோடு ஒப்பிடும்போது இந்தத் தொகை அதிகம் என்று கூற முடியாது. புதுப் பணிகளை, திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும், எதிர்பாராத செலவினங்களுக்காகவும், அரசு கோரியுள்ள இந்தத் தொகை மிகவும் நியாயமான அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. காவல்



துறைக்கு ஒரு கோடியே 39 லட்சம் ரூபாயும், கூட்டுறவுத் துறைக்கு 69.26 கோடி ரூபாயும், கைத்தறியும் துணித் தொழிலும் என்ற துறைக்கு 45 கோடி ரூபாயும் கோரப்பட்டுள்ளன. காவல் துறையைப் பொறுத்தவரையில் கோரப்பட்டுள்ள தொகை குறைவானது என்றுதான் கூறவேண்டும். ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், நகர்ப் பகுதியில் உள்ள ஏழை எளியவர்களுக்கு இலவசமாக 60 லட்சம் வேட்டியும், 60 லட்சம் சேலையும் வழங்குவதற்கு கூடுதலாக ரூபாய் 45 கோடி கோரப்பட்டுள்ளது. ஏழை மக்களுக்கு இலவச ஆடைகள் வழங்கும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் யாரும் குறை கூறமுடியாது. இருப்பினும் நடைமுறையில் உள்ள சில குறைபாடுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். விநியோகிக்கப்பட்ட ஆடைகள் தரத்தில் குறைவானதாக இருந்ததைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அவை எல்லாப் பகுதிகளிலும் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. இதனால் பல பகுதிகளில் உள்ள மக்கள் மத்தியில் அதிருப்தியும், ஏமாற்றமும் நிலவுகிறது. இந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்து எல்லா ஏழை மக்களுக்கும் பலன் கிட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில்....

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திரு. எஸ். திருநாவுக்கரசு : என்னை 15 நிமிடமாக உள்ளே வரவிடாமல் மறிக்கிறார்கள். நான் வெளிநடப்புதான் செய்தேன். என்னை வெளியேற்றவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : உங்களை வெளியேற்றப்பட்டதாகத் தவறாக நினைத்து செய்து இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். தயவுசெய்து நீங்கள் உட்காரலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : என்னை உள்ளே வரவிடாமல் மறிக்கிறார்கள். போலீசும் சார்ஜண்டும் ஸ்பீக்கர் சொன்னார் என்று சொல்லி, என்னை உள்ளே வரவிடாமல் மறிக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி): இல்லை, இல்லை, ஸ்பீக்கர் எல்லாம் எதுவும் சொல்லவில்லை. வெளியேற்றப்பட்டதாகத் தவறாக நினைத்துச் செய்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

முற்பகல் 11–40

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் ; கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் 69.26 கோடி ரூபாய் கோரப்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலே இருபது சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. புதிய தொழில் கொள்கையின்படி தனியார் ஆலைகளோடு போட்டியிட்டு இலாபகரமாக இயங்குவதில் பல சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றின் பொருளாதார நெருக்கடிக்கு, ஊழியர்களுக்கு வழங்கப்படும் அதிகப்படியான ஊதியமே காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் அது உண்மையல்ல. மொத்தத்தில் ஒன்பது சதவீதத்திற்கும் குறைவாகத்தான் ஊதியத்திற்காகச் செலவிடப்படுகிறது. ஆலைகளின் நிதி நெருக்கடிக்கு உண்மையான காரணம் தவறான நிர்வாகம், திறமையின்மை, இலஞ்ச ஊழல் போன்றவைதான் என்பது பலருடைய குற்றச்சாட்டு.

இதேபோன்று, கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் 18 நூற்பாலைகளின் நிலைமையும் மோசமாகத்தான் இருக்கிறது. இவற்றிலுள்ள குறைபாடுகளையும், முறைகேடுகளையும், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் மேலதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த ஆலைகளுக்குச் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் வருவாய்த் துறையிலே இருந்து வருகிறார்கள். பெரும்பாலும் அவர்களுக்குத் தொழில் நிர்வாகம், மார்க்கெட்டிங், தொழில் உறவு ஆகியவற்றில் பயிற்சியோ, ஈடுபாடோ இருப்பதில்லை. இதனைப் போக்குகின்ற வகையில், தொழில் நிர்வாகத்தில் போதிய பயிற்சி பெற்ற, நேர்மையும், திறமையும் மிக்க அதிகாரிகளைச் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்க வேண்டும். ஆலைகளின் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைச் சிறப்பாக இயங்க வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்த முடியாத முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் நிர்வாகங்கள் மேலும் சீர்குலைந்து, மக்கள் மத்தியில் அதிருப்தி பரவும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையினைப் போக்கி, கூட்டுறவுத் துறை மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி, அதை மக்களுக்குச் சேவை செய்யும் சிறந்த கருவியாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதில்தான் அரசாங்கத்தின் ஆற்றலும் ஈடுபாடும் வெளிப் படுத்தப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





தொழில் துறையைப் பொறுத்தவரையில், தென்னகத்தின் மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, 700 கோடி ரூபாய் செலவில், மத்திய அரசு மேற்கொள்ள இருக்கும் புதிய திட்டம் ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. மத்திய அரசின் மின் சக்தித் துறை அமைச்சர் கல்பனாத் ராய் அவர்கள் நம்முடைய முதலமைச்சரை சென்னையிலே சந்தித்ததற்குப் பிறகு ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள். சீரான மின் விநியோக முறையை ஏற்படுத்த, சந்திரபுரா, இராமகுண்டம்–இராமகுண்டம் மின்னிணைப்பு, ஒரிசாவிலே இருக்கிற ஜெய்பூர், காசுலேகா, விசாகப்பட்டினம் இணைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், கிழக்கு மற்றும் மேற்குப் பிராந்திய மின் உற்பத்திக் கேந்திரங்களில் உபரியாக இருக்கும் மின்சாரம் தென்னிந்தியாவிற்கு விநியோகிக்கப்படும். இதன்மூலம் தென்னிந்திய மாநிலங்களின் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்கலாம்.

அதைத் தொடர்ந்து ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு அனல் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் கூட்டுத் துறை மூலம் நிறைவேற்றப்பட இருக்கிறது. 'அதற்கு மொத்தம் ரூபாய் 7000 கோடி செலவு பிடிக்கும் என்றும், முதற்கட்டமாக 1600 கோடி செலவிடப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் டிட்கோவின் உதவியுடன் சேர்ந்து பிர்லா குரூப் கம்பெனி மூலம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதற்கான Memorandum of understanding கையெழுத்து இடப்பட்டு விட்டது. இருப்பினும் தற்போது ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையைக் காட்டிலும் கூடுதலான தொகையைக் கொண்டு வர வேண்டுமென பிர்லா குரூப் கம்பெனியைத் தமிழக அரசு வற்புறுத்துவதாகவும், அதனால் அவர்கள் இந்தத் திட்டத்திலிருந்தே விலகிக் கொள்ளும் நிலை உருவாகி இருப்பதாகவும் கூறப்படுகிறது. அதுபற்றிய உண்மையான நிலவரத்தை இந்த அவைக்குத் தெரிவிக்குமாறு அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெளிநாட்டு மூலதனத்தை ஈர்ப்பதற்காக மிகப்பெரிய திட்டம் ஒன்று வகுத்திருப்பதாக நான் அறிகிறேன். அதற்காகப் பல்வேறு நாடுகளுக்கும் முதலமைச்சரே பயணம் மேற்கொள்ள இருந்ததாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. தற்போது முதல் கட்டமாக, பல மேல் மட்ட அதிகாரிகள் கூட அந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, திட்டங்களை இறுதி செய்யவிருப்பதாகவும் தெரிகிறது. அதுபற்றிய முழு விவரங்களையும் இந்த அவைக்குத் தெரிவித்தால் உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

கருங்கல் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் நம்முடைய கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியில் 70 சதவீதத்தைப் பெற்றிருந்த தமிழகம், இன்றையதினம் 35 சதவீதத்திற்குக் குறைந்து விட்டது. இந்தத் துறையில் தனியார் முதலீட்டைப் பெருக்கும் வகையில் மற்ற மாநிலங்களைப் போல குத்தகை காலத்தை—லீஸ் பீரியடை அதிகமாக நீட்டிக்க வேண்டும். தற்போது குறுகிய காலத்திற்கே குத்தகை வழங்கப்படுவதால் அதில் முதலீடு செய்வோர் தயக்கம் காட்டுகிறார்கள் என்று கூறப்படுகிறது. அதைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஹோசூரில் அசோக் லேலண்ட் 764 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கமும், புதிய தயாரிப்பும் மேற்கொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது. அரசாங்கம் அதற்கு அளிக்க இருக்கும் உதவிகளைப் பற்றியும், எத்தனை தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதைப் பற்றியும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென நிதியமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல் என்னென்ன திட்டங்கள் வர இருக்கின்றன என்பதையும் தெரிவிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45.

மணலியில் அமையவிருந்த 1,600 கோடி ரூபாய் செலவில் 100 சதவிகித ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட ஆர்.பி.ஜி. இண்டஸ்ட்ரீஸ் என்னும் தொழிற்சாலை தற்போது கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதற்கான காரணங்களையும், உண்மை நிலையையும் தெளிவாக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்த வரையில் ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சட்டரீதியாக அமைக்கப்படும் லேபர் வெல்பேர் போர்டு, ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு மற்றும் பல குழுக்களும் ஓராண்டு காலத்திற்கும் மேலாக, திருத்தி அமைக்கப்படாமல் அவற்றின் செயல்பாடுகள் முடக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அவற்றை உடனடியாக திருத்தி அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வடலூரிலுள்ள சேஷசாயி இன்ஸுலேட்டர்ஸ் என்ற நிறுவனம் கடந்த 2 ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



தமிழகத்திலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. அவற்றின் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அரசாங்கமும் அந்தக் கோரிக்கையை அக்கறையுடன் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகிறது. தற்போது டெல்லி போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் 43 ஆயிரம் தொழிலாளர்களுக்கு பென்ஷன் திட்டத்தை அமல்படுத்தப் போவதாக மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஜக்தீஷ் டைட்லர் தெரிவித்திருக்கிறார். இந்தியாவிலே முதன்முறையாக போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்கும் முறை டெல்லியிலே அமலாகிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்கும் அடிப்படையில், டி.டி.சி. (D.T.C.) ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் அந்த அடிப்படையில் பென்ஷன் வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

போரூரில் உள்ள டபிள்யூ எஸ். இண்டஸ்ட்ரீஸ் இந்தியா நிறுவனம், அங்குள்ள இரண்டு தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களைச் சரிபார்க்கச் சென்ற தொழிலாளர் துறை அதிகாரியை உள்ளே நுழைய விடாமல் திருப்பியனுப்பியிருக்கிறது. இதனைக் கண்டித்து நிறுவனங்களின் அமைப்புக்கு, தொழிலாளர் அமைப்பு புகார் செய்திருக்கிறது. தமிழகத்தில் முதன்முறையாக இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. ஏற்கனவே தொழிலாளர்களின் ஆலோசனைகளை இந்த நிர்வாகம் ஏற்க மறுத்திருக்கிறது. இதேபோன்று, தொழிற்சாலைகளின் ஆய்வாளர்கள் திறமையாகச் செயல்படாத காரணத்தால், பல விபத்துக்களும், உயிரிழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன. அண்மையில் சிவகாசிக்கு அருகில் நாராயணபுரத்தில் நடைபெற்ற துயரச் சம்பவம் உயிரிழப்பு, அதற்கு முன்னர் வெடிமருந்து தொழிற்சாலைக்குத் தேவையான திரிகளை, பயணிகளினுடைய பேருந்துகள் ஏற்றிவந்ததால், அருப்புக்கோட்டைக்கு அருகில் பாலவநத்தத்தில் ஏற்பட்ட கோர விபத்தும், அதில் ஏற்பட்ட பல உயிரிழப்புகளும் நம்முடைய அதிகாரிகளின் அசட்டையானப் போக்குக்கும் கடமை தவறிய செயல்களுக்கும் சரியான உதாரணமாகும். இந்தச் சம்பவங்களைப் பற்றி ஓர் உயர்மட்ட நீதி விசாரணைக்கு உத்தரவிட்டால் உண்மைகளைக் கண்டறியவும், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையான நிவாரணம் கிடைக்கவும் ஏதுவாக இருக்கும்.

கோவை மாவட்டத்தில் சிறிய தொழிற்சாலைகள் ப மூடப்படக்கூடிய அபாயநிலை தோன்றியிருக்கிறது. மூலட்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 செப்டம்பர் 23

பொருட்கள் கிடைக்காததாலும், உதிரிப் பாகங்களுடைய விலை உயர்வினாலும் இந்த நெருக்கடி தோன்றியிருக்கிறது. அரசாங்கம் உடனடியாக இதில் தலையிட்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு நான் கேட்டுக் கொள் கிறேன்.

அதே போன்று கோவை மாவட்டத்தில் பல ஆண்டுகளாக பல ஆலைகள், மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அந்த ஆலைகளை எல்லாம் திறப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள் கிறேன். வேலையில்லாமல் அங்கே நீண்டநாட்களாக அந்தத் தொழிலாளர்கள் பசியிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். தீபாவளி வரவிருக்கிறது. எனவே, அந்தத் தொழிலாளர் களுக்கு அரசு நிவாரணத் தொகை வழங்க வேண்டு மென்றும் நான் இப்போது கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தினுடைய புதிய தொழில் வரி விதிப்பினால், பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறு தொழில் முனைவோ ரையும், வியாபாரிகளையும் பாதிக்காத வகையில் அதை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை, செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள் செலுத்தி விட்டால், அவர்களுடைய காலங்கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிகளுக்குச் சமமான தொகையை, போனஸ் தொகையாக அரசு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு 69 கோடி ரூபாய் கோரப் பட்டுள்ளது. அரசு அறிவித்திருக்கிற சலுகைகளை விவசாயி கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலக்கெடுவை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டித்துத் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் நீண்ட காலத்திற்கு முன்பு பெற்ற தக்காவிக் கடன் போன்ற கடன்களை ஏற்கனவே ரத்து செய்து விட்டதாக எம்.ஜி.ஆர். இருந்த காலத்திலே அறிவித் திருக்கிறார். இருப்பினும், தற்போது அத்தகைய கடன்களை வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு வருவாய்த் துறை அதிகாரிகள். விவசாயிகளை கெடுபிடி செய்து வருகிறார்கள். தகப்பன், பாட்டனுக்கு வழங்கிய கடன்களையெல்லாம் வட்டி யுடன் தற்போதைய வாரிசுகள் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அத்தகைய நடவடிக்கைகளை உடனடி யாக நிறுத்திவைக்க உத்தரவிடுமாறு நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டன் வாங்கிய கடனை எல்லாம் பேரனைக் கட்டச் சொல்லிக் கேட்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், இந்தக் குறிப்பிட்டக் காலத்தில் வாங்கிய கடனைத் தான் நாங்கள் வசூலிக்கிறோமே தவிர, பாட்டன் வாங்கிய கடனை எல்லாம் இந்த அரசு நிச்சயமாக வசூலிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவருடைய இலாகா சம்பந்தப் பட்டதல்ல. அரசு முன்பு கொடுத்த தக்காவிக் கடன்..... (குறுக்கீடு).

முற்பகல் 11-50

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது கோவையில் நிறைய ஆலைகள் மூடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றதற்குப் பிறகு எந்த ஆலையும், தொழிலாளர்கள் பிரச்சினை காரணமாக மூடப்படவில்லை என்பதையும், அது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்திலே ஏதவது விவரங்கள் இருந்தால் தரும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தொழிற்சாலைகளில் ஏற்படுகிற விபத்துக்கள் பற்றிச் சொல்கின்றபொழுது தொழிற்சாலை ஆய்வாளர் களுடைய பணியினுடைய குறை காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். எந்தத் தொழிற் சாலையிலும் தொழிற்சாலை ஆய்வாளர்களுடைய பணியி னுடைய குறை காரணமாக எந்த விபத்தும் ஏற்படவில்லை என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டாக நான் அதைச் சொல்லவில்லை. சிவகாசியிலே நாராயணபுரத்திலே விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு சில நாட்களுக்கு முன்னாலே பாலவநத்தத்திலே ஒரு பஸ் விபத்து ஏற்பட்டது. அந்த பஸ் தினசரி வெடித் திரிகளை ஏற்றிச் செல்லுகிறது. பயணிகளை ஏற்றிச் செல்ல,

[திரு. எஸ் ஆர். பாலசுப்ரமணியன்] [1992 செப்டம்பர் 23

வேண்டிய பஸ் வெடித் திரிகளை ஏற்றிச் செல்கிறது. அந்த பஸ்ஸுக்குப் பெயரே 'திரி வண்டி' என்று பெயர். தினசரி அதிலே மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். எந்த நேரத்திலேயும் விபத்து ஏற்படக் கூடும் என்ற அபாயம் ஆபத்து இருக்கிறது என்று ஆய்வாளர்களுக்குத் தெரியாதா? அதைத்தான் குறிப்பிட்டேன். ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லி ஏதோ ஒரு விதத்திலே இலாபம் பெறவேண்டும் என்ற நோக்கம் அல்ல, நிச்சயமாக இதையெல்லாம் தவிர்த்திருக்க முடியும். 34 பேர்கள் அதிலே பலியானார்கள். பயணிகள் வண்டியிலே வெடித் திரிகளை ஏற்றிச் சென்ற காரணத்தினாலே 34 பேர்கள் பலி ஆகியிருக்கிறார்கள். அதைத் தடுத்திருக்க முடியும். தவிர்த்திருக்க முடியும். எதிர்காலத்திலாவது அப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதைத் தான் சொல்கிறேன். அதன் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது கோவையிலே தொழிற்சாலைகள் மூடப்பட வில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது மூடினால் என்ன? எப்பொழுது மூடினால் என்ன ? பல ஆண்டுகளாக மூடப்பட்ட தொழிற்சாலைகள் கோவையிலே நிறைய இருக்கின்றன. சம்பந்தப்பட்ட உறுப்பினர் இப்போது இல்லை. காணோம். அவரைக் கேட்டால் அவரே சொல்லுவார். அவருடைய தொகுதியிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இன்னமும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்காக இன்றைய தினம் கேட்கின்றேன் உடனடியாக ஆலைகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று நான் கேட்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சொன்னது கூட்டுறவுத் துறை கடன் அல்ல. இந்த கடன் அரசுக் கடன். அதனால் தான் ஜாக்கிரதையாக 'தக்காளிக் கடன்' என்றும் மற்ற கடன்கள் என்றும் நான் சொன்னேன். ஒரிஜினல்களை நான் வைத்திருக்கிறேன். கொடுக்கப்பட்ட அறிவிப்பையும் நான் வைத்திருக்கிறேன். நில வருவாய் ஆய்வாளர் கொடுத்த காப்பி என்னிடத்திலே இருக்கிறது. குளத்துப்பாளையம் என்று என்னுடைய ஊரிலிருந்து 1 மைலுக்குப் பக்கத்திலே இருக்கிறது. அந்த ஊரிலே சுப்பையாக் கவுண்டர் மகன் முத்துசாமி என்பவருக்கு ரூ. 1,702.20 காசு உடனடியாகச் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஜப்தி செய்வோம் என்ற நோட்டீஸ் வந்திருக்கிறது. அதே போல என்னுடைய சொந்த ஊரிலே சுல்தான் பேட்டையிலே ஸ்ரீ கிருஷ்ணசாமிக் கவுண்டர் மனைவி திருமதி இராஜாம்பாள் என்பவருக்கும் அதே போல ரூ. 1,702.20 காசு உடனடியாகச் செலுத்த வேண்டும் என்று போட்டு, பல்லடம், வட்டாட்சியரிடமிருந்து



1992 செப்டம்பர் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அறிவிப்பு வந்திருக்கிறது. இது தக்காவி கடன்கள். நீண்ட நாட்களுக்கு முன்னாலே ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னாலே 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தக் கடன்கள் எல்லாம் ரத்து செய்யப்பட்டு விடும் என்று எம். ஜி. ஆர். காலத்திலே அறிவிக்கப்பட்டது. அதைத் தான் நான் சொல்லுகிறேன். இது கூட்டுறவுத் துறை கடன் அல்ல. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டதற்கு நான் நன்றி சொல்ல வேண்டும். தயவு செய்து, அருள்கூர்ந்து, இதுபோன்ற கடன் களைத் திருப்பிக் கேட்காதீர்கள். முழுமையாக ரத்து செய்து விடுங்கள். 500 ரூபாயை அப்பன் வாங்கி இருப்பான். அந்தத் தம்பி என்னிடத்திலே சொல்வது—அப்பா அப்பொழுது 500 ரூபாய் வாங்கியிருப்பார். இதுவரை நானே வந்து 800 கட்டி விட்டேன். திரும்பவும் ரூ. 1,702.20 காசு கட்ட வேண்டும் என்று வந்திருக்கிறது என்று சொல்கிறார். இதற்கெல்லாம் நீங்கள் நிச்சயமாகப் பரிகாரம் காணவேண்டும். இதை நீங்கள் கண்டிப்பாக நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இடைநிலைக் கல்விக்காக உலக வங்கியிடமிருந்து ரூ. 1,400 கோடி கடனாகப் பெறப்படும் என்று கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே கரும்பலகைத் திட்டத்தின் கீழ் தொடக்கக் கல்விக்கு ரூ. 62.04 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையில் ஒரு பகுதியைக் கொண்டு பள்ளிகளுக்கு வாங்கப்பட்ட நாற்காலி, மேசை போன்ற பொருட்கள் தரம் குறைந்தவை, பயன்படுத்த முடியாத அளவில் அமைந்திருக்கின்றன. சாதாரண ஜாதிக்காய் பலகையை கொண்டு செய்யப்பட்டிருக்கின்றன. பல பள்ளிகளிலே விஞ்ஞானக் கருவிகள் அடங்கிய பெட்டிகள் இன்றுவரை திறக்கப்படவில்லை. பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஏன் என்று ஆசிரியர்களைக் கேட்டால், ஒரு சிறு பெட்டியைக் கொடுத்திருக்கிறார்கள். சாவி கொடுக்கப்படவில்லை. அதிலே பொருள் உள்ளே இருக்கிறதா? இல்லையா என்பது சந்தேகமாக இருக்கிறது. அது இலகுவாக இருக்கிறது. எந்த விதமான வெயிட்டும் இல்லை. எனவே நாங்கள் திறக்காமல் வைத்திருக்கிறோம் என்கிறார்கள். எனவே, இத்தகைய கருவிகளை வாங்குவது, கட்டிடங்கள் கட்டுவது போன்ற பணிகளில் தவறுகள் நடைபெறாவண்ணம் அவைகளைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 50 சதவிகித இடங்களைத் தகுதியானவர்களுக்கு அரசாங்கமே வழங்கி வந்தது. மீதம் உள்ள 50 சதவிகிதத்தை நிர்வாகமே நிரப்பிக் கொள்ள அனுமதித்து வந்தது. ஆனால் அண்மையில் உச்ச நீதிமன்றமும், அதனைப் பின்பற்றி ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றமும் வழங்கியுள்ள தீர்ப்புகளில், அத்தகைய

டி 2 53-379—40

*[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 செப்டம்பர் 23 முற்பகல் 11-55*

செயல் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் தமிழகத்திலுள்ள சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தெளிவாக்க வேண்டும். மாணவர்களிடமிருந்து எந்தப் பெயரில் பணம் வசூலிக்கப்பட்டாலும் அது தவறு என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால் குறுக்கு வழிகளிலும் திரைமறைவிலும் தனியார் நிர்வாகங்கள் பணம் பறிப்பதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் அறிவிப்பு நடவடிக்கையும் முரணாக அமைந்திருக்கிறது. ஆசிரியர் பயிற்சி பெற்று 45 ஆயிரம் பேர் வேலையில்லாமல் இருப்பதால் புதிதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறப்பதற்கு அனுமதி இல்லையென்ற கொள்கை முடிவை அரசு அறிவித்தது. விளம்பரமாகவும் வெளியிட்டது. ஆனால் அதற்கு நேர் மாறாக தனியார் துறையில் 140 பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க அனுமதி அளித்திருக்கிறது.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் சிறுபான்மையினத்தவருக்கு எல்லாவிதமான உரிமைகளும் அரசியல் சட்டப்படி தரப்படுகிறது. அது இல்லையென்று சொல்லுகின்ற அதிகாரம் அரசுக்கு இல்லை.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u> : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சிறுபான்மை சமுதாயத்தையே குறிப்பிடவில்லை. சென்ற ஆண்டு அரசு அறிவிப்புக் கொடுத்திருக்கிறது.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படி என்றால் பெரும்பான்மை இந்துக்களுக்கு மட்டும் இல்லையென்று சொல்கின்ற அதிகாரம் எங்களுக்கு இருக்கிறது. அதை நாங்கள் முறையாக பயன்படுத்துகிறோம்.



*1992 செப்டம்பர் 23]*

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்த விஷயமே வேறு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி எடுத்துக் கொண்டார்கள் என்று புரியவில்லை. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், தமிழ்நாடு அரசின் முக்கிய அறிவிப்பு, தமிழ் நாட்டில் இப்போது இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் சுமார் 45 ஆயிரம் பேர்களுக்கு மேல் தங்களுடைய பெயர்களை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு வேலை கிடைக்காமல் காத்து இருக்கிற.........

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொன்னதற்கு காரணம் இனிமேல் நான் பேச வேண்டிய நிலைமை இருக்காது என்பதற்காகத்தான் எத்தனை பள்ளிகளுக்கு உயர்நீதிமன்றம் அனுமதி தந்திருக்கிறது என்ற விவரங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியுமென்று நான் கருதுகிறேன். எவ்வளவு பள்ளிகளுக்கு ஆரம்பிக்கின்ற உரிமை தந்திருக்கிறார்கள், எவ்வளவு பள்ளிகளுக்கு நாங்கள் தர முடியாது என்று சொன்னபோது 'கன்டெம்ட் பெட்டிஷன்' போட்டு அதிகாரிகள் மீது தண்டனை விதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகள் உருவாகி இருக்கின்றன. ஆகவே 'அப்சலூட் ரைட்' அவர்களுக்கு இருக்கிறது என்று சொல்லிவிட்டு இன்றைக்கு நாங்கள் அவர்களை முறைப்படுத்த முடியுமே தவிர அவர்களுக்கு தரமுடியாது என்று சொல்லுகின்ற அதிகாரம் அரசுக்கு இல்லை. அப்படியே நாங்கள் உத்திரவு போட்டிருந்தாலும் அந்த உத்திரவு 'கான்ஸ்டிடியூஷனல் லாவுக்கு' உட்பட்டதுதானே தவிர அதை மீறி எதுவும் நாங்கள் செய்ய முடியாது. ஆகவே நீதிமன்றங்களிலிருந்து வருகின்ற தீர்ப்புகளை எல்லாம் தேவையானால் நான் இன்னொரு சந்தர்ப்பத்திலே முழுமையாக சொல்ல விரும்புகிறேன்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நவம்பர் மாதம் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. "ஏற்கனவே படித்து பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள் 45 ஆயிரம் பேர். இது தவிர ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் பேர் பயிற்சி பெற்று வெளியே வருகிறார்கள். ஓராண்டு காலத்தில் அதிகபட்சமாக நாம் வேலை கொடுத்தால் 5 ஆயிரம் பேருக்குத் தான் வேலை கொடுக்க முடியும். எனவே, இனிமேல் புதிதாக பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட மாட்டாது" என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதே அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னால் சட்டசபையிலேயும் பேசி இருக்கிறார்கள். அதை நான் மீண்டும் வாசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். அதற்குப் பின்னாலே இப்பொழுது என்ன புதிய நிலை ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தினுடைய பெயரை நான் சொல்கிறேன். அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். இந்த நிபந்தனையை பூர்த்தி செய்துகொள்பவர்களுக்குத் தரவேண்டுமென்று தீர்ப்புத் தந்திருக்கிறார்கள். தராமல் இருக்க வேண்டுமென்றால் இந்துக்களுக்கு மட்டும்தான் தராமல் இருக்க முடியும். இந்துக்களுக்கு அநியாயம் செய்ய வேண்டுமென்பது அநீதி செய்ய வேண்டுமென்பது எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்தாக இருக்குமானால் நான் மேற்கொண்டு பேசுவதற்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மைக்கை அடிக்கடி ஆப் செய்துவிடுகிறார்கள். இது திசை திருப்பும் முயற்சி. யார் எழுந்தாலும் மைக்கை ஆப் செய்துவிடு கிறார்கள். இது முறையல்ல.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : நீங்கள் பேசுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : ஏற்கெனவே, 45 ஆயிரம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆண்டொன் றுக்கு முன்பு இருந்த பள்ளியிலே 4 ஆயிரம் பேர் பயிற்சிபெற்று விடுகிறார்கள். இப்பொழுது புதிதாக 200 மேற்படி பள்ளிகள் என்று சொன்னால் இதிலே, 8, 9 ஆயிரம், அதிலே ஒரு 4 ஆயிரம் பேர் ஆக 13 ஆயிரம் பேர் ஆண்டொன்றுக்கு வரப்போகிறார் கள். 49 பிளஸ் 13, 62 ஆயிரம் பேர்களை மீண்டும் வேலை யில்லாதவர்களாக ஏன் உருவாக்க வேண்டும்? இந்த அரசி னுடைய மாறுபட்ட நிலைக்கு காரணங்கள் யாவை என்பதை பொதுமக்களுக்கு விளக்க வேண்டும் என்ற கடமை இந்த அர சுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இந்த பிரச் சினையை எழுப்பினேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வெள்ளையனே வெளியேறு பொன் விழா கொண்டாட்டத் தின்போது விடுதலைப் போராட்ட வீரர்கள் கவுரவிக்கப்பட் டார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன்..........

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் சொல்கின்றபோது வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றிச்



சொன்னார்கள். பட்டம் படித்தவர்கள் எல்லாம், எம்.ஏ., படித்துவிட்டு, பி.ஏ., படித்துவிட்டு வேலையில்லை என்பதாலேயே நாம் கல்லூரிகளை மூடிவிடுவதில்லை. அதே போல நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னது, பயிற்சிப் பள்ளிகளை நிறுத்துகின்ற அதிகாரம் எங் களுக்கு இல்லாதபோது, அது ஒரு பகுதியினருக்கு, அவர்களுக்கு மட்டும் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கிறபோது, அது எல்லோருக் கும் சமமாக இருக்க வேண்டும் என்பதால்தான் அவர் ஆரம்பிக்க அனுமதித்தாரே ஒழிய, வேலை இல்லாத் திட்டம் என்பதற்கும் கல்லூரி ஆரம்பிப்பதற்கும் தொடர்பு இல்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அரசின் அறிவிப்பு அப்படி சொல் லியது. ஏன் அது மாறியது என்ற நிலையை விளக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் கேட்டுக்கொண்டேன்.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன் விழாவின் போது விடுதலைப் போராட்ட வீரர்கள் கவுரவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் தொகையை மட்டும் 400 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி நம்முடைய முத லமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதே போல, மத்திய அரசின் பென்ஷன் தொகை பெறு பவர்கள் ரூ. 750 ஏற்கெனவே பெற்று வந்தார்கள். தமிழக அரசு அவர்களுக்கு ரூ. 100 சேர்த்து இதுவரை ரூ. 850 கொடுத்து வந்தது. இப்போது முதலமைச்சருடைய அறிவிப்பில் இன்னொரு ரூ 150 சேர்த்து அவர்களுக்கும் மாநில அரசுக்கு சமமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று சொன் னார்கள். ஆனால், அதற்குப் பின்னாலே மத்திய அரசு அவர் களுக்கு ஆயிரம் ரூபாயாகப் பென்ஷன் தொகையை உயர்த்தி இருக்கிறது. ஆக, இந்த துணை மானியக் கோரிக்கையிலே அது தெளிவாக்கப்படாமல் விடுபட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய் பெறப்படும் வகையில் என்று சொல்லியிருக்கிறார்கள் ஆனால், மத்திய அரசு பென்ஷனோடு சரி என்று பொருள் ஆகிறது. எல்லா மாநிலங்களிலே, பெரும்பாலான மாநிலங்களிலே விடு தலைப்போராட்ட வீரர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பொறுத்த வரையில் அவர்களும் நல்ல தொகையைக் கொடுக் கிறார்கள். மாநில அரசு பென்ஷன் பெறுகின்றவர்களுக்கு அதே தொகையை மத்திய அரசு பென்ஷன் பெறுகின்றவர்களுக்கு, அவர்கள் தருகிறார்கள. ரூ. 750 அல்லது 1,000 ரூபாய் என்றால் இவர்கள் ரூ. 400 போட்டு, 500 ரூபாய் போட்டு ரூ. 1,500 என்ற அளவுக்குக்கூட கொடுக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்திலே மத்திய பென்ஷன் பெறும் சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு ரூ. 500 வரை உயர்த்தி ரூ. 1,500 அளவுக்கு கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் குடும்பத்தினர் பெறும் பென்ஷன் முன்பு ரூ. 400. இவர்களுக்கு ஆயிரம் அறிவித்துவிட்ட பின்னர் இன்னொரு 100 சேர்த்து ரூ. 500 என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் மற்ற பென்ஷன்தாரர்களையும் போல ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு தொழில் நுட்பக் கல்லூரிகளில் போதுமான இட ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது ஒதுக்கப்பட்டுள்ள இடம் மிகக் குறைந்த அளவில் இருக்கிறது. மருத்துவக் கல்லூரிக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பொறியியல், வேளாண்மை, கால்நடை, அறிவியல் மற்றும் சட்டக்கல்லூரி போன்றவற்றிற்கும் விரிவுபடுத்தி அந்த உத்தரவை, புதிய ஆணையைப் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் கூடலூரில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பெல்ட் ஏரியா அரசாணையைத் திரும்பப்பெறவேண்டும், நுழைவு வரியை திரும்பப் பெற வேண்டும், பஸ் கட்டணம் உயர்வு வேறு எந்த ஊரிலும் இல்லாத அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. சாலைகள் பராமரிப்பு, வீடுகள் கட்ட அனுமதி, மின் இணைப்பு போன்றவற்றில் உள்ள சிக்கல்களை எல்லாம் தீர்க்க வலியுறுத்தி பொதுமக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அரசியல் கட்சி மட்டுமல்ல, பொது நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் கூடலூரிலே இருக்கின்ற அத்தனைபேரும் ஒன்று சேர்ந்து கோரிக்கைகளை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டமே நடத்தினார்கள். அமைதியாக நடந்த போராட்டத்தில் முன் எச்சரிக்கையாக இரண்டாயிரம் பேரைக் கைது செய்து கொண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனில் காம்பவுண்டுக்குள்ளே வைத்துவிட்டு, தலைவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டு இருந்த அந்த எஸ்.பி. அதாவது அந்த சூப்பிரண்டண்ட் ஆப் போலீஸ், தலைவர்களிடத்திலே 100 பேர்களைக் கொடுங்கள் என்று கேட்கிறார். எதற்கு என்றால் கைது செய்து அவர்கள்மீது வழக்கு போடுவதற்காக 100 பெயர்களை நீங்களே கொடுங்கள் என்று கேட்கிறார். தலைவர் அவர்கள் அப்படியெல்லாம் கொடுத்து எங்களுக்குப் பழக்கம் கிடையாது, பெயர்கள் கொடுக்க மாட்டேன் என்று சொல்கின்றார்கள். சொன்ன உடனேயே எந்த விதமான ஆத்திரம் ஊட்டும் செயல்கள் இல்லாத நிலையில் கண்மூடித்தனமாக காட்டு மிராண்டித் தனமாக அந்த போராட்ட வீரர்கள் மீது தடியடி பிரயோகத்தை இந்த எஸ்.பி. நடத்தியிருக்கிறார். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ஆர். ராஜு.





திரு. கே. ஆர். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கூடலூரைப் பொறுத்தவரையிலும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியது அத்தனையும் தவறானது. அவர்கள், போலீஸ் மேலே கல்லடித்தும், ரோடுகளுக்குக்குறுக்கே மரங்களை வெட்டிப்போட்டும் தகராறு பண்ணியதால்தான் போலீஸ் தலையிட்டதே ஒழிய, அவர்கள் அமைதியாக இருந்தபோது அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி விசாரணை வையுங்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர் சொல்வதை நான் தைரியமாக ஏற்றுக்கொள்கிறேன். ஒரு நீதி விசாரணை வையுங்கள். நாங்கள் நிரூபிக்கிறோம்.

மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்துவதில் பல கடுமையான சோதனைகளையும், இடையூறுகளையும் சந்திக்க நேரிடுகிறது. மலிவு விலை மதுவை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்''. நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் கலவரங்கள் வேண்டுமென்ற முறையில் திணிக்கப்பட்டு ஒரு சில சுயநலமிகளால், உதாரணமாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. அந்தப் பகுதியைச் சார்ந்தவர் அப்படிச் சொன்னது தவறு என்று சொல்கிறார். நீங்கள் புதிதாக ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : அங்குள்ள ஒரு தனி நபர் அவருடைய சுயநலத்திற்காக, அரசாங்கத்திற்குச் சொந்தமான கோயில் நிலத்தில் 47½ ஏக்கரை வெட்டிப் பிடித்து, தடுக்கப் போன வனத் துறை அதிகாரிகளை அடித்து, உதைத்து, மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்க முயற்சி செய்த அந்த கேஸ் இன்னும் இருக்கிறது, அப்படிப்பட்ட ஒரு தனி நபர்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிச் சொல்வது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது. பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷனில் தான் வரும். உட்காருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்துவதில பல கடுமையான சோதனைகளையும் இடையூறுகளையும் சந்திக்க நேரிடுகிறது. மலிவு விலை மதுவை ஒழிப்பதில் முனைப்புக் காட்டியபோதிலும் மாநிலத்தினுடைய நிதி நெருக்கடியைத் தொடர்ந்து அந்நிய வகை மதுபானக் கடைகளை அதிகமாகத் திறக்கவும், அதிலே பார்களை வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. சமூக விரோத சக்திகளின் வேலைகள் சுறுசுறுப்பு அடைந்திருக்கிறது. வேலையில்லாத பல இளைஞர்களைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச்சாராய விற்பனை, கள்ளக் கடத்தல் போன்ற செயல்கள் பெருகிவிட்டன. நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் கள்ளச்சாராய விற்பனையும் குற்றங்களும் அன்றாட நிகழ்ச்சியாகி விட்டன. இதனால் வழிப்பறி, கொள்ளை, கொலை, வன்முறை தாக்குதல் போன்ற குற்றங்கள் பெருகி, ஒரு அச்சமான நிலைமை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் குற்றவாளிகளுக்கு உதவியாக காவல் துறையினரே செயல்படுவதாகவும் செய்திகள் வருகின்றன. இன்னும் சில இடங்களில் சமூக விரோதிகளை ஒடுக்குவதில் முனைப்புக் காட்டும் காவல் துறை அதிகாரிகள் தாக்குதலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

பல நேரங்களில் குற்றவாளிகளைப் பிடிக்கும் நேர்மையான அதிகாரிகள் பல இடங்களில் மேலிடங்களினுடைய கோபத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மிகவும் சீர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சரியான முறையில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்துகிற அதிகாரிகள் மேலிடத்தினுடைய கோபத்திற்கு ஆளாயிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது எந்த இடம், எந்த அதிகாரி என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : ஒரு போலீஸ் அதிகாரி, பல குற்றங்களைக் கண்டுபிடித்து பாராட்டும், விருதுகளும் பெற்றவர். அப்படிப்பட்ட ஒரு அதிகாரி வேறு ஒரு பெரிய சமூக விரோத செய்கையை பிடித்துவிட்டார். சாராயக் கடத்தலைத் தடுத்துவிட்டார். அவர் வைத்துக்கொண்டிருந்த



பணத்தை எல்லாம் பிடித்து கோர்ட்டிலே ஒப்படைத்தார். இப்பொழுது அவருடைய நிலை என்னவென்றால் எங்கேயோ தூரத்தில், கடற்கரை ஓரத்திலே போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒன்றும் பெரிய போலீஸ்காரராக, பெரிய சேவை ஒன்றும் செய்துவிடவில்லை. அந்தக் குறிப்பிட்ட சமூக விரோதி உடனடியாக வெளியே வருவதற்கு வேண்டுமான உதவிகளைச் செய்தார் அவர், என்பதற்காகத்தான் மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அமைச்சர் அவர்கள் யாரைக் கருதிக்கொண்டு சொல்கிறார் என்று எனக்குத் தெரியும். அவர் அல்ல இவர். அவர் சொல்வது எஸ்.பி., நான் அவரை. சொல்லவில்லை. I am speaking about Inspector of police. நான் சொல்கிற இன்ஸ்பெக்டர் விருது பெற்றிருக்கிறார். (குறுக்கீடு). சொல்ல வேண்டுமென்றால் சொல்கிறேன். எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. சொல்ல வேண்டுமென்று நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்துகிறீர்கள் என்றால் சொல்கிறேன். நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லையே. நான் நாகரீகமாகவே பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமைச்சர்கள் உட்கார்ந்து கொண்டே கேட்கக் கூடாது. அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பதில் சொல்ல வேண்டியதில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இந்த நிலையில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மிகவும் சீர்குலைந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். இதிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு இன்ஸ்பெக்டர் வந்து மேலிடத்தினுடைய கோபத்திற்கு ஆளாகி மாற்றப்பட்டிருக்கிறார் என்று அவரோடு முடிச்சிப் போட்டு மேலிடம் என்று குறிப்பிடுவதெல்லாம் ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கிவிடும் என்பதால் அது சரியல்ல என்று நான் கருதுகிறேன். காரணம், ஒரு இன்ஸ்பெக்டரை மாற்றுவது என்பது, சாதாரணமாக அவர் எவ்வளவு நல்லவராக இருந்தாலும், 3 ஆண்டுகளுக்கு

ஒரு முறை மாற்றுவார்கள். எனவே, அப்படி இருக்கும் போது,
தவறான நடவடிக்கை அரசாங்கம் எடுக்கிறது என்ற முடிவிற்கு
வந்துவிடக் கூடாது. அப்படி இருந்தால் எதிர்க் கட்சித் தலைவர்
என்ற முறையிலே முதலமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகப்
பேசுவதற்கு எவ்வளவோ வாய்ப்புக்கள் அவர்களுக்கு இருக்கின்
றன. எனவே, அந்த வகையிலே அவர்கள் இப்படிச் சொல்வது
அவ்வளவு பொருத்தமாக எனக்குப் படவில்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—10

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நடந்த சம்பவத்தை
நான் குறிப்பிட்டேன். அதைத் திருத்தினால் திருத்துங்கள்.
நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆக்சுவலி நடந்தது.
இது எல்லோருக்கும் தெரியும். அவர் அட்மினிஸ்டிரேடிவ்
டிரிப்யூனலுக்குக்கூடப் போனார். அட்மினிஸ்டிரேட்டிவ் டிரீப்யூ
னலில் வழக்கு ஒன்று இருக்கிறது. அது எல்லாம் வேண்டாம்.
அதையெல்லாம் ஏன் இங்கே பேச வேண்டும் ?

சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் ரௌடி
களின் அட்டகாசம் அதிகரித்து, மக்கள் பீதி அடைந்திருக்கிறார்
கள். குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டிய காவல் துறை பல்
வேறு குழுக்களாகச் செயப்பட்டு வருவது வருத்தத்தை அளிக்
கிறது. அரசாங்கத்திற்குச் சவால் விடுவதுபோல் வெடி குண்டு
வீச்சு, துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்கள் நெல்லை,
சென்னை போன்ற இடங்களில் பெருகிவிட்டன். இவற்றை
யெல்லாம் சீர்திருத்தி, காவல் [துறையினர்] மீது மக்களுக்கு
நம்பிக்கை ஏற்படுத்துவது அரசாங்கத்தினுடைய அவசர
கடமையாக இருக்கிறது. சமூக விரோதிகளை ஒடுக்க வேண்டும்.
கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்கள்; மதுக்கடை
களிலே கள்ள மது விற்பவர்கள் மீதெல்லாம் கடும் நடவடிக்கை
எடுக்க வேண்டும். சமூக விரோத சக்திகளுக்கு அரசியல் அந்
தஸ்தும் அரவணைப்பும், கொடுக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி
வைக்க வேண்டும். இந்த ஆட்சி மக்களுக்காக மக்களின் பிரதி
நிதிகளால் நடத்தப்படும் ஆட்சியாக இருக்க வேண்டும்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்".

(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாராவது ஒருவர்.
கூட்டுறவுத் துறை அமைச்சர்.





மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி
நடக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். இப்போது இந்த
ஆட்சியை யார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் ?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, அனைத்து மக்க
ளாலும் ஏகோபித்து, பாராட்டப்படுகிற ஆட்சியாக, நல்ல
ஆட்சியாக இந்த ஆட்சி இருக்க வேண்டும்.(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்கிறார்.
அதற்கு பதில் சொல்லுகிறார். வேறு ஏதாவது கருத்தாக இருந்
தால் கேட்கலாம். எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதுகூடச் சொல்ல
வேண்டாமென்றால் சொல்லவில்லை. (குறுக்கீடு). கடுமையான
ஒரு சொல்லைக்கூட நான் பயன்படுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எதிர்க்
கட்சித் தலைவர் அவர்களுக்கு, தாங்கள் சொன்ன அடிப்படை
யிலே அதைப் பற்றி விளக்கங்கள் கேட்கும்போது எந்த
வகையிலும் அமைச்சர்கள் குறுக்கிடுகிறார்கள் என்று
அர்த்தமல்ல. (குறுக்கீடு). எதிர்க்கட்சித் துணைத்
தலைவர், சொல்லுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, பொறுப்புள்ள எதிர்க் கட்சியாக, சாதாரண
நடைமுறைகளைக்கூட இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித்
தலைவர் சுட்டிக் காட்டக்கூடாது என்று சொன்னால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுட்டிக் காட்டக்கூடாது
என்று சொல்லவில்லை. அதற்கு விளக்கம்தான் கேட்கிறார்கள்,
மேற்கொண்டு விளக்கம் கேட்கிறார்கள். அதில் தவறில்லை.
மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர்,
மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்குப் பதில் சொல்கிற
போது மக்களுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ஆட்சியாக
இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டேன் என்று சொன்னார்கள்.
இந்தியாவிலேயே ஒரு கோடி வாக்குகளை அதிகமாகப் பெற்ற
மக்களுடைய ஏகோபித்த ஆட்சிதான் இந்த ஆட்சி என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ் டேனியல் ராஜ் : ஏகோபித்த அளவிலே அதிக மான வாக்குகளைப் பெற்றிருக்கிறது என்பதில் எங்களுக்கு எந்த விதக் கருத்து வேறுபாடும் இல்லை. அதற்கு நாங்களும் உடந் தையாக இருந்தோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு தலை வர் அவர்களே, நான் குறிப்பிடுவது, நம்முடைய அணி பெரும் வெற்றி பெற்றிருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண் டியதில்லை. பெருமை மிக்க வெற்றியை நாம் பெற்றிருக்கி றோம். அந்த வெற்றி நீடித்திருக்க வேண்டும். மக்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கை தொடர்ந்து அப்படியே இருக்க வேண்டுமென்று சொல்கிறேன். அதற்குக் குறுக்கே வந்தால் அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. "சொல்லுதல் யார்க்கும் எளிது, அரியவாம் சொல்லிய வண்ணம்செயல்" என்ற வள்ளுவரின் மணி மொழியை நினைவில் கொண்டு நம் முடைய சொல்லுக்கும், செயலுக்கும் நெருக்கத்தை ஏற்படுத்தும் பணியில் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

பிற்பகல் 12-15

*திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள முதல் துணை நிதிநிலை அறிக்கையினை ஆத ரித்து சில கருத்துக்களை எடுத்துவைக்க விழைகிறேன்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் இந்த அரசின் தலையாய கடமையாகக் கருதி, இந்தத் துணை மதிப்பீட்டைத் தாக்கல் செய்திருக்கிறது. அதுபோன்று ஏழை எளியவர்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு உதவிகளும், தியாகிகளுக்கும் [illegible] போன்றவைகளும், மற்றும் பல்வேறு [illegible] செலவினத்திற்கான ஒரு [illegible] மதிப்பீட்டில் [illegible] மதிப்பீடு அமைந்திருக்கிறது.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு தன்னுடைய சாதனைகளை எடுத்து வைக்கின்ற அளவுக்கு மதுரையில் மாநாட்டை நடத்தியதற்குப் பின்னால் சுமார் 40 இலட்சம் பேர் அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள் என்ற எண்ணத்திற்குப் பின்னால், பல்வேறு அரசியல் கட்சிகள் இந்த அரசைக் கொச்சைப் படுத்துவதும் பலவீனப்படுத்துவதும் திட்ட மிட்டு நடைபெற்று வருவதாக இந்த நேரத்தில் என்னால் மிகத் தெளிவாக எடுத்துவைக்க முடியும்.

விடுதலைப் புலிகளை இந்த நாட்டில் தடை செய்த பெருமை இந்த அரசைச் சாரும். அப்படி தடை செய்த பின்னால் இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கைச் சீர்குலையச் செய்கிற பல்வேறு பணிகளை பாட்டாளி மக்கள் கட்சி போன்ற கட்சிகள் செய் வதும், ராஜீவ்காந்தி அவர்களைக் கொலை செய்த கொலை காரர்களின் படங்களைத் தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரத்தில் எடுத்து வந்ததற்குப் பின்னால், இதுகாரும் மானத் தைக் காக்க வந்த தலைவர்கள் கண்டிக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மானத்தைக் காப்போம் என்று சொல்கிற அரசியல் தலைவர்களும் இந்த அரசோடு பல்வேறு எதிர்க்கட்சிகளும் இணைந்து சட்டம் ஒழுங்கைக் காப்பதற்காக தங்களால் ஆனப் பணிகளைச் செய்யவேண்டுமென்று இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில சர்க்கார் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட சர்க்கார். மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு மேலே இருக்கிற முதலாளி சர்க்கார் என்று கூட வைத்துக் கொள்ளலாம். ஆனால், மாநில சர்க்கார் என்பது ஒரு தனி மனிதனுடைய அன்றாட அனைத்துப் பிரச்சினைகளையும் கவ னிக்கின்ற சர்க்காராக இருக்கிறது. காலையில் அவன் வெளியில் வந்தால் அவனைப் பாதுகாக்க வேண்டும். போக்குவரத்து வசதி செய்தாக வேண்டும். மருத்துவ வசதிகள் செய்து கொடுத் தாக வேண்டும். உண்ண உணவு கொடுத்தாக வேண்டும். படிப்பதற்கு கல்வி வசதிகள் செய்துத்தரவேண்டும். ஆனால், இந்த துணை மதிப்பீடு தாக்கல் செய்த பின்னாலும் கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் சில பொருளாதார நெருக் கடிகள் ஏற்படுமோ என்ற ஐயப்பாடும் இருக்கிறது. அண்மைக் காலத்தில் மத்திய அரசு அரிசியின் விலையை உயர்த்தியதால் மிகப் பெரிய சுமையை இந்த அரசு தாங்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. இது போன்று மத்திய சர்க்கார் அடிக் கடி விலைகளை உயர்த்துவதால் உரத்தின் விலையை உயர்த்திய தால் தமிழகத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுடைய அடிவயிற்றில் இடி விழுந்திருக்கிறது என்பதை நான் மிகத் தெளி வாகச் சொல்லமுடியும்.

பெட்ரோல், டீசல் விலையை இப்போது உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் நமது சர்க்காருடைய நிதிப் பற்றாக்குறையோடு மிகப் பெரிய சுமையையும் தாங்க வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் என்பதையும் மிகத் தெளிவாகச் சொல்ல முடியும். இந்த விலை உயர்வினால் நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் ஒருநாளைக்கு 50,000 ரூபாய் அளவுக்கு அதிக செலவினத்தைத் தாங்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த அரசை எவ்வளவு தூரம் பாதித்து, நிதிப் பற்றாக்குறையை அதிகரிக்கும் என்பதை இந்த அரசு உணர்ந்து மிக எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவான காலக் கட்டத்திலேயே மிகப் பெரிய நிபுணர்களால் சேதுசமுத்திரத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆகவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேதுசமுத்திரத் திட்டம் வந்துவிடும் என்ற நினைப்பு எல்லோருக்கும் இருந்தது. சேதுசமுத்திரத் திட்டம் என்பது, தமிழகத்தினுடைய மற்றும் தென் மாநிலங்களுடைய பொருளாதாரத்தை உயர்த்தும் ஒரு திட்டமாகும். மேலும் இந்த நாட்டின் பாதுகாப்புக்கும் மிக முகிக்யமான ஒரு திட்டம். எனவே, சேதுசமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றவேண்டுமென்று கோரிக்கை விடுப்பது அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். இதற்காக மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசு மின்சாரப் பற்றாக்குறையை மாற்றி சீரான ஒரு மின்சாரப் பகிர்மானத்தை உருவாக்குவதில் எச்சரிக்கையோடு பணியாற்றுகிறது. மின்சார உற்பத்தி ஆகாத சூழ்நிலையிலும், டிரான்ஸ்பார்மர்களை வைத்து தீவிரமாக உருவாக்குகிற (குறுக்கீடு).

பிற்பகல் 12-20

திரு. கே. ஆர். ராமசாமி : பாய்ண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ஆர். ராமசாமி.

திரு. கே. ஆர். ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இப்போது பேசும்போது, மின்சாரப் பற்றாக்குறையை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்து இருப்பதாக பொருள்பட பேசியிருக்கிறார்களே, அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லாரன்ஸ் அவர்கள் பேசிக்கொண்டு இருந்த தொனியை, அந்தச் சொற்றொடர் முடியும்வரை மாண்புமிகு உறுப்பினர் பொறுத்து இருந்தால் பதில் கிடைத்து இருக்கும்; " சீராக மின்சாரம் வழங்குவதற்கு " என்று சொல்லி இருப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் நாள் கூட்டத்திலே மாண்புமிகு அழகிரி அவர்கள் பேசுகிறபோதுகூட ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அது வேண்டாம் ; அதை அன்றே சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதற்குப் பின்னாலே யாரும் .... (குறுக்கீடு) " சிலிப் " ஆகி சொல்கின்ற அதைப் போய் " சீரியஸ் " ஆக எடுத்துக் கொண்டிருந்தால் எப்படி ? அன்றைக்கு நாங்கள் பெருந்தன்மையாக பேசாமல் இருந்தோம். அன்று திருத்தம் சொன்னோம். நீங்கள் இன்னறக்கு வந்து சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே ? அது எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகிறபோது சில சொற்றொடர்களில் வருகிற சொற்கள், திருத்துகிறபோதுதான் சரியாக வரும். திரு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : தலைவர் அவர்களே, அந்தச் சொற்றொடருக்கு இடையில் " கமா " சொல்ல விட்டுவிட்டேன்; இடையிலே ஒரு " கமா " உண்டு. எனவே, இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நம்முடைய அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை இன்றைக்கு ஒதுக்கீடு செய்து, புதிய, புதிய டிரான்ஸ்பார்மர்களை அமைத்து இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 2.5 கோடி ரூபாய் அதற்காக செலவழிக்கப்பட்டு இருக்கிறது. 2.5 கோடி ரூபாய் அங்கே இருக்கிற ரோடுகளைச் செப்பனிடுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. அதற்காக இந்த மன்றத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால், இந்தச் சூழ்நிலையில் தென்பகுதியைப் பொறுத்தவரையில் நீங்கள் முக்கியமான மின்சார உற்பத்தியினுடைய மையமாக இருக்க வேண்டுமென்று கருதிய கூடங்குளம் அணு மின்நிலையத்தை உருவாக்குவதில் மைய சர்க்கார் கை கழுவிவிட்டதோ என்கிற ஐயப்பாடு இன்றைக்கு இருக்கிறது. மத்திய அரசு கூடங்குளம் அணு மின்நிலையத்தை மீண்டும் மறு பரிசீலனை செய்து,

[திரு. கு. லாரன்ஸ்] [1992 செப்டம்பர் 23

தமிழக மக்களுக்குத் தேவையான தொழில் வளம் மற்றும் பல்வேறு வளங்களைப் பெறும் அளவுக்கு இந்த மின் நிலையத்தை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : சென்ட்ரல் கவர்ன்மென்ட்டை கழுவிவிட்டது என்று சொன்னால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன இருக்கிறது. (குறுக்கீடு) திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு மின்நிலையம் வருவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தண்ணீர் கொடுக்கத் தயாராக இருக்கிறாரா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. கு. லாரன்ஸ் : தண்ணீர் கொடுப்பதற்கு இந்த அரசு உத்திரவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு மின்நிலையத்தைப் பொறுத்தவரையில் சோவியத் நாட்டோடு நாம் வைத்திருந்த ஒப்பந்தத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே, வேறு நாட்டோடு எந்தத் தொழில் நுட்ப அடிப்படையில் ஒப்பந்தத்தைச் செய்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசும் மத்திய அரசும் அதிலே ஒரு முனைப்பான நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறோம். மத்திய அரசிலே இருந்து திரு. கல்பனாத் ராய் அவர்கள் அன்றைக்கு வந்தபோது, கூடங்குளம் அணு மின்நிலையத்தை பற்றி உங்களுடைய நிலை என்ன என்று நிருபர்கள் கேட்டார்கள். முதலிலே நம்முடைய அனல் மின்நிலையங்களுக்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அதற்குப் பின்னாலே இந்த கூடங்குளம் அணு மின்நிலையத்தை மத்திய அரசு பரிசீலனையில் வைத்து இருக்கிறது. வேறு எந்த நாட்டோடாவது தொடர்பு கொண்டு அந்த டெக்னிகல் நாலேஜ் என்று சொல்லப்படுகின்ற தொழில் நுட்பத்தோடு செய்ய முடியுமா என்று ஆய்வு செய்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார். ஆகவே, கூடங்குளம் அணு மின்நிலையம் வருகின்றபோது மத்திய அரசு அதற்கு அனுமதி தருகின்றபோது, தண்ணீர் கொடுப்பதில் தமிழக அரசு தயக்கம் காட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 செப்டம்பர் 23]

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் சொல்வதை ஒத்துக் கொள்கிறேன். நண்பர் லாரன்ஸ் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பேச்சிப்பாறை தண்ணீரை விடுவதற்கு அவர் ஒத்துக்கொள்கிறாரா ? (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : உங்கள் கருத்து என்ன என்பதைச் சொல்லுங்கள். உங்கள் கருத்தைச் சொல்லலாமே.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, பேச்சிப்பாறைத் தண்ணீரைத் தருவதற்கு கன்னியாகுமரி மாவட்ட மக்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

பிற்பகல் 12.25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் பிரச்சினையைப் பற்றி பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். ஒருங்கிணைந்த முறையில் ரஷ்யா இருந்த போது கூடங்குளம் திட்டத்தை 4,000 கோடி ரூபாய்க்கு கொண்டு வருகிறபோது அதற்குத் தேவையான இடவசதி, நீர் வசதி மற்றவைகளையெல்லாம் செய்வது என்ற அளவுக்கு ஒப்புதல் தந்ததற்குப் பிறகு தான் மத்திய அரசு ஏற்றுக் கொண்டு ரஷ்யாவோடு கூட்டு செய்து கொண்டது. பிறகு ரஷ்யா 12 துண்டுகளாக ஆனதற்குப் பிறகு, அதை நிறைவேற்ற முடியாதென்ற கட்டம் வந்தது. அதன் பிறகுதான்மத்திய அரசு யோசித்தது. கூடங்குளம் திட்டத்தை கைவிட்டு விட்டோம் என்று மத்திய அரசு சொல்லவில்லை. ஆனால் அதற்கான தொழில் நுட்பத் தன்மைகளும், அதற்கான உதவிகளும் மற்றவைகளும் வேறு எந்த ஒரு நாட்டினுடைய உதவியையாவது பெற்று நடத்த முடியுமா என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையிலும் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. முரண்பாடும் இல்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இரண்டு அரசுகளும் இணைந்து நின்று செய்வதற்கான முயற்சிகளைசெய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கான ஒரு தெளிவான நிலைமை இன்னும் ஏற்படாததன் காரணமாக மத்திய அரசினுடைய

முயற்சிக்கு முழு ஆதரவை நாம் தருகிறோம். எப்படி யாவது கூடங்குளம் திட்டம் வருமானால் 4,000 கோடி ரூபாய் செலவாகும். தமிழகத்தினுடைய அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றுகிற அளவுக்கு போதுமான மின்சாரம் நமக்கு கிடைக்கும் என்கிற நல்ல எண்ணத்தில் தான் நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் ஆகவே, இதிலே எந்தவொரு பிரச்சினையும் இல்லை. அடிப் படைத் தேவைகள் அத்தனையையும் நாம் தருகிறோம் என்று சொன்னதற்குப் பிறகு தான் கூடங்குளம் திட்டம் வருகிறது. இப்போது பேச்சிப்பாறை என்பது வேறு. ஏனென்றால் ஒப்பந்தம் போடுகிறபோது பேச்சிப்பாறை தண்ணீரைத் தருகிறோம் என்று சொல்லியா ஒப்பந்தம் போட்டோம் ? தண்ணீர் தருகிறோம் என்றால் தருவோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேச்சிப்பாறைத் தண்ணீர் கொடுக்க லாரன்ஸ் தயாரா என்று கேட்பதை விட சுந்தரதாஸ் தயார் என்று சொல்லிவிட்டு, லாரன்சை கேட்டால் பரவா யில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் சொல்லி விட்டீர்கள். பேச்சிப்பாறைத் தண்ணீரைத் தர முடியாது என்று சொல்லிவிட்டீர்கள் அது போதும். லாரன்ஸ் பேசுவார். உட்காருங்கள். உங்கள் மாவட்டத்துக்காரர்தான் அவர்.

<u>திரு. கு. லாரன்ஸ் : தலைவர்</u> அவர்களே, அவர் பேச்சிப் பாறை ஸ்பெஷலிஸ்ட். அவர் நிறைய தடவை பேசியாகி விட்டது. (சிரிப்பு) குமரி மாவட்டத்தினுடைய வளப்பு மிகுந்த பகுதியிலிருந்து கருங்கற்களை பல்வேறு தனியார்கள் எடுத்துச் செல்வதை தடை செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கிறேன். அவர்கள் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியிருக்கிற பல்வேறு பகுதிகளிலிருந்து கருங்கற்களை பாளம் பாளமாக எடுத்துச் செல்வதன் மூலமாக அந்த மாவட்டத்தில் அழகு சிதைந்து போய் இருக்கிறது அதைப்போல இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கேரளாவில் இருக்கிற பல்வேறு தோழர்கள் தமிழகத்தில் படிக்க வேண்டும் என்பதற்காகவே, தமிழகத்தில் உணவு அட்டை பெறவேண்டும் என்பதன்மூலம் நேட்டிவிட்டி சர்ட்டிபிகேட் பெறமுடியும் என்பதற்காக உணவு அட்டைகளை பெறுவதற்காக விளவன்கோடு பகுதியில் பல்வேறு கிராமங் களில் அவர்கள் அதிகமாக மனு கொடுத்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசு உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்மநாபபுரம் தொகுதியைப் பொறுத்தவரையில் மாம்பழத் தாறு அணைத் திட்டத்தை அருமைக்குரியப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் இந்த அரசும் நிறைவேற்றித்



தர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு வேண்டுவதோடு, பத்மநாபபுரம் குடிநீர்த் திட்டம், நெடுங்காலமாக நிறை வேற்றபடவேண்டிய திட்டம், சற்று தயக்கத்தோடு இருக்கிறது. அதையும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிறை வேற்றித் தர வேண்டுமென்று சொல்லி, இந்த துணைமதிப்பீட்டை ஆதரித்து பணிவோடு அமர்ந்து கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வே. தம்புசாமி— சுருக்கமாக.

<u>திரு. வே. தம்புசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கை மீது ஒருசில கருத் துக்களைச் சொல்ல வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்து காவல் துறையினருக்கு அனைவருக்கும் வீடு கட்டித் தருவதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை யெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வாழ்க்கையில் சாதாரண பின்தங்கிய மக்களைப் போல தங்கு வதற்குக் கூட சரியான இடம் கிடைக்காத நிலையில் இருக்கிற நிலைமையை மாற்றி, அவர்களுக்கு அரசால் வழங்கப்படக் கூடிய சலுகைகள் முழுமையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல காவல் நிலையத்தின் எல்லைப் பகுதிகளை ஒரு குறுகிய வட்டமாக அமைக்க வேண்டும். ஒரு காவல் நிலையத்திலிருந்து ஏறத்தாழ 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் வரையிலும் அவர்கள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி காவல் நிலைய எல்லை வட்டங்களைக் குறுக்கி அதிகமான காவல் நிலையங்களை ஏற்படுத்துகிறபோதுதான் விரைவாக அவர்கள் தலையிட்டு சமூக குற்றங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அதைப்போல சிறு சிறு குற்றங்களுக்கெல்லாம் கைது செய்வதை தடுத்து நிறுத்து வதற்கான ஆணையை அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.30.

அந்தநேரத்தில், காவல் துறைக்கும் ஜனங்களுக்கும் ஒரு நீண்ட இடைவெளி இருக்கிறது. காவல் துறையைப் பொறுத்த வரையில், ஜனங்களுக்கு சேவை செய்யக் கூடியவர்களாக இருக் கிறார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையில் அந்த சேவைகள் அமைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வே. தம்புசாமி] [1992 செப்டம்பர் 23

அதே நேரத்தில், இன்றையதினம் லாக்-அப்பில் மரணங்கள்
அதிகரித்து வருகின்றன. அப்படிப்பட்ட மரணங்கள் ஏற்படா
மல் தடுப்பதற்கு அரசு விரைவான நடவடிக்கையை மேற்
கொள்வதோடு அப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுகிற
போது, அங்கேயிருக்கக் கூடிய வருவாய்த் துறை அதிகாரி
களைக் கொண்டு விசாரணை நடத்தாமல், நீதிபதிகளைக்
கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். அதே நேரத்தில் அப்படிப்பட்ட குற்றங்கள் நிகழ்
கிறபோது, அரசு அதை மறைப்பதற்குப் பதிலாக அவைகளை
விசாரணை நிலைமைக்கு உட்படுத்துவதுதான் எதிர் காலத்
தில் சாதாரண மக்களுக்கு மட்டுமல்ல; அனைத்து மக்களுக்கும்
ஒரு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையிலே அது அமையும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று சில நிகழ்ச்சிகள் நடந்தன என்பதை எல்லாம்
நாம் அறிவோம். உதாரணத்திற்கு, சிதம்பரம் காவல் நிலை
யத்திலே கொலை நடந்தது, கற்பழிப்பு நடந்திருக்கிறது. இது
சம்பந்தமாக வழக்கிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி
யில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்
என்பதற்காக ஆணையிட்டும், அந்த நஷ்டஈடு இதுவரையில்
வழங்கப்படாமல் இருக்கிறது. அதில் அரசு விரைவாக தலை
யிட்டு, அந்த வழக்கை முடித்து, விசாரணையை முடித்து.
அறிவிக்கப்பட்ட அந்த நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என்று
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று தர்மபுரி மாவட்டத்தில் வாசாத்தி என்ற
கிராமம் தாக்கப்பட்டு இருக்கிறது. இதனால் நிறைய சொத்
துக்கள் நாசமாக்கப்பட்டு இருக்கின்றன. அதன் மீது கைது
நடைபெற்றிருக்கிறது. கற்பழிப்பு நடந்திருக்கிறது. அது
பற்றிய விஷயங்களை அரசு விரைவாக ஒரு விசாரணைக்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு போக்கு
வரத்துத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் குறிப்பிடுகிறபோது, வாசாத்தி கிராமத்தைப் பற்றிக் குறிப்
பிட்டார்கள். அங்கே கற்பழிக்கப்பட்டது என்று கூட இங்கே
பேசியிருக்கிறார். ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத்
தருகிறார். வாசாத்தி என்ற கிராமத்தில் ஏறத்தாழ 15 கோடி
ரூபாய்க்குச் சந்தனக் கட்டைகள் பதுக்கி வைத்திருந்தார்கள்.
சந்தனக் கட்டைகளைக் கடத்துவது அந்த கிராமத்தில் இருக்கின்ற
மக்களுடைய தொழிலாக இரண்டாண்டுக் காலமாக நடை
பெற்ற காரணத்தால், அரசினுடைய கவனத்திற்கு அது வந்த



1992 செப்டம்பர் 23] [திரு.கே.ஏ. செங்கோட்டையன்]

அந்தக் கிராமத்திற்கு அதிகாரிகள் சென்றார்கள்.
வுடனேயே அந்தக் கிராமத்திற்கு அதிகாரிகள் சென்றார்கள்.
அதிகாரிகள் செல்கிறபோது, அந்த 52 அதிகாரிகளையும் மரத்
திலே கட்டி வைத்து அடித்தார்கள். அதற்குப் பிறகு, பெண்
காவலர்களையும் அழைத்துச் சென்று காவல் துறை, அதே
போன்று வருவாய்த் துறை, வனத்துறை என்று இந்த மூன்று
துறையினரும் சென்று, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள்,
பதுக்கி வைக்கின்ற சந்தனக் கட்டைகள், டிராக்டர்கள் அது
போன்று பல் வேறுவாகனங்கள் எல்லாவற்றையும் சீஸ், செய்து
இன்றைக்கு எடுத்து வரப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தரக்
கூடாது. வாசாத்தியிலே நடைபெற்ற நிகழ்ச்சி, கடத்தல்
காரர்களைப் பிடித்து இருக்கிறோமே தவிர, சிறிய சம்பவங்
கள் கூட, தவறான சம்பவங்கள் கூட நடைபெறவில்லை.
நீங்கள் குறிப்பிடுவதைப் போல, கற்பழிப்பு நிலை இல்லை.
இது போன்ற நிலை இருக்குமானால், என்றைக்கும் இந்த
அரசு, அது எந்த அதிகாரியாக இருந்தாலும், அவர்கள் மீது
நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காட்டாது என்பதை நான்
இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், அவர்கள் கைது செய்யப்பட்ட உடனே, 97
பெண்களை வழக்கு மன்றத்திற்குக் கொண்டு செல்கிறபோது,
அந்த வழக்கு மன்றத்திலே, நீதிபதியிடத்திலே இது போன்ற
குறைபாடுகளை அவர்கள் சுட்டிக் காட்டவில்லை. அதற்கு
பிறகு, நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிற நல்லசிவன் அவர்
கள் நாடாளுமன்றத்திலே பேசியிருக்கிறார். அறிக்கை விட்
டிருக்கிறார், 28 நாட்கள் கழித்ததற்குப் பிறகு, கம்யூனிஸ்ட்
இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சில பேர்கள் அதிலே இருக்கி
றார்கள் என்ற காரணத்தின் அடிப்படையில், இது போன்ற
தவறு செய்பவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் நீங்கள் ஆதர
வைத் தருவது சரியாக இருக்காது என்பதை மட்டும் இந்த
நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தம்புசாமி அவர்கள்
பேசியதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.
அதற்கு தம்புசாமி அவர்களே பதில் சொல்வார்கள். நீங்கள்
உட்காருங்கள். தம்புசாமி அவர்கள் பேசுவதாக இருந்தால்
பேசலாம். இல்லை என்றால், அடுத்தவரைக் கூப்பிட்டு
விடுவேன்.

<u>திரு. வே. தம்புசாமி :</u> அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடை
பெறவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுத்

திருக்கிறார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை நான் விசாரித்த வகையில், இது முழுவதும் நடைபெற்ற......

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு உறுப்பினர் பேசுகிறார். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். அந்த நிகழ்ச்சி 18-6-1992-ல் நடைபெற்றிருக்கிறது. உங்களுடைய நல்லசிவம் 28 நாட்கள் கழித்து அதற்கு அறிக்கை விட்டிருக்கிறார். பெண் காவலர்களை வைத்து, அங்கேயிருக்கிற பெண்களைக் கைது செய்திருக்கிறார்கள். அங்கே பெண் காவலர்கள் 27 பேர்கள் சென்று அவர்கள் அந்தப் பெண்களை எல்லாம் கைது செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். காரணம் பெண்களை முன்னே நிறுத்தி, அந்தக் கட்டைகளை கடத்தியிருக்கிற நேரத்தில் அவர்கள் வீட்டிலே, தோட்டத்திலே பதுக்கி வைக்கின்ற நேரத்தில், அதை எடுக்கக் கூடாது என்று சொல்கிறபோது, அங்கே பெண் காவலர்கள் அவர்களை அப்புறப்படுத்தி, அங்கேயிருந்த காவல் துறையினரின் வாகனத்திலே ஏற்றினார்களே தவிர, நீங்கள் சொல்வதைப் போல அந்த இடத்தில் கற்பழிப்புச் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதையும், அங்கேயிருக்கிற மக்களுக்கு மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் ஆகவே அதுபோன்ற நிலைமைகளை அங்கே இல்லாத நேரத்தில் கற்பழிக்கப்பட்டிருக்கிறார் என்ற ஒரு செய்தியை வைத்துக் கொண்டு இந்த அரசு சரியான முறையில் தன்னுடைய கடமையை ஆற்றுகிறபோது அந்தக்கடமையை ஆற்றக்கூடாது என்ற அடிப்படையில் இதுபோன்ற தவறான தகவல்களை உங்களைப் போன்ற பொதுவுடமை தத்துவங்களைப் பேசுகின்றவர்கள் சொல்வது சரியானது அல்ல என்பதை இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாநிலச் செயலாளரும், பாராளுமன்ற உருப்பினருமான தோழர் நல்லசிவம் அவர்கள் தீர விசாரித்து, அந்த ஸ்தலத்திற்குச் சென்று, உண்மைகள் முழுமையும் தெரிந்து கொண்டுதான் அறிக்கை விட்டார்களே தவிர, வேறு எந்த விவரமும் தெரியாமல் அவர் அறிக்கை விடவில்லை. எனவே நான் நான் மீண்டும் கேட்டுக் கொள்வது அமைச்சர் சொன்ன விவாதமும், நான் சொல்லிக் கொண்டிருக்கிற இந்த விவாதமும் சரியானதுதானா என்பதை ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்லவில்லை. அதை முதலில் தெரிந்து கொண்டாக வேண்டும். இந்தப் பகுதியைப் பார்வையிட்டார் என்பது தவறான தகவல். நாடாளுமன்ற உறுப்பினர் தர்மபுரி மாவட்டத்திற்குச் சென்றிருக்கிறார். இந்தப் பகுதியிலே இருக்கின்ற சில பேர் அந்த இடத்திற்கு சென்றதாகச் சொன்ன தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் தரக்கூடாது. நாடாளுமன்ற உறுப்பினர் அந்தப் பகுதிக்குச் செல்லவில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதி மலைப் பகுதி உயர்ந்த பகுதியான அந்த இடத்திற்கு அவர் செல்லவே இல்லை. தர்மபுரியிலே உங்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சில பேர் சொன்னதை வைத்துக் கொண்டு, அவர் அந்தக் கருத்தை சொல்லியிருக்கிறாரே தவிர, ஆதாரம் என்னிடத்திலே இருக்கிறது. மருத்துவர்கள் அங்கே மருத்துவப் பரிசோதனை செய்து இதுபோன்ற தவறுகள் நடைபெறவில்லை என்ற ஆதாரம் தரப்பட்டிருக்கிறது. அங்கே அவர்களைக் கைது செய்து, நீதிபதியிடத்திலே எந்தப் பெண்ணும் இதுபோன்ற கற்பழிப்பு நடைபெற்றது என்று சொல்லி யாரும் அங்கே குற்றம் சாட்டப்படவில்லை. 28 நாட்கள் கழித்து, இதுபோன்ற நடவடிக்கைகளை அரசு விரைந்து செய்வதன் வாயிலாக இந்த அரசினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இதுபோன்ற தவறான தகவலை கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சொல்வது சரியானதல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலிலே இரண்டு அர்த்தம் இருக்கிறது. அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் நல்லசிவம் அந்த உயர்ந்த மலையிலே ஏறி அந்தப் பகுதியைப் பார்வையிடுவதில், அந்த இடம் அவ்வளவு கஷ்டமான இடம் என்று சொல்கிற நேரத்திலே, பெண் போலீசை வைத்துக்கொண்டு, எப்படி அவர்களை அப்புறப்படுத்தி இருக்க முடியும் ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் ? பழனிசாமி, அதற்குப் பதில் சொல்வதாக இருந்தால் தம்புசாமி சொல்வார். (குறுக்கீடு) இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் போலவே உங்களுக்கும். திரு. தம்புசாமி அவர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதில் நல்லசிவம் அவர்கள் சென்று பார்க்கவில்லை என்று சொல்வதற்குக் காரணம், அவர் வயதானவர், உங்களுக்குத் தெரியும். அந்த மலையில் ஏறி, இறங்க முடியாது. ஆனால், அதே நேரத்தில், பெண் காவலர்கள், அத்தோடு காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள், வனத்துறையைச் சார்ந்த அதிகாரிகள் எங்கு வேண்டுமானாலும், வனத்துறையிலே சென்று பார்த்து, பல்வேறு தவறுகளை அங்கே கண்டுபிடித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நீங்கள் இங்கே இருந்துகொண்டு, இதுபோன்ற அறிக்கைகளை தந்திருக்கிறார்கள் என்ற கருத்தின் அடிப்படையிலே நான் சொன்னேனே தவிர மலைப் பகுதியிலே பெண் காவலர்கள் செல்லமுடியாது என்ற நிலையை நீங்கள் தான் குறிப்பிட்டிருக்கிறீர்களே தவிர, பெண் காவலர்கள் தேர்வு செய்யப்படுகிறபோது, நல்ல திறமை உள்ளவர்களாக, வலுவுள்ளவர்களாகத்தான் பெண் காவலர்ள் இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பாராளுமன்ற உறுப்பினபகள் நல்லசிவம் அவர்கள் செல்லவில்லை என்று கூறுகிறார்கள். கண்டிப்பாகச் சென்றார்கள். பூரா விவரங்களையும் விசாரித்தார்கள். விசாரித்த பிறகுதான் இந்த அறிக்கை விட்டார்களே தவிர, விசாரிக்காமல் எங்கேயோ இருந்து கேட்டுக் கொண்டு இந்த அறிக்கை விடவில்லை. ஆகவே, அமைச்சர் சொல்வதை நான் மறுக்கிறேன். அவர் நேரில் அந்த ஸ்தலங்களுக்குச் சென்றார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மக்கள் பிரதிநிதி, ஒரு பாராளுமன்ற உறுப்பினர், நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு சென்று இருக்கிறார் என்று உண்மைக்குப் புறம்பான கருத்தை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிகழ்ச்சி. . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அந்தப் பகுதிக்காரர். அந்தப் பகுதியைச் சார்ந்தவர். அவர் சொல்லட்டும்.





பிற்பகல் 12-40

திரு. கா. பூ. முனுசாமி : நிகழ்ச்சி நடந்து முடிந்து பல நாட்களுக்குப் பின்பாக, அந்த இயக்கத்தினுடைய செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டிருந்த நேரத்திலே மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டத்தில் கலந்துக் கொண்டார். அதே நேரத்தில் வாசாத்தி கிராமத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கிற ஏழைகளும், தாய்மார்களும், பெரியவர்களும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய தலைமையை ஏற்று அனைதிந்திய அண்ணா தி.மு.க. இயக்கத்தில் காலம் காலமாக தொடர்ந்து இருந்து வருகிறார்கள். அந்தக் கிராமத்திலே ஒரு சில குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்த சந்தனக்கட்டை கடத்தலில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால் அங்கே நடவடிக்கை எடுத்தபோது, அதை கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் வேறு விதமாகப் பயன்படுத்தி, அங்கே தங்கள் இயக்கத்தைப் பரப்ப வேண்டும் என்று முயற்சியில் ஈடுபட்டிருந்த காரணத்தினால் செயற்குழுக் கூட்டத்திலே அங்கே இருந்த பாராளுமன்ற உறுப்பினரை அறிக்கை விடச் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த பாராளுமன்ற உறுப்பினர் வாசாத்தி கிராமத்திற்குப் போனதே இல்லை. அந்த வாசாத்தி கிராமம் எந்தத் திசையில் இருக்கிறது என்பதுகூட அந்த பாராளுமன்ற உறுப்பினருக்குத் தெரியாது என்பதை இந்த நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராளுமன்ற உறுப்பினர் அங்கே வரவேயில்லை என்பதுஉங்களுடைய கருத்து. அத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது தவறான தகவல் ஆகும். நேரிலேயே சென்று விசாரணை நடத்திய பிறகுதான் அந்த அறிக்கையை விட்டார்களே தவிர, போகாமல் அல்ல. நான்கூட அந்தக் கூட்டத்திற்கு சென்றிருந்தேன். அப்படிச் சென்றிருந்தபோது அந்த இடத்தைப் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு முன்னாலேயே அவர் சென்றுதான் எல்லா விவரங்களும் தெரிந்துதான் அறிக்கை விட்டிருக்கிறார்கள் (குறிக்கீடு)

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கூட்டத்திறகு அவர் சென்றிருக்கிறார். அந்த இடத்தைப் போய் பார்க்க வேண்டும் என்று உங்களுடைய தோழர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர் போகவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறார். அதேபோலத்தான் மாண்புமிகு நல்லசிவம் அவர்களும் அங்கே போகவில்லை என்பதுதான் உண்மை. இது அரசினுடைய சார்பாக உள்ளவர்களுக்கும் அங்கே வந்திருந்த அத்துணை பேருக்கும் தெரியும்

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1992 செப்டம்பர் 23

அங்கேயிருக்கிற பொது மக்களுக்கும் தெரியும். தவறான தகவல்களை நீங்கள் தரக்கூடாது என்றுதான் சொல்கிறேன். ஏனென்று சொன்னால் 1 1/2 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள சந்தனக் கட்டைகள் பதுக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் 60 டன் எடையுள்ள சந்தனக் கட்டைகளைப் பறிமுதல் செய்திருக்கிறோம். டிராக்டர் வண்டி அங்கேயிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு மோட்டார் பைக் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல ஒரு மொபைட் அங்கே பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள், அந்த சந்தனக் கட்டை கடத்தலை கண்டித்து இருக்கிறார்கள். சந்தனக் கட்டைகளைப் பறிமுதல் செய்யச் சென்ற 52 அதிகாரிகளை, 250 பேர்கள் சேர்ந்து மரத்திலே கட்டி வைத்து, அந்த அதிகாரிகளைத் தாக்கியதற்குப் பிறகு, கீழே தகவல் கொடுத்து உடனடியாக நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்கள் பெண் காவலர்கள் வருவாய்த் துறையை அதிகாரிகள் வனத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் என்று 250 பேர்கள் அங்கே சென்று பதுக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டைகளையும் அதற்கு யார் யார் உடந்தையாக இருந்தார்களோ அத்துணை பேரையும் கைது செய்து வந்தார்களே தவிர வேறு எந்தவிதமான தவறும் அங்கே நடைபெறவில்லை. கடத்தல் தவறுகளை தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதற்காக அரசைப் பயமுறுத்த வேண்டும் என்பதற்காக வனத்துறை அதிகாரிகள் அங்கே செல்லக் கூடாது என்பதற்காக இது போன்ற கருத்துக்களை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு தங்களுடைய ஆதரவை தரக்கூடாது என்பதை மட்டும் நல்ல மனம் படைத்த உங்களைப் போன்றவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றபோது, அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிற கட்சி எங்கள் கட்சி. ஆகவே ஆதரவு தரக்கூடாது என்று சொல்வது சரியல்ல. இதில் எது உண்மை என்பது ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சருடைய வேண்டுகோள் சாதாரண மக்களை ஆதரியுங்கள். கள்ளக் கடத்தல் செய்பவர்களை ஆதரிக்காதீர்கள் என்பதுதான். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நீங்கள் சாதாரண மக்களை ஆதரியுங்கள். ஆனால் சந்தனக் கட்டைகளை கடத்தக் கூடியவர்களுக்கு உங்கள் ஆதரவை தராதீர்கள் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். அத்தோடு இதை விட்டு விட்டு அடுத்த பிரச்சினைக்கு போனால் நன்றாக இருக்கும். இல்லை என்றால் உங்கள் நேரம் தான் வீணாகிக் கொண்டு இருக்கும். (குறுக்கீடு).



1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு அடுத்த பிரச்சினைக்கு வரலாம். நேரம் ஆகி விட்டது. (குறுக்கீடு). திரு. பழனிசாமி உங்களுக்கு பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. நேரம் ஆகிறது உட்காருங்கள் நீங்கள் பேசுகிறபோது பேசலாம். பழனிசாமி இது முறையல்ல. எந்த அனுமதியும் இல்லாமல் பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் அந்த அறிக்கையையும் வதந்தியையும் நம்பி புகாராகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு தம் கருத்துக்களைச் சொல்லிவிட்டார். அத்தோடு பிரச்சினை முடிந்தது. அதற்கு மேலாக அவர் பேசுவதுதான் நல்லது. நீங்கள் நம்பினதைச் சொல்கிறீர்கள் அதற்கு அதிகாரப்பூர்வமாக அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். நாடு புரிந்து கொள்ளும் எது உண்மை என்பதை.

பிற்பகல் 12-45.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் அவர் போன ஊர் வாசாத்தி என்று சொல்கிறார். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே இப்போது அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு மேலே பேசலாம்.

திரு. வே. தம்புசாமி: அதிலே ஒரே ஒரு விஷயம். கடத்தல்காரர்களுக்குத் துணை போகக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக கடத்தல்காரர்களுக்கு எந்தக் காலத்திலும் ஆதரவு கொடுக்க மாட்டோம் ஆதரிக்கவும் மாட்டோம் என்பதை இந்தச் சபைக்கு முன்னால் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆஃப் ஆர்டரா? உட்காருங்கள்.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து கூட்டுறவு. கூட்டுறவு தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படுகின்றபோது எந்த வகையிலும் ஒரு கட்சிக் கண்ணோட்டத்துடன் இந்தத் தேர்தல் நடத்தக் கூடாது என்று

கேட்டுக் கொள்கிறேன். அந்த கூட்டுறவுச் சங்கத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்றவர்களை அங்கத்தினர்களாகச் சேர்ப்பதற்கு அரசு கடுமையாக முயற்சிக்க வேண்டும். இதிலே வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற நிலை இருக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் வெளியாட்களை அந்தத் தொழிலுக்குச் சம்பந்தம் இல்லாத வெளி ஆட்கள் அந்த நிர்வாகத்திலே தலையீடு என்பது எதிர்காலத்திலே கூட்டுறவினுடைய தூய்மையாக நிர்வாகத்திற்கு ஒரு பங்கம் விளைவிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். அந்த நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்தி முடிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு நடவடிக்கை எடுத்து விட்டது. ஆனால் தேர்தலை நடத்தக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினருடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் இன்றைக்கு கோர்ட்டுக்குச் சென்று தடையாக இருக்கிறார்கள். முதலில் அவர்களுக்கு அறிவுரை வழங்கி அந்தக் கோர்ட்டுகளிலிருந்து வழக்கை வாபஸ் வாங்கி தேர்தலை நடத்துவதற்கு அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதே போல மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகின்றபோது இதிலே கட்சிக் கண்ணோட்டம் இருக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள். அதே நிலையைத் தான் அரசும் மேற்கொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களில் அரசியல் கட்சிகளுடைய ஆதாயம் தேவையில்லை. அந்த ஆதாயம் இல்லாமல் கூட்டுறவுச் சங்கம் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்பது தான் இந்த அரசின் கருத்து. ஆனால் தேர்தல் நடந்தால் தாங்களே வெற்றிபெற வேண்டும் இல்லையென்றால் தேர்தலே நடக்கக் கூடாது என்று சிலபேர் சுப்ரீம் கோர்ட்வரை போய் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தயவு செய்து அறிவுரை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு சம்பந்தம் எதுவும் இல்லை. அவர் பதில் சொல்வார்.

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைய தினம் கோர்ட்டில் இருக்கின்ற ஒரு பிரச்சினை என்பது ஒரே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் பதிவுசெய்யவேண்டும்



என்ற நிர்பந்தம் ஏற்பட்டு அதன் மூலம் அது கோர்ட்டுக்கு செல்லப்பட்டிருக்கிறது என்பது தான் பத்திரிகையில் வந்திருக்கக் கூடிய தொடர்ந்து இருக்கக் கூடிய செயல் ஆகும்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியை சார்ந்தவர்கள்தான் உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று எங்கும் சொல்லவில்லை. அதே போல கோர்ட்டுக்குச் சென்றவர்கள் கூட எங்கும் நாங்கள் சென்று எங்களைத் தடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டை கோர்ட்டிலேயும் அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் சொல்லியிருப்பதெல்லாம் அதிகமாக உறுப்பினர்களைச் சேர்த்துவிட்டார்கள் என்று குறிப்பிட்ட சங்கங்களுக்குப் போய் இருக்கிறார்கள். அந்த வழக்குக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அவர்கள் சொல்லியிருக்கின்ற புகாரே அதிகமாக உறுப்பினர்களைச் சேர்த்துவிட்டார்கள் என்பதுதான். நாங்களே வெளிப்படையாக அரசே சொல்லியிருக்கிறது. பெண்கள் 30 சதவீதம், ஆதிதிராவிடர் 15 சதவீதம் சேர்க்க வேண்டும் என்று. ஆகவே யார் சேர்ந்தாலும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக இந்த இரண்டு பகுதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது தான் அரசின் விருப்பம். அதுமட்டுமல்ல தேர்தல் காலத்திலே தான் எப்போதுமே எந்தத் தேர்தல் நடந்தாலும் தேர்தல் காலத்திலே தான் உறுப்பினர்களைச் சேர்ப்பார்களே தவிர மற்ற நாட்களில் சேர்ப்பதில்லை. தம்புசாமி அவர்களும் மற்றவர்களும் உறுப்பினர்கள் சேர்ப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை எங்கும் தடுத்து நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : இது எதிர்காலத்தில் நடப்பதற்கு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் நன்றி. ஆனால் இப்போது பாக்கி உள்ளவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கக்கூடாது என்று முன்னாலே இருந்த நடைமுறை இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே கடன் இருப்பது என்பது வேறு. அதில் உறுப்பினராக உறுதியோடு இருப்பது என்பது வேறு. அதிலே உறுப்பினராக இருக்கக்கூடியவர்களுக்கு கடன் பாக்கி என்ற பெயரால் நீக்காமல் அவர்களுக்கு வாக்களிக்கின்ற உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சட்டத்திலே இருப்பது கடன் இருப்பவர்கள் ஓட்டு போடக்கூடாது என்பது தான். சென்ற முறை தி. மு. க. ஆட்சியின் போது அதற்கு ஒரு விதிவிலக்கு அளித்து பாக்கி உள்ளவர்களும் ஓட்டு போடலாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு சட்டத்தை இந்த அரசு பின்பற்றிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

164948

[1992 செப்டம்பர் 23

பிற்பகல் 12-50

திரு. வே. தம்புசாமி: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மாற்றவேண்டுமென்று கோருகிறேன். (சிரிப்பு).

அடுத்து, வட்டி சலுகை என்பதிலே இன்றைக்கு விவசாயிகள் வங்கிகளுக்கு மட்டும் இந்த வட்டி சலுகை அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வட்டி சலுகையை நிலவள வங்கிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் அந்த ஆணையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் நிலவள வங்கிகளிலே சாதாரண சிறு விவசாயிகள், பம்புசெட் வாங்க கடன் வாங்கியிருக்கிறார்கள்; ஏதோ ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் நிலம் வாங்க கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்த கடன்களுக்கான வட்டி சலுகையை அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேண்டும் என்றால் பெரிய விவசாயிகளுக்கு நீங்கள் அந்த வட்டி சலுகையை அளிக்காமல் இருக்கலாம். சிறு விவசாயிகளுக்கு அந்த வட்டி சலுகையை அளிக்கவேண்டும், அதற்கு அரசு ஆணையிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கறேன்.

கிராமங்களில் உள்ள ஏழை எளியவர்களுக்கு வேட்டி, சேலை வழங்குகின்ற திட்டத்திற்கு என்று இதில் சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி வழங்குகின்றபோது அனைத்துப் பகுதி மக்களுக்கும் எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் வழங்கவேண்டும். சென்ற ஆண்டு வழங்குவதற்கு ஒரு கிராமத்திற்கு 10, 15 பேர்களுக்கு என்று வழங்கப்போய் அப்போது கிராமத்தில் உள்ள அனைவருக்கும் வழங்கவேண்டும் என்ற ஒரு பிரச்சினை எழுந்து அதனால் அதை வழங்க முடியாமல் வி. ஏ. ஓ. வீடுகளிலும், அல்லது தாசில்தார் அலுவலகத்தில் தேங்கி கிடக்கின்ற இந்த நிலையை மாற்றி நீங்கள் அனைவருக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து தரமான புடவைகளை வழங்க வேண்டும். வழங்கப்பட்ட புடவைகள் எவ்வளவு மோசமான புடவைகளாக இருந்தன. ஆகவே நாம் வழங்குவதில் ஆட்சேபணை இல்லை. கருத்து வித்தியாசம் இல்லை. தரமான வேட்டிகளையும் புடவைகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிமராமத்தைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் அந்த குடிமராமத்து வேலைகள் ஓரளவுக்கு துவங்கியிருக்கிறது. அந்த வேலைகள் முழுமையாக முற்று பெறுகிறபோதுதான் தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி பெருகுவதற்கு அது சாதகமாக அமையும். தமிழ்நாட்டிலே ஒரு உபரி மாவட்டமாக தஞ்சை கிழக்கு மாவட்டம், தஞ்சை மேற்கு மாவட்டம் ஆகிய 2 மாவட்டங்களில் பாசன பகுதிகள் மட்டும் அமைந்து இருக்கின்றன. அதில் இருக்கிற வடிகால்கள், வாய்க்கால்கள்





சீரமைக்கப்படாத காரணத்தால் மழை நீர் வடியாமலும், வெள்ளம் வருகின்றபோது தண்ணீர் வடியாமல் தேங்கி கரைகள் உடைத்து, பயிர்கள் எல்லாம் நாசம் ஆகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதை கொஞ்சம் கொஞ்சமாக செய்யாமல் ஒரே ஆண்டில் வடிகால்கள், வாய்க்கால்கள் சீரமைப்பதற்காக அதிகமான நிதியை ஒதுக்கி அரசு விரைவாக செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் வடிகால் சீரமைப்பைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தம்புசாமி அவர்களும், திரு பழனிசாமி அவர்களும் இந்த ஆண்டு நடந்த நிகழ்ச்சிகளைப் பாராட்டியிருக்கிறார்கள். சென்ற அரசைக் காட்டிலும் 2 மடங்கு அதாவது 610 கிலோமீட்டர் இன்றைக்கு வடிகாலை தூர் எடுத்து இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற அரசு 28 புல்டோசர்களை வைத்து வேலை செய்தார்கள். நாங்கள் 60 புல்டோசர்களை வைத்து வேலை செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அவர்கள் ஏற்கெனவே பாராட்டியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் முழுவதையும் செய்ய முடியாது. இந்த ஆண்டு தண்ணீர் வந்துவிட்ட காரணத்தால் படிப்படியாக செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, சென்ற அரசைக் காட்டிலும் இந்த அரசு 2 மடங்கு வேலை செய்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியை நான் முன்னரே சொன்னேன். அதை விரைவாக செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குளங்கள், ஏரிகளை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் உரம், டீசல், பெட்ரோல் விலை உயர்ந்து விட்டது. இன்றைக்கு உரத்தின் விலை கடுமையாக உயர்ந்து விட்டது. உரத்தைப் பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் சாகுபடி செய்கிறார்கள். அதன் விளைவாக உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி உற்பத்தி பாதிக்கப்பட்டால் தமிழகத்தில் எதிர்காலத்தில் கடுமையான பசி பட்டினி வருவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகும். ஆகவே இந்த உரத்தின் விலை தனியாரிடம் மட்டும் அல்ல, இன்றைக்கு

இருக்கக்கூடிய சூழ்நிலையில் நமது கூட்டுறவுச் சங்கங்களில் அதிக விலைக்கு உரம் விற்கப்படுகின்றன. ஒரு மூட்டை டி.ஏ.பி. ரூபாய் 455-60 காசுக்கு விற்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் ... ... . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் உர விலையினுடைய கட்டுப்பாட்டில் இருந்த சிரமத்தினை நீக்கி இருக்கிறது. சிலவற்றை கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறது. பற்றிய விவரமான அறிக்கையினை நாளைக்கு இந்த அவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க இருக்கி றார்கள். ஆனால் அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பழைய உரங்கள் அதாவது ஆகஸ்டு மாதம் 25-ஆம் தேதிக்கு முந்தைய உரங்களை அதிகமான விலைக்கு விற்பதாக அவர் குறிப்பிட்டு குற்றம் சொன்னால், அந்த சங்கத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. வீணாக குற்றம் சுமத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந் தார்கள். கையிருப்பில் இருப்பது குறைந்த விலைக்கு விற்கப் படும் என்று. இந்த சொசைட்டியில் இருக்கின்ற உரத் திற்கு 465 ரூபாய்க்கு கூட்டுறவுச் சங்கத்தில் பில் வழங்கப் பட்டு இருக்கிறது. அந்த பில்லை வைத்துக்கொண்டுதான் நானும் சொல்கிறேன். ஆகவே அதைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த அளவுக்கு விலை உயர்வு ஏற்படுவதற்கு அடிப் படையான காரணம் மத்திய அரசு அறிவித்திருக்கின்ற புதிய பொருளாதாரக் கொள்கைதான். இதனுடைய விளை வாகத்தான் அந்த உரத்திற்கு வழங்கப்பட்டுக் கொண் டிருந்த மானியத்தை ரத்து செய்ததன் விளைவாக அந்த உரக் கட்டுப்பாடு நீக்கப்பட்டு இன்றைக்கு நாடு முழுவதும் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக் கிறது. அதனுடைய விளைவாக எதிர்காலத்தில் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுவதோடு, பசி பட்டினி வருவ தோடு மட்டுமல்லாமல் சாதாரண விவசாயிகளின் குடும் பங்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.





அதுபோல், டீசல், பெட்ரோல் ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்து பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தமிழக அரசு இதைக் கண்டிப்ப தோடு, தமிழக அரசு அதைக் குறைப்பதற்கான சகல முயற்சிகளையும் எடுத்துக்கொள்வதோடு, அதை எதிர்த்து இயக்கங்கள் நடத்தக்கூடிய எந்த ஒரு இடதுசாரிக் கட்சி யாக இருந்தாலும் அதனுடன் இந்த அரசு ஒத்துழைத்து அந்த நிலைமையை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து. . . . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். முடித்து விடுங்கள். அரை மணி நேரம் பேசியிருக்கிறீர்கள். எனவே இந்த ஒரு கருத்தோடு முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி : அடுத்து, கோவில் நிலங்களில் குத்தகை சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் மீது, புதிய கோர்ட் திறந்து, அரசு வழக்குகளைப் போட்டிருக் கிறது. உடனடியாக அந்த கோர்ட்டை மூடி விட்டு அந்த வழக்குகள் முழுவதையும் வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் நிலச் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். ஆட்சியின் சார்பாகவும் நிலச் சீர்திருத்தம் விரைவாகக் கொண்டுவரப்படும் என்று தொடர்ந்து அறிவிக்கப்பட்டது. ஆனால் காலம் கடந்து போய்க்கொண்டிருக்கிறது. எனவே விரைவாக அந்த நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். உபரி நிலங்களை எடுக்கிறபோது அதைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 12,000 வழக்குகள் இன்றைய தினம் கோர்ட்டில் இருக்கின்ற காரணத்தால் அரசினுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. எனவே அந்த வழக்குகள் முழுவதையும் வாபஸ் வாங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. நில உச்சவரம்பு பற்றிச் சொல்லிவிட்டீர்கள். எனவே இத்துடன் முடித்துவிடுங்கள். திரு. என்.ஜி. வேணுகோபால்.

*திரு. என்.ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் இந்த அவையில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் வைக்கப்பட்டுள்ளது. அதை வர வேற்றுப் பேசுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

[திரு. என். ஜி. வேணுகோபால்] [1992 செப்டம்பர் 23

நிதி நெருக்கடியான சூழ்நிலை ஒரு புறம்; இந்த நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லத் துடிக்கும் அரசியல் கட்சிகள் ஒருபுறம், விடுதலைப் புலிகளின் ஊடுருவல் மறுபுறம்; இம்மாதிரி நெருக்கடியான சூழ்நிலையில் முதலமைச்சர் அவர்கள் இன்று துணிவுடன் இந்தத் தமிழ் நாட்டைக் காத்துவரும் தெய்வத்தாயாகவும், எங்கள் ஒப்பற்ற முதல்வராகவும், இன்று நம்மை வழிநடத்தும் காவல் தெய்வமாகவும் இருந்து வருகிறார்கள். அன்று பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக இன்று நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தைரியம் மிக்க ஒரு பெண் முதலமைச்சராகவும் இன்று ஆண்டு வருகிறார்கள். கடந்த இரண்டு நாட்களாக நமது முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டைத் துண்டாட நினைக்கும் ஒரு சில அரசியல் கட்சிகளையும், அதன் தலைவர்கள் நடந்து கொள்ளும் முறையைப் பற்றியும் மிகத் தெளிவாகக் கூறி, உறுதியான நடவடிக்கை எடுத்து வருவது பற்றியும் கூறியுள்ளார்கள். இப்படிப்பட்ட உறுதியான நடவடிக்கை மூலம் இன்று தமிழ்நாட்டில் ஆயுதக் கலாச்சாரம் அழிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

தாழ்ந்துள்ள தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநிலமாக உயர்த்திக் காட்டுவேன் என்று வீர சபதம் ஏற்று உழைத்து வருகின்ற எங்கள் தெய்வத்தாயின் ஆட்சியைக் காப்பாற்றுவது நமது கடமையாகும்; இந்தத் தலைமுறைக்கு நமக்குக் கிடைத்திட்ட உன்னத முதல்வர் இவர்கள்; இவர்களை விட்டால் இந்த நாட்டுக்கு வேறு யார் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியிலும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன் என்று கூறிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்றொடரைக் கருத்தில் கொண்டு இலவச வேட்டி சேலைகள் 60 இலட்சம் வழங்கி இருக்கிறார்கள் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். இதனால் இந்த அரசுக்கு 45 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டில் தனக்கு உள்ள ஈடுபாட்டைக் காட்டும் வகையில், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் கொடுத்ததன் மூலம் 1.43 கோடி ரூபாய் ஓய்வூதியமாக அதிகபட்சமாக வழங்கியுள்ளார்கள்.

விளையாட்டு வீரர்களைத் தமிழகம் ஊக்குவிக்கிறது என்பதற்கு உதாரணமாக நேரு ஸ்டேடியத்தை நவீனப்படுத்துவதற்காக 7 கோடி ரூபாயை இந்த அரசு செலவு செய்து வருகிறது.



1992 செப்டம்பர் 23] [திரு. என். ஜி. வேணுகோபால்]

விவசாயிகளின்பால் இந்த அரசுக்குக் கருணை உள்ளது. அந்த வகையில் செயல்படுகிறது என்பதைக் காட்டுகிற வகையில் 6.9 கோடி ரூபாய் போனஸாகக் கொடுத்து விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்துள்ளது. மேலும் சென்னையில் ஒரு திரைப்பட நகரை உருவாக்கும் வகையில் 3.93 கோடியைத் தந்து, தன்னை உருவாக்கிய அந்தத் திரைப்பட உலகிற்குத் தன்னுடைய கடமையை நம்முடைய முதல்வரவர்கள் இன்று செய்துள்ளார்கள்.

பிற்பகல் 1-00

இராணிப்பேட்டை தொழிற்பேட்டைகள் நிறைந்த பகுதியாகும். இங்கே ஓர் தொழில் நுட்பக் கல்வி மையத்தைத் துவக்க வேண்டுமென்ற என் தொகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'நவ்லாக்' பண்ணை என் தொகுதியிலே உள்ளது. விவசாயக் கல்லூரி அங்கே துவக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, நிதிநிலை காரணமாகச் செயல்படவில்லை. எனவே, தற்போது, வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது. அதை இரண்டு வருஷ 'டிப்ளமா இன் அக்ரிகல்சர்' கோர்ஸாக மாற்றி, இந்தப் பள்ளியின் நிலையை உயர்த்த வேண்டும். இதை இராணிப்பேட்டையில் ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல, தமிழ்நாடு பெண்கள் வேளாண்மைத் தொழில் பயிற்சிப் பள்ளி ஒன்றை இராணிப்பேட்டையிலே துவக்க வேண்டும். இதற்காக டேனிடா மூலம் நிதியைப் பெற்றுத் துவங்கலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

தற்போது பார்ம் டிரெயினிங் சென்டர் நவ்லாக்கிலுள்ள பண்ணையில் உள்ளது. இதை இராணிப்பேட்டைக்கு மாற்றி அங்கே படிப்பதற்குச் சென்று வர சௌகரியமாக அமைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாலாஜா நகராட்சி தமிழகத்திலே முதல் நகராட்சியாக மலர்ந்தது. இந்த நகராட்சியோடு தோற்றுவிக்கப்பட்ட மதுரை நகராட்சி இன்று மாநகராட்சியாக உயர்ந்துள்ளது. ஆனால் வாலாஜா நகராட்சி மட்டும் அதே நிலையில் உள்ளது. இந்த நகராட்சியின்வருவாயை உயர்த்த அதனுடைய எல்லையை விரிவாக்கம் செய்ய வேண்டும். பக்கத்திலே உள்ள கிராமங்களையும்—அதாவது அணைக்கட்டு முதல் தென் கடபந்தாங்கல்வரை இதோடு சேர்த்து அறிவித்தால் அந்த நகராட்சி வளர்ச்சி பெற நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். ஜி. வேணுகோபால்] [1992 செப்டம்பர் 23

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கும் ஒரு கோரிக்கையை விடுக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் என். எச். 4—தேசீய நெடுஞ்சாலை உள்ளது. வாலாஜா முதல் பி. எச். இ. எல். வரை சோடியம் வேபர் பொருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், இந்த என். எச். 4 தேசீய நெடுஞ்சாலையில் எண்ணற்ற தொழிற்சாலைகள் இருப்பதால் இரவு நேரங்களில் வரும் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகிறார்கள். எனவே, முன்னுரிமை தந்து இந்தச் சோடியம் வேபர் லேம்பைப் பொருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கு ஒரு கோரிக்கையை இந்த நேரத்தில் சமர்ப்பிக்கிறேன். இராணிப்பேட்டையில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இராணிப்பேட்டையைச் சுற்றியுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் ஆலை ஐந்து கட்ட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை தாட்கோ மூலம் ஒரு ஆலையும், சிப்காட்டிலே ஆலை அதிபர்கள் மூலம் ஒரு ஆலையும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மீதமுள்ள 3 ஆலைகள் மேல் விஷாரம், புதுப்பேட்டை, செட்டித்தாங்கல் போன்ற இடங்களில் தோற்றுவிக்க ஆரம்ப வேலைகள் கூட நடைபெறவில்லை. எனவே, உடனடியாக இதைக் கருத்திற்கொண்டு ஆவன செய்து, என்னுடைய பகுதிக்குக் கழிவு நீரால் வரும் ஆபத்தை விரைவில் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு சிறைச்சாலைகளை நவீனப்படுத்துதல், காவலர்களுக்குப் புதிய சீருடை போன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள். இவையெல்லாம் இன்று முதல் துணை நிதி அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை அறிவித்துள்ள இந்த 92-93 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதி அறிக்கை சுமார் 161.29 கோடியை ஒதுக்கிய, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களையும், நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களையும் வாழ்த்தி, வணங்கி, வரவேற்று அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ். இப்பொழுது நேரம் 1-04. 1-14க்கு மணி அடிப்பேன். அதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். குறுக்கீடு இல்லாமல் பேசுவது உங்களுடைய பொறுப்பு.



1992 செப்டம்பர் 23]

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டு முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைப் பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்காக முதலாவதாக உங்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, சில கருத்துக்களை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வேண்டுகோளும் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05.

திரு. வ. சத்தியமூர்த்தி: ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எப்போதும் இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் பேசும்போது, 'என்னுடைய ஜனதாதளக் கட்சியின் சார்பில்' என்று பேசுவார்; இப்போது, எந்த இடத்தில் இருக்கிறார்; அந்த இடத்தைச் சொல்லி, அவர்கள் பேசுவார்களேயானால், நாங்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவாகரத்து வழக்கு கோர்ட்டிலேயிருந்து 'பைசல்' ஆகிற வரைக்கும் கணவனுக்குக் கட்டுப்பட்ட மனைவியாக எப்படி இருக்க வேண்டுமோ அதைப்போல முடிவு வருகிற வரைக்கும் நான் இப்போதும் ஜனதாதளத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் இப்போது எந்தக் கட்சியில் இருக்கிறார்; இல்லை என்கிற தகவல் எனக்கு இது வரையிலும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: முதலாவதாக அரசுக்கு ஒன்றிரண்டு முக்கியமான கோரிக்கைகளை நான் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு விவாதத்திற்கு வரலாம் என்று கருதுகிறேன். கடந்த 25—6—92 அன்று ராமேஸ்வரம் பகுதியில் 'ஏர்காட்' என்ற பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவ நண்பர்களை — பிரபாகரன், ஆனந்தன், ரவி, ராமகிருஷ்ணன் என்பவர்களை — இதுவரைக்கும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்று மீனளத் துறையிடம் கேட்ட பிறகும் தகவல் இல்லை; காவல் துறையிடமிருந்தும் தகவல் இல்லை; அரசிடமிருந்தும் தகவல் இல்லை. எனவே, அவர்களைக் கண்டுபிடித்து......

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசின் கவனத்திற்கு வந்தவுடன் அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் விரைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: சரி; மிக்க நன்றி, சீக்கிரம் தேடிக் கண்டுபிடித்துவிட்டால் சரிதான்.

அதேபோன்று 1---6—1992 அன்று பம்பாயில் கேஸ் (Gas) விபத்தில் சில பேர் மரணமடைந்து விட்டார்கள். நம்முடைய மாநிலத்னதச் சார்ந்தவர்கள். அதிலே என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களும் 7 பேர் இறந்து விட்டனர். அவர்சள் 7 பேரும் வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்வதற்காக —அவர்கள் மிக மிக ஏழ்மைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் — சென்றார்கள். இறந்த பிறகு அடக்கம் பண்ணுவதற்குக்கூட பிறருடைய நிலத்தில் தான் அடக்கம் பண்ண முடிந்தது. வறுமைக் கோட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தவர்கள்; இறந்து விட்டார்கள். அவர்களுக்கு அரசின் சார்பிலே ஏதாவது உதவித் தொகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் அனுப்பியிருந்தேன் இதுவரைக்கும் ஒன்றும் வரவில்லை. எனவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிக இரக்கம் உள்ளம் கொண்டு, அவர்களுக்கு ஏதாவது நிதியுதவி செய்வார்கள் என்று சொன்னால், அந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உள்ளங்கள் போற்றும் என்பதைச் சொல்லிக்கொண்டு, பொதுப்பணித்துறையில் பணியாற்ற வந்த 384 பேர் பணியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பொறியியல் வல்லுநர்களாக பணியாற்றி வந்தவர்கள். அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியிலிருந்து நீக்குவது என்பது வேறு; தற்காலிகமாக பணியிலிருந்து விடுவிப்பது என்பது வேறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்—தற்காலிகமாக பணியிலே சில பேர்களை அவசர நிமித்தம் காரணமாக வேலையிலே சேர்க்கிறோம், என்.எம்.ஆர். என்ற அடிப்படையிலே, எஞ்சினியர்களையும் சாதாரண கூலித் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்கிறோம். அவர்கள் காலக்கெடு முடிந்தவுடனேயே அவர்



1992 செப்டம்பர் 23] [திரு. எஸ். கண்ணப்பன்]

கள் பணியிலிருந்து அவர்களை விடுவித்து விடுகிறோம். ஆகவே பணியிலிருந்து விடுவித்து இருக்கலாமே தவிர, பணியிலிருந்து நீக்கியதாக அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் 3 ஆண்டுகளாக தொடர்ச்சியாகப் பணியாற்றியவர்கள். ஒருவேளை டெம்பரரியாகக் கூட இருக்கக் கூடும். இருந்தாலும், அந்தப் பொறியியல் வல்லுநர்களுக்கு நீங்கள் பணி கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், அரசாணை எண். 44925/எச்.எஸ். 2, நாள் 22—6—-1989 அடிப்படையில், தமிழகத்தில் 29 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அவற்றை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றிய நேரத்தில், அரசு கொடுத்த உத்தரவு, 3 ஆண்டுகளுக்கு எந்தவிதமான மானியமும் அரசிடம் நீங்கள் கேட்கக் கூடாது; அப்படி கேட்கமாட்டீர்கள் என்று உத்தரவாதத்தைத் தருவீர்கள் என்று சொன்னால், நாங்கள் இந்தப் பள்ளிகளை ஹையர் செகன்டரீஸ்களாக மாற்றுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், அதன் அடிப்படையில் எழுதிக்கொடுத்து, 29 பள்ளிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் 8 ஆசிரியர்கள் என கிட்டத் தட்ட 232 ஆசியர்களுக்கும் 3, 4 ஆண்டுகளான பிறகும் பணம் வழங்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசு தனிக்கவனம் செலுத்தி அவர்களுக்கு—மேல்நிலைபள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு— உடனடியாக அந்த ஊதியத்தை வழங்கிட முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

இன்னும் ஒன்று. நான் சித்த மருத்துவக் குடும்பத்தை சார்ந்தவன். மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழகத்தில் கிட்டத்தட்ட 15 ஆயிரம், 20 ஆயிரம் ஒட்டுமொத்தமாகப் பரந்து விரிந்து இருக்கக்கூடிய சித்த மருத்துவர்கள் ரிஜிஸ்டிரேஷன் பண்ண வேண்டுமென்ற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். ஆனால் ரிஜிஸ்டிரேஷன் கொடுக்காமல் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்கள் மருத்துவம் செய்வதற்குப் பலவிதமான தடங்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. முன்பு முதலமைச்சராக இருந்த மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே கூட அலோபதி டிரீட்மெண்டுக்கு கம்பவுண்டர்களாகப் பணியாற்றுபவர்கள், பயிற்சி பெற்றவர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்கள் டெம்ப்ரரியாக வைத்தியம் செய்யலாம் என்ற விதத்தில் அனுமதி வழங்கினார்கள், அதுபோல இவர்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1992 செப்டம்பர் 23

களுக்கும் சித்த மருத்துவத்திற்கு அனுமதி வழங்கலாம். அலோபதிக்கு அனுமதி கொடுக்க வேண்டாம். பரம்பரையாகச் சித்த மருத்துவத்தைச் செய்துக் கொண்டு வரக்கூடிய தமிழகம் முழுவதும் இருக்கக் கூடிய 15 ஆயிரம் 20 ஆயிரம் பேர்களுக்கு, கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களுக்கு நீங்கள் பதிவு செய்து கொடுப்பீர்கள் என்றால் சிறப்பாக இருக்கும். எல்லோரும் உங்களைப் பாரட்டுவார்கள்; வாழ்த்துவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை சித்த வைத்தியர்களுக்கும், படித்து விட்டு வருகிற சித்த மருத்துவர்களுக்கும் இடையிலே ஒரு மாறுபட்ட கருத்து இருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு அமைச்சர் சொல்வது உண்மைதான். Bachelor of Indian Medicine முடித்து விட்டு வருகிற டாக்டர்கள் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று போராடி வருவது எனக்கு தெரியும். அவர்கள் அரசு வேலைக்காக வரவில்லை. ரெஜிஸ்டிரேஷன் கேட்பது பிராக்டீஸ் செய்யத்தான். பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு நீங்கள் ரெஜிஸ்டிரேஷனை கொடுத்தால் உங்களிடம் வேலை கொடுங்கள் என்று கேட்கப் வரப்போவதில்லை. தனிப்பட்ட முறையில் வீட்டில் இருந்து பிராக்டிஸ் பண்ணிவிட்டுப் போகிறார்கள். ரெஜிஸ்டிரஷன் கொடுப்பதனால் சித்த மருத்துவ டாக்டர்களுக்குப் போட்டியாக வேலைக்கு வரமாட்டார்கள். எனவே அவர்களிடம் சொல்லி சமாதானம் செய்து கொள்ளலாம்.

அதே போல வயதான சித்த மருத்துவர்களுக்கு 150 ரூபாய் உதவி தொகை அளித்து வந்தீர்கள். இப்போது ஒரு ஆறு மாத காலமாக நிதியில் பற்றாக்குறை என்று சொல்லி நிறுத்தி விட்டீர்கள், தமிழகத்தில் 6 ஆயிரம், 7 ஆயிரம் பேர்கள் இதனால் பயன்பெற்று வந்தார்கள். மீண்டும் மறுபரிசீலனை செய்து உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல பஞ்சாயத்து யூனியன் டாக்டர்களுச்கு 150 ரூபாய் சம்பளம். அதை நீங்கள் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில்- கன்னியாகுமரி மாவட்டம் பல காரணங்களினால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 செப்டம்பர் 23] [டாக்டர் தே. குமாரதாஸ்]

கன்னியாகுமரியில் இருந்த அன்னை தெரசா பல்கலைக் கழகத்தினுடைய ஸ்டடி சென்டரை அங்கிருந்து மாற்றி இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் 25 மாணவிகள் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு இருந்தது. அது இன்றைக்குத் தவற விட்ட சூழ்நிலை இருக்கிறது. எனவே முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களால் பெணகளுக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட அன்னை தெரசா பல்கலைக்கழகத்தில் தலைமையிடத்தை மாற்றம் செய்து சென்னைக்கு வந்தது. பெரியகுளம் தொகுதியைச் சேர்ந்த அருமை நண்பர் திரு. பெரியவீரன் அவர்கள் கொடைக்கானலுக்கே அதைத் திரும்பக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த ஸ்டடி சென்டரை மாற்றிருக்கிறார்கள். அதையும் மீண்டும் கன்னியாகும்ரி மாவட்டத்திற்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மனோன்மனியம் பல்கலலக்கழகத்தில் அவர்கள் நடத்தி வந்த....

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு கோரிக்கையை வைக்கிறார். அவ்வளவுதான். அங்கே இருந்த ஸ்டடி சென்டரை எடுத்துவிட்டதனால் புறக்கணிக்கப்பட்டு விட்டது போல் சொல்லுகிறார்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மனோன்மணியம் பல்கலைக் கழகம் நடத்தி வந்த பி.எட்., மாலை நேர கல்லூரி அங்கிருந்தது தற்போது நிறுத்தப்பட்டு விட்டது. கடந்த ஆண்டு அது இயங்கி வந்தது. அதனால் கிட்டத்தட்ட 1,000, 1,200 மாணவிகள் பயன்பெற்றார்கள். அவ்வளவும் பெண்கள்தான். அதை நிறுத்தி விட்டார்கள். மீண்டும் அதை கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மனோன்மணியம் பல்கலைக்கழகத்தில் வேலைக்கு ஆள் எடுக்கின்றபோது மதுரைப் பல்கலைக்கழகத்திலிருந்து டிரான்ஸ்பர் பண்ணி அங்கே போடுகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் பணியில் இருக்கிறார்கள். அப்படி வருகின்றபோது அந்தப் பகுதியில் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போகின்ற சூழ்நிலை வருகிறது. எனவே, மதுரையிலிருந்து டிரான்ஸ்பர் செய்வதற்குப் பதிலாக மனோன்மணியம் பல்கலைக்கழகத்தில் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அவர்களைத்

தேர்வு செய்ய வேண்டும். அதிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் போஸ்ட் கிராஜூவேட் படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் வேலை வாய்ப்பை கன்னியாகுமரி மாவட்டத்தில் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் சண்டைக்கு வரவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே என்னுடைய தொகுதிக்குட்பட்ட கணபதியான் கடவு பாலம் கட்டிட வேண்டுமென்று வெகுகாலமாக கோரிக்கை இருக்கிறது. அந்தப் பாலம் இதுவரைக்கும் கட்டப்படவில்லை. பலமுறை எஸ்டிமேட் எடுக்கப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி—எதற்கெல்லாமோ செலவு செய்கிறீர்கள்—இது மிக முக்கியமான பாலம் இதற்குச் செலவுசெய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் வேண்டும் என்று கேட்பதில் தவறில்லை. எதற்கெல்லாமோ செலவு செய்யப்படுகிறது என்பது தவறு. எதற்கெல்லாமோ அரசு நிர்ணயித்த விதிகளுக்குப் புறம்பாக செலவழிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

டாக்டர் தே. குமாரதாஸ் : எதற்கெல்லாமோ என்று சொன்னால் தவறாக இல்லை. இலவசத் திட்டங்கள், இலவசத் திட்டங்கள் என்று சொல்கிறது என்னைப் பொறுத்தவரைக்கும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால்தான் அப்படிச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இலவசத் திட்டங்கள் நீங்கள் செய்வதற்குப் பதிலாக பயனுள்ள விதத்தில் 10 பாலங்கள் கட்டினோம் என்று சொன்னால் இந்த அரசினுடைய .... (மணி அடிக்கப்பட்டது). முடித்து விடுகிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிந்தது. கடைசியாக ஏதாவது ஒரு கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் நீங்கள் சொல்வது போல் கேட்டுக் கொண்டு இந்தச் சட்டசபையில் இருந்து கொண்டிருக்கிறேன். அதே போல எனையம் புத்தன்துறை தொகுதியில்





அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அங்கே மீன்பிடி துறைமுகம் வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து பார்வையிட்டார்கள். வேண்டியதை செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். தனிக்கவனம் அதிலே செலுத்த வேண்டும். 10 ஆயிரத்திற்கும் அதிகமான மீன்பிடிக்கிற சகோதரர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றார்கள். அந்த மீன்பிடி துறைமுகமோ அல்லது தூண்டில் வலையோ ஏதாவது ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல கருங்கல் பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றும் அதே நிலையிலே இருக்கிறது. அதை அப்கிரேட் செய்ய வேண்டும் என்று சொல்லி, நானும் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக வந்துவிட்டேன் கடந்த முறையும் கேட்டிருக்கிறேன், இப்பொழுதும் கேட்டு கேட்டுப் பார்க்கிறேன், அந்தப் பகுதியிலே அதிகமாக ஓ. பி. பேஷண்ட்டுக்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, நீங்கள் அதை அப்கிரேட் செய்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல கூட்டுரையாச்சி கூட்டுக்குடிநீர் திட்டமும் முன்னாள் முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் இருந்த நேரத்திலே என்னுடைய தொகுதிக்கு 4.5 கோடிக்கான திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டம் இப்பொழுது வேகமாக நடைபெறுகிறது. அமைச்சர் அவர்களிடம் கேட்டு இப்பொழுது 25 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அது கிட்டத்தட்ட 6, 7 வருடங்கள் ஆகிவிட்டது, அந்தப் பணியை நீங்கள் துரிதமாக்கி முடித்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல பைங்குளம் என்கிற பகுதியில் இருக்கக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம், அதுவும் என்னுடைய தொகுதியிலே வருகிற பகுதி. அதையும் சீக்கிரம் முடித்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல மங்காடுபாலவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல இன்னொரு முக்கியமான கருத்து ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். நீங்கள் இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து இத்தனைப் பெரிய திட்டங்களைத் தந்தாலும், தண்ணீரை ஆப்ரேட் பண்ணுகிற பம்ப்செட், ஒழுங்காகத் தண்ணீர் அடிக்கிறது கிடையாது. பி. டி. ஓ.-வைப் பார்த்தேன். எக்சிகியூட்டிவ் ஆபீசரைப் பார்த்தேன். ஏன் தண்ணீர் அடிக்கவில்லையென்றால் நான் என்ன செய்வது என்று சொல்கிறார். இப்படி நம்முடைய பணங்கள் எல்லாம் தேவையில்லாத. . (குறுக்கீடு) தண்ணீர் இருக்கிறது. இல்லாமல் இருந்துவிட்டாலும் பரவாயில்லை. அவர்கள் நினைத்தால் வேலைக்கு வருகிறார்கள். இல்லையென்றால் வருவது இல்லை. இதை எல்லோரிடமும் சொன்னால், அதை கேர் பண்ணுவதே கிடையாது. ஆக நமக்கு அந்தப் பகுதியிலே போக முடிவதில்லை, எனவே, இப்படி உதாசீனமாக நடந்து

கொள்கிற அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரைக்கும் அந்தப் பகுதியிலே ஒரு சப்ஸ்டேசன் வைப்ப தற்காக இடங்கள் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டன. கைவசப் படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சப் ஸ்டேஷன் வைப்ப தற்கு ஆக்கிரமிப்பு செய்வதில்லை, ஆர்ஜிதம் செய்வது.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஆர்ஜிதம், கைவசப்படுத்தப் படுகிறது என்று சொன்னேன். ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அந்த வேலையில் நீங்கள் தனிக்கவனம் செலுத்தி உடனடியாக முடிக்க வேண்டும்.

மிக முக்கியமான ஒரு கோரிக்கை என்னுடைய மாவட்டத் தைப் பொறுத்தவரைக்கும், வேதனையாகச் சொல்கிறேன். அந்த மாவட்டத்தில் இப்பொழுது பெருவாரியானவர்களுக்கு யானைக்கால் நோய் வெகுவாகப் பரவி வருகிறது. இப்பொழுது யானைக்கால் நோயைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று பல முறை சொல்லியிருக்கிறேன். இல்லை எனக்கு அடுத்த முறை வந்துவிடுமென்று நினைக்கிறேன். ஆக அது வேகமாகப் பரவி வருகிறது. சிறு குழந்தைகளைப் பார்த்தால் பரிதாபத்துக்குரிய நிலையிலே இருக்கிறார்கள். பெரியவர்கள், சிறியவர்கள், முதியோர்கள் அனைவருக்கும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : முடித்துவிடுகிறேன். அதாவது நான்கு சப்ஸ்டேஷன்கள் தருவதாகச் சொன்னீர்கள். கருங்கல், புதுக்கடை, தலக்குளம், இரணியல் இப்படிப்பட்ட பகுதிகளிலே. ஆனால் சொல்லி வருடங்கள் பல ஆகிவிட்டதே தவிர, இன்னும் அது பங்ஷன் பண்ணுவதை ஆரம்பிக்கவில்லை. நாங்கள் எல்லாம் இப்பொழுது காலமாகிவிட்டாலும், எங்களுக்குப் பின்னால் வரு கிறவர்கள் யாராக இருந்தாலும் பிரச்சினை உண்டு. கன்னியா குமரி மாவட்டம் என்று சொன்னால் யானைக்கால் என்கிற அடையாளத்தோடு வருகின்ற அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது. எனவே, அதிலே தனிக்கவனம் நீங்கள் செலுத்தி அந்த யானைக்கால் நோயை எங்கள் மாவட்டத்திலிருந்து முற்றிலுமாக ஒழித்துக்கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யானைக் கால் நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள். நீங்கள் யானைக்காலிலேயே இவ்வளவு நேரம் நின்று கொண்டிருந்தால், நல்ல காலில் எவ்வளவு நேரம் நிற்கிறது ?



டாக்டர் தே. குமாரதாஸ் : கொடுமையை நீங்கள் வந்து பார்த்தீர்கள் என்றால் தெரியும். இங்கே சொல்லாமல் வேறு எங்கு சொல்ல முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 நிமிடம் ஆகிவிட்டது. முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எனவே, நீங்கள் அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் ஒரு வேண்டுகோள். என்னவென்று சொன்னால், நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகிறது. இந்த $1\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் ஒரு பஸ் கூட புதிதாக, அன் ரிசர்வ்டு ஏரியாவுக்கு விடவேண்டுமென்று சொன்னால், விடவில்லை. மாண்புமிகு அமைச்சர் கூட கன்னியா குமரி மாவட்டத்திற்கு வருகை தந்த நேரத்திலே ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் கடந்த முறை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை புரிந்திருக்கிறார். வருகை புரிந்தவுடன் அந்த மாவட்ட கவுன்சில் மீட்டிங் வைத்து ஒவ்வொரு தொகுதிக்கும் 7 புதிய வழித்தடங்கள் செய்துத் தருவேன் என்று உறுதி கூறி, அன்றைக்கே அதை சொல்லியிருக்கி றார்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்

பிற்பகல் 1 .20.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கூட்டம் அன்றைய தினம் நடைபெறுவதாக எனக்குத் தெரியாது. போக முடியவில்லை. இருந்தாலும் பிறகு சந்தித்த நேரத்தில் பெருந்தன்மையோடு சொன்னார்கள். தொகுதி மாறுபாடு இல்லாமல் எல்லாத் தொகுதிகளுக்கும் 5 அல்லது 7 புதிய வழித்தடங்கள் தருகிறோம் என்று சொன்னார்கள். என்ன கர்மமோ தெரியவில்லை. அங்கே போய் கேட்டால் அங்கே ஒரு பஸ் ஸ்டாப் கூட வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவர்கள் குறிப்பிடுகிறபோது, என்ன கர்மமோ என்று தெரிய வில்லை என்றெல்லாம் உச்சரிக்கிறார். காரணம் என்று சொன்னால் பரவாயில்லை. என்ன காரணம் என்று சொன்னால் நல்லது. அதை மாற்றிக்கொண்டால்கூட நன்றாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது சொன்னார்கள். அவர்கள் மாவட்டம் முழுமையாக தேசியமயமாக்கப்பட்ட கன்னியாகுமரி இயக்கப்படுகின்றன. அது ஏறத்தாழ பெரும் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தது. அந்த நிலையை நஷ்டத்திலேதான் 3 கோடி ரூபாய் இன்றைக்கு மாற்றி, அதற்காக தமிழகத்தின் முதல்வர் கூடுதலாக நம்முடைய தருவதற்கு ஒப்புதல் புரட்சித் தலைவி அவர்கள் படையிலே தான் புதிதாக ஒவ்வொரு தந்திருக்கிறார்கள். அதன் அடிப் வழித்தடங்களை இயக்குவதற்கு தொகுதிக்கும் 7 புதிய மேற்கொண்டு அதற்கு வேண்டிய நாங்கள் நடவடிக்கை எடுத்து இன்றைக்கு கூண்டுகள் தேவையான சேஸ்களை விரைந்து நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை கட்டிக்கொண்டிருக்கிறோம். வதற்கும், உங்களுக்குத் தேவைப்படுகின்ற நிறைவேற்று பேருந்து வசதிகள் செய்து தருவதற்கும் இடங்களுக்கு கும் தயக்கம் காட்டாது என்பதை மட்டும் இந்த அரசு என்றைக் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே

டாக்டர் தே. குமாரதாஸ் : இப்போது ஒரே ஒரு கருத்து சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை மட்டும் சொல்லி முடித்து விடுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் 7 புதிய வழித்தடங்களைத் தருவதாகவும், அதற்காக 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் கூறியிருக்கின்ற இடங்களுக்கு அமைச்சர் அவர்கள் வருவார்கள் என்றால், தேவையான பகுதிகளுக்கு பஸ் பெறு கின்ற வாய்ப்பு கிடைக்கும், அங்கே வழித்தடங்களை தொடங்கி வைப்பதற்கு நீங்கள் வரவேண்டும் என்று கேட்டுக்



கொள்கிறேன். அதே போல இன்னும் ஒரு கருத்தை சொல்லி முடித்து விடுகிறேன். எங்களுடைய மாவட்டத்தில், நெய்யாறு இடதுகரை சானல், சித்தாறு பட்டணங்கால் சானல் ஆகிய இரண்டு சானல்களுக்கும் அதாவது கடை வரம்பு வரைக்கும் சிமென்ட் கரை லைனிங் செய்யாத காரணத்தி னால், பல்வேறு பகுதிகளில் உடைப்புகள் ஏற்பட்டு சரியாக விவசாயம் செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த சித்தாறு பட்டணங்காலை சாலையையும் செய்யாறு இடது கரை சாலையையும் சீர்படுத்தத் தனிக் கவனம் செலுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எம். கிருஷ்ணன் (குறுக்கீடு) போதும் போதும். நேரமாகிவிட்டது. (குறுக் கீடு) நான் சொன்னதற்கும் மீறி உங்களுக்கு டைம் கொடுத் தாகிவிட்டது. திரு. எஸ். எம். கிருஷ்ணன். (குறுக்கீடு) இல்லை. இல்லை. போதும். எல்லோரும் பசியோடு இருக்கின்றார்கள்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே (குறுக்கீடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்கள் உட்காரவும். ஒரு நிமிடம் அல்ல, ஒரே ஒரு பிரச்சினையோடு முடிக்க வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒட்டுமொத்த மாக ரேஷன் கார்டு இல்லாத பிரச்சினை, பெரிய பிரச்சினை யாக இருக்கிறது. அதிலேயும் என்னுடைய தொகுதிக்குட் பட்ட பகுதிகளிலே மட்டும் சுமார் 6,000 குடும்பத்திற்கு ரேஷன் கார்டு இல்லை. நாங்கள் மனுக்கள் கொடுத்த பிறகு 60 பேர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆக அது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதேபோல கன்னியா குமரி மாவட்டத்தை அதாவது தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்ற நேரத்தில் போராடிய வீரர்களுக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ரேஷன் கார்டோடு முடியுங்கள்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். முறையாகக் கடனைச் செலுத்திய விவசாயிகளுக்கு போனஸ், கூட்டுறவுத் துறையிலே பல்வேறு முன்னேற்றங்கள், 60 லட்சம் ஏழை மக்களுக்கு வேஷ்டி, 60 லட்சம் ஏழைத் தாய்மார்களுக்கு புடவைகள், போலீஸ் அதிகாரிகளுக்கு உடை, உணவு, அணைக்கட்டுகளைப் பராமரித்தல், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அவர்களது உதவித் தொகையினை அதிகரித்தல், சேலம் ஐஸ்வரிசி தொழிலுக்கு உதவி செய்தல், தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்துதல் சிறைகளைச் சீர்படுத்துதல், திரைப்பட நகரத்தை அமைத்தல் போன்ற பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். அத்தனைத் திட்டங்களும் ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் பயனளிக்கக் கூடியவை. எனவே, அவைகளை நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றோம். ஆனால் இத்தனைப் போட்டதற்குப் பின்னரும், ஏழை மக்களும், நடுத்தர மக்களும் பல்வேறு இடங்களிலே பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1.25

என்னுடைய தொகுதியில் இருக்கின்ற ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் கம்பெனியிலே 375 தொழிலாளர்கள் வி.ஆர்.எஸ். எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எழுதிக் கொடுத்து ஓர் ஆண்டாகி விட்டது. இதுவரையில் அவர்களுக்கு பணம் கொடுக்கப்பட வில்லை. அவர்கள் தொழிற்சாலையிலும் இல்லை. அவர்களுடைய பணம் வரவில்லை. எனவே, அவர்கள் நடு ரோட்டிலே நிற்கிறார்கள். இந்த நிலையை அரசு பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிறிஸ்துவக் கல்லூரிப் பிரச்சினை. கிறிஸ்தவக் கல்லூரிப் பிரச்சினை ஒரு பகுதியிலே முடிந்து இன்னொரு பகுதியிலே துவங்கியிருக்கிறது. அங்கே இருக்கின்ற பேராசிரியர்கள் நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையை பரிவோடு கவனித்து அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற உத்தரவினையும் சொல்லி, அதற்கு ஒரு நடுவரை நியமித்து, நடுவரும் தன்னுடைய அவார்ட்டை கொடுத்து விட்டார். ஆனால் கொடுக்கப்பட்ட அந்த அவார்ட்டை அந்த நிர்வாகம் இதுவரை அமுல் படுத்தவில்லை. அந்த ஆசிரியர்களுடைய பெயர் அந்த டைரியிலிருந்தும் அதாவது கிறிஸ்தவர்களுடைய நாள் காட்டியில் முன்பு இருந்த அவர்



களுடைய பெயரைக்கூட எடுத்து விட்டார்கள். அவர்கள் மீண்டும் இன்றைக்கு அதே பழைய நிலைக்குத் திருப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் நான் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன. அது மட்டுமல்ல, இந்த இடத்திலே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் சொல்கிற அந்த நிகழ்ச்சி, சம்பவம் காரணமாக ஆசிரியர்கள் பாதுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை தான். அதற்காக அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. ஆனால் நிர்வாகத்தைச் சார்ந்தவர்கள் நீதிமன்றத்திலே போய் தடையுத்தரவு வாங்கியிருப்பதாக என்னிடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் என்ன செய்வது என்பதைப் பற்றி அரசு சிந்தித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ்.எம். கிருஷ்ணன் : அதற்கு ஒரு யோசனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கல்லூரி மைனாரிட்டி கல்லூரியே அல்ல என்ற ஒரு விளக்கம் எனக்குக் கிடைத்திருக்கிறது. கேரளாவிலே இதே போன்ற எம்.சி.சி. மலபார் கிறிஸ்தவக் கல்லூரி என்ற அந்தக் கல்லூரியிலே இருந்த பேராசிரியர் ஒருவர் நீக்கப்பட்டார். அவர் நியாயஸ்தலத்திற்கு சென்று வாதாடினார். நீதிமன்றத்திலே அப்போது கொடுக்கப்பட்ட விளக்கம் என்னவென்றால், ''மைனாரிட்டி கல்லூரி என்றால், அந்தக் கல்லூரி மைனாரிட்டிகளால் துவக்கப்பட்டு, மைனாரிட்டிகளால் நடத்தப்பட வேண்டும். ஆனால் இந்தக் கல்லூரி மைனாரிட்டிகளால் துவக்கப்பட்ட கல்லூரி அல்ல. அந்தக் கல்லூரி துவக்கப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இதனை ஸ்காட் மிஷனரீஸ் துவக்கியிருக்கிறார்கள் ஆகவே, அந்தக் கல்லூரி மைனாரிட்டி கல்லூரியே அல்ல" என்கிற அளவுக்கு நமக்கு சாதகமாக உச்ச நீதிமன்ற தீர்ப்பு வந்திருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்........

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர்'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுங்கள்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : சென்னையிலே உள்ள கிறிஸ்தவக் கல்லூரி மைனாரிட்டி இன்ஸ்டிட்யூசன் என்பது தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் தவறான தகவலை இந்த அவைக்குக் கொடுக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரும் கிறிஸ்தவக் கல்லூரி 'மைனாரிட்டி இன்ஸ்டிட்யூசன்' என்றுதான் சொல் கிறார்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : இல்லை, இல்லை. அவர் இல்லை என்று சொல்கிறார்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மலபார் கிறிஸ்தவக் கல்லூரி இதே போன்ற வழக்கை சந்தித்தது. அப்போது நீதி மன்றத்தால் கொடுக்கப்பட்ட உத்தரவை இங்கே நான் படிக்க அனுமதிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

'A minority institution means an institution founded and run by minority community in India. M.C.C. is an institution founded by foreign missionery secieties and at present run by a minority commu- nity fn India.

அது மட்டுமல்ல,

In his writ Petition, the Professor submitted that the institution was founded by 'Basel Mission' a foreign missionary society and as per the law, it eould not claim minority status. The Court accepted his sub mission and ordered his reinstatement. Again, the C.S.I. Management approached the Supreme Court..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படு கிறது. இன்னும் 7 உறுப்பினர்கள் பேச வேண்டும். எவ் வளவு நேரம் நடத்துவது என்பதையும் மனதிலே கொண்டு நீங்கள் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 1-30

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.



The Court accepted his submission and ordered his reinstatement The CSI Management approached the Supreme Court and the appeal failed and the person was reinstated with all benefits. சென்னையிலே நடந்ததைச் சொல்லவில்லை. கேரளாவிலே ஒரு எம்.சி.சி. கல்லூரி இருக்கிறது. (Calicut) கோழிக் கோட்டிலே இருக்கிறது. அங்கே நடந்த சம்பவத்தைச் சொல் கிறேன். அந்தக் கல்லூரி சிறுபான்மைக் கல்லூரி அல்ல என்று சொல்வதற்கு நிறைய ஆதாரம் இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களிடம் தனியாகக் கொடுக்கக் கடமைப் பட் டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையிலே ஆசிரியர்கள் மத்தியிலே அமைதியின்மை தோன்றிவிடும் நிலைமை ஏற்படாமல், அதற் குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடலோரச் சாலை விஸ்தரிப்பு ஏற்பாடு நடை பெறுகிறது. அந்த விஸ்தரிப்பின் காரணமாக, அந்தப் பகுதி களிலே வாழும் மக்களுக்கு மாற்று இடங்களை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அனகாபுத்தூர் நகரம் ஏழை மக்கள், நெசவாளர் கள் வாழும் பகுதி. அங்கே உள்ள பள்ளியிலே ஆசிரியர் பயிற் சிக்கு அனுமதி இருந்தது. இப்போது பெண்கள் பள்ளிகளுக்கு மட்டும்தான் அந்த அனுமதி என்பதால், அங்கே அந்தப் பயிற்சிக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அங்கே 1,400 பெண்கள் படிக்கிறார்கள். 1,200 மாணவர்கள் படிக்கிறார் கள். முன்பு இங்கே இந்தப் பயிற்சி இருந்தது. எனவே இதை ஒரு தனி நேர்வாகக் கருதி, ஏற்கெனவே இங்கே 1,400 பெண்கள் படிக்கிறார்கள் என்பதால், மாண்புமிகு முதல்வர் அவர் களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இந்த விஷயத் திலே பரிவு காட்டி, ஏழை மக்கள் வாழும் பகுதியாக இருப் பதால், அந்தப் பள்ளியிலே ஆசிரியர் பயிற்சி வகுப்புகளை நடத்த அனுமதி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, பம்மல், தாம்பரம் நகரத்தில் வாரத்திற்கு ஒருமுறைதான் தண்ணீர் கொடுக்க முடிகிறது. மற்ற இடங்களில் 2 நாட்களுக்கு ஒரு முறை கொடுக்கும்போது தினமும் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். பம்மலில் தோல் கம்பெனிகள் இருப்ப தால் நிலத்தடி நீரும் பாழாகிவிட்டது. இந்த நிலையிலே 8 அல் லது 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுத்தால் கடின மாக இருக்கிறது. எனவே, கிருஷ்ணா நதி நீர் வரும்போதாவது பம்மல், தாம்பரத்தைப் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கவிநிலவு தர்மராஜ்.

[1992 செப்டம்பர் 23

திருமதி கவிநிலவு தர்மராஜ்: பண்ணால், இசையால், பா
நலத்தால், இந்நாள், இனிநாள் நன்னாளாக, கண்ணால் கலி
யையே விரட்டும் கற்பூர தீபமாம் புரட்சித் தலைவியினுடைய
பொற்பாதம் பணிந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த முதல் துணை நிதிநிலை அறிக்கையிலே எனக்குப்
பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன். எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணிய
தீந்தமிழ் செயல்களை ஆற்ற, கண்ணியத்தோடு உழைக்கும்
காவல் துறையினர் கடந்த கால ஆட்சியிலே எடுப்பார் கைப்
பிள்ளையாக, கரங்கள் கட்டப்பட்டிருந்த சோக நிலை காரண
மாக நாடி நரம்பெல்லாம் நடுநடுங்க, பட்டப் பகலிலே, நட்ட
நடு வீதியிலே பல்வேறு தொண்டர்களும், பத்மநாபா போன்றவர்
கள் எல்லாம் கொலை செய்யப்பட்ட குலை நடுங்கும் காட்சிகள்
நடந்தேறிய நிலை மாறி, தங்கத் தமிழகத்தின் சிங்கத் தலைவி
யினுடைய ஆட்சியிலே, காவல் துறையை நவீனப்படுத்திட நிதி
யையும் ஒதுக்கியதோடு அந்தக் காவல் துறையைச் சேர்ந்த ஒரு
சில பிரிவினருக்கு பொறுப்போடு, எடுப்போடு கூடிய உடுப்பு
தேவை என்பதை நேரம், சமயம் பார்த்து உணர்ந்து, அதற்குரிய
நிதியையும் கருணை உள்ளத்தோடு வாரி வழங்கி, அவர்களுக்குப்
பராமரிக்க பக்குவம் மிக்க படியையும் கொடுத்திருக்கிற இந்த
நிதிநிலை அறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியது.

பிற்பகல் 1-35

இது விட்ட பணியைத் தொட்டு முடிக்கவும், ஆற்றவேண்டிய
பணிகளை ஆர்வத்தோடு ஆற்றி முடிக்கவும் ஒரு அட்சய பாத்திர
மாக துணை நிற்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூறு
வதோடு 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி..' என்ற வள்ளுவரின்
குறளுக்கேற்ப உழுகின்ற தொழிலை செய்யாதவர்களுக்
கெல்லாம் கூட அந்த விவசாயப் பெருங்குடி மக்கள்தான் அச்சா
ணியாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, கிராம ராஜ்ய
மாக இந்த தமிழ்த் திருநாட்டை நடத்திக் கொண்டிருக்கிற
இதயதெய்வம் புரட்சித்தலைவி, விவசாயப் பெருங்குடி மக்க
ளுடைய இன்னல்களைப் போக்கவும், கண்ணியத்தையும்,
கடமையையும் உணர்ந்து அவர்களது கடன் சுமையைப் பொறுப்
பேற்று நிவர்த்தி செய்யக்கூடிய தன்மையோடு, பாராட்டக்
கூடிய முக்கியத்துவம் அளித்து, அவர்களுக்கு இந்த நிதிநிலை
நெருக்கடியைக் கூட பொருட்படுத்தாமல் அவர்களுக்கு
'போனஸ்' வழங்கியிருக்கிற இந்தப் பொன்னான நிதிநிலை
அறிக்கை கண்ணாக ஏற்றுக்கொள்ளக்கூடியது. இது சர்க்கரைப்
பந்தலிலே தேன்மாரிப் பொழிந்தது போல் இருக்கிறது என்
பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக் கூறுவதோடு, ஊரை
அடித்து உலையிலே போட்டு, உலையிலே போட்டதை இலை
யிலே போட்டு, இலையிலே போட்டதை வாயிலே போட்டு,
வாயிலே போட்டதை வயிற்றிலே போட்டு, வயிற்றிலே போட்
டதை ஏப்பம் விட்ட, எதிரிகளின் ஏய்ப்பு என்னும் தொழிலுக்கு



1992 செப்டம்பர் 23] [திருமதி கவிநிலவு தர்மராஜ்]

எதிராக, அந்த நோய்க்கு நோய் கொடுத்த நொய்யல் மலராய்
புரட்சித் தலைவி அவர்கள் தோற்றுப் போகப் போகிறார்கள்,
புரட்சித் தலைவி ஊரை விட்டே போகப் போகிறார்கள், நான்
போட்டுக் கொள்கிறேன் மொட்டை, அடித்துக் கொள்கிறேன்
பட்டை, மாட்டிக் கொள்கிறேன் உத்திராட்சக் கொட்டை என்று
சொன்னவர்கள் எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போகக்
கூடிய விதத்திலே, திவ்யமாக பவ்ய வெற்றியை இந்தத் தமிழகத்
திலே பறைசாற்றி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத்தினுடைய கொள்கைக் கோட்பாடு கிழியாத
ஆடை, ஒழுகாத வீடு, ஆறாத சோறு என்பதை எடுத்துச்
சொல்லக்கூடிய விதத்திலே நடமாடும் பேசும் தெய்வமாக
விளங்கிக் கொண்டிருக்கிற எங்கள் குல விளக்கு, இதயதெய்வம்
புரட்சித்தலைவியினுடைய இந்த துணை நிதிநிலை அறிக்கை
மூலமாக ஏழை மக்களின் பொங்குமனத் தங்கம், ஆளும் இந்தத்
தங்கத் திருநாட்டிலே எங்கு பொங்குகிறது, வாடிய வயிறு பற்றி
எரிகிறது, எங்களுக்கு வாய்ப்பு அளித்தோர் யார் எங்களுக்கு
உடுக்க உடையில்லை, உணவுக்கு விதியில்லை, இந்த விதியை
மாற்றுகின்ற சக்தி படைத்தவர்கள் யார் என்று எண்ணிக்கொண்
டிருந்த காலத்திலே, அன்று பாரதி சொன்னானே, 'தனியொரு
வனுக்கு உணவில்லையெனின் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற
அந்த எழுத்துக் கவிஞரை எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய
ஆற்றல் இருந்தாலும், அவரால் எழுதத்தான் முடிந்தது, அந்த
விதியை மாற்ற தன் கூரிய மதியால் பொங்கல் திருநாளில் ஏழை
எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மற்றும் அத்தனை
பேருக்கும் அவர்கள் பெறக்கூடிய விதத்திலே, அவர்கள் அத்தனை
பேரும் போற்றக்கூடிய விதத்திலே சீரும் சிறப்புமாக பொங்கல்
கொண்டாடுவதற்கு, அந்தப் பொங்கல் திருநாளை முன்னிட்டு
60 லட்சம் வேட்டிகளும் 60 லட்சம் சேலைகளும் கொடுத்து
அவர்கள் வயிற்றில் பாலை வார்த்த இந்த நிதிநிலை அறிக்கைக்கு
45 கோடியும், கொடுத்திருக்கிறார்கள். 6 கோடி மக்களின்
இதயநாயகியாக வலம் வந்துகொண்டிருக்கிற புரட்சித்தலைவி
வாரி வழங்கியிருப்பது கடையெழு வள்ளல்களையெல்லாம் மீறக்
கூடிய அற்புதமான செயல் என்பதை இந்த நிதிநிலை அறிக்கை
யின் மூலமாக நாங்கள் உணர்ந்திருப்பதை இந்நேரத்தில் நான்
எடுத்துச் சொல்லி, இந்த தங்கத் தமிழகத்தில் தாய்க்குலத்தின்
பிரதிநிதி பட்டப்பகலிலே இதே சட்டமன்றத்திலே பதைபதைக்க
துடிதுடிக்க, என் மானத்தைக் காப்பாற்றுங்கள், என் மானத்தைக்
காப்பாற்றுங்கள் என்று சொல்லி, கிழிந்த சேலையோடு அவிழ்ந்த
கூந்தலோடு, அழுத கண்களோடு, நொந்த உள்ளத்தோடு குமுறிக்
குமுறிக் கொந்தளித்து ஓடிய அந்தக் காட்சியை மக்கள் மனத்
திலே நிறுத்தி, ஏமாற்றுக் கூட்டங்களை இந்த நாட்டை விட்டே
துரத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு அந்த துர்ப்பாக்கிய
ஆட்சி தூக்கியெறியப்பட்டு, பிறகு போராட்டம் என்னும்
தேரோட்டம் நடத்தி, மக்கள் கண்களில் நீரோட்டம் என்னும்
ஏமாற்றப் பித்தலாட்டம் செய்து, அதிலே பாராட்டை, சீராட்

டை, தாலாட்டைப் பெற்றவர்கள் எல்லாம் நாட்டு மக்களுடைய
நல்ல எண்ணத்திலிருந்து எறியப்பட்டாலும் இன்றைக்கு அந்தக்
காங்கிரஸ் கட்சியின் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய இந்திரா
காந்தி அம்மையார், காமராஜர் போன்றவர்கள் எல்லாம் ஆட்சி
நடத்திய எத்தனையோ மாநிலங்கள், எல்லாம் இருந்தாலும்
கூட, வெள்ளையனே வெளியேறு என்று சொல்லி, அன்னியனை
விரட்டிய அந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவித்
தொகையையும் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு சரித்
திரம் படைக்கக்கூடிய சாதனைகளைப் படைக்கக்கூடிய அள
விலே பண உதவியும் வாரி வழங்குவதற்காக இந்த நிதிநிலை
அறிக்கை மிகவும் உறுதுணையாக இருந்திருக்கிறது என்பதை
நினைக்கும்போது, அந்தப் பொன்மனச் செல்வியின் புண்ணிய
பாதம் இந்த மண்ணிலே பட்ட காரணத்தினாலேதான் விடுதலைப்
புலிகள் என்னும் தறுதலைகள் எல்லாம் ஒடுக்கப்பட்டு, விடுதலைப்
போராட்ட வீரர்கள் இங்கு வாழ்வளிக்கப்பட்டிருக்கிறார்கள்
என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச்சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், விடுதலைப்புலிகளை இந்த
நாட்டை விட்டு விரட்டி, தேர்தலை ஒரு மாறுதலாக ஏற்று,
ஒருதலைப்பட்சமாக விடுதலைப் புலிகள் என்னும் தறுதலை
களுடன் பேரம் பேசி, அவர்களுக்காக தன்னலம் மிக்கதான
ஆட்சியை நடத்தி, தன்னலத்தினுடைய தகப்பனார், ஊரை
யடித்து உலையிலே போட்ட குப்பனார், சுப்பனார், அதோடு
மட்டுமல்லாமல், இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்க
ளுடைய பொன்னான திட்டத்தைப் புரிந்துகொள்ள முடியா
லாகாத நிலையிலே அவர்களை எந்தக் காரியத்திலே குற்றம்
சொல்லலாம் என்று மோப்பம் பிடித்துக்கொண்டிருக்கும்
மோப்பனார், அதோடு மட்டுமல்ல, சஞ்சலத்திலே மிதந்து
கொண்டிருக்கிற கல்நார்... (குறுக்கீடு).

பிற்பகல் 1–40

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: It is too much

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதிர்த்துக்
கேட்க க்ளாரிபிகேஷனைத் தவிர வேறு எதுவுமே
இல்லையே. அவர் தெரிவித்தது, இந்த ஆட்சியைப்
பற்றி வெளியிலே தவறாகப் பேசுகிறவர்கள் என்று
குறிப்பிட்டுச் சிலவற்றை அவர் சொல்கிறபோது.... (குறுக்கீடு)
பீட்டர் அல்போன்ஸ் இதிலே நீங்கள் எழுந்து நின்று குரல்
எழுப்புவதற்கு என்ன இருக்கிறது? தயவுசெய்து—இதிலே
எழுந்து குரல் எழுப்புகிறீர்கள் (குறுக்கீடு) அவர்
தெரிவித்து வருகிற கருத்துகள், இந்த துணை நிதிநிலை
அறிக்கையிலே இருக்கிற சில கருத்துகளையெல்லாம் சொல்லி,



இப்போது ஆட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சரை வெளியிலே சிலர் தூற்றுகிறார்கள் என்று சொல்லி அதற்குப் பதில் சொல்ல வருகிறார். (குறுக்கீடு) அவர் தெரிவித்து இருப்பதில் எந்த ஒரு கருத்தை நீங்கள் ஆட்சேபிக்கிறீர்கள்? (குறுக்கீடு) தயவுசெய்து யாராவது ஒருவர் சொல்லுங்கள். சிலர் மோப்பம் பிடித்து அலைகிறார்கள் என்று சொல்வதில் என்ன இருக்கிறது? இது அன்பார்லிமெண்டரி வார்த்தையா? மோப்பம் பிடித்து அலைகிறார்கள் என்று சொல்வதில் எந்தப் பகுதியை நீங்கள் அன்பார்லிமெண்டரி என்று சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இப்படி எல்லோரும் எழுந்து நின்றுகொண்டு இருப்பது சரியல்ல. (குறுக்கீடு) எந்த உறுப்பினர் பேசுகிறார்? யாராவது ஒருவர். (குறுக்கீடு). பாயின்ட் ஆஃப் ஆர்டர் இதிலே என்ன இருக்கிறது. (குறுக்கீடு) அதைத்தான் அல்போன்ஸை கேட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய நல்ல செயல்களைச் செய்ய விடாமல் தடுத்து, திக்குமுக்கு ஆட்சியினுடைய காலத்திலே அவர்கள் புரட்சித் தலைவியினுடைய தேவைகளை மோப்பம் பிடித்துக்கொண்டு இருந்த "மோப்பனார்'' என்று சொன்னேனே தவிர (மேசையைத் தட்டும் ஒலி), எங்களுக்கு தேவையில்லாத பிரச்சினைகளை எடுத்துச் சொல்லக்கூடிய தேவை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அமைச்சர் பெருமக்களாக இருந்தாலும் சரி தேவை இல்லாத பிரச்சினைகளுக்கு நாங்கள் என்றும் போக மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்று சொன்னால், கண்ணிலேயே கலியை விரட்டக்கூடிய கலியுக சீதேவி புரட்சித் தலைவியினுடைய பொன்னான ஆட்சி இது என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்டிவிட்டு (குறுக்கீடு)....

திரு. பி. வி. இராஜேந்திரன்: தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வதிலே ஒன்றும் சொல்லவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் சொல்வதிலே ஒன்றும் இல்லை என்று சொன்னால், இதிலே வேண்டாம்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: இது ஒரு பார்லியமெண்டரி பிராக்டீஸானால், இதற்கு ஒரு முன் உதாரணம் கிடையாது. (குறுக்கீடு) அதுமாதிரி வேண்டுமானால் பேசிவிட்டுப் போகலாம்.

1992 செப்டம்பர் 23]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர்கள் தெரிவித்து இருப்பதில் பார்லிமென்டரி பிராக்டீஸில் ஏதோ ஒரு தவ றான வார்த்தையாக இருந்தால்—சிலர் மோப்பம் பிடித்து அலைகிறார்கள் என்று சொல்வது...(குறுக்கீடு)

<u>திரு. பி.வி. இராஜேந்திரன் :</u> மோப்பம் பிடித்து அலையும் மோப்பனார் என்று சொல்வது,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இதிலே உங்களுக்கு எந்த வகையிலேயும் அன்பார்லிமென்டரியாக இல்லை. நீங் களாக இதைக் கிளப்புகிற காரணத்தினாலே தான் இது பிரச் சினையாக வருகிறதே தவிர (குறுக்கீடு).... அவர்கள் அதற்கு ஏற்ற வார்த்தைகளாக அடுக்குமொழிகளில் சில வார்த்தை களைப் போட்டுச் சென்று கடைசியிலே, இதிலே முடித்து இருக்கிறார். இதை சாதாரணமாக எடுத்துக்கொண்டால் பிரச்சினையே இல்லை.

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> வார்த்தை ஜாலம் இந்த மாதிரி தொடர்ந்து......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அந்த நேரத்திலே பார்க்கலாம்.

<u>திருமதி கவிநிலவு தர்மராஜ் :</u> தலைவர் அவர்களே, தோல்வி மீது தோல்வியைத் தழுவி, அடி மீது அடி, தங்களுடைய மடி மேலே இடியே விழுந்தாலும் பரவாயில்லை என்று சொல்லி (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வேறு பிரச்சினைகளுக்குச் செல்லுங்கள்.

பிற்பகல் 1.45

<u>திருமதி கவிநிலவு தர்மராஜ் :</u> எத்தனைத் தோல்விகள் வந்தாலும், அத்தனைத் தோல்விகளையும் தாங்கிக் கொண்டு புரட்சித் தலைவியினுடைய பொன்னான ஆட்சியிலே குறை சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கும் தோப் பனாரை, கல் நெஞ்சம் மிக்க கல்நாரை, வலிமை இல்லாத வாழைநாரை, தேய்மை நிறைந்த தேங்காய் நாரை —இத் தனை பேர்களும் என்ன ஆனார்கள் என்று சொல்லி, இந்தக் கருத்தை நான் எடுத்து வைக்க முன்வந்தேன். இத்தனை பேர் களும் புரட்சித் தலைவி என்று சொல்லக்கூடிய ஒப்பற்ற புது மைத் தலைவியை முட்டி, மோதி, இன்று கல்தோன்றி மண் தோன்றா முன் தோன்றிய மூத்த மொழி, தீந்தமிழ் மொழி,



1992 செப்டம்பர் 23] [திருமதி கவிநிலவு தர்மராஜ்]

திக்கெட்டும் புகழ் பரப்பும் எத்திக்கும் புகழ் பரப்பும் இந்தத் தமிழ்த் திருநாடே வணங்கக்கூடிய தாய்த் தலைவி, தங்கத் தலைவியான புரட்சித் தலைவியினுடைய பொற்பாதங்களிலே (மேசையைத் தட்டும் ஒலி) கிடக்கிற இந்தக் காலத்தை (மேசையைத் தட்டும் ஒலி) நான் கோடிட்டுக் காட்டுவதோடு இந்த துணை நிதி நிலை அறிக்கை மூலமாக வாரி வழங்கும் வள்ளலாக இருந்து, நல்ல படங்கள் மூலம் மக்களுக்கு நல்ல பாடங்களை எடுத்துச சொல்லக்கூடிய Better be late than never செய்யாமல் இருப்பதை விட காலம் தாழ்த்தி செய்வதே மேல் என்பதைக் கருத்திலே எடுத்து வைத்துக்கொண்டு பல ஆண்டுக் காலம் செய்யாமல் கிடந்த, கவனிப்பாரற்றுக் கிடந்த இந்தத் திரைப்பட நகரை உருவாக்கும், திரைப்பட தொழிலை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்ற தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவி, அவர்கள் வாழ தன்னை எதிர்ப்பவர்களையும், தன்னைப் பேசுபவர்களையும், தன்னை நேசிப்பவர்களையும், தன்னை சரணாகதி என்று வந்து அண்டுபவர்களுக்கும் அடைக் கலம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த நிதி நெருக்கடியான சூழ்நிலையிலே திரைப்பட நகரை உருவாக்கிட வரையறையில்லாமல் நிதியை வாரி வழங்கியிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையின் விவாதத்தின் மூலம் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை மிரட்டல்கள் வந்தாலும் விழுதல், விம்முதல், மெய்யுறவு வெதும்புதல், வெறுதல், எழுதல், ஏறுதல், இறங்குதல், தோல்வியை எண்ணிச் சோர்தல், துலங்குதல், உயிர்த்தெழுந்துயிர்த்தல் அழுதலையன்றி பழித்தல், குழித்தல், எழித்தல், மிரட்டல், அமுக்கல், குலுக்கல் கலக்கல் எல்லாம் பண்ணி கலங்கி நின்றவர்கள் எல்லாம் விளங்கிக் கொள்ளக் கூடிய அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு திரைப்பட நகரை எங்களுக்கு, மக்களுக்கு, பாமரர் களுக்கு, படித்தவர்களுக்கு, சமுதாயத்திற்கு வாரிவழங்கியிருக் கிற இந்த வள்ளல் தலைவிக்கு Literature is a criticism of mind. Literature is a record of best thoughts என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். ஒரு இலக்கியமாக, சிலாக்கியம் மிக்க, பாக்கியம் பெற்ற தலைவியாக மிளிர்ந்து கொண்டிருக்கிற புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த துணை நிதிநிலை அறிக்கை ஒரு அமுதசுரபி, அட்சயபாத்திரம், முத்தமிழ், பாலாறு, முத்தமி ழோடு, முப்பாலோடு முக்கனிச் சாறும் இணைத்து வைத்த ஒப்பற்ற ஆறுதலைத் தரக்கூடிய தெவிட்டா கற்பக விருட்சம், என்று சொல்லி, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி, நேரத்தை பார்த்துக் கொண்டு பேச வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : நாளைக்கு வேண்டுமானாலும் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு பதிலுரை தான்

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்துள்ள தங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் 161 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த துணை நிதிநிலை அறிக்கை மீது கருத்து தெரிவிக்கையில் இன்றைய தினத்தில் விவசாயிகளுக்கு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாக கடனை கட்டியவர்களுக்கு வட்டி தள்ளுபடி என்கிற அடிப்படையில் 40 கோடி ரூபாயை அரசு தள்ளுபடி செய்திருப்பதை நான் வர வேற்கிறேன். ஏனென்று சொன்னால் தமிழகத்தில் இருக்கக் கூடிய விவசாயிகள் கடனில் பிறந்து கடனில் வாழ்ந்து, கடனில் இறந்து கொண்டிருக்கிற இன்றைய சூழ்நிலையில் முழுமையாகக் கூட இன்னும் பல கடன்களை, நீண்டகாலக் கடன்களை, தக்காவிக் கடனைக் கூட இந்த அரசு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல ஏழையெளிய மக்களுக்கு, நலிந்தோருக்கு, கிராமப்புற மக்களுக்கு 60 இலட்சம் பேர்களுக்கு வேட்டியும் 60 இலட்சம் பேர்களுக்கு புடவையும் என்று சொல்லி 1 கோடி 20 இலட்சம் பேர்களுக்கு ஏற்கனவே ஒரு திட்டத்திலே அறிவிக்கப்பட்டும் கூட, என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தொகுதிகளில் அதிகமாக விவசாயித் தொழிலாளர்கள் வாழக் கூடிய பகுதிகளுக்கு, அந்த 1 கோடியே 20 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்ட புடவை, வேட்டி இன்னும் எட்டிப்பார்க்கவில்லை. நான் இந்தத் திட்டத்தை குறை சொல்லவில்லை. இந்தத் திட்டத்திற்கு நிதிஒதுக்கும் நேரத்தில் திட்டத்தின் பயன் ஏழையெளிய மக்களுக்கு சேரக் கூடிய அளவுக்கு அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது போடக்கூடிய திட்டம் என்பது ஏழையெளிய மக்களுக்கு போகவில்லை. நான் கூட நினைத்தேன். காரணம் எதிர்க்கட்சியாக இருக்கிற காரணத்தால் எங்களுக்கு இந்த புடவை, வேட்டி வழங்கவில்லையோ என்று கருதினேன்.

திரு. கி. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.



திரு. ஜி. பழனிசாமி , இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்பதற்கு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்கிறார். என்னவென்று கேட்டால்தான் தெரியும். என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர்?

திரு. கி. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, எந்த இடத்திலாவது தமிழகத்தில் ஏழையெளிய மக்களுக்கு இலவச ஆடை வழங்கவில்லையென்று உங்களுக்கு யார் தெரிவித்தது? அதை எப்படி நிருபணம் செய்வீர்கள் ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நம்முடைய ஹவுசிலேயே ரெவின்யூ மினிஸ்டரே சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அவரைக் கேட்கிறார். அவர் பதில் சொல்வார். உட்காருங்கள்.

பிற்பகல் 1.50.

திரு. எஸ். ஆர் பாலசுப்பிமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே வரவில்லை என்பதைக் கூடவா சொல்லக் கூடாது? (குறுக்கீடு) அதைத் தான் சொல்கிறேன். வேறு எதையும் நான் சொல்லவில்லை. பல இடங்களிலே வரவில்லை, என்னுடைய தொகுதியிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்டது பாயிண்ட் ஆப் ஆர்டர். அந்த பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு இவர் பதில் சொல்வார். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் , ரெவின்யூ பிர்க்கா முழுவதும் தரப்படவில்லை என்பது முற்றிலும் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு யாராவது அமைச்சர்கள் எழுந்து அதைக் கேட்டிருந்தால், எதிர்க்கட்சித் தலைவர் இதிலே குறுக்கிட்டு இந்த விளக்கத்தைச சொல்லலாம். ஒரு உறுப்பினர், அவரிடத்திலே எங்கே வரவில்லை என்று தகவலைச் சொல்ல முடியுமா என்று அவரைக் கேட்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நானும் இதைப் பற்றி முன்னாலேயே பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்,

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, இந்த இலவச வேட்டி,
சேலைகள் வழங்கவேண்டும் என்று பரவலாக ஒரு கோடியே
20 லட்சம் பேர்களுக்கு தருகின்ற முயற்சி எடுக்கப்பட்டது. சில
பல இடங்களுக்குப் போய்ச் சேராமல் இருக்கலாம். போக
வேண்டியவர்களுக்குப் போகாமலும் இருக்கலாம். இந்தத்
தவறுகள் நடைபெற்றிருக்ககூடும் ஆனால்எதிர்க்கட்சிகள்என்ற
காரணத்திற்காக நாங்கள் கொடுக்காமல் இருந்துவிட்டோம்
என்று சொல்வது தவறு. இன்னின்ன கட்சிகளுக்குத்தான்
கொடுக்கவேண்டும் என்றோ, இன்னின்ன கட்சிகளுக்குக்
கொடுக்கக்கூடாது என்றோ எந்தவிதமான தாக்கீதும் அனுப்பப்
படவில்லை. ஆகவே, போய்ச் சேர்ந்த நிலைமையும் இருக்க
லாம். போய்ச் சேரக்கூடாதவர்களுக்குப் போய்ச் சேர்ந்தும்
இருக்கலாம், போய்ச் சேரக்கூடியவர்களுக்குப் போய்ச் சேரா
மலும் இருந்து இருக்கலாம். அந்தத் தவறைச் சுட்டிக்காட்டுவது
என்பது வேறு. ஆனால், எதிர்க்கட்சிகள் என்ற காரணத்தால்,
கொடுக்கப்படவில்லை என்று சொல்வது தவறு. அதை மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் திருத்திக் கொள்ளவேண்டும் என்று
நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் திருநாளன்று நில
மற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும், வறுமைக்
கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்கும் ஒரு கோடியே
20 லட்சம் பேர்களுக்கு இந்த வேட்டி, சேலைகளை இலவசமாக
கொடுக்கவேண்டும் என்று பொங்கல் திருநாளுக்கு முன்பு, ஏறத்
தாழ ஒரு மாதத்திற்கு முன்புதான் அந்த யோசனை எனக்கு
வந்து, அதிகாரிகளுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்
டும் என்று நான் ஆணையிட்டேன். அப்பொழுதே, அதிலுள்ள
சிரமங்களை, சிக்கல்களை அவர்கள் எனக்கு விளக்கினார்கள்.
ஒரு மாத காலத்திற்குள், டெண்டர்கள் விட்டு, அவற்றை
வாங்கி, 1 கோடியே 20 லட்சம் பேர்களுக்கு வினியோகிப்பது
என்பது இயலாத காரியம் என்று அப்பொழுதே அதிகாரிகள்
என்னிடம் எடுத்து விளக்கினார்கள். ஆனால், எப்படியாவது
கொடுக்க வேண்டும் என்று நான் சொன்னதால், தீவிர முயற்சி
கள் மேற்கொண்டு, கோ-ஆப்டெக்ஸ்டம் என்னென்ன ஸ்டாக்
இருந்ததோ, அவற்றை எல்லாம் வாங்கி, மேலும் வெளி மாநிலங்
களில் இருந்தெல்லாம் வரவழைத்து, முடிந்த வரை, இந்த
அரசு கொடுத்திருக்கிறது.



அடுத்த ஆண்டு, பொங்கல் திருநாளன்று இந்தத் திட்டத்தை
நிறைவேற்றுகின்றபோது, இப்படிப்பட்ட குறைகள் வரக்கூடாது,
இப்படிப்பட்ட புகார்கள் எழக்கூடாது என்பதற்காகத்தான்,
இப்பொழுதே அந்த ஆர்டர்கள் கோ-ஆப்டெக்சுக்கு கொடுக்கப்
பட்டு, இப்பொழுதே அந்த ஆடைகள் தயாரிக்கப்பட்டு வரு
கின்றன. எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்
னதையே நானும் மீண்டும் சொல்கிறேன். எந்தக் கட்சியைச்
சேர்ந்தவர்கள், எந்தத் தொகுதி என்ற பாரபட்சங்களை எல்
லாம் பார்த்து இந்த விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை
இந்தத் தொகுதிக்குக் கொடுக்கக் கூடாது, அந்தப் பகுதிக்கு
விநியோகம் செய்யக்கூடாது என்பது போன்ற எந்தவிதமான
தாக்கீதுகளும் அரசால் பிறப்பிக்கப்படவில்லை. இந்த நேர
மின்மையால் மிகவும் குறுகிய காலத்தில் பெரிய திட்டத்தை
நிறைவேற்றவேண்டும் என்று எண்ணியதால்தான் இத்தகைய
குறைபாடுகள் எழுந்து உள்ளன என்பதை விளக்கி கூறக் கடமைப்
பட்டுள்ளேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய நாவலர் அவர்களும், மாண்புமிகு முத
லமைச்சர் அவர்களும் அளித்த விளக்கத்திற்கு என்னுடைய
நன்றி. நிர்வாகத்தில் சிரமங்கள் இருக்கும் என்பது உண்மை.
இருந்தாலும் இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கூட, காலம் கடந்து, இப்போது
சமீபத்திலே இந்த வேட்டி, புடவைகள் வந்து, ஒவ்வொரு கிராமத்
திற்கும் 70 வேட்டிகள், 70 புடவைகள் வழங்கவேண்டும் என்று
சொல்லி, தாசில்தாருக்கு வந்தவுடன், அங்கேயிருக்கிற ரெவின்யூ
அதிகாரிகள், அதை எப்படி கொண்டுபோய் விநியோகம் செய்
வது என்கிற சிரமத்தோடு அதை அப்படியே வைத்திருக்கிறார்கள்.
இதை நான் பின்னாலே சொல்ல வந்தேன். நாம் திரும்பவும்
சொல்வதற்குக் காரணம், எனக்கு இருக்கிற நிர்ப்பந்தம். என்
னுடைய தொகுதியிலே நான் பல்வேறு இடங்களுக்குச் செல்கிற
போது அந்த மக்கள் என்னிடத்திலே சொன்ன குறைபாடுகளை
நான் ரெவின்யூ அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன்.
மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லியிருக்கிறேன்,
அதேபோன்று ஆர்.டி.ஓ. இடத்திலே சொல்லி இருக்கிறேன்.
ஆகவே, புதிய பிரச்சினைகளை உருவாக்கவேண்டாம் என்பதற்
காகவும், இதுபோன்ற நிலைமைகளை அரசினுடைய கவனத்
திற்கு கொண்டு வந்து மீண்டும் இவைகளை விநியோகிக்கிறபோது
இப்படிப்பட்ட சிரமங்கள் வரக்கூடாது என்பதற்காகவும், இதை
நீங்கள் பகிர்ந்து அளிக்கவேண்டும் என்பதற்காகவும், இவைகளை
நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று, இன்றைய தினத்திலே, இந்தியாவிலே, தமிழ்நாட்டில் வெள்ளையனே வெளியேறு என்கிற இயக்கத்தில் ஈடுபட்டவர்களுக்கும், இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற அந்த உத்தமத் தியாகிகளுக்கும், அநேகமாக இந்தியாவிலே வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத வகையில், அவர்களுக்கு 400 ரூபாயிலிருந்து ஆயிரத்திற்கு உயர்த்திக் கொடுப்பதோடு, அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்குவது என்பது உண்மையிலே இந்த அரசு மட்டுமல்ல, தமிழ்நாடு அவர்களுடைய சேவையிலே மிகப் பெரிய கடமைப் பட்டிருக்கிறது என்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-55

அதேபோன்று அரசால் இன்னும் கூட அந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு பல்வேறு இடங்களில் குடியிருப்புகள் அளிக்கலாம். எங்களுடைய கட்சியிலே கூட இருக்கிறார்கள். குடியிருப்பதற்கு இடம்கூட இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்ட சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அரசாங்கத்தால் வீடுகள் கூட விநியோகம் செய்யலாம். அவர்களுடைய குழந்தைகளுக்கு அரசாங்கப் பணிகளில் அமர்வதற்கு இந்த அரசு இன்னும் முன் முயற்சி எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று விளையாட்டுத் துறைக்காக அரசு ரூ. 7 கோடியை நேரு விளையாட்டு அரங்கத்தைச் சீரமைப்பதற்கு, புனரமைப்பதற்கு எடுத்திருக்கின்ற நடவடிக்கையை நன்கு வரவேற்கிறோம். இன்றைக்கு நம்முடைய விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில், உலக நாடுகளுக்கிடையே நடக்கின்றபோது, பல்வேறு இடங்களிலே, இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும் ஒரு தங்கப் பதக்கம்கூட கிடைக்கவில்லை. ஆக இதுபோன்ற விளையாட்டு வீரர்களுக்கு நல்ல பயிற்சி கொடுப்பதற்காக, நீங்கள் அதிக செலவில், விளையாட்டு வீரர்களை உருவாக்க, நல்ல ஆசிரியர்களைக் கொண்டு அந்தப் பயிற்சி நடத்தப்பட வேண்டும். விளையாட்டு அரங்கங்களை மட்டும் நடத்துவதன் மூலம் நமது நாட்டிற்கு, நமது தேசத்திற்கு பெருமை வந்து சேர்ந்துவிடாது. நல்ல விளையாட்டு வீரர்களை தயார் பண்ணுவதற்கு திறமையான ஆசிரியர்களைக் கொண்டு, நீங்கள் பயிலச் செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு கால்வாய்களை புதுப்பிப்பதற்காக ரூ. 4.55 இலட்சம் இந்தத் துணை மதிப்பீட்டில் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.



ரூ. 1.0 இலட்சத்தை உடனடியாக வழங்குவதாக அறிவிக்கப்
பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு ரெவின்யூ அமைச்ச
ரவர்கள் இங்கே பேசும்போதுகூட நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் தம்புசாமி அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். பல்வேறு
இடங்களில், வரலாற்றிலே எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு,
10 ஆண்டுகளுக்குப் பிறகு ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் காவிரி
யிலும், கொள்ளிடத்திலும் திறந்துவிட்டும், பல்வேறு கிராமப்
பகுதிகளில், தஞ்சை மாவட்டத்தில், கடைமடைப் பகுதிகளுக்கு
தண்ணீர் வரவில்லை. நாம் எதிர்பார்க்கின்ற அரசு திட்டங்
களில் அநேகமாக குறுவை சாகுபடியை சிறப்பான முறையிலே
செய்யலாம் என்று இருந்த நேரத்தில், தண்ணீர் வராத காரணம்.
அதற்கு அடிப்படையான காரணங்கள், கால்வாய்களிலிருந்து
இன்னும் பல்வேறு இடங்களில் காட்டாமணிக் காடுகள் அப்புறப்
படுத்த முடியாமல், பல்வேறு கரைகள் ஒழுங்குபடுத்த முடியாமல்
தண்ணீர் போக முடியாத ஒரு சூழ்நிலைமை இருக்கின்றது. ஆக
காலம் கடந்து தண்ணீர் ஊருக்குள்ளே மழைக் காலங்களில்
வருகின்ற நேரத்தில், இப்போது நிதி போய்ச் சேர்ந்தால், நிச்சய
மாக அது காண்டிராக்டர்களுக்கு மட்டும் தான் பயன்படுமே
தவிர, வ்வசாயிகளுக்குப் பயன்படாது. இதை அரசு பரி
சீலனை செய்ய வேண்டுமென்று சொல்லி, நான் இந்தச் சந்தர்ப்
பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி
அவர்கள் சென்ற முறை சட்டமன்றத்திலே கூறுகிறபோது
இந்த ஆண்டு பொதுப்பணித் துறையின் மூலம் சிறப்பான
பணிகள் நடைபெற்று வருகிறது என்று சொலலியிருக்கிறார்கள்.
நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சிக் காலத்தில் இருந்ததை விட இரண்டு மடங்கு
அளவிற்கு, அவர்கள் 300 கிலோ மீட்டர்தூர் எடுத்திருந்தார்கள்
என்றால், நாங்கள் இன்றைக்கு 610 கிலோ மீட்டருக்கு தூர்
எடுத்திருக்கிறோம். நமக்கு இடைப்பட்ட காலம் குறுகிய
காலம். தண்ணீர் திறந்து விட்டு, அடைத்தது போக,
அணையை மூடியதற்குப் பிறகு, குறைந்த காலத்திலே அதிகமான
புல்டோசர்களை வைத்து, ஏறத்தாழ 60 புல்டோசர்களை
வைத்து, இந்தக் குறுகிய காலத்தில் 610 கிலோ மீட்டர் தூர்
எடுத்திருக்கிறோம். அவர் சொல்வதைப் போல இந்தப்
பிரச்சினை இன்றைக்கு நேற்றைக்கு இருக்கின்ற பிரச்சினை
அல்ல. காலம் காலமாக இருக்கின்ற பிரச்சினை. ஆனால்
இந்தப் பிரச்சினையை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்
பின்னாலே, எப்படி அணுகியிருக்கிறது என்பதை மாண்புமிகு

தம்புசாமி அவர்களும், மாண்புமிகு பழனிசாமி அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே மிகக் குறுகிய காலத்துல் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, கால்வாய்களைத் தூர் எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான தெரிவித்துக் கொள்கிறேன. இனி வருங் காலத்தில் தொடர்ந்து அதிக முன்னுரிமை கொடுத்து, விடு பட்டுப் போன கால்வாய்களிலும் இந்த அரசு தூர் வாரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்ததைத்தான் இப்போது சொல்லியிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்துல், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள், இதெல்லாம் சீரமைக்கப்பட வேண்டும் என்பதற்காக, தண்ணீர் விடப்பட வேண்டுமென்பதற்காக அனைத்து அரசியல் வேறுபாடின்றி, பல்வேறு மறியல் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியும் மகஜர்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உங்களுக்குத் தெரியும். ஆகவேதான் இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று சேலத்திலே கூட ஜவ்வரிசி நிறுவனத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த இழப்பிற்காக ரூ. 50 இலட்சத்தை நம்முடைய நாவலர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். வரவேற்க வேண்டியதுதான். ஆனால் அதே நேரத்தில் அந்த ஜவ்வரிசி என்பது அந்த வேர் கிழங்கிலிருந்து கிடைக்கக் கூடிய அது, சேலம் மாவட்டத்திலே பெருமளவில் உற்பத்தியாகி இருக்கிறது. அதிலே வரக் கூடிய நல்ல தண்ணீரை தூய்மையான தண்ணீரை, செலைன் பாட்டிலிலே நிரப்பி தயாரிப்பதற்கு உதவும் உயர்ந்த தண்ணீர் பல கோடி ரூபாய்க்கு அது நஷ்டத்தோடு வீணாகிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற மருத்துவ நிலையில், ஆஸ்பத்திரிகளில் செலைன் பாட்டில் கிடைக்கவில்லை. யாரிடத்திலிருந்தோ, ரூ. 18, 20, 25[க்கு இன்றைக்கு தனியார் கடைகளில் வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. அரசாங்கமே அதிலே வரக்கூடிய தண்ணீரை வைத்து சலைன் பாட்டிலை தயார் செய்தால் அதை சாதாரணமாக ரூ. 6.50 காசுக்கு கொடுக்க முடியும். கேரளாவைப் போன்று இங்கேயும் கொடுக்க முடியும் எந்த நோயாளியாக இருந்தாலும் அவர்களுக்கு எடுத்த உடனே கொடுப்பது சலைன் ஒன்றுதான் என்ற நிலை இருக்கிறது ஆகவே அதையும் இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை ஒரு நல்ல திட்டமாக உருவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்வதோடு, அடுத்து காவல் துறை.



பிற்பகல் 2.00

காவல் துறையை எடுத்துக் கொண்டால், நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னது போல அவர்களுக்கு ஆடைகள் வழங்குவது, அவர்களுக்கு உணவு பொருட்களுக்காக கூடுதலாக நிதி ஒதுக்குவது, நவீனமான ஆயுதங்களை வழங்குவது, அதே போன்று வாகன வசதிகள் செய்து கொடுப்பது போன்றவை மிக முக்கியம் ஆகும். தமிழ்நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு வேண்டி எல்லா நடவடிக்கைகளையும் காவல் துறைக்கு வழங்க வேண்டும் என்று சொன்னீர்கள். ஆனால் அப்படி காவல் துறைக்கு வழங்கவில்லை என்பதுதான் உண்மை. காவல் துறையை நாட்டு மக்களை காப்பதற்காகவும் ஜனநாயகத்தை காப்பதற்காகவும் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தீவிரவாதிகளை தடுப்பதற்காகவும் நவீனப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். ஆனால் இன்றைக்கு காவல் துறையினுடைய நடவடிக்கையை பார்க்கிறபோது, இன்றைக்கு கொடூரமான பல்வேறு நிகழ்ச்சிகளை நம்மால் காண முடிகிறது. காவல் துறையினரும் நம்மைப்போன்ற மனிதர்கள் தான். இன்றைக்கு சமூக விரோதிகள் மட்டும் அல்ல, சாராயம் கடத்தக்கூடியவர்களும் கூட காவல் துறை அதிகாரிகளை துச்சம் என்று நினைத்து அவர்களை கொலை செய்து வீதியிலே வீசக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினர் குற்றவாளிகளை கண்டு பிடிக்க இரவு நேரங்களிலே செல்லுகிற போது சுட்டுக் கொல்லக்கூடிய நிலைமையை தமிழ்நாட்டிலே நாம் பார்க்கிறோம். சட்டம் ஒழுங்கு கெட்டுப் போனால் கூட நம்மால் அதை திருத்தி அமைத்திட முடியும். ஆனால் பல இடங்களில் காவல் துறையைச் சீரழிக்கக் கூடிய விதத்தில் இன்றைக்கு நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக யார் அந்தக் குற்றத்தைச் செய்யக் கூடாதோ, யார் அந்த இடத்திலே குற்றங்களே செய்யக் கூடாதோ அந்த இடங்களில் தமிழ்நாட்டிலே பல சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காவல் துறையே உறு துணையாக போய்க் கொண்டிருப்பதையும் இந்த அரசு மறந்து விடக் கூடாது என்பதற்காக நான் கேட்டுக் கொண்டு உங்களுடைய கவனத்திற்கு ஒன்றிரண்டு சம்பவங்களைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று நான் கூறக் கடமைபட்டிருக்கிறேன்.

பொதுவாக தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தில் இருக்கக் கூடிய அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில்**

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் நடைபெற்றதாகக் குறிப்பிடும் சம்பவத்தைக் குறித்து அரசாங்கம் ஒரு விசாரணையை அமைத்து இருக்கிறது. விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. The matter is also subjudice. எனவே மாண்புமிகு உறுப்பினர் * * ?என்றெல்லாம் பேசுவது முறையல்ல, சரியல்ல என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ** குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதற்கான விசாரணைக்கு உத் திரவிடப்பட்டிருக்கிறது. விசாரணை நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை விசாரணை கமிஷனுக்கு விடப்பட்டிருக்கிறது. விசாரணை கமிஷனே இல்லை என்றால் தான் நீங்கள் கேட்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசாரணைக்கு உத்திர விடும்போது நான் என்ன சொன்னேனோ அதையே இப்போதும் சொல்லுகிறேன். இந்த விசாரணை முடிந்த பின் சம்பந்தப் பட்ட காவலர்கள் இத்தகைய குற்றங்களை புரிந்தார்கள் என்பது நிரூபிக்கப்பட்டால் அதற்குரிய தண்டனை அவர்களுக்கு நிச்ச யமாக வழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விசாரணைக் கமிஷனிலே இருக்கக் கூடிய பிரச்சினைப் பற்றி பேசக்கூடாது என்பது குறித்து நமக்கு சில நியதிகளே இருக்கின்றன. ஒருவேளை விசாரணை கமிஷனே இல்லாமல் இருந்தால், நீங்கள் இதை கிளப்பி விசாரணைக் கமிஷன் வேண்டும் என்று கேட்கலாம் எனவே இது அவைக் குறிப்பிலே வேண்டாம். நேரம் ஆகி விட்டது, இத்தோடு முடியுங்கள் (குறுக்கீடு) நான் உங்களை பேச அனுமதித்து பேசிக் கொண்டிருக்கும்போது சப்ஜுடைஸ் ஆன விவகாரத்தை எப்படிப் பேச அனுமதிக்க முடியும்?

திரு. ஜி. பழனிசாமி : நீதிபதி வழங்கியிருக்கிற தீர்ப்பு சரியல்ல என்று நேற்று . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப் பெற்றது.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று கோர்ட்டைப் பற்றி சொன்னது முடிந்து போன விஷயத்தைப் பற்றியது. ஆனால் இன்றைக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கிற நிலையிலே அவர் எதைச் சொன்னாலும் அந்த விசாரணை அதிகாரிக்கு ஒரு தவறான கருத்தைக் கொடுப்பது போல ஆகும்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் உத்தரவிட்டு விசாரணை ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஒரு பெண் கோர்ட்டில் ஒரு வழக்கு போட்டு நீதிபதி ஒரு விசாரணையை நடத்த வேண்டும் என்று சி.ஐ.டி.-எஸ்.பி.கு உத்திரவிட்டிருக்கிறார்கள். அந்த விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இத்தகைய குற்றச் சாட்டுகள் இருக்கின்றனவே தவிர அந்தக் குற்றங்கள் நடைபெற்றன என்று இன்னும் நிரூபிக்கப்பட வில்லை. அப்படி இருக்கும்போது நடந்ததாகவே உறுப்பினர் பேசுவது சரியல்ல என்பதை மீண்டும் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனவே இந்தப் பிரச்சினை வேண்டாம். அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. அடுத்த பிரச்சினையைப் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 2-05

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இருந்தாலும், அநேகமாக . . . . . . . . . . . .

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்கு இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன். இந்த அண்ணா மலை நகர் காவல் நிலையத்தில் இப்படி ஒரு சம்பவம் நடை பெற்றதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தவுடனேயே எந்த எதிர்க் கட்சியும் இந்த கோரிக்கையை எழுப்புவதற்கு முன்னால் நானே இந்த விசாரணைக்கு உத்தரவிட்டிருக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மறந்துவிட்டு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசக் கூடாது. இப்படி ஒரு விசாரணைக்கு நான் உத்தரவிட்ட பிறகு கூட இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டும் என்பதற்காகவே சில எதிர்க் கட்சிகள், அவற்றின் உறுப்பினர்கள், இதைப்

பெரிதுபடுத்தி பேரணிகள் என்றெல்லாம் நடத்தியிருக்கிறார்களே தவிர யாரும் இந்தக் கோரிக்கையை எழுப்புவதற்கு முன்னாலேயே நானே இந்த விசாரணைக்கு உத்தரவிட்டேன் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே, உண்மையிலேயே இது போன்ற சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட காவல்துறையை வைத்திருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பது என்பது கடமை. அதே போன்று சமீபத்திலே இந்த மாதம் 11 ஆம் தேதி திருச்சி மாவட்டத்தில் அரியலூர் வட்டத்தை சேர்ந்த 2 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த மக்கள்— திருமானூர், கோயிலூர் அந்த மக்கள்— அரியலூருக்கும் திருமானூருக்கும் இடையிலே குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும், நடப்பதற்கு நல்ல சாலை வேண்டும், ஊர்களுக்குள்ளே பஸ் வர வேண்டும் என்பன போன்றவற்றிற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளிடத்தில் பல்வேறு மனுக்களை கொடுத்திருக்கிறார்கள். பல ஆண்டுக்காலமாக ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்தச் சபைக்கு சொல்கிறார்கள். அவர்கள் நோட்டீஸ் அடித்தது உண்மை. போராட்டம் நடத்துகிறோம் என்று சொன்னது உண்மை. ஆனால் அதிகாரிகளுக்கோ, மாண்புமிகு முதலமைச்சருக்கோ மற்ற துறையைச் சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கோ எந்தவிதமான கடிதங்களும் கொடுக்கப்படவில்லை. நான் அந்த நேரத்திலே திருச்சியிலே இருக்கின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடத்தில் சொன்னார்கள். உரிய அதிகாரிகள் என்னிடத்தில் சொன்னார்கள். அது போன்ற தகவலை தராமலேயே வேண்டும் என்றே நோட்டீஸ் மட்டும் அடித்து வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஒப்படைக்காமல் போராட்டத்தை உருவாக்கி அங்கே இருக்கின்ற மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினார்களே தவிர நீங்கள் சொல்வதைப்போல அவர்கள் எந்த துறைக்கும், அங்கே இதுபோன்ற குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற மகஜர்கள், மனுக்கள், உண்ணாவிரத நோட்டீஸ்கள். இவ்வளவும் அந்த அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டனவா என்பதை .................. (குறுக்கீடு) நான் கொடுத்து விடுகிறேன். நான் கையிலே வைத்திருக்கிறேன், கொடுத்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அது அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் சொல்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, யார் வேண்டுமானாலும், எந்தத் தேதியில் வேண்டுமானாலும் அடித்துக் கொள்ளலாம். முன்னால் தேதியைப் போட்டு கூட அடித்துக் கொள்ளலாம். தேதியைப் போட்டுக்கொள்வது என்றால் எப்படி வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். அங்கே பொறுப்போடு அந்த பொது மக்கள் எங்கள் ஊரிலே குறைபாடுகள் இருக்கின்றன என்று அதிகாரிகளுக்கோ, மாண்புமிகு முதலமைச்சருக்கோ அல்லது அமைச்சர் பெருமக்களுக்கோ சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஆதாரத்தோடு சொல்ல முடியும் என்றால் ஆதாரத்தை எடுத்துக் காட்டுங்கள், இந்தத் தேதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. (குறுக்கீடு) இல்லை, அடித்து வைத்து விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதையாவது டைப் செய்த ஒரு பேப்பரை வைத்துக்கொண்டு இது அதிகாரிகளுக்கு கொடுத்தது என்று சொல்வது யாருக்கும் எளிது. அதிகாரிகளுக்குக் கொடுத்து அதிகாரிகளிடத்திலிருந்து ஏதாவது அக்நாலட்ஜ்மெண்ட் வாங்கியதை கையிலே வைத்துக் கொண்டு இதோ இருக்கிறது பாருங்கள் என்று நீங்கள் காண்பித்தால் அது ஆதாரம் ஆகும். (குறுக்கீடு) இல்லை. அதைத்தான் அமைச்சர் மறுத்தார். நீங்கள் சொல்வதைப் போன்று யாரும் கொடுக்கவில்லை என்று அமைச்சர் மறுத்திருக்கிறார். நீங்கள் அதற்குப் பிறகு, அவர்களுடைய கோரிக்கை மனுவை மட்டும் வைத்துக்கொண்டு— ஒரு வேளை அதிகாரிகளுக்குக் கொடுக்காமல் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் போல் இருக்கிறது.

திரு. ஜி. பழனிசாமி : நீங்கள் ஆதாரங்கள் கேட்டீர்கள். ஆதாரம் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகாரிகளுக்குக்
கொடுத்தோம் என்பதற்கு, இது எப்படி ஆதாரம்
ஆகும்? இதையே நீங்கள் என்னிடத்தில் காண்பித்திருந்தால்
ஆதாரம் இல்லை என்பதை நான் முன்னாலேயே உங்களுக்குச்
சொல்லியிருப்பேன். எந்த மனுவையும் அதிகாரிகளுக்குக்
கொடுக்கவில்லை என்று அமைச்சர் மறுக்கிறார்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சி நடைபெறுகின்றபோது
நான் திருச்சியிலே ரயிலிலே பயணம் செய்வதற்காக புறப்
பட்டுக்கொண்டிருக்கின்றபோது, அத்தனை அதிகாரிகளும்
என்னைச் சந்தித்தார்கள். அப்போது நான் கேட்டேன்
இதுபோன்ற நோட்டீஸ் வந்திருக்கிறதே உங்களுக்கு தகவல்
தரப்பட்டிருக்கிறதா என்று. இல்லை என்று சொன்னார்கள்.
அல்லது அவர்கள் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி இருக்கிறார்
களா என்று கேட்டேன். இல்லை என்று சொன்னார்கள்.
திடீரென்று வேண்டும் என்றே 15 நாட்களுக்கு முன்னால்
இவர்கள் நோட்டீஸ் அடித்து விட்டு, ஒரு குறிப்பிட்ட வகை
யில் வேண்டுமென்றே இந்த அரசுக்கு களங்கம் ஏற்படுத்த
வேண்டும் என்ற முறையில் ஒரு கும்பலாக சேர்ந்து இது
போன்ற நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற
செய்தியை அவர்கள் தந்தார்கள். ஆகவே தான் அதை
உங்களிடத்தில் குறிப்பிடுகிறேனே தவிர உங்களிடத்தில் இந்த
நோட்டீஸ் இருப்பதைப் போல, அதைப்போல முன்னால்
தேதி இட்டு நாங்கள் வேண்டுமானாலும் அடித்துக் கொடுக்க
லாம் உங்களிடத்திலே. அது சரியாகக் கொடுக்கப்பட்டு இருக்
கிறதா என்று தெரிந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
பேசினால் நலமாக இருக்கும்.

(பிற்பகல் 2-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பகுதி சட்ட
மன்ற உறுப்பினர் ஏதோ கருத்துச் சொல்ல விரும்புகிறார்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அதைப்பற்றி முன்கூட்டியே அறிவிக்க
வில்லை. 11 ஆம் தேதி நான் முதலமைச்சரைப் பார்ப்பதற்
காக தேதி கேட்டு இருந்தேன். அதேசமயத்தில் 10 ஆம் தேதி
இரவு இங்கு எனக்கு தொலைபேசி மூலமாக அங்குள்ள ஒரு
உறுப்பினர் மூலமாக செய்தி வந்தது. அதாவது நாளை சாலை
மறியல் செய்யப்போகிறோம் என்று. சாலை மறியலுக்கான
காரணம் என்னவென்று கேட்டேன். 5 அம்ச திட்டம் என்று
கூறினார்கள். இதுவரை 15 ஆண்டுகளாக சுதந்திரம் கிடைத்த
நாள் முதலாக அந்தப் பகுதியிலே ரோடு போடவில்லை என்





பது உண்மை. ஆனால் தற்சமயம் நமது புரட்சித் தலைவி
அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் (மேசையைத்
தட்டும் ஒலி) அந்த ரோடு சேங்ஷன ஆகியிருக்கிறது. சேங்
ஷன் ஆகி அதன் ஆர்டரை நான் கேட்டிருக்கிறேன; அதற்
குரிய நோட்டீசை அடித்து அதற்கு முன் தினமே செய்தி
மூலமாக விளம்பரம் செய்யச்சொன்னேன். நான் தொலை
பேசி மூலமாக ஆர்.டி.ஓ. வுக்கு சொல்லி நோட்டீஸ் அடித்து
விளம்பரம் செய்யச் சொன்னேன். அந்த ரோடு சேங்ஷன்
ஆகிவிட்டது; அது நிதிநிலை பற்றாக்குறையினால் தடை
யாக இருக்கிறது; அடுத்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்
படும் என்று நான் கூறிய பிறகும் அவர்கள் இந்த சாலை மறி
யல் என்று சில விஷமிகளால் தூண்டப்பட்டுச் செய்திருக்
கிறார்கள். அதுவும் கோவிலூர் என்ற இடத்தில் மறியல்
என்று அறிவித்து விட்டு அவர்கள் செய்த இடம் கீழப்பழூர்.
அவர்கள் மறியல் அறிவித்த இடம் வேறு; அவர்கள் மறியல்
செய்த இடம் வேறு. ஆகவே, இது சில விஷமிகளால் தூண்டி
விடப்பட்டு செய்யப்பட்ட செயல் ஆகும். (மேசையைத் தட்டும்
ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பகுதி இன்
னொரு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.கே. சின்னப்பன்.

திரு. கே.கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அன்றையதினம் 15 ஆம் தேதி நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருச்சி வருவதை ஒட்டி
நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அன்றைய
தினம் வந்து இருந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்
எல்லாம் செல்வதற்காக நாங்கள் அன்றையதினம் ஜெயங்
கொண்டம் நகரத்திலிருந்து 9½ மணிக்கு டி.பி.டி.சி. பஸ்
ஸில் சென்று கொண்டு இருந்தோம். முதன் முதலாக அந்த
சம்பவம் நடந்த இடத்திற்கு 2 கிலோ மீட்டர் முன்பாகவே
6 லாரிகள் என்று எண்ணுகிறேன், எங்களுடைய பஸ்
களை எல்லாம் ஓவர்டேக் செய்து கொண்டு ஓரத்தில்
மோதுவதைப் போன்று மிகவும் வேகமாக வந்தார்கள்.
வருகின்றபோதே அவர்கள் திட்டமிட்டு அரசுக்கு எதிராக
கோஷங்களை எழுப்பிக்கொண்டு வந்தார்கள். நான்
கூட எதற்காகச் செல்கிறார்கள் என்று தெரியாமல் நின்ற
போது அந்த 3 ரோடும் சந்திக்கின்ற இடத்தில் உடனடியாக
கொண்டு நிறுத்தியவுடன் அதிலே இருந்தவர்கள் அனைவரும்
பயங்கர ஆயுதங்களோடு, குறிப்பாக சொல்லவேண்டும் என்
றால் அரிவாள் மற்றும் கடப்பாறை போன்ற ஆயுதங்
களோடு வந்து பஸ் டிரைவரை அடித்தார்கள். நான் பஸ்
டிரைவருக்கு பின்னால் அமர்ந்து இருந்தேன். உடனடியாக
பஸ் டிரைவரிடம் சொல்லி பஸ்ஸை நிறுத்தி மேற்கொண்டு

பஸ்ஸை இயக்க வேண்டாம் என்று கூறினேன். அவர்கள் உடனடியாக பஸ்ஸில் ஏறி அனைவரும் கீழே இறங்கக் கூடாது இங்கேயே அமரவேண்டும் என்று மிகவும் கொடூரமாகப் பேசி னார்கள்.' அருகாமையில் 2 பர்லாங்கு தூரத்தில் நம் முடைய காவல் நிலையம் இருக்கிறது. அங்கே சென்று நான் புகார் செய்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட அந்தப் பகுதி உறுப்பினர் சம்பவத்தின்போது நேரில் பார்த்தேன் என்று சொல்வதை அனுமதிக்கக்கூடாது; நீங்கள் ஏதாவது காகிதத்தை வைத்துக்கொண்டு பேசுவதை அனுமதிக்க வேண்டும் என்பதுதான் முறையா?

திரு. கே.கே. சின்னப்பன் : தலைவர் அவர்களே, இறங்கி நான் சென்ற உடனே அரியலூரில் இருந்தும், பல்வேறு இடங்களில் இருந்தும் திருச்சி நகரத்திற்கு வந்த பஸ்களை எல்லாம் அவர்கள் தாக்கினார்கள். அப்படி தாக்கிய காரணத் தால் நானும், பஸ்சில் வந்த எங்களைப் போன்ற பயணிகள் எல்லாம் ஓடி பக்கத்தில் உள்ள ரோடு ஓரத்தில் உள்ள குடிசை களிலும் மற்ற இடங்களிலும் சென்று தப்பிக்க நாங்கள் எல்லாம் சென்றபோதுதான் காவல்துறை அதிகாரிகள் மிக வேகமாக அங்கே வந்து கொண்டு இருந்தார்கள். அப்போது என்ன நடந்தது என்று கேட்டபோது இவர்கள் குறிப்பிட்டு கூறிய இடத்தில் மறியல் செய்யாமல் வேண்டும் என்றே திட்ட மிட்டு இப்படி அதிகமாக மக்கள் உள்ள ஜங்ஷனாக உள்ள திருச்சி, ஜெயங்கொண்டம், மற்றும் அரியலூர், தஞ்சாவூர் செல்லுகின்ற வழியில் மறியல் செய்ய வேண்டுமென்று திட்ட மிட்டு அதிலும் குறிப்பாக கையில் அரிவாளோடு வந்து டிரைவரை வெட்டினார்கள். நான் கண்கூடாக டிரைவர் சீட்டுக்கு பின்னால் அமர்ந்து கொண்டு பார்த்தேன். அவர்கள் திட்டமிட்டுதான் இந்தச் செயலைச் செய்வதற்கு ஆயத்தமாக வந்தார்கள் என்பது நன்றாக தெரிகிறது. அதே நேரத்தில் அவர்கள் அனைவரும் லாரியில் ஏறி வந்தார்கள். லாரிகளை கொண்டு வந்து இந்த பஸ்களும், வண்டிகளும் செல்லாத அளவுக்கு அங்கே நிறுத்தி வன்முறையை உண்டாக்கி இந்த அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு உணர்வோடு செய்தார்கள் என்பதை நான் கண்கூடாக அந்தச் சமயத்தில் முதல் பஸ்ஸில் சென்ற வன் என்ற முறையில் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்தப் பேரவைக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-15

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சம்பவம் நடைபெறுகின்ற ஒரு வார காலமாக நான் திருச்சியிலே இருக்கிறேன். இந்தக் குற்றச் சாட்டு சொல்லப்படுகின்ற அந்தப் பகுதி மக்கள் வாழக்கூடிய பகுதிக்கு 15 தினங்களுக்கு முன்பாக நானும் சட்ட மன்ற உறுப்பினரும் சென்று வந்தோம். அங்கே கூட புரட் சித் தலைவருடைய சிலையைத் திறந்து வைத்துப் பொதுக் கூட்டத்திலேகூட பேசி விட்டு வந்தேன். அங்கேகூட அந்த மக்கள் இந்தக் குறைகளை என்னிடத்திலே சொல்லவில்லை. இருந்தாலும் இந்த நிகழ்ச்சி நடந்த இடம் எது என்று சொன் னால், கீழப்பழுரிலிருந்து ஜெயங்கொண்டம் போகின்ற அந்தப் பொய்யூர் சாலையிலே இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. ஆனால் இப்பொழுது சொல்லக்கூடிய அந்தப் பகுதி மக்கள் வாழக்கூடிய பகுதிக்கும், அவர்கள் மறியல் செய்த இடத்திற்கும் குறைந்தது 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்பதை மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவையின் வாயிலாகத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பகுதியில் சட்ட மன்ற உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள் என்ன நடந்தது என்று. அந்த அடிப்படையில் உங் களுடைய கருத்துக்கள் அமைந்தால் நல்லது.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, உங்களுக்கு ஆதாரம் கொடுக்க வேண்டுமென்று சொன் னால், இதிலே இருக்கின்ற ஊராட்சி மன்றத் தலைவர் யார் என்று உங்களுக்குத் தெரியாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று தெரியாது. 16–6–1988–இல் அந்த ஊராட்சி மன்றத் தலைவர் யார் என்று தெரியுமா? இந்த ஊராட்சி மன்றத் தலை வர் 1988–இல் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர் அண்ணா தி.மு.க. விலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, இதைக் கேளுங்கள். அதிலே கையொப்பம் இட்டிருப்பவர் எந்தக் கட் சியைச் சார்ந்தவர் என்பது இப்பொழுது....(குறுக்கீடு) அது ஆதாரம் அல்ல. அது அதிகாரிகளுக்குத் தரப்படவில்லை. அவர்கள் மறியல் செய்வதாகச் சொன்ன இடத்தில்

மறியல் செய்யவில்லை. இன்னொரு இடத்திலே மறியல்
செய்தார்கள். மறியல் செய்தவர்கள் ஆயுதங்களோடு இருந்
தார்கள் என்பதுதான் இப்பொழுது அவர்கள் தெரிவித்திருக்கிற
கருத்து.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமி
பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் குறிப்பிடுவதற்கும் நா
கள் குறிப்பிடுவதற்கும் சில மாறுபாடுகள்தான் இருக்கின்றன
நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று சொன்னால் — இந்த
போராட்டம் நடத்துவதற்கு முன்னால் அவர்கள் அறிவித்துவிட்டு
போராட்டத்தை நடத்தவில்லை என்பதைத்தான் நாங்கள்
எங்கள் தரப்பிலேயிருந்து சொல்கிறோம். சில பாதைகள்
சரியாக இல்லை, அதை உடனடியாகப் போட்டுவிட்டோம்
என்று நாங்கள் சொல்லவில்லை. போராட்டம் நடத்துவதற்கு
முன்னால் அரசுக்கோ, அங்கேயிருக்கின்ற அதிகாரிகளுக்கோ, முத
லமைச்சருக்கோ, அமைச்சர் பெருமக்களுக்கோ அந்தச் செய்தி
களைத் தரவில்லை. திடீரென்று ஒரு போராட்டத்தை நடத்து
கின்றபொழுது, நடத்தி, வேண்டுமென்றே அவர்கள் குறிப்பிட்ட
தைப்போல வழியிலே வந்தவர்களையெல்லாம் வெட்டுவதும்,
அரிவாளோடு திரிவதும் சரிதானா என்பதை ஒரு நியாயமுள்ள
இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற நீங்கள்
சொன்னால் சரி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பிரச்சினையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையில்
உங்கள் கோரிக்கை என்னவென்பதை மட்டும் கூறி முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: ஆக இது 16—6—1988-இலே மகஜர்
கொடுத்து, அதிகாரிகள், அதிலேயும் சிவன்பிள்ளை என்கிற
பி.காம். படித்தவர், சார்புச் செயலாளர்....

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, 1988 இலே அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய....

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்
களே....(குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே....

திரு. ஜி. பழனிசாமி: நான் சொல்வது....



மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள்.
நான் சொல்லி விடுகிறேன். பழனிசாமி, நீங்கள் ஒரு
கருத்தைத் தெரிவித்தீர்கள். ஆனால் நடந்த சம்பவம் திட்ட
மிட்டு, வன்முறையைத் தூண்டுகிற வகையில் நடைபெற்றது என்று
அந்தப் பகுதியைச் சார்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள்
இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதற்கும்
மீறி நீங்கள் திரும்பத் திரும்ப அதை நியாயப்படுத்துகிற வகை
யிலே பேசிக்கொண்டிருந்தால் விவாதம் தொடரத்தான் செய்
யும். எனவே, உங்கள் கோரிக்கை என்னவென்பதை மட்டும்
கூறுகிற வகையில் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே....

திரு. ஜி. பழனிசாமி: தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்
சொல்லட்டும். மாண்புமிகு அமைச்சர்.

திரு. ஜி. பழனிசாமி: ஆதாரம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் என்பது
நீங்கள் எனக்கு சட்டமன்றத்தில் கொடுத்து, நான்
அதை அனுமதித்த பிறகு கேட்பதாகும். நீங்கள் கொடுத்
திருப்பது ஆதாரம் அல்ல. நீங்களே இதை டைப் செய்து
கொடுக்கலாம். என்ன இருக்கிறது? நீங்களே டைப் செய்து
(குறுக்கீடு) ஆதாரம் என்பது நீங்கள் அதிகாரிகளுக்குக் கொடுத்து,
அதிகாரிகள் அதைப் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் கொடுத்
திருப்பதுதான் ஆதாரம். இருக்கிற காகிதமெல்லாம் ஆதாரம்
ஆகாது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இதிலே ஒரு சின்ன எங்களுக்கு ஏற்
பட்டிருக்கின்ற அனுபவத்தை நான் இங்கே சொல்ல விரும்பு
கிறேன். சாதாரணமாக ஒரு பிரச்சினை தீர்க்கப்பட வேண்டு
மென்று அல்லது கோரிக்கை வைப்பதற்காகச் சிலபேர் வருவதே
இல்லை. அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்து உத்தர
விட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட பின்னாலே சில
பேர் ஆதாயம் தேடுவதற்காக நோட்டீஸ் அடித்து போராட்டத்
தைத் துவக்குவார்கள். அவர்களுக்குத் தெரியும். பொது மக்க
ளுக்கு அது தெரியாது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நிறைய
நாங்கள் பார்த்திருக்கிறோம். அதிலே குறிப்பிட்ட சில அர
சியல் கட்சிகள் அதைச் செய்வதை கண்கூடாக நாங்கள் பார்த்

இருக்கிறோம். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்ன திலேயிருந்து தெரிவது, அரசாங்கம் அதற்காக உத்தரவிட்டிருக் கிறது, எனவே உத்தரவிட்டதைத் தெரிந்து கொண்டு அந்தப் பொது மக்களிடத்திலே தாங்கள் செய்ததைப் போலப் பெயர் வர வேண்டும் என்பதற்காக நோட்டீஸ் அடித்து அந்தப் போராட் டத்தைத் துவக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

அது வன்முறையிலே போய் முடிந்திருக்கிறது. இல்லை யென்றால், 15 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் வந்து போராட் டம் நடத்துவதற்கு எந்த சாதாரண பொது மக்களும் நிச்சய மாக வரமாட்டார்கள். போராட்டத்திற்கு என்றே பிறந் திருக்கிற சில பேர் இதைச் செய்கிறார்கள் என்பதைத்தான் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி ஒப்புக்கொண்டி ருக்கிறார். இதுபோன்ற போராட்டத்திற்காகவே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் கேட்கிறேன், இது போல அறிவிக்காத ஒரு இடத்திலே போராட்டம் நடத்துவதில் உங்கள் கட்சிக்கு உடன்பாடா? வருகிறபோதே கத்தியுடனும், கடப் பாறையுடனும், வந்து போகிற டிரைவரை அடிப்பதால் உங்க ளுக்கு தண்ணீர் வருமா? எனவே இதை நீங்கள் ஏற்றுக் கொள் கிறீர்களா? இதிலே உங்களுக்கு உடன்பாடு இருக்கிறதா என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, இதில் உங்களுடைய கோரிக்கையைச் சொல்லி முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போராட்டம் செய்வதே சில கட்சிகளினுடைய வேலை என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்கிறேன். நீங்கள் போராட்டமே நடத்தாமல் ஆட்சிக்கு வந்தவர்கள். அதனால்தான் போராட்டத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: நீங்கள் போராட்டம் நடத்தி எந்த ஆட்சியைப் பிடித்தீர்கள்?

திரு. ஜி. பழனிசாமி: எங்களுடைய போராட்டம் திட்டமிட்ட தாக, அறிவிக்கப்பட்டதாகத்தான் இருக்கும். (குறுக் கீடுகள்)....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்தனை பேரும் இப்ப டிப் பேசினால் எப்படி நான் அனுமதிக்க முடியும்? திரு. பழனிசாமி, இத்தனை பேரும் ஒன்றுக்கு 5 முறை



போராடி சிறைக்குச் சென்று வந்து, இங்கு சட்டமன்ற உறுப்பினர் களாக உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து, போராட்டமே நடத்தாமல் ஆட்சிக்கு வந்தவர்கள் என்று பேசி னால் நான் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டத்தை நான் கொச்சைப்படுத்த வில்லை. இதுபோன்ற போராட்டம், கடப்பாறையோடும் அரிவாளோடும் வருகிற போராட்டத்தைத்தான் நாங்கள் வேண்டாமென்று சொல்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, உங்க ளுக்கு பேச வாய்ப்புக் கொடுத்ததை மட்டும் வைத்துக்கொண்டு, நீங்கள், போராடாமலே ஆட்சிக்கு வந்தவர்கள் என்கிற அளவுக்கு ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தினால், ஒன்றுக்கு 5,6 முறை சிறைச்சாலை போய் வந்த அத்தனை பேரும் பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்க வேண்டுமா? நான் பேரவைத் தலைவராகத் தான் பேசுகிறேன். உங்களைக் கேட்கிறேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் எப்படிக் கேட்க முடியும்? உங்களுக்குப் பேசு வதற்கு நான் வாய்ப்புக் கொடுத்திருப்பதைப் பயன்படுத் திக்கொண்டு, என்ன வேண்டுமானாலும் பேசுவது என்பது முறை யல்ல. (குறுக்கீடு) திரு. பழனிசாமி உட்கார வேண்டும். அதா வது, உங்களுக்கு இருக்கிற வாய்ப்பை நீங்கள் எப்படி வேண்டு மானாலும் பயன்படுத்திக் கொண்டிருந்தால், அதை நான் அனு மதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் எப்படிப் பேசினாலும் அதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்லி விட்டார்கள். போராட்டம் நடத்துவதற்காக வந்தவர்கள் என்பது அல்ல. வன் முறையை நடத்துவதற்கென்று இருக்கிற சில கட்சிகள் என்று சொல்வதற்குப் பதிலாக போராட்டம் என்று சொல்லிவிட்டார்கள் ஆனால், நாங்கள் போராட்டமே நடத்தாமல் இங்கு வரவில்லை. எங்களுடைய வரலாறு உங்களுக்குத் தெரியும். அவர்கள் சொல்வது போராட்டம் என்பதல்ல; வன்முறை என்றுதான் இருக்க வேண்டும். வன்முறைக்காக வநதவர்கள் என்று சொல் வதற்குப் பதிலாக வாய்தவறி, போராட்டம் நடத்துவதற்கு என்று சொல்லிவிட்டார்கள். அந்தத் தவறை திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று: அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற் றக் கழகத்தினுடைய முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கொடுத்த கடிதம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் கடி

தம் 1985–இல் கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல; அங்கே
மக்களுடைய தேவை இல்லை என்று யாரும் வாதிடவில்லை.
மக்களுக்குத் தேவை இருக்கிறது; குறைபாடு இருக்கிறது என்று
எங்களுடைய கட்சியைச் சார்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத்
தலைவர் 1988–ல் கொடுத்திருக்கிறார்கள். அப்படி 1988–இல்
கொடுத்ததற்கும், அன்றைக்கு நடந்த நிகழ்ச்சிக்கும் எந்தவித
மான சம்பந்தமும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், வன்முறை
யைத் தூண்ட வேண்டுமென்று இந்தப் போராட்டத்தைச் செய்
தார்கள் என்று சொல்வதை நான் மறுக்கிறேன். நியாயமான
கோரிக்கைகளுக்காகத்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மறுக்கிறேன்
என்று சொன்னீர்கள், அதுபோதும்.

திரு. பழனிசாமி, இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, உங்
களுடைய கோரிக்கையை மட்டும் சொல்லி முடியுங்கள். தயவு
செய்து முடியுங்கள்.......... (குறுக்கீடு) உட்காருங்கள்.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சி நடப்பதற்கு
முன்னால், சிலபேர் அங்கேயுள்ள குறைபாடுகளை அதிகாரிகளி
டத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லிய பிறகு
அதிகாரிகள், உங்களுக்கு சீக்கிரமாக பேருந்து வரும்; ரோடு
போடப்படும் என்பதையெல்லாம் சொல்லி சமாதானமாக
அனுப்பி விட்டார்கள். முன்கூட்டியே வந்திருக்கிறார்கள் அதி
காரிகள். அதிகாரிகள் சமாதானம் சொல்லி உங்களுக்கெல்லாம்
வரும், செய்வார்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.
போனபிறகுதான் இதற்கு சம்பந்தப்படாமல் முன்கூட்டியே
இங்கு சட்டமன்ற உறுப்பினர் சொன்னபடியே வேண்டுமென்றே
அந்த வன்முறையைச் செய்ய வேண்டும் என்பதற்காக முன்
கூட்டியே பேசி, பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு வந்து
அந்த இடத்தில், அந்த இடத்திற்குச் சம்பந்தமில்லாமல் நட
திருக்கிறது என்றால், இது வேண்டுமென்றே வன்முறையை
தூண்டுவதற்காக திட்டமிட்டு, முதல் நாள்இரவே திட்டமிட்டுச்
செய்தது என்பதை யாரும் மறுக்க முடியாத ஒன்று என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).





பிற்பகல் 2.25.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, இதிலே
வேண்டாம். பேசி முடியுங்கள். மணி 2.25.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, போராட்டத்தில் பல்வேறு கருத்துக்களைச்சொல்லுங்
கள். ஆனால் நமது மூத்த அமைச்சர் சொன்னதுதான் மிக்
வேதனையாக இருக்கிறது. ஒரு கட்சி ஆட்சி முறையாகக்
கொண்டு வந்தால் பிரச்சினையே கிடையாது. யாரும் பேச
முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்
சர் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. இந்தக் கட்சி ஆட்சி
செய்வதைப் பொறுக்க முடியாமல்இந்த ஆட்சிக்கு எப்படியாவது
தொல்லை கொடுக்க வேண்டும், என்று தமிழகம் முழுவதும் வன்
முறைச் சம்பவங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே,
திட்டமிட்டு தொடர் சங்கிலிபோல், பல நிகழ்ச்சிகள் நடை
பெற்று வருகின்றன. இப்பொழுது இங்கே திருச்சி மாவட்டத்தில்
நடைபெற்றதைச் சொன்னார்கள். ஏற்கனவே சுதந்திரம் பெற்ற
நாள் முதல் அங்கேபோடப்படாத ஒரு சாலைக்காக இப்பொழுது
ஒரு போராட்டத்தை நடத்துகிறார்கள். வன்முறைச் சம்பவங்
களை அங்கே நடத்துகிறார்கள். இதைப்போலவே உசிலம்பட்டி
ஸ்டாண்டு நிகழ்ச்சியை நினைவுபடுத்த விரும்புகிறேன்.
ஆம் ஆண்டில் அந்த பஸ் ஸ்டாண்டுக்கு பேரறிஞர் அண்ணா
அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று அங்கே அந்த
லோகல்பாடியில், முனிசிபாலிடியில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி
யிருக்கிறார்கள். அதன் பின் என்னென்னவோ நடந்தது. 1982
முதல் 1992 வரை 10 ஆண்டுகள் பேசாமல் இருந்துவிட்டு,
அந்தப் பகுதியிலே வேறு கட்சியைச் சார்ந்தவர், முன்பு சட்ட
மன்ற உறுப்பினராக இருந்தவரும் இத்தனை நாட்களாகப் பேசா
மல் இருந்து விட்டு, இப்பொழுது நம்முடைய ஆட்சி வந்து விட்
டது என்பதற்காக திடீரென்று அந்த பஸ் ஸ்டாண்டுக்கு பசும்
பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகன் பெயரை வைக்க வேண்
டும் என்பதற்காக அங்கே வன்முறை நிகழ்ச்சிகளைத் தூண்டி
விட்டு, கடைகளைச் சூறையாடி, அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.
வண்டிக் கல்லால் அடித்து, அவருடைய காரைக் கொளுத்தி,
இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் அங்கே நடைபெற்றிருக்
கின்றன.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 செப்டம்பர் 23

அதைப்போலவே 1985 ஆம் ஆண்டில் இங்கே சூளைமேட்டில் அண்ணல் காந்தியடிகள் சிலை, கார்ப்பரேஷன் அதிகாரிகளால் ரோட்டை விரிவுபடுத்த வேண்டும், சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக அகற்றப்பட்டது. ஏழு ஆண்டுகள் அதற்குப் பேசாமல் இருந்துவிட்டு, 1992 ஆம் ஆண்டு இன்று நம்முடைய ஆட்சி வந்துவிட்டது என்பதற்காக, ஏதோ இந்த ஆட்சியில் நம்முடைய அமைச்சர்கள் மகாத்மா காந்தியடிகள் சிலையை அப்புறப்படுத்திவிட்டது போலவும், அதற்கு உடனடியாக நிவாரணம் செய்ய வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது போலவும் பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வெளியிட்டு, வேண்டுமென்றே இதற்கு மறியல், உண்ணாவிரதம், போராட்டம் என்றெல்லாம் நடத்தி இருக்கிறார்கள். 10 ஆண்டுகளாக , 7 ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாக, 40 ஆண்டுகளாக எத்தனையோ கோரிக்கைகள் இருந்தும் அவைகள் நிறைவேற்றப்படாத நிலையில் ஏதோ இந்தப் பிரச்சினைகள் இன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் எழுந்ததுபோல், சில அரசியல் கட்சிகள், ஒரு தோற்றம் அளிக்க வேண்டும் என்று தமிழகம் முழுவதும் சட்டம், ஒழுங்கு இவற்றைச் சீர்குலைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, வன்முறைச் சம்பவங்களைத் தூண்டி விடுகிறார்கள் என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பழனிசாமி (குறுக்கீடு) திரு. பழனிசாமி பேசுவார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். 2.29 ஆகிவிட்டது. திரு. பழனிசாமி பேசுகிறீர்களா, இல்லையா? நீங்கள் தெரிவித்த கருத்துக்கு இப்போது மறுப்புரை வந்திருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இல்லை. இப்பொழுது நீங்கள் பேசவே கூடாது என்று நிற்கிறீர்கள். ஒரு கட்சி ஆட்சிமுறை வைத்துக் கொள்ளுங்கள் என்று பேசுவதெல்லாம் தவறான முறை. அந்த அளவுக்கு ஜனநாயகம் வளர்ந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. நீங்கள் 1.46க்குப் பேச ஆரம்பித்தீர்கள். ஒரே ஒரு உறுப்பினர் உள்ள ஒரு கட்சியின் சார்பில் நீங்கள் பேசுகிறீர்கள். 1.46—க்கு ஆரம்பித்து, 2.29 வரை பேசிக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எல்லாப் பிரச்சினையையும் ஒன்றாக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். கடிதம் ஆதாரமாக வைத்திருக்கிறார். 1988-லே அந்தக் கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே 2 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக இங்கே இருந்திருக்கிறார். அந்த ஆட்சிக் காலத்திலே எதுவும் நடக்கவும் இல்லை. போராட்டமும் வரவில்லை. ஆனால் அண்ணா



செப்டம்பர் 23] [திரு. சு. முத்துசாமி]

12 ...விட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்த பின்பு அதற்குப் ...ராட்டம் வருகிறது. எப்பொழுது வருகிறது? சட்டமன்ற ...ப்பினரே இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்கான உத்தி... போடப்படுகிறது; வேலையை துவங்கப்பட இருக்கிறார்கள் என்று சொல்கிற நிலையிலே போராட்டம் வந்தது. ஆனால் 1988—லே நீங்கள் மனு கொடுத்து அதிலே இரண்டு ஆண்டு காலம் ஒரு கட்சி இங்கே ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே அதற்கான உத்திரவுபோடாத நிலையிலே கூட போராட்டம் வரவில்லை. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்தப் பின்னாலே, உத்திரவு ...பாட்டப் பின்னாலே, போராட்டம் வந்திருக்கிறது என்று ...சான்னால், அதிலேதான் சந்தேகமே வருகிறது.

றபகல் 2.30

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சம்பவத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன், செப்டம்பர் 15........ (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. தம்புசாமி நீங்கள் ...பசிக் கொண்டிருக்கக்கூடாது. உட்காருங்கள்,

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு ...பரவைத் தலைவர் அவர்களே, கடந்த செப்டம்பர் 15 ஆம் ...ான் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளிலே காவல் துறையினருக்கு அண்ணாவினுடைய பதக்கத்தை வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி திருச்சிக்கு வருகிறார்கள் என்று தெரிந்து, அப்படி வருகிற நேரத்திலே, திருச்சியிலே ஒரு அசம்பாவித சம்பவத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் திட்டமிட்டு போராட்டம் நடத்துவேன் என்று சொன்ன மக்கள் வாழ்கின்ற பகுதியை விட்டு, 15 கிலோ மீட்டர் தள்ளி ஜயங்கொண்டம் செல்கின்ற சாலையிலே அவர் திடீரென மறியலில் ஈடுபட்டு அங்கே வந்த காவலர்களைத் தாக்கி காயப்படுத்திய செய்தி எல்லாம் பார்த்திருப்பீர்கள். எனவே, இந்த அரசு மீது திட்டமிட்டு ஒரு தாக்குதலை உருவாக்க, இந்த அரசுக்கு ஒரு அவப்பெயரை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக சிலக் கட்சிகள் செய்த வன்முறை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 செப்டம்பர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி முடி
கள்.. (குறுக்கீடுகள்). நீங்கள் பேசி முடிக்கிறீர்க
இல்லையா? நீங்கள் 1.46-க்கு ஆரம்பித்து ஒரு மணிநே
ஆகிறது. இல்லை, நீங்கள் என்ன பேசியிருக்கிறீர்கள் என்
'ரெக்கார்டில்' இருக்கிறது.

திரு. ஜி. பழனிசாமி : நான் பேசவே இல்லை. நான் பேச
வேண்டாம் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரம் பே
அனுமதித்திருக்கிறோம். ஒரே ஒரு உறுப்பினர் இருக்கி
கட்சியே இவ்வளவு நேரம் பேச அனுமதித்திருப்
எவ்வளவு பெரிய ஜனநாயகம். சரி முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 14 பேர் துப்பாக்கிச் சூட்டிலே காயமடைந்திருக்
கிறார்கள். மருத்துவ மனையிலே இருக்கிறார்கள். நான்
பாதிக்கப்பட்டதாகச் சொல்கிற சங்கர் என்கிற பட்டதாரி
வாலிபர் அவர் இறந்து இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ,: நீங்கள் ஏதாவது ஒரு
கோரிக்கையைச் சொல்லி முடியுங்கள். 2.32 ஆகிறது.

திரு. ஜி. பழனிசாமி : நான் சொல்கிறேன் இறந்து இருக்
கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முடிக்க வேண்டி
வரும். உங்கள் கோரிக்கையைச் சொல்லி முடியுங்கள்.
முடிந்ததாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி : அமைச்சர் சொன்ன பதிலுக்கு எல்
லாம் நான் போகவில்லை. பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிச்
சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, நீங்கள்
பேசி முடித்ததாகக் கருதப்படுகிறது. நாளையதினம் துணை
மானியக் கோரிக்கைகள்மீது நடந்த விவாதத்திற்கு எதிர்க்
கட்சிகள் சார்பில் வைன்டப் செய்வோர் உரையும் மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்களின் பதில் உரையும் இருக்கும். இத்து
டன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை
மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக்கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 14-33 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது



92 செப்டம்பர் 23]

## 11. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

77. இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1989—90-ஆம்
ஆண்டிற்கான அறிக்கை. (சிவில்) (எண் 3). (இந்திய அரசிய
மைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்
ப் பெற்றது) (ஆங்கிலம்).

78. தமிழ்நாடு அரசின் 1989—90-ஆம் ஆண்டிற்கான நிதி
க்கக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்)
2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)(ஆங்கிலம்).

79. தமிழ்நாடு அரசின் 1989—90-ஆம் ஆண்டிற்கான நிதி
நிலைக் கணக்குகள். (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்151
2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (ஆங்
கிலம்).

80. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1990—91ஆம்
ஆண்டிற்கான அறிக்கை. (வருவாய் வரவினங்கள்) (எண் 2).
(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

81. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் 1990—91
ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (1956-
ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்
1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)
தமிழ், ஆங்கிலம்).

82. தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் சொரப்
பூர் கிராமத்தில் 2—9—1989 அன்று நடைபெற்ற துப்பாக்கிச்
சூடு பற்றி விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு.
பி. வி. வெங்கடகிருஷ்ணன், இ.ஆ.ப. விசாரணைக் குழுவின்
அறிக்கை. (1952-ம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின்
(மத்தியச் சட்டம் 66/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

24. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1989—90
ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை—ஆண்டு கணக்கு.
(தமிழ், ஆங்கிலம்).

1992 செப்டம்ப 23

25. மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை, 1992–93.

26. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள்; மூன்றாவது பட்டியல் (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

27. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள்; நான்காவது பட்டியல் (வரிசை எண்கள் 101 முதல் 200 வரை).

28. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள்; ஐந்தாவது பட்டியல் (வரிசை எண்கள் 201 முதல் 300 வரை).

———

164948

D
V211,311 ... 2
N92.29.3